Tamil Nadu Legislative Council Debates

Volume CIX — 1973

Index S.No — A to Z 1

S.No Books 4

5

[illegible]

[illegible]

[illegible]

Bundle No. 55

CIX / 1973

[ 23—7—1973]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

SATURDAY, 31st MARCH 1973

Volume CIX—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1973

Legislative Council Department
Madras-9

*Price 35 Paise*

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

31ST MARCH, 2ND, 3RD AND 5TH APRIL 1973.

*VOLUME* CIX (*Nos.* 1 *to* 4).

TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu .. | i—v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their constituencies .. .. .. | ix—xi |

*Saturday, 31st March* 1973.

| | |
|---|---|
| I. Questions and Answers .. .. .. .. | 1—20 |
| II. Announcements— | |
| (i) Message from the Assembly .. .. | 20 |
| (ii) Change in the Programme of the House .. | 21 |
| III. Calling attention to drought conditions and short supply of power in North Arcot district and the necessity to postpone collection of co-operative loans and crop loans from ryots .. .. .. | 21—22 |
| IV. Government Motion— | |
| Transaction of Government Business on a non-official day .. .. .. .. .. | 22 |

63894

PAGES

*Saturday, 31st March* 1973—cont.


V. Government Bills—

(1) The Tamil Nadu Societies Registration Bill, 1972 (L.A. Bill No. 53 of 1971) .. .. 23—26

(2) The Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill, 1972 (L.A. Bill No. 8 of 1973) .. .. .. 27—28

(3) The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1973 (L.A Bill No. 39 of 1972) .. .. .. .. 28—51

VI. Papers laid on the table of the House .. 52


*Monday, 2nd April* 1973.


I. Questions and Answers .. .. .. 83—102

II. Privilege issue *re* Policy Statement made by Food Minister to the Press while the House was in session 102—109

III. Announcements—

(1) Message from the Assembly .. .. 109

(2) Business of the House .. .. .. 110

IV. Calling attention to tense situation due to assault on workers of Wig India Limited .. .. 110—112

V. Government Bills—

(1) The Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 4 of 1973) .. .. .. .. 112—114

(2) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 6 of 1973) .. .. .. 115—119

VI. Papers laid on the table of the House .. .. 119—120


*Tuesday, 3rd April* 1973.


I. Questions and Answers .. .. .. 129—143

II. Announcements—

(1) Message from the Governor .. .. .. 143

(2) Messages from the Assembly .. .. 143—144

(3) Nomination of Council Members to the first Committee on Public Undertakings .. .. 269—270




PAGES

*Tuesday, 3rd April* 1973—cont.


III. Calling Attention to matters of urgent public importance—

(1) Non-absorption of teachers of E.V.V. Sala Senior Basic School, Devarappatti .. .. 144—146

(2) Stoppage of power and consequent loss to agriculturists in North Arcot district .. .. 146—147

IV. Government Bills—

(1) The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973) .. .. .. 147—266

(2) The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12 of 1973) 267—269

V. Papers laid on the table of the House .. .. 270


*Thursday, 5th April* 1973.


I. Questions and Answers .. .. .. .. 291—297

II. Announcements—

(1) Message from the Governor .. .. 297

(2) Message from the Assembly .. .. 297—299

(3) Business transacted during the Session .. 368

III. Government Bills—

(1) The Tamil Nadu Legal Aid and Advice Bill, 1973 (L.A. Bill No. 13 of 1973) .. .. 299—301

(2) The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 14 of 1973) 301—303

(3) The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 15 of 1973) .. .. .. .. 303—306

(4) The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973 (L.A. Bill No. 3 of 1973) 306—367

IV. Papers laid on the table of the House .. 369—370

Index .. .. .. .. .. .. 405—433

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning. General Administration. Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations; Cinematograph Act, Newsprint Control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANI MUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggar's Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors, Commercial Taxes and Prohibition.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR, Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports, and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Agriculture.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMI, Minister in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan and Milk excluding Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ் நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம்,

இரவலர்கள் விடுதி, அநாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறு நிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைக்கு பொறுப்பு வகிப்பார் :— வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிபபார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) :—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— அறக் கட்டளைகள், பால் வழங்குத் துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள், பால்பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

## தமிழ்நாடு சட்ட மன்றத்தின் முக்கிய அலுவலர்கள்.

### சட்ட மன்றத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

### சட்ட மன்றத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. அறிவழகன்.
2. திரு. என். சுந்தரேசத் தேவர்.
3. திரு. அய்யணன் அம்பலம்.
4. திரு. எஸ். நாராயணசாமி.

### சட்ட மன்றச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எஸ்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | | தொகுதி. |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அப்துல் வகாப், கே. எஸ். .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 | அய்யணன் அம்பலம் .. .. | மதுரை உள்ளாட்சி மன்றம். |
| 3 | அறிவழகன், கே., எம்.ஏ. .. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 | அறிவுடைநம்பி, புலவர் ஓ. .. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 | அனிபா, நாகூர், ஈ.எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 | ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 | ஆறுமுகசாமி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 | இராசகோபால், சி. வி. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 | இராசமாணிக்கம், எஸ்.ஏ. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 | இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 11 | இராணி அண்ணாதுரை .. .. | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 | இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 13 | இராமசுப்பையா, காரைக்குடி .. | நியமன உறுப்பினர். |
| 14 | இராமநாதன், எம். .. .. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 | இராஜா அய்யர், எம்., எம்.ஏ., எல்.டி. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 16 | இராஜு, ஜி. என். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 17 | ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்). | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 18 | கணபதி, கே. எஸ். .. .. | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள். |
| 19 | கணேசன், சா. .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 20 | காட்டூர் கோபால் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 | காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

| தொடர் கழும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 22 கிருஷ்ணசாமி நாயுடு, ரா. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 23 குன்றக்குடி அடிகளார், தவத்திரு. | நியமனம். |
| 24 கோலப்பா, சி. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 25 சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 26 சங்கரலிங்கம், எம். .. .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 27 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல்... | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள். |
| 28 சாம்பசிவம், இரா. .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 29 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 30 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 31 சுந்தரேச தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 32 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி .. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 33 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 34 தங்கப் பாண்டியன், வி., பி.ஏ.,பி.டி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 35 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள். |
| 36 திருஞானசம்பந்தம், பி. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 37 தென்னரசு, எஸ்.எஸ். .. .. | நியமனம். |
| 38 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 39 நடராசன், என். வி. (தொழிலாளர் நல அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 40 நட[illegible]ன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 41 நாராயணசாமி, பி. (வேளாண்மை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 42 நாராயணசாமி, டி. வி. .. .. | நியமனம். |



| தொடர்லக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 43 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 44 நீல நாராயணன் .. .. | நியமனம். |
| 45 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 46 பகவதி, டி.கே. .. .. .. | நியமனம். |
| 47 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 48 பலராமன், எல். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 பொன்னுவேலு, டி. கே. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 50 மணி, கே. எஸ். .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 மாசிலாமணி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்து, பி. டி. .. .. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 53 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 54 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 55 முத்துசாமி, எஸ். .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 56 வசந்த பாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 57 வில்சன் அப்பலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 வெள்ளப்பாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 61 ஜனார்த்தனம், ஏ.பி. .. .. | நியமனம். |
| 62 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 63 ஜெயராம் ரெட்டியார், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |

## தமிழ்நாடு சட்ட மன்றம்

---

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்றத்தின் நாற்பத்தி நான்காவது கூட்டத் தொடர்.

### சனிக்கிழமை, 1973 மார்ச் 31

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

### 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: வினாக்கள் 311, 312 ஒத்தி வைக்கப்படுகின்றன.

*Project of the SITU Council of Educational Research to study Children's Ailments*

*313 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government are aware of the project of the SITU Council of Educational Research to study Children's ailments; and

(b) if so, the steps taken by the Government to offer assistance to this project?

குழந்தைகளின் பிணி குறித்து ஆராய எஸ்.ஐ.டி.யு. குழு (SITU) வகுத்துள்ள திட்டம்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) குழந்தைகளின் பிணி குறித்து ஆராயும் கல்வி ஆராய்ச்சி குறித்த எஸ்.ஐ.டி.யு. (SITU) குழு வகுத்துள்ள திட்டத்தை அரசு அறியுமா?

C 9—1

(இ) ஆமெனில், இத்திட்டத்திற்கு உதவி நல்குவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, எஸ்.ஐ.டி.யு. குழுவின் வேறு எந்தத் திட்டங்களுக்காவது மாநில அரசாங்கம் உதவி அளிக்கிறதா? எஸ்.ஐ.டி.யு.சி. ஆராய்ச்சிக் குழு கல்வி ஆராய்ச்சி சம்பந்தமாக மாநில அரசாங்கம் ஏதாவது திட்டங்களுக்கு நிதி வழங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சில புத்தகங்கள் போடுவதற்கு வழங்கப்படுகிறதாகத் தெரிகிறது. அது பற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், விவரம் தரப்படும். இப்படி "எய்ல்மெண்ட்ஸ்" ரிசர்ச், ஸ்டடீஸ் என்ற வகையில் ஒரு திட்டமும் இல்லை.

THIRU M. RAJAH IYER : May I know, Sir, whether the Government have been making any grant to the S.I.T.U. Council of Educational Research besides the grants they have been getting from the Ford Foundation and other outside agencies? I want to know whether from out of our funds, we are giving any grant to the S.I.T.U. Council of Educational Research to enable it to perform its duties.

MR. CHAIRMAN : It is a separate question.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடலாம்.

### *Small Savings Fund of the Teachers*

* 314 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that more than Rs. 7,500 has been misappropriated from the Small Savings Fund of the Teachers working in Kuttalam Panchayat Union, Thanjavur District;

(*b*) if so, the action taken in this regard ; and

(*c*) whether the Government will pay this amount to the teachers concerned?



### ஆசிரியர்களின் சிறு சேமிப்பு நிதி

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(இ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் ஒன்றியத்தில் ஆசிரியர்களின் சிறுசேமிப்பு நிதியிலிருந்து ரூ. 7,500-க்கு மேல் கையாடல் செய்யப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

(உ) ஆசிரியர்களின் சேமிப்பை உரியவர்களுக்கு அரசு வழங்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். ரூ. 8,065 கையாடல் செய்யப்பட்டது.

(இ) கையாடல் செய்த அரசு தரப்பு உதவியாளர் திரு. ஆரோக்கியசாமி மீது நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றம் கடைசியாக அவருக்கு சாதகம் அளிக்கக்கூடிய சந்தேகத்தை அளித்து தீர்ப்பு வழங்கிற்று. மேலும் சம்பந்தப்பட்ட ஆணையாளர், உதவியாளர் (ஆரோக்கியசாமி) மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, கையாடல் செய்யப்பட்ட துகை பூராவையும் அவர்களிடமிருந்து மீட்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. மொத்தத் தொகையான ரூ. 8,065-ல் முன்னாள் ஆணையாளர் திரு. ஜான்சம்பத்திடமிருந்து ரூ. 3,760-ம், திரு. ஆரோக்கியசாமியிடமிருந்து ரூ. 4,305-ம் திரும்ப மீட்கவேண்டுமென்று மாயவரம் கோட்ட ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பித்துள்ளார்.

(உ) ஆசிரியர்களுக்கு இத்தொகையை ஊராட்சி நிதியிலிருந்து முன் பணமாக எடுத்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது. இந்தப் பணம் பின்னர் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலித்து ஒன்றிய முன்பணம் உளவடை செய்யப்படும்.

### *Dance Performances at the Premises belonging to Educational Institutions*

* 315 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government are aware that the premises and grounds of Educational Institutions in Madras City are being used for conducting dances; and

(*b*) if so, the action taken thereon?

[1973 மார்ச் 31

## கல்வி நிலையங்களுக்குச் சொந்தமான இடங்களில் நாட்டிய நிகழ்ச்சிகள்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் உள்ள கல்வி நிலையங்களின் கட்டிடங் களும் நிலங்களும் நடன நிகழ்ச்சிகள் நடத்துவதற்குப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன என்பதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) பொது விழாக்கள் நடத்த, அரசுத் துறையினருக் காகவோ மத்திய அரசுக்காகவோ அல்லது அரசியல் தொடர் பில்லாத நிகழ்ச்சிகளுக்காகவோ கல்வி நிலையங்களுக்குச் சொந்த மான கட்டிடத்தை அல்லது நிலத்தை அல்லது இடத்தைப் பயன் படுத்த, குறிப்பிட்ட வரையறைகளுடன் அனுமதி வழங்கத் தமிழ் நாடு கல்வி விதிகளில் விதி 81-ன்படி உதவி பெறும் இடைநிலை அல்லது சிறப்புப் பள்ளிகளின் மேலாளர்களுக்கு அல்லது நிர்வாகி களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவர் அவர்களே, கல்வித் துறைக்கு ஒவ்வாத கண்காட்சிகள் நடத்துவதை அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, அப்படி கல்வித் துறைக்கு ஒத்துவராத கண்காட்சிகள் நடத்துவதற்கு இடம் கொடுக்கக் கூடாதுதான். அப்படி பி.எஸ். ஹைஸ்கூலில் ஒரு கண்காட்சி வைக்கப்பட்டு, ரூ. 10 ஆயிரத்துக்கு கண்காட்சிக்கு அனுமதி கொடுக்கப்பட்டது. வேறுபல கண்காட்சி கள் நடைபெறுகிற நிலைமைகள் இருந்தால், அவை கல்வியின் தரத்தையும் பள்ளிகளின் மதிப்பையும் குறைக்கக்கூடும் என்ற காரணத்தால் அப்படிப்பட்ட கண்காட்சிகளுக்கு இடம் அளிக்கக் கூடாது என்ற அளவுக்கு அறிவுரை கூறும்படி சொல்லப் பட்டிருக்கிறது.



1973 மார்ச் 31]

## *Scholarships for Students*

*316 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether talented students from rural areas are given scholarships to enable them to prosecute their High School studies; and

(*b*) if so, the details thereof?

## மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கிராமங்களில் உள்ள திறமை மிக்க மாணவர்கள் தங்களுடைய உயர்நிலைப் பள்ளிக் கல்வியைத் தொடர இயலும் வகையில் அவர்களுக்குப் படிப்புதவித் தொகை கொடுக்கப்படுகிறதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) மத்திய அரசு வகுத்துள்ள திட்டத்தின்படி IX, X, XI வகுப்புகளில் படிக்கும் தலைசிறந்த கிராமப்புற மாணவர்களுக்கு, இடைநிலைக் கல்வி முடியுமட்டும், படிப்பு உதவித் தொகை வழங்கப் படுகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஆண்டு ஒன்றுக்கு, இரு மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமப்புற மாணவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநரால் தேர்ந்தெடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகளில் சேர்க் கப்பட்டு கல்வி பயில வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500 வீதம் வீடுகளிலிருந்து வந்து படிக்கும் மாணவர்களுக்கும், ரூ. 1,000 வீதம் விடுதிகளில் தங்கிப்படிக்கும் மாணவர்களுக்கும் படிப்பு உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் இரண்டு இரண்டு மாணவர்கள் என்று தேர்ந்தெடுத்து, சிறப்புப் படிப்பு உதவித் தொகை கொடுப்பதற்கு நன்றி. ஆனால் அவர்கள் ஏன் குறிப்பிட்ட சில பள்ளிகளில் தான் படிக்க வேண்டுமென்று கல்வி இலாகா இயக்குநர் அவர்கள் தேர்ந் தெடுக்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்கு வீட்டுக்குப்

பக்கத்தில் நல்ல உயர்நிலைப் பள்ளிகள் இருக்கிறபொழுது, அதில் படிக்க முடியாது என்று தூரத்தில் இருக்கும் பள்ளிகளில் படிக்க வேண்டுமென்று சொல்லுவதில், அவர்களுக்குக் கஷ்டம் இருக்கிற படியால், இந்தப் பள்ளிகளில் தான் படிக்க வேண்டுமென்ற நிபந்தனையை அரசாங்கம் நீக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, குறிப்பிட்ட சில பள்ளிகளில்தான் படிக்க வேண்டும் என்றால், குறிப்பிட்ட சில பள்ளிகளில் தான் வசதி, வாய்ப்புகள் எல்லாம் இருக்க முடியும், நல்ல நிலைமைகளும் இருக்க முடியும். அவர்கள் மேலும் மேலும் தங்களுடைய அறிவாற்றலைப் பெருக்கக்கூடிய வாய்ப்பு வசதி இருக்க முடியும் என்ற காரணத்தால், சிலபல பள்ளிகளைப் பொறுக்கி அந்தப் பள்ளிகளில் உதவித் தொகையோடு படித்தால் நலம் பயக்கும். இல்லாவிட்டால், உதவித் தொகை தந்தும் கூட, வாய்ப்புகள் இல்லாத பள்ளிகளில் படிப்பதன் மூலம் அவர்களுடைய அறிவாற்றலை மேலும் பெருக்குவதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுமே என்ற காரணத்தால், அவர்களுடைய விருப்பப்படி இல்லாமல் உதவித் தொகை இருப்பதால் இதைப் பயன் படுத்தி படிக்க வாய்ப்பு ஏற்படும் முறையில் பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அந்த இலக்கணத்திற்குட்பட்டு இருக்கக்கூடிய பள்ளிகளில் சேர்க்கப்படாமலிருந்தால், சேர்க்கும்படியாக கல்வி இயக்குநரைக் கேட்டுக் கொள்ளலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு மாணவர்கள் என்பது மிகக் குறைவான எண்ணிக்கை இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்தி மாநிலத்திலுள்ள எல்லா ஒன்றியங்களுக்கும் இந்த உதவி செய்ய அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் வகுத்துத் தருகிற திட்டத்தின் அடிப்படையில் செய்கிறோம். மாநிலத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் என்றால், எழுநூற்றுச் சில்லரை ஆகிறது. ஆகவே எடுத்த எடுப்பில் அதிகம் கேட்காமல், இந்த ஆண்டு தான் புகுத்தியிருக்கிறார்கள். ஆகவே இது நடைமுறைப்படுத்தப்பட்டதற்குப் பிறகு, படிப்படியாக உயர்த்தும்படி நாம் கேட்டுக்கொள்ளலாம்.





திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் இரண்டு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பொதுவாக "மெரிட்", தகுதி, திறமையின் அடிப்படையிலும் அவர்களுடைய ஏழ்மைத் தன்மை அடிப்படையிலும் கவனிக்கப்படுகிறது.

*Incentive Amount for Tamil Medium Students*

*317 Q.—Thiru S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the students of the American College, Madurai, staged any demonstration demanding payment of incentive money for Tamil medium about October 1972; and

(b) if so, the action taken thereon?

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குமாறு கோரி, மதுரை, அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் 1972-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் அளவில், போராட்டம் ஏதும் நடத்தினரா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை 19—10—1972 அன்று வழங்கப்பட்டது.

திரு. ஜார்ஜ் கோமகன் : தலைவர் அவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பட்டதாரிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு முதலிடம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அப்படி வந்தவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரமுடியும் என்று சொல்வதற்கில்லை. ஆனால் தேர்வு ஆணைக் குழுவில் தமிழக அரசின் சார்பாக இருக்கிற பல்வேறு துறைகளுக்குத் தேர்ந்தெடுக்கும்பொழுது, தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்திருந்தவர்களுக்கு முதல் சலுகை தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, தமிழ் படிக்கும் மாணவர்களுக்கு எவ்வளவு மானியம் வழங்கப்படுகிறது, மாநில அளவில் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : புகுமுக வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு ஒரு வருஷத்திற்கு புத்தகம் வாங்குவதற்கு ரூ. 50 கொடுக்கப்படுகிறது. பட்டப் படிப்புக்கும் மற்ற துறைகளுக்கும் வருஷத்திற்கு ரூ. 150 கொடுக்கிறோம்.

திரு. காட்டூர் கோபால் : தலைவர் அவர்களே, தமிழில் பயிலுகிற மாணவர்களை வேறு வகையில் ஊக்குவிக்கிற திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : வேறு வகையில் என்றால், எந்த வகை என்று குறிப்பிட்டுச் சொன்னால், அந்த வகைக்குப் பொருந்துகிறதா என்று கண்டறிந்து சொல்ல முடியும்.

புலவர் ஓ. அறிவுடைநம்பி : தமிழ் படித்துத் தேர்ந்த புலவர்களுக்கு வேலை வாய்ப்புக்கான எல்லாத் துறைகளிலும் இடம் தர அரசு முந்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எல்லாத் துறைகளிலும் தருவதற்கில்லை. தமிழ் மொழியின் முழு அறிவு எந்தத் துறைக்கு தேவைப்படுகிறதோ, அந்தந்தத் துறைகளில் அவர்களை ஏற்றுக்கொள்ளலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, in giving preference for Government employment, may I know whether preference is given to those who have taken Tamil as a language study or whether preference is to be given only to the students who have studied through the Tamil medium?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இரண்டு பேர் வந்து இரண்டு பேரிலே யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுக்கலாமென்று சொன்னால், அப்படிப்பட்ட நிலைமையில் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டிருப்பவர்களுக்கு, தமிழ் ஆட்சி மொழியாக இருக்கிற காரணத்தினால், "பிரிபரன்ஸ்" தரவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : May I then take it, Sir, that Graduates of our University who might have studied Tamil even B.A. as second language will not be shown preference as [com]pared with those who have taken Tamil as medium of instruc[tion]?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, [ஆ]ங்கிலத்திலேயே படித்தவர்கள், இரண்டாவது மொழியாக மட்டும் [தமி]ழ் படித்தவர்கள், முழுவதும் தமிழ் படித்தவர்கள் என்ற வரிசை [யி]லே வைத்து, மூவரும் ஒரே தகுதியினராக இருப்பார்களேயானால், [அ]ப்போது தமிழிலே படித்தவர்களுக்கு முதல் சலுகை, [இ]ரண்டாவது சலுகை தமிழ் மொழி படித்தவர்களுக்கு, மூன்றாவது சலுகை ஆங்கிலம் படித்தவர்களுக்கு என்று வரும். (குறுக்கீடு) விதிமுறைகள் வகுக்கப்பட்டன. பி.ப. 4–30

திரு. எல். பலராமன் : கடந்த ஆண்டு இதற்கான செலவு எவ்வளவு, அரசாங்கத்திலிருந்து எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது, அதில் எவ்வளவு செலவானது என்று அமைச்சரவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, பயிற்று மொழி தமிழ் எடுத்து, பி.ஏ. படித்த மாணவர்களுக்கு, பி.டி. கல்லூரிகளிலே இடம் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள். அவர்களுக்கு முன்னுரிமை காட்டாமல் பலபேருக்கு இடமே கிடைக்கவில்லை. தமிழ் மொழியைப் பயிற்றுமொழியாக எடுத்த காரணத்திற்காகவே அவர்களுக்கு பி.டி. கல்லூரியிலே இடம் கிடைக்காமலிருக்கிறது. ஆகவே அரசாங்கம் அதுபற்றிப் பரிசீலனை செய்து தகுந்த உத்தரவு இடுமா என்று தெரிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழ் படித்த காரணத்தினாலே, பி.டி. படிப்பதற்கு வாய்ப்பு தரப்படவில்லை என்பது சரியல்ல. பலபேர் விண்ணப்பம் செய்கிறார்கள். விண்ணப்பம் செய்கிறவர்களிலே பலபேருக்கு பல வகைகளிலே நாம் இடம் ஒதுக்கித் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் ஏற்கெனவே வேலை பார்க்கிறவர்கள் பி.ஏ. படித்துவிட்டு இருப்பவர்களுக்கு ட்ரெயினிங்குக்காக ஒரு 80 சதவிகிதம் ஒதுக்கி வைக்க வேண்டியிருக்கிறது. புதிதாக வருகிறவர்களுக்கு 20 சதவிகிதம் அதிலே வருகிறவர்களில் முதலிலே தேறியவர்கள், இரண்டாவதாகத் தேறியவர்கள் என்ற அளவுக்குப் பாகுபாடு செய்யப்படுகின்றதே தவிர, தமிழிலே படித்தவர்கள் என்பதற்காக எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை.

*Amenities for the Party Whips*

* 318 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to provide suitable accommodation and telephone connections in the Legislature premises to the Whips of all recognised opposition parties as per the recommendations of the Whips' Conference held at Bhopal in November, 1972; and

(b) if so, the action proposed to be taken thereon?

கட்சிக் கொறடாக்களுக்கு வசதிகள்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972, நவம்பரில், போபாலில் நடைபெற்ற கட்சிக் கொறடாக்கள் மாநாட்டின் பரிவுரைகளுக்கேற்ப, சட்ட மன்ற வளவுகளுக்குள், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து எதிர்க்கட்சிகளின் கொறடாக்களுக்கும் தக்க இடவசதியும் தொலைபேசி இணைப்புகளும் செய்து தரும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் மேல் எடுக்கப்படவிருக்கும் நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.





திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, மாநாட்டில் செய்யப்பட்ட முக்கிய பரிந்துரைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதனுடைய பரிந்துரைகள் முழுவதும் தெரியவில்லை. இந்த ஒரு பரிந்துரையைப் பொறுத்த மட்டும், அரசு பரிசீலித்து சட்டமன்றப் பேரவையில், மேலவையில் உள்ள அரசுக் கொறடாக்களுக்கு 1970 ஜூனில் கீழ்க்கண்ட வசதிகள் செய்து கொடுத்தது. திங்கள் ஒன்றுக்கு வீட்டு வாடகைப்படியாக ரூ. 100, திங்கள் ஒன்றுக்கு வாகனப்படியாக ரூ. 100, அரசுச் செலவில் கார் ஓட்டி, ஒரு கார், குறித்த காலத்திற்கு ஒரு முறை அதற்குச் செப்பனிடுவது அல்லது பழுது பார்ப்பது, கடைநிலை பணியாளர் ஒருவர், தொலை பேசி வசதி, தலைமைச் செயலகத்திலே ஒரு அறை, அவர்கள் இருப்பிடத்திற்கு இலவசமாகத் தொலைபேசி வசதி, ரூ. 250 சம்பளத்தோடு, மேற்சொன்ன வசதிகள் யாவும் செய்து கொடுக்கப்படுகின்றன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, எதிர்க் கட்சிக் கொறடாக்களுக்குத் தொலைபேசி முதலிய வசதி செய்து கொடுப்பதற்கு அரசு பரிசீலித்திருப்பதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆளும் கட்சிக் கொறடாக்களுக்கு இருப்பதைப் போல, அவர்களுக்கு வாகனம், ஓட்டுநர், வீட்டு வசதிகள் இவைகளையும் செய்து கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பரிசீலனை என்றால், அதுதான் பரிசீலனை. எதிர்க் கட்சி என்று வருகின்றபோது, அந்த இலக்கணத்திற்குட்பட்டு வருகின்ற எதிர்க் கட்சிக் கொறடாக்களுக்குத் தரவேண்டும் என்பதுதான் அந்தத் தீர்மானம். ஆக, அதுதான் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இந்த மாநாட்டில் நம்முடைய மேலவைக் கொறடா அவர்கள் கலந்து கொண்டார்களா? கலந்துகொள்ளாவிட்டால் என்ன காரணத்தால் கலந்துகொள்ளவில்லை? நம்முடைய மேலவைக் கொறடாவுக்கு ஒரு தனி நேர்முக உதவியாளர் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மேலவைக் கொறடா இங்கே வீற்றிருந்து, அவரே எதையும் கேட்காமலிருக்கும்போது, உறுப்பினர் அவருக்காகக் கேட்பது முறையல்ல இப்போதுதான் பல்வேறு வசதிகளைச் செய்துகொண்டுவருகிறோம்

ஏற்கெனவே இந்த வசதிகள் எதுவுமே இல்லாதிருந்த கொறடாக்கள் இவ்வளவு வசதிகள் பெறுவதில் ஒரு ஆண்டுக் காலத்திற்காவது மகிழ்ந்துகொண்டிருக்கலாம். பிறகு இதுபற்றி யோசிக்கலாம்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, போபாலில் நடந்ததைப் போன்று அகில இந்திய சட்டசபைகளின் கொறடாக்களின் மாநாடு ஒவ்வொரு வருடமும் நடைபெறுகிறது. அதற்கு எல்லா சட்டசபைகளிலும் உள்ள எல்லாக் கட்சிகளின் கொறடாக்களும் அழைக்கப் படுகிறார்கள். அப்படியிருக்க நமது மாநிலத்திலிருந்து ஆளும் கட்சியின் கொறடாக்கள் மட்டும் அனுப்பப்படுகிறார்கள். எல்லா மாநிலங்களிலிருந்தும் அனைத்துக் கட்சிக் கொறடாக்களையும் அனுப்பி வைக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே எதிர்க் கட்சிகளுடைய கொறடாக்களையும் அனுப்புவதற்கு இனிமேல் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளும் கட்சிக் கொறடாக்களிலே கூட சட்டமன்றப் பேரவை கொறடா தான் அனுப்பி வைக்கப்பட்டார். அடுத்து நடைபெறுகிற மாநாட்டிற்குக் கொறடாக்கள் இந்த விண்ணப்பத்தைத் தருவார்களேயானால், அதுபற்றிக் கவனிக்கலாம்.

*Virus Disease in Banana Plantations*

* 319 *Q*.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any virus infection was traced in Banana plantations in the State during October–November, 1972; and

(*b*) if so, the action taken thereon?

வாழைத் தோட்டங்களில் வைரஸ் நோய்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், 1972-ஆம் ஆண்டு அக்டோபர்–நவம்பர் திங்களில், வாழைத் தோட்டங்களில், வைரஸ் நோய் ஏதும் பரவியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதா?

(இ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம். வாழையைத் தாக்குகின்ற முடிக்கொத்து வைரஸ் நோயானது கீழ் பழனி மலைக் குன்றுகளிலுள்ள மலை வாழைத் தோட்டங்களில் முக்கியமாக அடுக்கம், கும்பாரையூர், பூளத்தூர் போன்ற கிராமங்களில் அதிக அளவில் காணப்பட்டது.

(இ) வேளாண்மைத் துறை அதிகாரிகள் அடங்கிய ஒரு குழு அடுக்கம், கும்பாரையூர், பூளத்தூர் போன்ற கிராமங்களுக்குச் சென்று "செய்முறை விளக்கநாள்" நடத்தினார்கள். மேற்படி கிராமங்களில் நோய் தாக்கப்பட்ட தோட்டங்களைப் பார்வையிட்டு, எப்படி முடிக்கொத்து நோயினை அறிந்து கொள்ளுதல், எவ்வாறு இந்நோய் தாக்கிய மரங்களை அழித்தல், நோய் மேலும் பரவாமல் தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல் என்ற விபரங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

THIRU G. VASANTHA PAI : Sir, of late we have found bananas with more seeds in it than pulp. Is it due to any virus infection or is it a variety of banana?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அதனாலே ஏற்பட்டதல்ல.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, வாழை நோயால் எங்கள் மாவட்டத்திலேகூட வாழை மிகுதியாகப் பாதிக்கப் பட்டிருக்கிறது. இதற்கு புது ஆராய்ச்சியில் ஏதாவது மருந்து கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பல்வேறு பகுதிகளில் பல்வேறு நோய்கள் காணப்படுகின்றன. அவைகளையெல்லாம் கண்டறிந்து அவ்வப்போது நடவடிக்கை எடுப்பதற்குப் பல்வேறு இடங்களிலே ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

திரு. எம். சங்கரலிங்கம் : இந்த மலை வாழைப் பழத்திற்கு பழனி மலைப் பகுதிகளிலே வைரஸ் நோய் ஏற்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் பதிலளித்தார்கள். கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளில் இந்த மட்டிப் பழம்—மட்டு என்பது மருவி மட்டி ஆகிவிட்டது—இப்போது அழுகிப்போய்விட்டது. இந்த மாதிரி நோயினால், சில வருடங்களாகவே தொடர்ந்து அந்த நோய் இருந்து வருவது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? அது பற்றி ஏதேனும் ஆராய்ச்சி செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனிப்பட்ட வகையில் அதுபோல அரசுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. தெரிவிக்கப்பட்டு இருக்குமேயானால், இதுபற்றி உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது, ஏதோ இந்த வைரஸ் நோய் ஒரு பகுதியில் ஏற்பட்டிருப்பதாகக் கூறினார்கள். ஆனால் மாநில அளவில் எங்கெங்கே ஏற்பட்டிருக்கிறது என்கின்ற தகவல் அமைச்சரவர்களுக்கு அதிகாரிகள் கொடுக்கவில்லையென்றுதான் தோன்றுகிறது. என் மாவட்டத்திலும் ஆங்காங்கே பரவலாக இருக்கிறது என்று அந்த அதிகாரிகளே கூறுகிறார்கள். அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நிரந்தரமாக ஒரு உத்தரவை இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அப்படிப் பல்வேறு பகுதிகளில் இருப்பதைத்தான் நான் "பல்வேறு" என்று குறிப்பிட்டேன். அவைகள் தனியாக எந்தெந்தப் பகுதி என்று கேட்பார்களேயானால் அவைகளைப்பற்றித் தனியாக ஒரு கேள்வி போடுவார்களேயானால், விவரங்களைத் தெரிவிக்கிறேன்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இந்தச் சப்போஸ்டா வாழை பயிர் செய்வதால் இப்படிப்பட்ட நோய்கள் தடுக்கப்படுமென்று அதிகாரிகள் சொல்லுகின்றார்கள். அதனுடைய மாலை கன்னுடைய விலைகள் அதிகமாக இருக்கின்றன. ஒரு பாதி அளவில் சலுகை செய்து அதை விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் கம்பம் பகுதியில் பச்சைய குலை நோய் என்று ஒரு நோய் காணப்பட்டது. அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு வேண்டிய பல்வேறு உதவிகளைத்தான் செய்துவருகிறோமே தவிர, அதற்குத் தனி மானியம் எதுவும் வழங்கப்படவில்லை.

*Construction of Prefabricated Houses*

* 320 Q.—Thiru S. Vellapandian : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the State Government had any discussion with the officials of the Hindustan Housing Factory about the construction of Prefabricated houses during December 1972; and

(b) if so, the details thereof?



முன்னரே தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ள வீடுகளைக் கட்டுதல்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) முன்னரே தயாரிக்கப்பட்ட நிலையில் உள்ள வீடுகளைக் கட்டுவது குறித்து, ஹிந்துஸ்தான் வீட்டு வசதித் தொழிற்சாலை அதிகாரிகளுடன், 1972-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், மாநில அரசு, பேச்சு வார்த்தை ஏதும் நடத்தியதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

The Hon. Thiru K. Rajaram : (a) Yes.

(b) The question of setting up of prefabricated Housing Factory in Madras, was discussed recently with the officials of the Hindustan Housing Factory, New Delhi. It was decided to have a feasibility report on the project in the First instance. The Managing Director of Hindustan Housing Factory, New Delhi, has promised to send a feasibility report for the setting up of a prefabricated Housing Factory near Madras. Certain particulars required by the Managing Director, Hindustan Housing Factory, New Delhi, are being collected from various Government departments engaged in building activities to enable him to send a feasibility report in the matter.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இந்த மாதிரி வீடுகள் கட்டினால் உறுதியாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, வீடுகள் வேகமாகக் கட்டுவதற்கு தற்போது மேல்நாடுகளில் இந்த முறையைக் கையாளுகிறார்கள். தற்போது வீட்டுவசதி வாரியம் படிப்படியாக இந்த முறையில் வீடு கட்டுகின்ற திட்டத்தைக் கையாண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Thiru A. R. Damodaran : What would be the cost per square foot for such houses, Sir.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அனேகமாக கன்வென்ஷனல் டைப் வீடுகளுக்கு ஆகும் செலவில் பாதி அளவுக்குத் தான் இந்த பிரி-பேப்ரிகேடட் வீடுகளுக்குச் செலவு இருக்கும்.

திரு. வி. வெங்கா : இந்த முறையில் கட்டப்பட்ட வீட்டின் அடக்கவிலை என்னவாக இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : எத்தனை சதுர அடி என்பதைப் பொறுத்து ஒரு வீட்டின் விலை இருக்கும். கட்டப்படுகின்ற வீட்டின் அளவைப் பொறுத்தது. இப்பொழுது 220 சதுர அடியில் ஒரு மாதிரி வீட்டை கிராமங்களில் கட்ட ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீடொன்று நேற்று கதிர்வேடு கிராமத்தில் திறந்து வைக்கப்பட்டது இதன் விலை ரூ. 2,800.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, இந்த "பிரி-பேப்ரி கேடட்" வீடுகளைக் கட்டுவதால் நமது நாட்டில் வேலைவாய்ப்புகள் பாதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, வீட்டிற்குத் தேவை இப்போது அதிகமாக இருக்கிற காரணத்தால் இந்த மாதிரி வீடுகளைக் கட்டுகிறோம். இதனால் வேலை வாய்ப்பு அவ்வளவாக பாதிக்கப்படாது. என்னவென்றால் வீடுகளைக் கட்டுவதற்குத் தேவைப் படும் ஆட்களை விட குறைவாக ஆட்கள் இருந்தால் போதும். இந்தத் திட்டத்தின் மூலமும் வேலைகள் கிடைக்கின்றன. வேலைவாய்ப்பற்ற தன்மை ஏற்படுத்தப்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த முறையில் சிக்கன மாக ஏழை எளிய மக்களுக்கு வீடு கட்டித் தரலாம் என்ற முயற்சியைப் பாராட்டுகிறேன். இதைப் போன்ற வீடுகளை மாவட்ட வாரியாக வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கிராமங்களில் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தமிழ் நாட்டில் 50 ஆயிரம் வீடுகள் கட்டப்பட இருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் 10 வீடுகள் கட்டலாம் என்ற முறையில் 5 ஆயிரம் கிராமங்களில் வீடுகளைக் கட்ட அரசு ஆலோசித்திருக்கிறது. அதற்கான முறையில் மலிவு வீடுகளைக் கட்டுகின்ற முயற்சியை எடுத்துக்கொள்ளும்.



## உடுக்குறியிடப்படாத வினாக்கள்.

### தமிழ் மூலம் கல்வி பயிலும் மாணவர்கள்

46 வினா.—தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கல்வி–உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நடப்புக் கல்வி ஆண்டில் தமிழ் மூலம் பயிற்றுவிக்கும் வகுப்பு களில் மாணவர்கள் சேர்க்கை விவரம் கல்லூரி வாரியாக எவ்வளவு?

ப. 1972–73-ஆம் ஆண்டில் 20,894 மாணவர்கள் புகுமுக வகுப்பு களிலும் 6,396 மாணவர்கள் பட்ட வகுப்புகளிலும் தமிழ்ப் பயிற்று மொழி வகுப்புகளில் பயின்றனர். ஒவ்வொரு கல்லூரியிலும் தமிழில் பயின்ற மாணவர்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### *Filarial survey*

47 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any filarial survey was conducted in Madras, during the calendar year 1972; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

### வேளாண்மை பொறியியல் கூட்டு மையங்கள்

48 வினா.—திரு. எல். பலராமன் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேளாண்மை பொறியியல் கூட்டு மையங்கள் மாநிலத்தில் மாவட்ட வாரியாக எத்தனை அமைக்கப்பட்டுள்ளன?

(இ) இவற்றுள் எத்தனை வேலை செய்கின்றன?

@53–63-ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

ப. (அ) & (இ) 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7-ம் நாள் இருந்த நிலவரப்படி இம்மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட வேளாண்மை பொறியியல் கூட்டு மையங்களின் எண்ணிக்கையும் அவற்றுள் செயல்படும் மையங்களின் எண்ணிக்கையும் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளன:—

| வரிசை எண். | மாவட்டங்களின் பெயர். | பதிவு செய்யப் பட்ட மையங்களின் எண்ணிக்கை. | அவற்றுள் செயல்படும் மையங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | செங்கற்பட்டு | 6 | 2 |
| 2. | வடஆற்காடு | 12 | 4 |
| 3. | தென்ஆற்காடு | 17 | 9 |
| 4. | திருச்சிராப்பள்ளி | 13 | 7 |
| 5. | மதுரை | 28 | 23 |
| 6 | சேலம் | 24 | 5 |
| 7. | தர்மபுரி | 6 | 3 |
| 8. | நீலகிரி | இல்லை | இல்லை |
| 9. | தஞ்சாவூர் | 10 | 3 |
| 10. | கோயம்புத்தூர் | 8 | 1 |
| 11. | ராமநாதபுரம் | 23 | 15 |
| 12. | திருநெல்வேலி | 18 | 5 |
| 13. | கன்யாகுமரி | இல்லை | இல்லை |
| | மொத்தம் ... | 165 | 77 |

*Purchase of timber for Tamil Nadu Housing Board*

49 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Housing Board has been purchasing its requirements of timber from private parties for past three years;

(b) if so, the total quantity purchased; and

(c) the amount paid to them for 1972 calendar year?





A.—(a) Yes.

(b) 1970 ... Nil.
1971 ... 5743 Cft. Country Wood
2855 Cft. Teak Wood.
1972 ... 380 Cft. Teak Wood.

(c) Rs. 6,500 towards the cost of 256 Cft. out of the 380 Cft. purchased.

*Anamallais Wild Life Sanctuary*

50 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(a) the details of the Anamalais Wild Life Sanctuary to be set up in Coimbatore District; and

(b) the cost of this project?

ப.—(அ) கோவை மாவட்டத்தில் ஆனைமலைக் குன்றுகளின் பகுதியில், ஆனைமலை வன விலங்கு உய்விடம் என்ற புதிய வன விலங்கு உய்விடம், 21—1—1973-இல் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனைமலை வன விலங்கு உய்விடத்தின் மொத்தப் பரப்பளவு 370 சதுர மைல்களாகும். ஆனைமலைக் குன்றுகளும், அக்குன்றுகளின் எல்லை ஓரத்தில் சமவெளிப் பகுதியில் உள்ள காடுகளும் இதில் அடங்கும். ஆனைமலைக் குன்றுகள், கோவை மாவட்டத்தின் தெற்கு எல்லைப் பகுதியில் விரிந்தும், பொதுவாக, வடமேற்கிலிருந்தும் தென் கிழக்குத் திசை நோக்கியும், 2,500 அடியிலிருந்து 8,000 அடிக்கு மேல் உயரமும் உள்ளவை. பூஞ்சி சரகத்தில் உள்ள குன்றுப் பகுதியின் செழிப்பான பசுமைக் காடுகளும், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி சரகங்களின் சமவெளி முட்காடுகளும் இப்பகுதியில் உள்ளன. இக் காடுகள், வன விலங்குகள் வாழ்வதற்கேற்ற சூழ்நிலைகளுள்ள ஒரு சிறந்த உய்விடமாகத் திகழ்கிறது. தென்னிந்தியாவில் காணப்படும் பல மிருகங்கள் இங்கே உள்ளன. துனக்கடவு, பொள்ளாச்சி, பூஞ்சி மற்றும் உடுமலைப்பேட்டை சரகங்கள் இந்த உய்விடத்தின் பரப்பில் அடங்கும்.

யானை, காட்டெருமை, புலி, சிறுத்தை, காட்டுப் பன்றி, மான், கரடி, காட்டு நாய், முள்ளம்பன்றி, முயல், பறக்கும் அணில், பெரிய அணில், நரி, சிங்கவால் குரங்கு, எறும்பு தின்னி, புனுகுப் பூனை முதலிய வன விலங்குகள் இவ்விடத்தில் காணப்படுகின்றன. மழையில்லாத இலையுதிர்க் காடுகளில், புள்ளிமான், குரைக்கும் மான், காட்டுப்

பன்றி, நரி, முள்ளம் பன்றி, தேன் உண்ணும் கரடி முதலிய வன விலங்குகள் இங்கு சாதாரணமாகக் காணப்படுகின்றன. புலியைவிட சிறுத்தை இங்கு அடிக்கடி காணப்படக்கூடிய ஓர் வன விலங்கு. பூஞச்சி சரகத்தில் உள்ள குன்றுப் பகுதிகள், பரந்த புல் வெளிகளும், சோலைக் காடுகளும் கொண்டவை. ஐபெக்ஸ் என்று கூறப்படும் நீலகிரி மலை ஆடு காணப்படும் ஒரு சில பகுதிகளில் இதுவும் ஒன்று. உடுமலைப்பேட்டைச் சரகத்தைச் சேர்ந்த மஞ்சம்பட்டி பள்ளத் தாக்கில், வெள்ளை நிறக் காட்டெருமைகள் உள்ளன.

இப்பகுதியில் மனித நடமாட்டம் அதிகமில்லாததால், உய்விடம் ஏற்படுத்துவதற்குரிய சூழ்நிலை இங்கு உள்ளது. ஆனைமலை உய்விட எல்லைக்குள் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. அவ்வாறு வசிக்கும் ஒரு சிலரும் மலைவாழ் பழங்குடியினர் தான். மேலும், இவ்வுய்விடத்தின் மேற்கு எல்லையை ஒட்டிக் கேரள அரசால் "உய்விடம்" என அறிவிக்கப்பட்டிருக்கும் தேக்கடிக் காடுகள் உள்ளன. ஆனைமலை உய்விடம், வானவழிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் கோவையிலிருந்து 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கோவையிலிருந்து உய்விடத்தில் பல பகுதிகளுக்கும் எளிதில் செல்லத் தக்க வகையில் நல்ல சாலைகள் உள்ளன.

(இ) இந்த உய்விடத்தை நிறுவுவதற்கு, 1972–73-ஆம் ஆண்டிற்கு ரூபாய் ஒரு இலட்சம் செலவு செய்ய ஒப்பளிப்பு வழங்கப் பட்டது. 1973–74 ஆம் ஆண்டில் இந்த உய்விடத்தை மேம்படுத்த ரூபாய் 2 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

MR. CHAIRMAN : Questions are over.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

MR. CHAIRMAN : The notices of privilege motion will be taken up on Monday, since the concerned Minister is not here.

## 2. அறிவிப்புகள்

### (1) பேரவையிலிருந்து செய்தி

4–30 பி.ப. MR. CHAIRMAN : I have to announce to the House that I have received a message from the Deputy Speaker of the Legislative Assembly transmitting copies of the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1973 (L.A. Bill (No. 39 of 1972), as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.



### (2) அவைக் கூட்டத் தேதியில் மாறுதல்.

MR. CHAIRMAN : I have to announce to the House that the Legislative Council will meet on the 5th April 1973, if necessary, and consider Government Bills.

## 3. கவன ஈர்ப்பு

"வட ஆற்காடு மாவட்டத்தில் வறட்சி, மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகளிடம் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் நிர்ப்பந்தத்தைத் தவிர்ப்பது, பயிர்வாரி கடனை மத்திய கால கடனாகு மாற்றுவது குறித்து.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்:—

"வட ஆற்காடு மாவட்டத்தில் கடந்த ஆண்டு வறட்சியின் காரணமாகவும் தற்போது மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகவும் விவசாயிகளுக்கு போதிய வருவாய் இல்லாமையினால் வாங்கிய கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதில் தீவிரம் காட்டி விவசாயிகள் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியிருப்பதைத் தவிர்க்க, பயிர் வாரி கடனை மத்திய கால கடனாகு மாற்ற அரசு ஆணையிட வேண்டுதல் குறித்து."

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் சில பகுதிகள் வறட்சியால் பாதிக்கப் பட்டன என்று அறிவிக்கப்பட்ட உடனேயே விளைச்சல் 6 அணுவுக்குக் குறைவாக உள்ள இடங்களிலுள்ள பகுதிகளில் கூட்டுறவுக் கடன்கள் தள்ளி வைக்கப்படவேண்டுமென்று வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி, ஜூன் 72 முதல் மார்ச் 73 வரை ரூ. 46,75,000 அளவுக்கு கடன்கள் தள்ளி வைக்கப்பட்டன. மேலும் வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் விளைச்சல் 6 அணு வுக்குக் குறைவு என்று அணுவாரி சான்றிதழ் வழங்கப்படாமலிருந் தாலும் கூட, கடன் வசூலிப்பதில் கோயர்சிவ் நடவடிக்கைகளை மேற் கொள்ளக் கூடாது என்று அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது. மின் வெட்டால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடன் தள்ளி வைக்கப் பட்டதோடுமட்டுமல்லாமல் 30—6—1973 வரை கெடுபிடி நட வடிக்கை—கோயர்சிவ் ஆக்ஷன்—மேற்கொள்ள வேண்டாமென்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் சில சிற்றூர்களில் அரசின் ஆணையைத்

தெரிந்து கொள்ளாமல் அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அரசின் கவனத்திற்கு வந்தவுடன், அந்த நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டன.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, பல கிராமங்களில் இதைப்போன்ற நிலை இருக்கின்றது என்பதை நான் இங்கே சொல்லாமலேயே அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். மேலும் இது போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் மேற்கொள்ளாமலிருப்பதற்கு விரைவான உத்தரவை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் ஏற்கெனவே சொன்னேன். அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. சிற்சில சிற்றூர்களில், அரசு ஆணையைத் தெரிந்துகொள்ளாமலே கெடுபிடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவை அரசின் கவனத்திற்கு வந்தவுடனே, நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் என் கவனத்திற்குக் கொண்டுவந்த அந்த இரண்டு நடவடிக்கைகளும் உடனேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்

### தனி உறுப்பினர் நாளன்று அரசு அலுவலை நடத்துதல் குறித்து

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே. "தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இம் மன்றம் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது."

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

> "தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின் 23 (1)-வது விதி நிறுத்தி வைக்கப்பட்டு, இம்மன்றம் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ஆம் நாள் சனிக்கிழமையன்று அரசு அலுவலை மேற்கொண்டு நடத்தத் தீர்மானிக்கிறது".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (1) தமிழ் நாடு 1972 ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/72).

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, I beg to move—

"That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 24 Members (16 Members from the Legislative Assembly and eight Members from the Legislative Council) to consider the Tamil Nadu Societies Registration Bill, 1972 (L.A. Bill No. 53 of 1972) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :

1. Thiru D. Santosham.
2. Thiru G. Vasantha Pai.
3. Thiru M. M. Bakkar.
4. Thiru V. Venga.
5. Thiru Kattoor Gopal.
6. Thiru T. K. Ponnuvelu.
7. Thiru N. Wilson Appollos.
8. Thiru V. Isvarmurti. "

The Societies Registration Act, 1960 (Central Act XXI of 1960) was passed in 1960 when the law relating to Societies was in its infancy in India. The actual working of the Act for the past several decades brought to light many defects, as, for instance, there is no provision in the Act permitting change of name of a society, alteration of bye-laws, keeping of a registered office, maintenance of a register of members and Committee members, holding of annual general meeting, winding up of the societies under the orders of the Registrar, etc. As a result, great difficulty has been experienced by the public and by the administrative officers alike. Therefore, the question of repealing the Societies Registration Act, 1960, which is a Central Act, and replacing it by a suitable State enactment has been under the consideration of the Government for quite some time. Accordingly, the Tamil Nadu Societies Registration Bill, 1972 (L.A. Bill No. 53 of 1972) was introduced in the Legislative Assembly during its last session.

[Thiru S. Madhavan] [1973 மார்ச் 31

I may now mention a few salient features of the Bill for the information of Honourable Members. The Bill seeks to bring societies for promotion of religion, social reform, improvement of crafts and cottage industries, within the scope of the provision, and the registration of societies for diffusion of political education, provided for, in the existing Act, has been excluded from the purview of the proposed legislation. The Bill provides for compulsory registration of not only the literary, science, art, etc., societies whose annual gross income or expenditure in any financial year is not less than Rs. 2,500 within a stipulated time, but also provides for registration of unregistered societies with such expenditure as may be prescribed, and which are formed before the commencement of the proposed legislation and in existence. The Bill also seeks to prohibit registration of society by a name undesirable, in the opinion of the Government or with a name, identical to that of an existing registered society in the same district or with the words such as "Reserve Bank" 'Union' etc., as part of its name, and also enables change of name of a society. Specific provision has been made in the Bill requiring a society to keep an office and to notify its situation and also the maintenance of Register of members of society. The Bill requires a registered society to keep proper books of its accounts and to present before the general body meeting at the end of each financial year, audited receipts and expenditure account and balance sheet with the auditor's report. Provision has also been made in the Bill to invest the funds of a society either in immovable properties, or in Government securities, and also to vest, with the society, the power to spend, out of its funds, such sums for certain authorised purposes subject to certain restrictions. The Bill also provides for the saving of rights of creditors, in the event of amalgamation or division of societies. Necessary provision has been made in the Bill for inspection of books of society by the Registrar or any authorised persons, for causing enquiry by the Registrar into the affairs of society, for cancellation of registration of a society, winding up, removal of societies, as well as to levy fees for filing documents, issue of certificates of registration, etc., and to enhance the fee for registration, etc. of a society from Rs. 50 to Rs. 90 with power to Government for remission of fees. There are no such provisions in the said Central Act. Further, the Government have been empowered to exempt any society from the



1973 மார்ச் 31] [Thiru S. Madhavan]

operation of any of the provisions of the proposed legislation or with any modification and also to remove any difficulty arising in implementing the proposed legislation.

In view of the far-reaching changes sought to be introduced in the Bill and as it is also proposed to enact legislation by the State Legislature for the first time for the registration of societies, it is considered expedient to refer the Bill to a Joint Select Committee of both the Houses.

I accordingly commend the motion for the consideration of this House.

MR. CHAIRMAN: Does any Member wish to speak?

THIRU G. VASANTHA PAI: I want to make a submission. Can a Select Committee Member speak? I am told that I can speak.

MR. CHAIRMAN: The hon. Member is on the Select Committee and he cannot speak now. The hon. Member is not entitled to speak.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, செலக்ட் கமிட்டி மெம்பர்களாக இருப்பவர்கள் பொதுவாகப் பேசுவது வழக்கம் இல்லை. அவ்வளவுதானேயொழிய பேசக் கூடாது என்ற விதி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : அப்படிப் பேசினால், புது வழக்கம் வந்து விடுமில்லையா?

திரு. கே. ராஜாராம் : பேசக் கூடாது என்று விதிகள் எதுவும் இல்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : அப்படிப் பேசுகிறபோது ஒரு வழக்கம் வந்து விடுகிறதே.

திரு. கே. ராஜாராம் : விதிகள் இல்லையென்பதை மட்டும் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஒன்றைச் சொல்ல வேண்டும். பேசலாமா, கூடாதா என்று.

திரு. கே. ராஜாராம் : பேசலாம் என எண்ணுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : பேசுவதில்லை, இதுவரையிலும்.

திரு. கே. ராஜாராம் : வழக்கமாக வைத்துக் கொள்வதில்லை. பேசியிருக்கிறார்கள் சில சமயங்களில். பேசக்கூடாது என்று தடை எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : பேசுகிற வழக்கம் இல்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, some of us who are not members of the Select Committee will not have the opportunity of being educated on this Bill if the hon. Member does not speak in the House. That also may be taken into account.

MR. CHAIRMAN : Let us see about it later.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

" தமிழ் நாடு, 1972-ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்ட முன் வடிவை (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 53/72) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 24 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 16, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் 8) கூட்டு ஆய்வுக்குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவையுடன் இம் மன்றம் ஒத்தியங்குகின்றது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு இம்மன்றத்தின் கீழ்க் கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

1. திரு. டி. சந்தோஷம்.
2. திரு. ஜி. வசந்த பாய்.
3. திரு. எம். எம். பக்கர்.
4. திரு. வி. வெங்கா.
5. திரு. காட்டூர் கோபால்.
6. திரு. டி. கே. பொன்னுவேலு.
7. திரு. வில்ஸன் அப்பலோஸ்.
8. திரு. வி. ஈஸ்வரமூர்த்தி."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.



(2) 1973 ஆம் ஆண்டு பொது இஸ்லாமியர் அறக் கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ் நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/73).

THE HON. THIRU K. RAJARAM : Mr. Chairman, Sir, I beg to move—

" That the Public Wakfs (Extension of Limitation) Tamil Nadu Amendment Bill,@ 1973 (L.A. Bill No. 8 of 1973), as passed by the Assembly, be taken into consideration ".

The Public Wakfs (Extension of Limitation) Act, 1959 (Central Act 29 of 1959), as subsequently amended, extends the period of limitation in certain cases for suits to recover possession of immovable property forming part of public wakfs up to the 31st December 1972. Though, availing this provision, a number of suits have already been filed, there are a number of cases in which suits have yet to be filed. It is, therefore, considered necessary that the time-limit for filing such suits in this State should be extended up to the 31st December 1975. The present Bill seeks to achieve the above object.

Sir, I commend the motion for the acceptance of the House.

MR. CHAIRMAN : Does anybody wish to speak?

(No Member rose.)

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : சட்ட மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 8/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன் வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

---

@62-ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 8/1973) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி:—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு, பொது இஸ்லாமியர் அறக்கட்டளைகள் (காலவரையறையை நீட்டித்தல்) தமிழ்நாடு திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 8/1973) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(3) தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு, கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 39/1972).

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு, கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன் வடிவு (1) (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/1972) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

தலைவரவர்களே, இந்தச் சட்ட முன் வடிவு பேரவை, மேலவையின் ஒப்புதலோடு கூட்டாய்வுக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. கூட்டாய்வுக் குழுவில் பேரவை, மேலவை உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்களுடைய மேலான விளக்கங்களைத் தந்தார்கள். இந்த



விளக்கங்களுக்குப் பின் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித் தார்கள். மாண்புமிகு அங்கத்தினர் திரு. தங்கமணி அவர்களைத் தவிர ஏனைய அங்கத்தினர்கள் அவர்களுடைய ஒருமித்த கருத்தைத் தெரிவித்தனர். அந்த ஒருமித்த கருத்திற்கிணங்க சட்ட முன் வடிவில் சில திருத்தங்கள் செய்யப்பட்டு இப்போது இந்தப் பேரவையின் ஒப்புதலுக்காகத் திரும்ப வந்துள்ளது. கூட்டாய்வுக் குழுவின் அறிக்கை மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை மாண்புமிகு உறுப்பினர் கள் பார்த்திருப்பீர்கள். ஆய்வுக் குழுவின் மாற்றங்களோடு இப்போது திருத்தப்பட்ட மசோதா, தற்காலிகமாக அவ்வப்போது ஆயுள் நீட்டிக்கப்பட்டு வந்த மூலச் சட்டம் நிரந்தரமான ஒரு சட்டமாக ஆக்கப்படுகிறது. மேலும் 1960 வரையில் கட்டப்பட்ட வீடுகளுக்கு அமுலாக்கப்பட்டு வந்த சட்டம் தற்போது எல்லா கட்டடங்களுக்கும் அமுலாக்கப்படுகிறது. கூட்டாய்வுக் குழு புதிதாக வீடுகள் கட்டுவதற்கு உண்டான வேகத்தைத் தடை செய்யக் கூடாது என்ற காரணத்தால், புதிதாகக் கட்டப்படும் வீடுகளுக்கு முதல் 5 ஆண்டுகளுக்கு விதி விலக்கு அளிக்கக் கோரி அதற்கு வேண்டிய வகை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப சுமார் 250 ரூபாய்க்கு மேற்பட்ட குடியிருப்பு வீடுகளுக்கு இருந்த இந்த விதிவிலக்கு இப்போது 400 ரூபாய் வரை உயர்த்தப்பட இருக்கிறது.

ஆகவே அதிகப்படியான வீடுகள் சட்டத்தின்கீழ் கொண்டுவரப் படவிருக்கின்றன. மேலும் நியாய வாடகை நிர்ணயிப்பதில் அவை களுக்கு முதன் முதலில் வகை செய்யப்பட்ட சட்ட முன் வடிவில் அந்த வீட்டைக் கட்டுவதற்கு என்ன செலவாயிற்றோ அந்தச் செலவும், வீட்டு மனைக்கு அந்தத் தேதியில் என்ன கிரயமோ அதைக் கணக்கிட்டு நியாயவாடகை குடியிருப்பு வீடுகளுக்கு 9 சதவிகிதம், மற்ற கட்டடங்களுக்கு 12 சதவிகிதமும் நிர்ணயிக்கப்பட வேண்டு மென்று இருந்தது. ஆனால் கூட்டாய்வுக் குழுவின் மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி நீங்கலாக அனைவரும் நியாய வாடகை நிர்ணயிப்பதில் "ஸ்டாக் கன்ஸ்ட்ரக்ஷன்", அதற்கு டிபிரிசியேஷன் போக மீதியை அடிப்படையாகக் கொண்டு நியாய வாடகை நிர்ண யிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்த ஒருமித்த கருத்திற்கேற்ப மசோதாவில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் வீட்டுச்

(1) 64–82-ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சொந்தக்காரர், வாடகைக்குக் குடியிருப்போர் அல்லது அனுபவிப்போருக்கு எந்தவிதமான வசதியையும் நீக்கவோ, குறைக்கவோ கூடாது என்று அதில் வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே " Member of the family, tenant " என்கிற சொத்துள்ளவர்களுக்கு விளக்கம் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. மேற்கூறிய திருத்தங்களோடு மேலும் சட்டத்தை நடைமுறையில் நன்கு அமுலாக்குவதற்குச் செய்யப்பட்ட சாதாரணத் திருத்தங்கள் கூட்டாய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நேரத்தில் கூட்டாய்வுக் குழுவில் கலந்துகொண்டு நல்ல கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு நன்றியைக் கூறி, சட்டப்பேரவை நிறைவேற்றிய இந்தச் சட்ட முன் வடிவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :</u> முன்மொழியப்பட்ட தீர்மானம் : "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/72) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

*THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, I wish
4–40 பி.ப. that when Bills of this nature are brought before this House, we are given the original sections as also the proposed amendments side by side, so that we can understand the amendments in a better way. It is difficult to find out what the original provision was and how the amendment is made. I hope such a procedure will be adopted in future, so that it would be more useful to us in addressing the House.

Now, Mr. Chairman, my submission is that the word 'tenant' in this Bill has been very elaborately defined. But, there are a large number of loopholes which may lead to endless litigation. It has been stated in the definition that a 'tenant' includes the surviving spouse, or any son, or daughter or the legal representative of a deceased tenant who (i) in the case of a residential building, had been living with the tenant in the building as a member of the tenant's family up to the death of the tenant, and (ii) in the case of a non-residential building, had been in continuous



association with the tenant for the purpose of carrying on business of the tenant up to the death of the tenant and continues to carry on such business thereafter. This means that the person should be a working partner in continuous association with the tenant and should be carrying on the business. Sleeping partners who are usually found in Joint Family businesses are excluded from the definition, unless the meaning of the section is strained and 'continuous association' is made to include them also. I find that there is no need for any distinction between the residential buildings and the non-residential buildings in the matter of definition of the word 'tenant', and the tenant could be defined as a person who is in occupation of the building or any person who is the successor, heir or the kith and kin of the deceased tenant. It may be very difficult to differentiate between them on the ground of association or its closeness and if the question of bona fides comes, that may be left as a matter for determination by a Court of Law.

Mr. Chairman, very often there may be sons who may go abroad for education or some other purpose and may not be directly in association with the father in running the business. When the father suddenly dies, the business may come to an end abruptly, though in law it cannot. Is the son not to be permitted to continue the business? He will have to come down and settle the matter. Thereafter, a question may arise whether he can continue as a tenant and whether he could be considered to be a person who was in continuous association with the business of his father up to his death. I, therefore, feel that the word 'tenant' should have been better defined. Further, I think that persons who have been in continuous occupation of a building for more than 15 years should not be liable to be evicted under the Act.

On the question of the fixation of fair rent under section 4, the Controller has been given the power to determine the fair rent on the basis of the cost of the land as well as the building and an elaborate scheme is provided which was not there in the prior enactments.

Mr. Chairman, in the earliest enactment of 1949, there was a ceiling fixed for the increase in rent. Suppose the rent was Rs. 100, it could not be increased by more than Rs. 50 in the case

of non-residential building and by more than Rs. 25 in the case of residential building. The ceiling which was there was working to the great satisfaction of the tenants, because a legislation of this nature is intended to protect the tenants rather than the landlords. The present legislation which is supposed to give protection to the tenant gives in a different garb enormous rights to the landlords. It thus ceases to be a legislation for the protection of tenants. The method of determining the present market price of a property which had been purchased a long time back may be all right so far as the landlord is concerned. But the method of calculating the cost of construction of the building based on the present valuation, I think, will be very unfair to the tenant. Though a method of depreciation at various rates is incorporated in the Bill, I think, on the whole, it will not be a satisfactory way of disposing of the matter. My own feeling is that there must be a ceiling for the increase of rent and the maximum rent which a landlord should be able to get under the enactment. The Supreme Court decisions in this respect both in Mr. Nambiyar's case and in Mr. Parasuram's case must be given the due respect they deserve. This Bill seeks to do away with the Supreme Court decisions and provide a different form of fixing fair rent, giving a go-by to the very salutary principles which have been given in those decisions.

I find, Mr. Chairman, there are several notes as well as contributions made by the Members of the Select Committee and other bodies in the Select Committee. Many representations have been given in this regard at the Select Committee stage. I also find that most of these representations have not been given due weight in the Select Committee report. Many representations which have been brought forth before the Select Committee have not been considered but have been given the go-by. I do not think any useful purpose will be served at this stage by my going elaborately into the provisions of this Bill, especially when I think the Select Committee as well as the Members of the Legislative Assembly have made up their mind to get through this Bill. I, therefore, cut short my observations and request the Government to consider the fact that the fixation of fair rent may be done in a better way as under the old Act, having regard to the ceiling for



the increase in rent than in the mode prescribed in the present Bill, which, I think, is very cumbrous and which will give a handle to the landlord against the tenant and which may work undue hardship on the tenant. Thank you, Sir.

* THIRU S. T. ADITYAN : *Mr. Chairman, Sir, in approaching* the provisions of this Bill, it is necessary to have in mind certain fundamentals. One thing which has been stressed by my learned and honourable Friend on the other side is that this is a legislation for the purpose of *favouring the tenant.* However, I have to point out that this legislation is not for the tenant or the landlord. It is mainly for fixing a fair rent. Let me here and now say definitely that this is one of the legislations which has perhaps a certain purpose in mind, and this legislation has got this purpose in mind, namely, to hold the scales even between the landlord, on the one hand, and the tenant, on the other.

Sir, I will make also this submission that such a legislation as this, should be totally unnecessary in a well-organised and rich State, and, even in our State with progress achieved year after year, such a legislation will become progressively unnecessary. The more the number of houses built by the State, the more the number of houses built by co-operatives and other societies, the less and less will be the necessity for such legislation. If there are houses available for everybody, why is such a legislation necessary at all? It is not necessary to have a statute of this kind in a State which is rich enough, or in a State which has got a large number of houses. I expect that in course of time, this State also will reach such a stage where this sort of legislation will become unnecessary.

Sir, as I said at the beginning, the main provision in this Bill is about fair rent. Fair rent is different from cheap rent. Fair rent is a rent which is fair to both the parties—the landlord on the one hand and the tenant on the other. I find herein an argument and I do not know whether I should refer to it, because it was already dealt with by the Select Committee : should not the house and buildings be progressively made the property of the tenant? I believe, Sir, it is not certainly the purpose of this Act, to do that. It is not the purpose of this Act to make progressively the houses

and buildings the property of the tenant. There was one memorandum which was submitted to the Select Committee which stated that the house should be made the property of the tenant.

There is one fundamental difference with cultivable land, and, as far as cultivable and arable lands are concerned, the total extent of land is limited. Therefore, any State intending to distribute it as a policy, has to do it as far as possible in a just manner or to make it the property of the State itself. So far as houses are concerned, the number of houses that can be built is unlimited. As the cultivable land is limited, the State is duty bound to distribute it as far as practicable in a just manner. But, as far as houses are concerned, there is no necessity at all of that sort.

We have been asked, 'Are you not giving higher rents as far as lands are concerned or are you not fixing a ceiling?' Tenants occupying houses are certainly different from cultivating tenants.

(மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை)

பி.ப.
4-50 Sir, at present not only are the Government building a number of houses and allotting them on rent, but there are also the private people who are letting houses on rent. We also certainly envisage that there will be a number of other people who will build houses for letting them on rent. We should be encouraging housing schemes even by private persons. Private persons will be building houses and letting them out on rent and, therefore, let us consider their case. Municipal taxes have increased; Corporation taxes have increased; wealth tax has increased; income-tax has increased; all these, the landlord has to pay. Labour cost has increased. The bank rate which was formerly less than six per cent has now increased—I do not know at what rate we are borrowing, but I feel it is nine per cent. I think the State itself is borrowing at about seven per cent or a little less than 7 per cent, but the rates have increased.

Let us also consider the case of the purchasers. Suppose a person goes and purchases a house and lets it out. Suppose he has purchased it at say, Rs. 20,000 or 50,000. If we take the other scheme that was suggested, then the house will be fetching rent as though the investment is only Rs .5,000 or Rs. 6,000.



THIRU G. VASANTHA PAI : On a point of clarification, may I know whether the hon. Member who was a member of the Select Committee could now speak? Mr. Chairman said, I should not speak, because I am a member of the Select Committee in the case of the other Bill. Now, my hon. Friend Mr. Adityan is speaking even though he was a member of the Select Committee on this Amending Bill. May we have a ruling from the Chair?

THIRU S. T. ADITYAN : The Select Committee on this Bill is over.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : தாங்கள் குறிப்பிட்டு சொன்னது செலக்ட் கமிட்டி கூடி முடிவெடுப்பதற்கு முந்திய நிலை பற்றியது. அதனால்தான் அப்படிச் சொன்னார்கள். இதில் செலக்ட் கமிட்டி கூடி ஆய்வு முடிந்தாகிவிட்டது. அதனால் இங்கே பேசுகிறார்கள்.

THIRU G. VASANTHA PAI : Sir, they are supporting the Bill here, but others should be heard.

THIRU S. T. ADITYAN : The difference is, I am trying to support the Select Committee's views. In the other case, the hon. Member may be giving a view which the Select Committee may approve or may not approve. I am trying to support the Bill.

திரு. கே. ராஜாராம் : அது மட்டுமல்ல. செலக்ட் கமிட்டியில் உறுப்பினராக இருக்கக்கூடிய ஒருவர் இங்கே தங்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்வது நல்லது அல்ல. அதை நிறுத்தி வைத்துக் கொள்வது நல்லது என்பதுதான் தாத்பரியமே தவிர, வேறு ஒன்றுமில்லை.

THIRU S. T. ADITYAN : The other point was considered elaborately by the Select Committee. In this Select Committee particularly, a number of meetings were held. A number of witnesses were examined. Everybody was given a chance. I think, I will now be letting a secret if I say that one particular Member, who has now given a dissenting note, gave an opinion first and afterwards when the Select Committee had formulated an opinion on that particular subject, he wanted that to be reopened. It was reopened and reconsidered for the whole day.

The whole question was elaborately dealt with, and I think, in the circumstances, there is not much weight in the note that has been appended by him. Sir, there is only one more point and with that, I close.

Sir, as far as Supreme Court decision is concerned, it revolved upon two points—one of them was whether the delegation to make Rules was excessive. That was also considered by the Select Committee. The point was whether the fixation of fair rent should not be determined in the legislation itself. Can it be delegated? That was the other point. So, because of that, we have now taken up the fixation of fair rent in the Act itself. That satisfies the Supreme Court decision.

The other point that has been suggested by the Supreme Court is: "you have Public Works Department rates. Therefore, it is easily possible for you to fix up a price and on that price to arrive at a fair rent." Now, therefore, what we have done is to select the Public Works Department rates. Public Works Department has given an elaborate scheme. There was no short-cut possible. It was not easy to have a short-cut. It was not easy for us to evolve a scheme which was simpler than what the Public Works Department gave. The scheme has been given by the Public Works Department, and with that as the basis, certain rules have been evolved to fix a fair rent. Sir, under the circumstances, I submit . . .

THIRU G. VASANTHA PAI: Has not the Supreme Court also ruled that there should be a ceiling?

THIRU S. T. ADITYAN: As far as I remember, no. There need not be any ceiling. In the case of increase, the percentage of increase need not have a ceiling, as far as I know. We are speaking without the Supreme Court decision before us.

THIRU G. VASANTHA PAI: Inasmuch as the hon. member has referred to the report of the Select Committee, I might say, there was one witness who had given evidence, and who was himself a party before the Supreme Court. That is Mr. K. C. Nambiar. He said at page 74—"The Supreme Court in their judgment in case No. 2225/66 have recommended a ceiling and advised the fixation of contract rent."



THIRU S. T. ADITYAN: It is not necessary to take the opinion of Mr. Nambiar on that point. All that is necessary will be to take the original. My learned and honourable Friend has been a lawyer for a number of years and I have also put in a number of years at the Bar.

THIRU G. VASANTHA PAI: Was the original placed before the Committee?

THIRU S. T. ADITYAN: The original was available to the Committee. It is a settled practice for us to go to the original. In the circumstances, I think, what has been done is justice to everyone, justice to the landlord and justice to the tenant. A fair rent has been fixed which is fair to everybody concerned. I think, therefore, Sir, this is an exceptional Bill which should receive acceptance from every side of the House. Sir, with these, I support the Bill.

* THIRU A. R. DAMODARAN: Sir, in considering a Bill of this nature, we have to take into account that there are two extreme opinions that have been expressed on this Bill that has been introduced. One extreme view is that the persons who have built houses and let them out on rent do not deserve any increase in income, and the other extreme view is that persons who have spent a great deal of money in house building activity should be allowed, in keeping with the general inflationary trend, to make up a certain percentage of return on their investment. This Bill favours neither the landowner nor the tenant, nor should it do so. Unlike the Cultivating Tenants Protection Act, the simple principle underlying this Bill is to see that rack-renting is not resorted to and that landlords do not raise rent every year, placing tenants in a difficult and harassed position.

Sir, I was also a Member of the Select Committee and we did receive evidence from witnesses who presented memoranda and there was a thorough discussion on the principle underlying this Bill. Although the Government have been criticised for certain liberalisation of the provisions of the Bill, I must say that on the whole, this is a Bill which is in keeping with the present trend in the sense that one recognises the reality of inflation, one

[Thiru A. R. Damodaran] [1973 மார்ச் 31

recognises the necessity for encouraging house-building activity 5-00 பி.ப. as a whole, one realises that unlike the war years when the Rent Control Bill was introduced—and the life of the Bill was being extended from time to time for years together—in this year 1972 or 1973, people are generally suffering due to lack of accommodation and that those dis-incentives that were in existence in the construction of houses should be removed and generally speaking, persons should be encouraged to put up a house, and if they do not themselves live in it, they can let it out on rent to those who do not have the capacity or the resources to build a house. Sir, I have always been one of those who felt that house-building activity has not received the encouragement from any Government, whether it be State Government or the Government of India. I have also told this House on some occasions in the past how badly the people are suffering because of the lack of new houses that have been put up in the recent past. For example, we complain that in big Cities and particularly in crowded urban areas, the rent of buildings is increasing to such an extent that it is absorbing almost 20 to 25 per cent of the income of a middle-class wage-earner who is earning less than four to five hundred rupees. We are trying to tackle the problem from the wrong end, because really speaking instead of trying to control rent at uneconomic levels, I believe, it would be better for us to introduce a Bill of this kind and to encourage house building activity so that the people may benefit from it. Sir, for example, if we take a building which is constructed at a cost of Rs. 50,000 in Madras City on a plot of approximately 1½ grounds, costing, let us say, Rs. 20,000 the total cost of construction of the building would be about Rs. 70,000. Now, Sir, if we calculate the rate of return as allowed by this Bill at nine per cent—although the Act will not apply in the case of residential buildings fetching a rent of more than Rs. 100; I have just taken up this case to illustrate what rate of return could be expected— of the total cost of construction of building including the cost of ground, namely Rs. 70,000, the gross return works out to Rs. 6,300 per year or Rs. 525 per month. Now, Sir, the Corporation tax which has been recently increased to 30 per cent in the case of a building with a rental value of above Rs. 100 per month, including the cess and other taxes that are payable to the Corporation works out to nearly Rs. 2,100 for this



1973 மார்ச் 31] [Thiru A. R. Damodaran]

particular house. Out of the gross income of Rs. 6,300, a sum of Rs. 2,100 has to be deducted by way of Corporation tax and a sum of Rs. 200 goes as Urban Land tax, leaving a net return of Rs. 4,000 on an investment of Rs. 70,000. Sir, if the same amount of Rs. 70,000 is invested in the State Bank of India or in one of the 13 or 14 nationalised Banks, the rate of return is 7½ per cent per annum and the return on Rs. 70,000 would be Rs. 5,250; there is no Corporation tax to be paid, there is no urban land tax to be paid.

THIRU G. VASANTHA PAI : But, income-tax will have to be paid.

THIRU A. R. DAMODARAN : I have not taken into account the income-tax, because income-tax is levied on a graduated slab level and I am assuming that in both the cases, the persons do not pay income-tax. If they pay income-tax, the same logic will apply and the net return on an investment of Rs. 70,000 is higher if it is invested in a Bank rather than when it is invested in a house property.

THIRU G. VASANTHA PAI : Sir, on a point of clarification, I would like to know which Bank gives 7½ per cent interest. I thought the maximum interest on investment in a Bank for one year was six per cent.

THIRU A. R. DAMODARAN : My hon. Friend must go in for long term deposits. If he invests for three years or more, he will get 7½ per cent. My hon. Friend seems to be in the habit of going in for investment for one year. Probably he has better use for his capital.

Sir, the main point that I want to mention is that house-building activity is not, as some people try to make out, anti-social practice or an evil practice. I agree that rent should be fair. But when we talk of fair rent, the term 'fair' indicates that it should be fair to the owner as well as to the tenant. I do not think we can use the word 'fair', if it indicates only a rent that is approved by the tenant and which the owner finds unfair. Therefore, when we talk of the fixation of fair rent, the principles that have been embodied in this Bill are extremely whole-

some, especially in so far as the cost of construction is concerned. Here, Sir, in the Schedule that has been added to this Bill, a new method has been adopted. This has been criticised by some Members and I would like to meet this criticism to a certain extent. In calculating the fair rent, the cost of construction of the house on the date of application for fixation of fair rent should be taken into account and depreciation according to the schedule should be worked out for arriving at the cost of a house that has been constructed, say, 20 years ago. The reason for this is very obvious. The value of the rupee 20 years ago was 85 to 90 paise and the value of the rupee today is less than 40 paise. This is not the satistics given by me; it is the statistics given by the Hon. the Finance Minister of the Government of India. Therefore, if the fair rent of a house built 20 years ago has to be fixed according to the cost of construction at that time, the house owner will not be able to fight the forces of inflation, because he has to live, he has to educate his children, and he has to bear additional expenditure due to increase in the cost of living. Therefore, a very rational system has been adopted in determining the cost of construction of the house on the date and working out depreciation according to the schedule attached to the Bill.

Sir, I was not present at the last meeting of the Select Committee and I was told by the Members that the Hon. Minister said that this depreciation schedule would be decided by the Government, taking into account the views that had been expressed by the Members of the Select Committee. Therefore, Sir, I have not been able to understand one point in connection with the depreciation schedule, which I would like the Hon. Minister to explain. In the mathematical working that has been given as an illustration, it has been stated that the amount of depreciation shall, in no case, be less than 10 per cent of the cost of construction of the building. I am not able to understand it. Sir, I asked a Professor of Mathematics also what exactly this meant and I have been informed that according to the wording of this, it means that if a house is constructed, say, five years ago and the capital cost today is Rs. 50,000 then a minimum of 10 per cent would be deducted from Rs. 50,000 and the balance of Rs. 45,000 would be subject to the depreciation schedule. If that is so, then an attempt



has been made to scale down the cost of construction which was not envisaged by the Members of the Select Committee. Probably the Government felt that if the cost of construction on date was taken into account, it might lead to the fixation of fair rent of a slightly higher scale and they might have decided to reduce the cost of construction in this somewhat arbitrary manner and I would like the Hon. Minister to explain why this departure was made.

The other important thing is that only residential buildings fetching a monthly rent up to Rs. 400 would be brought under the Act; but non-residential buildings are being taken over for the purposes of rent control without any limit on the monthly rent whatsoever. Sir, I personally feel that in the case of non-residential buildings also, a limit should have been fixed, perhaps we could have fixed the monthly rent at Rs. 600 or Rs. 800. I certainly do not think that big buildings in Mount Road or George Town fetching a rent of one rupee per square foot per month should have been brought within the purview of this Bill. It is totally unnecessary. Persons who can afford to pay this rent can certainly afford to bargain with the owners. I personally feel that non-residential buildings with a monthly rent above Rs. 600 should have been excluded from the purview of this Bill.

Sir, I believe the question whether a ceiling should be imposed on the amount of fair rent that would be fixed according to this Bill has been raised by other Members and although I am not a lawyer myself and I enjoyed the exchanges between two learned Members of the Bar on the floor of the House, I believe that the Supreme Court judgment would apply only when there was some vagueness in the State Act as it existed at that time. They stated that the fair rent fixed as per the provisions of the old Act should not exceed 25 per cent of the contracted rate. But, here, we are having a new Bill with entirely new principles and I do not think that the old Supreme Court judgment which related to the law that was then in force would be a bar to our completely revising the system of fixation of fair rent. The Supreme Court did say that certain principles should be evolved in determining the cost of construction and such principles have been clearly laid

down. Therefore, I do not think that the criticism that this is weighted against the tenants is either fair or just, and the intention of the Government that fairness should be done to both the owner and the tenant has been ensured by the provisions of this Bill. Thank you, Sir.

* திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மசோதா இதுவரை தற்காலிகச் சட்டமாக இருந்ததை நிரந்தரச் சட்டமாக ஆக்குவதற்காகக் கொண்டுவரப்பட்டுள்ள மசோதா. ஒவ்வொரு வருஷமும் இதனுடைய ஆயுள் நீடிக்கப்பட்டுக்கொண்டே வந்தது. ஆகவே ஒவ்வொரு வருஷமும் இதைப்பற்றி சட்டசபையில் பேசிக்கொண்டிருப்பது வழக்கமாக இருந்துகொண்டு வந்தது. வெகு நாட்களுக்கு முன்னமேயே இதை நிரந்தரமான சட்டமாக ஆக்குவதாக காங்கிரஸ் ஆட்சி காலத்திலே சொல்லப்பட்டு வந்தது. அதற்குப் பின்னால் கடந்த ஐந்து ஆண்டுகளாக இப்போதுள்ள ஆட்சியும் சொல்லிக் கொண்டேவந்தது. இனிமேல் இது தற்காலிகச் சட்டமாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. வீடு பற்றாக்குறை என்பது நிரந்தரமாக ஆகிவிட்டது. ஆகவே இந்தச் சட்டம் நிரந்தரமாக இருக்கவேண்டும், சட்டமாக இருக்கவேண்டும் என்று உணர்ந்துதான் இப்போது இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1960-ம் வருஷத்தில் முதல் முதலில் இந்த மசோதா கொண்டுவரப்படும் போது, வீடு நெருக்கடி அளவுக்கு மீறி இருந்தது. ஆனால் இரண்டு ஆண்டுகளில் இது திருந்த வேண்டுமென்ற எண்ணத்தில் தற்காலிகச் சட்டமாக நிறைவேற்றப்பட்டது. இப்போது ஜனத்தொகை கூடியதால் கிராமங்களில் இருக்கும் மக்கள் நகரங்களில் உள்ள வசதிகளை அனுசரித்து, தொழில் வசதிகளை அனுசரித்து, நகரங்களிலேயே குடியேற ஆரம்பித்ததால்தான், இந்தக் கஷ்டம் அளவுக்கு மீறிப் போய்விட்டிருக்கிறது என்பதையும் அரசாங்கம் உணர்ந்து இந்தச் சட்டத்தை நிரந்தரமாக்க முற்பட்டிருக்கிறார்கள். இந்த நிலையில் வீடு கட்டுவதை ஊக்குவிக்க வேண்டியது மிகவும் அவசியம். அரசாங்கம் மட்டும் மூலதனம் போட்டு அல்லது கூட்டுறவுத் துறைகளில் மூலதனம் போட்டு வீடுகள் கட்டுவது போதவில்லை. ஏராளமாக தனியார்கள் வீடுகள் கட்டினால்தான், இந்தப் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்க முடியும். ஆகவே அதற்கு வேண்டிய வசதி யாவும் ஏற்படுத்துவது மிகவும் அவசியம். இப்போது சபை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கும் மசோதா முன்பு இருந்ததைக் காட்டிலும் வீடுகட்டும் தனியார்களைக்



கொஞ்சம் ஊக்குவிப்பதாகத்தான் இருக்கிறது. இது போதாது. இன்னும் கூட சலுகைகள் அளித்தால் நிறைய வீடுகள் கட்டுவார்கள். பின்னால் வேண்டுமானால் அந்தச் சலுகைகளைக் குறைத்துக் கொள்ளலாம். அதற்காக வேண்டி குடியிருப்பவர்களைக் கஷ்டப் படுத்த வேண்டுமென்று சொல்லவில்லை. வீடு கட்டுபவர்களை ஊக்கப் படுத்த வேண்டும். அரசாங்கமும் எல்.ஐ.சி.-யிலிருந்து பணம் நிறையக் கடன் பெற்று வீடுகள் கட்ட முற்பட்டிருக்கிறார்கள். இன்று கேள்வி நேரத்தில் அமைச்சரவர்கள் சொன்னார்கள் கிராமங்களில் கூட ஒவ்வொரு கிராமத்திலும் "ப்ரீ ஃபாபிரிகேடட்" வீடுகள் என்று கட்டி, பிரித்து எடுக்கக் கூடிய வீடுகள் கட்ட முற்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அம்மாதிரிச் செய்தால்தான், வீடு பற்றாக்குறையை ஓரளவுக்குத் தீர்த்துவைக்க முடியும். தவிர இப்படிச் செய்யும்போது அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கக் கூடிய வீடுகள், ஸ்தல ஸ்தாபனங்களுக்குச் சொந்தமாக இருக்கக் கூடிய வீடுகள், மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கக்கூடிய வீடுகள் ஆகியவைகளை இந்தச் சட்டம் பாதிக்காது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதோடு கோயில்களையும், தர்ம ஸ்தாபனங்களையும் இதில் சேர்த்தால் நல்லது. சென்னை நகரத்திலேகூட கோயிலைச் சேர்ந்த சில வீடுகள் ரொம்பக் குறைந்த வாடகைக்குப் போய்க்கொண்டிருக்கின்றன. சாதாரணமாகச் சொன்னால், கபாலீஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சேர்ந்தவைகள் நிறைய இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் நியாயமான வாடகை நிர்ணயிக்கப்படவில்லை. இதையெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : "ஃபேர் ரென்ட்" பிக்ஸ் பண்ணுவதற்கான வழிகள் எல்லாம் இந்தச் சட்டத்திலே இருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : இருக்கும் நிலைமையை எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. தங்களுடைய செல்வாக்கை வைத்துக்கொண்டு ரூ. 150 "பிக்ஸ்" பண்ணக்கூடிய வீட்டை ரூ. 50, ரூ. 40 என்று செல்வாக்குள்ளவர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சுவாமி வந்து பேசுமா என்று அவர்கள் நினைத்துக்கொண்டு தங்கள் இஷ்டப்படி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்பேர்ப் பட்டவர்கள்மீது நான் சொல்லுவதை வைத்துக்கூட நடவடிக்கை எடுக்கலாம். சென்னை நகரத்திலே உள்ள கோயிலுக்குச் சொந்தமான வீடுகளுக்கு நியாய வாடகை நிர்ணயிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே

மாதிரி தர்ம ஸ்தாபனங்களையும் எடுத்துக்கொள்ளலாம். ஏனென்றால் தர்மகர்த்தாக்களாக இருப்பவர்களுக்குச் சொந்தமில்லை. அதுவும் யார் யாரோ தர்மகர்த்தாக்களாக வருகிறார்கள், போகிறார்கள். அது பற்றி சிரத்தையில்லாமல் அந்தச் சொத்துக்கள் அழியும் நிலையில் போய்க்கொண்டிருக்கின்றன. ரிப்பேர்கள் செய்வதுகூட இல்லை. குறைந்த வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவைகளை சரிவரக் கவனிக்கவேண்டும். இன்னும் பெரிய தவறு, சிலபேர் வாடகைக்கு எடுத்துக்கொண்டு தாங்கள் குடியிருப்பதுகூட இல்லை. அந்த வீட்டிலே 4 அல்லது 5 பேர்களுக்கு உள் வாடகைக்கு விட்டு இதை ஒரு தொழிலாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். பல இடங்களிலே உள் வாடகைக்கு விட்டு ஒவ்வொரு வீட்டிலும் ரூ. 100, ரூ. 200 அதிக லாபம் வருகிறது. வேறு தொழிலே வேண்டியதில்லை. இது நடந்துகொண்டிருக்கிறது. இதைக் கொஞ்சம் நாகரிகமாக பெரிய ஆட்கள் செய்கிறார்கள். இன்னும் சிலபேர் குடிசைகளையே வாடகைக்குப் பிடித்துக்கொண்டு ரூ. 50 அல்லது ரூ. 60-க்கு சுமாரான குடிசைகளைப் போட்டு மாதம் ரூ. 5, ரூ. 10 வாடகைக்கு விட்டு இதைத் தொழிலாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். இதிலேயும் நாம் கவனம் செலுத்த வேண்டும். வாய் சவடால் அடிப்பவர்களாக இருந்தால் போதும், ஐந்து குடிசைகளைப் பிடித்துக்கொண்டு வாடகைக்கு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே உள் வாடகைக்கு விடப்படுவதைக் கண்டிப்பாக நிறுத்தி, அவர்கள் வீட்டுச் சொந்தக்காரருக்கு நேரடியாக இருக்கக் கூடிய டெனன்டாக ஆகும்படி சட்டத்திலே வழி செய்திருக்க வேண்டும். செய்யப்படவில்லை. அதற்காக விதிகளின் மூலம் வழி செய்ய முடியும். உள் வாடகை என்பதே இருக்கக் கூடாது. நேரடி, டெனன்டாக இருக்கவேண்டும். யாருக்காவது பெரிய வீடு இருக்கிறது எனில், யாராவது வீடு வேண்டுமென்றால், வீட்டுக்காரர்கள் தான் வாடகைக்கு விட வேண்டும். அவர்களுக்குக் கீழே நேரடி டெனன்ட்டாக இருக்க வேண்டுமே தவிர சப்-டெனன்ட்டாக இருக்கக் கூடாது. அதனால் பல குறைகள் ஏற்படுகின்றன.

பி.ப. 5-20 கிளாஸ் 4 (7) (ii)-இல் ரிப்பேர் செய்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் எவ்வளவு தொகைக்குள் ரிப்பேர் செய்யலாம் என்று நிர்ணயம் இல்லை. ஏற்கெனவே வீட்டில் குடியிருப்பவர் வீட்டுச் சொந்தக்காரர் ரிப்பேர் செய்யவில்லை என்று நோட்டீஸ் கொடுத்துவிட்டு, தானே ரிப்பேர் செய்யலாம். அப்படி ரிப்பேர் செய்யும்போது வீட்டின் வாடகையில் இத்தனை மடங்கிற்குள்



நான் ரிப்பேர் செய்யலாம் என்ற ஒரு அத்து இருக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ரூ. 100 வாடகை வீட்டில் ரூ. 2,000-க்கு ரிப்பேர் செய்துவிட்டால், வீட்டுக்காரர் நிலைமை என்னவாகும்? 20 மாத வாடகை அடிபட்டுப்போகும். எனவே இத்தனை மடங்குக்குள் தான் குடியிருப்பவர் ரிப்பேர் செய்து வாடகையில் பிடித்துக்கொள்ளலாம் என்று நிர்ணயிக்கப்பட வேண்டும். இது செலக்ட் கமிட்டியில் விட்டுப்போன ஒரு சமாசாரம். அமைச்சர் அவர்கள் இதைக் குறித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாடகையை நிர்ணயிப்பதில் வீட்டின் கிரயம்—மதிப்பு எல்லாவற்றையும் கணக்கிட்டு குடியிருப்பு வீடாக இருந்தால், 9 சதவிகிதம் வட்டி கட்டும்படியாகவும், வியாபார சம்பந்தப்பட்ட—பிசினஸ் நடத்தக்கூடிய இடமாக இருந்தால், 12 சதவிகிதம் வட்டி கட்டும்படியாகவும் வாடகையை நிர்ணயிக்கலாம். அதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. அப்படிச் செய்யும்போது, வீட்டு வரியையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். சென்னையை எடுத்துக்கொண்டால், மூன்று மாத வாடகையை—அதாவது வாடகையில் கால்வாசியை—வரியாகக் கட்டுகிறார்கள். எனவே இதையும் வீட்டின் கிரயத்தோடு சேர்த்துப் பார்க்க வேண்டும். இதுவும் ஒரு விட்டுப்போன விஷயம் என்று நினைக்கிறேன். இதை எப்படி செலக்ட் கமிட்டியில் பரிசீலிக்காமல் விட்டார்கள் என்று தெரியவில்லை. இதையும் கவனித்திருக்க வேண்டும். இப்போதும் ஒன்றும் தவறிவிடவில்லை. அதையும் சேர்த்துக்கொள்வதற்கு வழி இருக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(1) for sub-section (1), the following sub-section shall be substituted, namely :—

"(1) No landlord shall without just or sufficient cause, cut off or withhold or cause to be cut off withheld any of the amenities enjoyed by the tenant or were in existence during the pervious tenancy.";

(2) (*i*) in sub-section (3), the words "with a view to compel him to vacate the building or to pay an enhanced rent or to harass him" shall be omitted;

(*ii*) to sub-section (3), the following proviso shall be added, namely:

Provided that if the amenities are not restored within seven days from the date of the interim order, the Controller may permit the tenant to restore the amenities at his own cost and recover the cost of the expenses incurred by the tenant in respect of restoration of such amenities from the rent payable to the landlord in such monthly instalments as may be specified by the Controller.";

(3) in sub-section (4), after the words "the tenant has been in enjoyment of the amenities" the words "or that the amenities were in existence during the previous tenancy" shall be inserted.

15. *Substitution of section 18, Tamil Nadu Act 18 of 1960.*—For section 18 of the principal Act, the following sections shall be substituted, namely :—

"18. *Execution of orders.*—(1) Every order made under section 10, 14, 15, 16 and 17 and every order passed on appeal under section 23 or on revision under section 25 shall be executed by the Controller, as if, such order is an order of a civil court and, for this purpose, the Controller shall have all the powers of a civil court.

(2) An order passed in execution under sub-section (1) shall not be subject to any appeal or revision.

18-A. *Power of Controller to appoint Commissioner.*—The Controller shall have powers to appoint a Commissioner in any proceeding pending before him and for this purpose, he shall have all the powers of a civil court under the Code of Civil Procedure. 1908 (Central Act V of 1908). ".

16. *Amendment of section 19, Tamil Nadu Act 18 of 1960.*—In section 19 of the principal Act, for the words, brackets and figures "The Controller shall summarily reject any application under sub-section (2) or under sub-section (3) of section 10 or under section 14, 15 or 16 which", the words, brackets, figures and letters "Any application under section 3-A or section 12, and any application under sub-section (2) or sub-section (3) or sub-section (3-A) of section 10 or under section 14, 15 or 16, shall be summarily rejected by the authorized officer or the Controller, as the case may be, if such application" shall be substituted.

17. *Amendment of section 22, Tamil Nadu Act 18 of 1960.*—Section 22 of the principal Act shall be renumbered as sub-section (1) of that section and after sub-section (1) as so renumbered, the following sub-section shall be added, namely :—

"2. The land shall not, while making repairs, render the building uninhabitable by digging up the door or by removing any door or window or by causing any other damage to any part of the building.".



18. *Amendment of section 23, Tamil Nadu Act 18 of 1960.*—In section 23 of the principal Act, in sub-section (1), or the expression "*Fort St. George Gazette*" the expression "*Tamil Nadu Government Gazette*" shall be substituted.

19. *Substitution of section 25, Tamil Nadu Act 18 of 1960.*—For section 25 of the principal Act, the following section shall be substituted, namely :—

"25. *Revision.*—(1) The High Court may, on the application of any person aggrieved by an order of ...the appellate authority, call for and examine the record of the appellate authority, to satisfy itself as the regularity of such proceeding or the correctness, legality or propriety of any decision or order passed therein and if, in any case, it appears to the High Court that any such decision or order should be modified, annulled, reversed or remitted for reconsideration, it may pass orders accordingly.

(2) Every application to the High Court for the exercise of its power under sub-section (1) shall be preferred within one month from the date on which the order or proceeding to which the application relates is communicated to the applicant :

Provided that the High Court may, in its discretion, allow further time not exceeding one month for the filing of any such application, if it is satisfied that the applicant had sufficient cause for not preferring the application within the time specified in this sub-section.".

20. *Amendment of section 30, Tamil Nadu Act 18 of 1960.*—In section 30 of the principal Act,—

(1) for clause (i), the following clause shall be substituted, namely :—

"(i) any building for a period of five years from the date on which the construction is completed and notified to the local authority concerned; or";

(2) in clause (ii), for the words "two hundred and fifty rupees", the words "four hundred rupees" shall be substituted;

(3) after clause (ii), the following clause shall be added namely :—

(iii) any lease of a building under which the object of the tenant is to run the business or industry with the fixtures, machinery, furniture or other articles belonging to the landlord and situated in such building.

*Illustration* (1).—Where a dal mill as such is the subject matter of the lease and where the intention of the tenant is to run the business with the machinery in the building in which such dal mill is housed, the Act does not apply to such building.

*Illustration* (2).—Where the lease is of land and building together with fixtures, fittings, cinematograph talkie equipments, machinery and other articles, the Act does not apply to such building.

*Illustration* (3).—Where a hotel building together with the furniture, machinery and other articles necessary for the running of hotel business is leased and the tenant is to run the hotel business in such building, the Act does not apply to such building.".

21. *Amendment of section* 31, *Tamil Nadu Act* 18 *of* 1960.—In section 31 of the principal Act,—

(1) the words " or district board " and " district board " shall be omitted;

(2) for the words " Corporation of Madras " occurring in two places, the words " municipal corporation of Madras or municipal corporation of Madurai " shall be substituted.

22. *Amendment of section* 32, *Tamil Nadu Act* 18 *of* 1960.—In section 32 of the principal Act, after the words " any person authorized by him in this behalf ", the words " or the authorized officer " shall be inserted.

23. *Amendment of section* 33, *Tamil Nadu Act* 18 *of* 1960.—In section 33 of the principal Act,—

(1) for sub-section (1), the following sub-sections shall be substituted, namely :—

" (1) If any person contravenes any of the provisions of sub-sections (1), (2), (4) and (5) of section 3, sub-section (4) of section 3-A, sub-sections (1) (*a*) and (2) (*a*) of section 7, sub-section (1) of section 8, sub-section (1) of section 17, section 21, sub-section (2) of section 22 or section 32, or any order under sub-section (3) or sub-section (3-A) of section 10 or sub-section (3) of section 17, or any of the conditions in the notification issued under section 29, he shall be punishable with fine which may extend to two thousand rupees.



(1-A) Any landlord or the member of his family, as the case may be, who, after obtaining possession of a building under sub-section (3) or sub-section (3-A) of section 10, does not occupy it within one month of his taking possession or having so occupied, vacates it without reasonable cause within six months of such date, shall be punishable with fine which may extend to two thousand rupees. ";

(2) in sub-section (2), for the words " one thousand rupees " occurring in two places, the words " two thousand rupees " shall be substituted;

(3) in sub-section (3), for the words " one thousand rupees " occurring in two places, the words " two thousand rupees " shall be substituted.

24. *Amendment of section* 34, *Tamil Nadu Act* 18 *of* 1960.—In section 34 of the principal Act, for sub-section (4), the following sub-sections shall be substituted, namely :—

(4) (*a*) All rules made under this Act shall be published in the *Tamil Nadu Government Gazette* and unless they are expressed to come into force on a particular day, shall come into force on the day on which they are so published.

(*b*) All notifications issued under this Act shall, unless they are expressed to come into force on a particular day, come into force on the day on which they are published.

(5) Every rule made under this Act shall, as soon as possible after it is made, be placed on the table of both Houses of the Legislature, and if, before the expiry of the session in which it is so placed or the next session, both Houses agree in making any modification in any such rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be, so however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule. ".

25. *Omission of section* 36, *Tamil Nadu Act* 18 *of* 1960.—Section 36 of the principal Act shall be omitted.

26. *Omission of section* 39, *Tamil Nadu Act* 18 *of* 1960.—Section 39 of the principal Act shall be omitted.

27. *Disposal of pending proceedings relating to fixation of fair rent.*—Every proceeding relating to the fixation of fair rent pending before the Controller or any authority on the date of the coming into force of this Act shall be decided in accordance with the provisions of the principal Act.

*Explanation.*—For the removal of doubts, it is hereby declared that any decision in such pending proceeding shall not bar the landlord or the tenant from applying for refixation of fair rent under sub-section (3) of section 5 of the principal Act, as amended by this Act.

28. *Tamil Nadu Act* 18 *of* 1960, *to be made permanent.*—The Tamil Nadu Buildings (Lease and Rent Control) Act, 1960 (Tamil Nadu Act 18 of 1960), as amended by this Act, is hereby made permanent.

29. *Insertion of new Schedules in Tamil Nadu Act* 18 *of* 1960.—In the principal Act, the following Schedules shall be added at the end, namely :—

SCHEDULE I.

(*See* section 4.)

AMENITIES.

(1) Air-conditioner.

(2) Lift.

(3) Water cooler.

(4) Electrical heater.

(5) Frigidaire.

(6) Mosaic flooring.

(7) Side dadoos.

(8) Compound walls.

(9) Garden.

(10) Over-head tank for water-supply.

(11) Electric pump and motor for water-supply.

(12) Playground.

(13) Badminton and Tennis courts.

(14) Sun-breakers.



(15) Amenity referred to in the first proviso to sub-section (4) of section 4.

(16) Usufructs, if any, enjoyed by the tenant.

(17) Features of special architecutural interest.

SCHEDULE II.

(*See* section 4.)

*Rates of depreciation.*

| | *Type of buildings.* | *Rate of depreciation per annum.* |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | Buildings buit in lime mortar and in which teak has been used throughout. | 1 per cent |
| 2 | Buildings built partly of brick in lime mortar and partly of brick in mud and in which teak has been used. | 1½ per cent. |
| 3 | Buildings built in brick in mud and in which country wood has been used. | 2 per cent |
| 4 | Buildings which are inferior to those of class 3 with brick-in-mud unplastered walls and mud floods and in which cheap country wood has been used. | 4 per cent |

*Explanation.*—(1) The depreciation shall be calculated for each year on the net value arrived at after deducting the amount of depreciation for the previous year.

(2) The amount of depreciation shall in no case be less than ten per cent of the cost of construction of the building.

(3) The actual depreciation of a building aged 'n' years is calculated by using the formula—

$$P = A\left(\frac{100-r}{100}\right)^n$$

where P—total cost of construction of the building.

r—rate of depreciation per annum.

n—age of building (i.e., the number of years).

p—the final depreciated value of the building.

The amount of depreciation will be equal to ('A'—'P') subject to a minimum of ten per cent of 'A'.

## தமிழ்நாடு சட்டமன்றம்

---

**திங்கட்கிழமை, 1973 ஏப்ரல் 2.**

*சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் [திரு. சி. பி. சிற்றரசு] அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.*

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்

*Selection Grade Post*

* 321. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the service of the Secondary Grade Teachers who worked in the Panchayat Union Schools was taken into account for Selection Grade when they were taken into the Government (Board) High Schools; and

(*b*) if not, the reasons therefor?

**தேர்வுத்தரப் பதவி**

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணி புரிந்த இடைநிலைத் தர ஆசிரியர்களின் பணிநிலை, அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரிய அந்த ஆசிரியர்கள் எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவர்கள் பணி தேர்வுத்தரப் பதவிக்கு கணக்கிலெடுத்துக்கொள்ளப்பட்டதா?

(இ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை; பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலிருந்து அரசு (கழக) உயர்நிலைப்பள்ளிகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஆசிரியர்களுக்கு, அவ்வாறு அவர்கள் எடுத்துக் கொள்ளப்பட்ட நாளிலிருந்துதான் முதுநிலை உரிமை வழங்கப்படுகிறது.

(இ) பஞ்சாயத்து யூனியனின் கீழ் அத்தகைய இடைநிலை ஆசிரியர்கள் ஆற்றிய பணிக்காலத்தைக் கணக்கிட்டு முன்னிடம் வழங்கினால் அது ஏற்கனவே கழக உயர்நிலைப்பள்ளிகளில் பணியிலிருப்போரின் முதுநிலையைப் பாதிக்கும்; நிரந்தரமாக பணியிலிருப்பவர்களிடமிருந்து முடிவில்லாத மேல் முறையீடுகளுக்கும் வழி வகுக்கும்.

**திரு. எம். ராஜா அய்யர்:** தலைவர் அவர்களே, 1—4—1970-க்குப் பிறகும், வருடத்திற்கு 50, 55 பள்ளிகள் விதம், முன்னால் 'பி' விங்கென்று சொல்லுகிறமாதிரி, அதை 'ஏ' விங் என்றே கூறி, ஆரம்பித்திருக்கிறோம். ஆகையால், இந்தச் சலுகைகள், அரசினர் 'ஏ' விங் என்று கூறப்படும் பள்ளிகளுக்கும் கிடைக்குமா? அதைப்பற்றி அரசு ஆராயுமாவென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அதுபற்றி விவரம் இல்லாத காரணத்தால், அதுபற்றித் தனியாகப் பரிசீலித்து தக்க முடிவு எடுக்கலாம்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, 1—4—1970-க்கு முன்னால் டிஸ்டிரிக்ட் போர்டு பள்ளிகளிலிருந்த ஆசிரியர்கள், அரசுப் பள்ளிகளுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அதே ஊழியக் காலமும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளாக இருந்தவை, உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படுகின்றன. அப்பொழுது அந்த ஆசிரியர்களும் மாற்றப்படுகிறார்கள். 1—4—1970-க்கு முன்னால் டிஸ்ரிக்ட் போர்டு பள்ளிகளிலிருந்து வந்த ஆசிரியர்களின் ஊழியக் காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதைப்போல, இந்த ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை, உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக எடுத்துக்கொள்ளும்போது, அவர்களுடைய ஊழியக் காலத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ள அரசு முயலுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே டிஸ்டிரிக்ட் போர்டு இருந்த காலத்தில், இரண்டு பள்ளிகளும் ஒரே அமைப்பின் கீழே இருந்தபோது பிரிக்கப்பட்டது. அப்படிப் பிரித்த பிறகு, துவக்கப் பள்ளிகளுக்கு ஒரு பிரிவும், உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பிரிவும் ஆக்கப்பட்டு, ஒரு ஸ்பெஷல் ஆபீசரின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆகவே அதற்கு முன்னால் எடுக்கப்பட்டவர்களுடைய பணிக் காலத்தைச் சேர்த்துக்கொள்ளுவதில் பொருள் இருந்தது. அதற்குப் பிறகு, அரசு உயர்நிலைப் பள்ளிகள் என்று ஆக்கப்பட்டு, அதிலே சேர்த்துக்கொள்ளப்படுகின்றபோது அதற்காகத் தனியான வரன்முறைகள், மற்றவைகள் இருக்கின்ற காரணத்தால், அதற்கு முன்னால் டிஸ்ரிக்ட் போர்டு சர்வீசிலே பணி புரிகின்ற தன்மைக்கு, அரசிலிருந்து பிரிக்கப்பட்டதற்குப் பிறகு சேர்ப்பதிலே இடர்ப்பாடுகள் வருகின்றன. அதன் காரணமாகப் பலரிடத்திலிருந்தும் முறையீடுகள் வருமென்ற காரணத்தால், அதற்கு இடமில்லையென்று குறிப்பிடப்பட்டிருந்தது.



## *Teachers' Provident Fund Accounts*

*323 *Q*—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state with reference to the answer given to Legislative Council Starred Question No. 95, on 8th December 1971—

(*a*) whether the Government have since ordered the payment of Government contribution on part-final withdrawal of amounts from Teachers' Provident Fund Accounts in aided schools for purposes other than house-construction; and

(b) if so, the details thereof?

### ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி

**திரு. எம். ராஜா அய்யர்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் 8—12—1971-ல் 95-ஆம் எண் சட்ட மன்ற மேலவை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி, கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மானியம் பெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கிலிருந்து வீடுகள் கட்டுவது நீங்கலான பிற காரியங்களுக்காக திருப்பிக் கட்டாத முறையில், இறுதியாக வாங்கும் பகுதித் தொகைக்குரிய அரசுப் பங்குத் தொகையைக் கொடுக்கலாமென அரசு இப்போது ஆணையிட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பள்ளி ஆசிரியர்கள் தங்கள் வைப்பு நிதியிலிருந்து வீடுகட்டுதலுக்காக மட்டுமின்றி ஏனைய அங்கீகரிக்கப்பட்ட காரணங்களுக்காக பகுதி இறுதித் தொகையைப் பெறும்போது அத்தொகையையும் சேர்த்து அரசினரின் பங்குத் தொகை நிர்ணயிக்கப்படுமென்று அரசு ஆணை ஏற்கனவேயே பிறப்பிக்கப்பட்டு விட்டது. அவ்வாணையின் அடிப்படையில் தற்போது ஆசிரியர்கள் வைப்புநிதி விதிகளுக்கு, சில திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

THIRU M. RAJAH IYER: May I take it, Sir, for purposes other than house construction also, if permission has been accorded, Government contribution would not be denied to the teachers?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, வீடு கட்டுவதற்காகக் கொடுக்கப்படுகின்றதை நீக்கி, மற்ற அங்கீகரிக்கப்பட்டவைகள்

## B.T. Teachers in Government High Schools

*322 Q.—THIRUVALARGAL V. ISVARMURTI AND A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of B.T. Teachers appointed in the Government High Schools after 1st April 1970 in our State;

(b) the number among them whose services are not yet confirmed; and

(c) the reasons therefor?

## அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. (B.T.) ஆசிரியர்கள்

**திருவாளர்கள் வ. ஈஸ்வரமூர்த்தி & ஏ. ஆர். தாமோதரன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநிலத்தில், 1—4—1970-க்குப் பின்னர் அரசு உயர்நிலைப் பள்ளிகளில் நியமிக்கப்பட்ட பி. டி. ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் இன்னும் பணியுறுதி செய்யப்படாதவர்கள் எத்தனை பேர்?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) பி-பிரிவு பள்ளிகளில் 2957 பி. டி. ஆசிரியர்கள் தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர்.

(இ) 1—4—1970-க்குப்பின் பி. பிரிவு பள்ளிகளில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட எல்லா பட்டதாரி ஆசிரியர்களின் பணியும் வரன் முறை செய்யப்படும் என்று 3—3—1973 தேதியிட்ட கல்வித்துறை அரசு ஆணை 351-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவரவர்களே, 3—3—1973 அன்று அரசு வெளியிட்ட ஆணை குறித்து, 5—3—1973-ம் தேதியன்று ஆசிரியர்கள் சில சந்தேகங்களை எழுப்பினார்களென்றும், அதற்கு அரசு சில விளக்கங்களைக் கொடுத்ததென்றும் தெரிகிறது. அவர்கள் எழுப்பிய சந்தேகங்கள் என்ன, அதற்கு அரசு அளித்த விளக்கங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவர்கள் எந்த வகையில் வரன் முறைப்படுத்தப்படுவார்களென்று கேட்டார்கள். 2957 பேர்களில், தேர்வு ஆணைக் குழு எந்த அளவுக்கு வரன்முறைப்படுத்துகிறது என்பதற்கான அறிக்கையை எதிர்பார்க்கிறோம். அதில், தேர்வு ஆணைக் குழு யார் யாரை வரன்முறைப்படுத்தாமல் விடுகிறார்களோ, அவர்களை, நாம் நம்முடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி வரன்முறைப்படுத்துவதென்ற முறையிலே, தேர்வு ஆணைக் குழுவிலிருந்து அறிக்கை வந்தவுடன், அதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமென்று அவர்களுக்கு விளக்கப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Will their services be confirmed from the date of entry or are there other regulations on these matters?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1—4—70-ல் இருந்து அவர்கள் பணியில் சேர்ந்துகொண்டு வந்திருந்தாலும்கூட, ஏற்கெனவே வரன்முறைப்படுத்தப்பட்டவர்கள் பட்டியலுக்குப் பின்னால்தான் இவர்கள் வர முடியும். அந்த நிலைமைகளைப் பயன்படுத்தித்தான், இப்போது தேர்வு ஆணைக் குழு எத்தனை பேரைத் தேர்ந்தெடுத்து வரன்முறைப்படுத்துகிறதென்பதைப் பார்த்து, அதில் எத்தனை பேர் விடுபட்டிருக்கிறார்களோ அவர்களைப் பின்னால் வரன்முறைப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படும். அவர்கள் சேர்ந்த நாளிலிருந்து வைத்தோமானால், பின்னால் வரன்முறைப்படுத்தப்பட்டவர்களுக்கும் முன்னால், இவர்களை வரன்முறைப்படுத்திவிட்டதாக ஆகிவிடும். ஆகவே தேர்வு ஆணைக் குழுவினுடைய முடிவுக்கு இணங்கத்தான் நாமும் வரன்முறைப்படுத்த வேண்டும்.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, after 1st April 1970, we have appointed some of these B.T. Assistants in the Government 'A' Wing, since after that date no Government 'B' Wing B.T. Assistants have been appointed, as every school that has been opened has been 'A' Wing School. Therefore, will that concession apply to the 'A' Wing schools founded after 1st April 1970?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 'ஏ' விங்கைப் பொறுத்தவரையில், எப்போதும்போல் தேர்வு ஆணைக்குழு மூலமாகத்தான் அவர்கள் நியமிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் எல்லாம் 'பி' விங்கைப் பொறுத்துள்ள காரணத்தால், அவர்களுக்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்று கருதுகிறேன்.

அத்தனைக்கும் அரசினர் பங்குத் தொகை கொடுப்பதற்காக அரசு ஆணை ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டு விட்டது. அதற்கான திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, வருங்கால வைப்பு நிதியிலிருந்து கடன் பெறுவதற்காக, பழைய காலத்திலிருந்தே விதிகள் இருக்கின்றன. அதற்காக அதில் சில காரணங்களும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இந்த விதிகளின் காரணமாக அவர்கள் தங்களுக்கு வேண்டிய பணம் பெற முடியவில்லை. ஆசிரியர்கள் சேமிக்கக்கூடிய பணத்தைக் கடனாகத் தருவதற்கு, அவர்கள் எந்தக் காரணத்தைச் சொன்னாலும், கடன் கிடைக்கும் முறையிலே அந்த விதிகள் திருத்தப்படுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இன்னின்ன வகைகளுக்காக, இந்த அளவுக்கு அவர்கள் பெறலாமென்று ஒரு விதிமுறை இருக்கிறது. 50 சதவிகிதம் என்று கருதுகிறேன். அந்த விதி முறைகளுக்கு உள்ளடங்கிய முறையில் கடன் பெற முடியும். கடன் பெற வேண்டுமென்று, வேறு பல செலவுகளென்று கேட்பார்களேயானால், விதி முறைகளுக்கு உட்படாத நிலையில் கடன் வழங்க இயலாது. ஆகவே எந்தெந்த வகைகள் சேர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால், அது தனியாகப் பரிசீலிக்கப் பட வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, ஆசிரியர்கள் வெளியே கடன் வாங்குகிறபோது, வட்டி அதிகமாக இருக்கிற காரணத்தாலே, அவர்களுடைய சேமிப்பிலிருந்து இன்னும் அதிகமான பணத்தை வாங்க வகை செய்யுமாறு விதிகளின் திருத்தத்தை எதிர்காலத்திலே உருவாக்க வேண்டும். அப்படி அரசு உருவாக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது ஓரளவுக்கு வரம்பு விதிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு மேல் போகக் கூடாதென்ற கருத்தை அரசு கொண்டிருக்கிறது. அதனை நிறைவேற்றுபடுத்த வேண்டுமென்றால், அதைத் தனியாகத்தான் பரிசீலிக்க வேண்டும்.

*Teaching and Non-Teaching Staff of the Rajah Serfoji College, Thanjavur*

*324 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the services of the teaching staff of the Rajah Serfoji College, Thanjavur, prior to 1st July 1965 have been ordered to be counted for the purpose of fixation of their initial pay in the University Grants Commission scales of pay;



(*b*) whether the similar services of the non-teaching staff will be counted for the purpose of weightage in the fixation of pay in the revised scales of pay from 2nd October 1970; and

(c) if not, the reasons therefor?

*தஞ்சை ராஜா சரபோஜி கல்லூரி ஆசிரியர்களும் ஆசிரியரல்லாத பணியாளர்களும்*

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் ராஜா சரபோஜி கல்லூரி ஆசிரியர்கள், 1—7—1965-க்கு முன்பு ஆற்றிய பணியை, பல்கலைக் கழக ஆணைக்குழு சம்பள விதத்தில், அவர்களது தொடக்கச் சம்பளத்தை வரையறுப்பதன் பொருட்டுக் கணக்கில் கொள்ளுமாறு ஆணையிடப்பட்டுள்ளதா?

(இ) 2—10—1970-லிருந்து திருத்தியமைக்கப்பட்ட சம்பள விதத்தில் சம்பளத்தை முடிவு செய்வதில், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்குப் பணிக்கால அடிப்படையில் ஊதிய உயர்வு அளிப்பதற்காக, அதே போன்ற பணிகள் கணக்கில் கொள்ளப்படுமா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) கல்லூரிகளில் பணிபுரியும் நூலகர் நீங்கலாக வேறு எந்த ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும், பல்கலைக் கழக சம்பளக் குழு அடிப்படையில் ஊதியம் வழங்கப்படவில்லை. 2—10—1970-ல் வழங்கப்பட்ட திருத்திய சம்பள விகிதப்படி ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு, அவர்களின் 1—7—1965-க்கு முன்னால் உள்ள பணிநாட்களை கணக்கில் எடுத்துக் கொள்வதென்பது தனியாக கவனிக்கப்பட வேண்டிய எழுவினாவாகும். அது தனியாகப் பரிசீலிக்கப்படும்.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, ஆசிரியர்களுக்கு அந்தப் பணிக் 4–10
காலம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றபடியால், ஆசிரியர்கள் அல்லாத பி.ப.
சிப்பந்திகளுக்கும் அந்தப் பணிக்காலத்தை எடுத்துக்கொண்டு 2—10—70 முதல் அவர்களுடைய ஊதியம் திருத்தியமைக்கப்படுவதை அரசு சீக்கிரமாகப் பரிசீலித்து ஆணை பிறப்பிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிறபடி, அது தனியாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய

ஒன்று. அது தனியாகப் பரிசீலிக்கப்படும் என்று நான் குறிப்பிட்டிருக்கின்றேன். இப்போது இருக்கின்ற நிலைமைகளில், 2—10—70-ல் வழங்கப்பட்ட திருத்திய விகிதம் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வழியில்லை. அதைத் தனியாகத் தான் பரிசீலிக்கவேண்டும்.

### *Financial Assistance to the State Institute of Education*

* 325 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the financial assistance offered to the State Institute of Education during 1971–72?

### மாநில அரசுக் கல்வி நிறுவனத்துக்கு நிதியுதவி

**திரு. எம். ராஜா அய்யர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

மாநில அரசுக் கல்வி நிறுவனத்துக்கு 1971-72-ல் எவ்வளவு நிதியுதவி வழங்க முன் வரப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இரண்டு லட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூற்று பத்து ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### *Students of the Madras University Colleges*

* 326 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the number of students in the Madras University Colleges is unwieldy from the point of view of examination; and

(*b*) if so, whether there is any proposal to start another University in our State?

### சென்னைப் பல்கலைக் கழக கல்லூரிகளின் மாணவர்கள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேர்வுகளைப் பொறுத்த வரையில் கருதிப் பார்த்தால், சென்னைப் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளில் மாணவர்கள் அளவுக்கு அதிகமாக உள்ளனர் என்பது உண்மையா?



(இ) ஆமெனில், நமது மாநிலத்தில் மற்றொரு பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 1973-ல் தேர்வு எழுதும் மாணவர்களின் எண்ணிக்கை 1972-ம் ஆண்டைவிட அதிகரித்திருக்கிறது. இன்னுமொரு பல்கலைக் கழகம் துவங்குவது குறித்து இதையொட்டிய எல்லா அம்சங்களையும் நிதிநிலைமையையும் கருத்தில் கொண்டு பின்னால் ஆராயப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளிலே எல்லாம் எவ்வளவு மாணவர்கள் பயின்று வருகின்றார்கள்? எவ்வளவு மாணவர்கள் தேர்வு எழுதுகின்றார்கள்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும். அதற்கான புள்ளிவிவரங்கள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், புள்ளிவிவரம் தரலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, apart from the question of number of students in the Madras University Colleges being unwieldy, the Vice-Chancellor has himself expressed the view yesterday that the Madras University should be split up into 3 or 4 Universities—one for Technological studies like Engineering, another for Medical Sciences, another for Arts, and yet another for Science subjects. In view of the fact that the University authorities seem to feel that the Madras University has become unwieldy, would it not be wise for the Government to accept the suggestion and press the University Grants Commission to permit the opening of 2 or 3 Universities in Tamil Nadu and locate them in Tiruchirappalli and Coimbatore and wherever else required?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பரப்பளவை அடிப்படையாக வைத்து நாம் பல்கலைக் கழகங்களை அமைப்பதைவிட, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போன்று, பாடத்தினுடைய தன்மையையும், படிப்பினுடைய தன்மையையும் பொறுத்து, தனி பல்கலைக் கழகங்கள் அமைப்பது பொருத்தமுடையதாக இருக்கும். அண்மையிலே வேளாண்மைக்கு என்று ஒரு தனிப் பல்கலைக் கழகம் அமைத்தோம். இதுபோன்று தொழில் நுட்பப் பொறியியல் துறை, தொழில் நுட்பத் துறையையும் பொறியியல் துறையையும் சேர்த்து 'டெக்னலாஜிகல் யூனிவர்சிடி' என்று ஒரு தனி பல்கலைக் கழகம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு 3, 4 ஆண்டுகளாக அதைப்பற்றி வற்புறுத்தி வருகின்றோம். பல்கலைக் கழக

மானியக் குழுவினுடைய அனுமதியும், இந்திய அரசினுடைய அனுமதியும் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கென ஒரு சட்டத்தையும் நாம் உருவாக்கி வைத்திருக்கின்றோம். 'டெக்னலாஜிகல் யூனிவர்சிடி'யைப் பொறுத்தவரையிலும், மத்திய அரசினுடைய அனுமதி வந்ததற்குப் பிறகு, அந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற அளவுக்கு நாம் ஆயத்தமாக இருக்கிறோம். இதுபோன்றே மருத்துவத் துறைக்கும் தனியாக ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று வந்தால், அந்த முயற்சியும் வரவேற்கத்தக்கதுதான். அந்தந்த வகைகளிலே தனித்தனி சப்ஜக்ட் வாரியாக பல்கலைக் கழகங்களை அமைப்பதனால், அந்தந்தத் துறைகள் மேலும் வளர்வதற்கும், சிறப்பான தன்மைகள் பெறுவதற்கும் வழிவகைகள் ஏற்படும். ஆனால் பரப்பளவு என்ற அளவிலே வைத்துக் கொண்டு, நான்கு, நான்கு மாவட்டங்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் என்று வைத்துக்கொண்டிருப்பதனால், அதிகமான பலன்களை நாம் எதிர்பார்க்க முடியாது. இப்படி சப்ஜக்ட்-வாரியாக பல்கலைக் கழகங்கள் அமைக்கின்ற முயற்சிகளுக்கு நாம் ஆதரவு தரலாம். இப்போது தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கான முயற்சிகளை அரசு எடுத்து வருகின்றது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அபிப்பிராயம் ஒருபுறமிருக்க, துணைவேந்தர் அவர்கள் சொல்லியதிலிருந்து, U.G.C. இலேயே ஒரு சர்வகலாசாலைக்கு 30 கல்லூரிகளுக்கு மேல் இருந்தால், நிர்வகிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்று சொல்லியிருப்பதனால், நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில், சென்னை சர்வகலாசாலையிலுள்ள பிரதேசத்தைப் பொறுத்த வரையிலே, இன்னும் 3 சர்வகலாசாலைகள் வைப்பதற்கான எண்ணிக்கையுள்ள கலாசாலைகள் சென்னை சர்வகலாசாலைக்குள் அமைந்திருக்கின்றன. அதன்படி 3 சர்வகலாசாலைகள் அமைத்தால், நமக்கு பொருளாதார வசதி—நமக்கு அதிக கிராண்டுகள்—கிடைக்கும், நல்ல முறையில் நிர்வகிக்க முடியும் என்று துணைவேந்தர் அவர்களே நேற்று அபிப்பிராயம் சொன்னதாக இன்று பத்திரிகையில் வந்திருக்கின்றது. இதையெல்லாம் அரசாங்கம் யோசனை செய்து, அவர்களையும் கலந்து முடிவுக்கு வருமா? U.G.C.க்கு எழுதுமா? இரண்டு, மூன்று சர்வகலாசாலைகள் அதிகரிக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எவ்வளவுக்கெவ்வளவு பல்கலைக் கழகங்கள் வளருகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நல்லதுதான் என்றாலுங்கூட, பொருளாதார நிலைமை மற்றவைகளையெல்லாம் காணுகின்றபோது, நான் முதலிலேயே சொன்னமாதிரி, சப்ஜக்ட்-வாரியாக பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவதற்கு ஊக்கம் தந்து, அந்த வகையிலே நிதிநிலைமைகளை தாராளமாகச் செலவு செய்வதற்கு வழிவகைகள் ஏற்படுமானால், ஓரளவுக்கும் பலன் ஏற்பட முடியும். நல்ல பல்கலைக் கழகம் ஏற்பட வேண்டுமென்றால்கூட



யு.ஜி.சி. தரும் உதவித் தொகையோடு பார்ப்பதானால், பெரும்பகுதிச் செலவை நாம்தான் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. அவர்கள் கட்டடங்கள் கட்ட ஒரு குறிப்பிட்ட அளவு தொகை கொடுக்கின்றார்கள். லேபரட்டரி அமைக்க ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்கின்றார்கள். லைப்ரரி அமைக்க ஒரு குறிப்பிட்ட தொகை கொடுக்கின்றார்கள். மற்ற வகைகளில் ஆகின்ற செலவினங்களில் எல்லாம் பெரும்பகுதியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். இப்போது மதுரைப் பல்கலைக் கழகம் துவக்கியிருக்கின்றோம் என்றாலும் கூட, அதற்கு செய்யப்பட வேண்டிய வசதிகள் யாவும் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. இன்னும் 5, 6 ஆண்டுகள் கழித்து மொத்தத்தில் கணக்கிட்டோமானால், 10 கோடி ரூபாய் அளவுக்கு முழுவதும் செய்து முடித்தால்தான், அந்தப் பல்கலைக் கழகம் முழுவதும் நிரம்பப்பெற்றதாக அமைய முடியும். ஆகவேதான் இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் அமைப்பதில் முதலிலே கவனம் செலுத்துவோமானால், பிறகு ஆர்ட்ஸ் அண்ட் சயன்ஸ் கல்லூரிகளிலே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன மாதிரி, குறைந்த எண்ணிக்கையின் அடிப்படையிலே கொண்டு வர இயலுமா என்று நாம் காணலாம்.

THIRU A. R. DAMODARAN : Sir, while thanking the Government for recognising that separate Universities are desirable for engineering and medical studies, may I know, Sir, whether there is any proposal to start an autonomous Institute for Tamil Studies or a separate University for Tamil Studies, in view of the great importance that this Government attach to the study of Tamil?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழுக்கென்று தனிப் பல்கலைக் கழகம் அமைக்கின்ற தன்மைகள் இல்லை. ஆனால் மற்ற பாடங்களோடு மொழியும் இணைந்த பாடமாக இருக்கின்ற காரணத்தால், மொழிக்கென்று தனி பல்கலைக் கழகங்கள் இருப்பதில்லை. ஆனால் இது ஒரு சப்ஜெக்ட் வாரியாக வருகின்றபோது, பல்கலைக் கழகங்களில் வருகின்றன. தமிழிலே அறிந்துகொள்ள, தமிழிலே புரிந்துகொள்ள, ஆர்ட்ஸ் போன்ற கல்லூரிகள் சிறப்பாக அமையும்போது அதிலே அதற்கு அதிக இடம் தருவதற்கு நாம் முயற்சி செய்யலாம்.

**திரு. ம. பொ. சிவஞானம் :** மாண்புமிகு தலைவரவர்களே, பெண்கள் கல்லூரிகள் தமிழ்நாட்டில் பெருகி வருவதால், அந்தக் கல்லூரிகளையெல்லாம் ஒன்றாக இணைத்து பெண்கள் பல்கலைக்கழகம் அமைக்கின்ற ஒரு திட்டம் அரசினிடம் இருக்கின்றதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக வாழ்வோம் என்ற கருத்து வலிவுபெற்று வருகின்ற இந்நாட்டிலே பெண்களுக்கென்று இந்தக் காலத்தில் ஒரு தனி பல்கலைக் கழகம் ஏற்படுத்துவதாக இல்லை. பெண்கள் பயில்வதற்கு தனி வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றை ஆற்றுகின்ற பல்கலைக் கழகங்கள் உலகெங்கும் ஒரே விதத்தில்தான் அமைந்திருக்கின்றன.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, திருச்சியிலே ஒரு பல்கலைக்கழகம் துவக்குவது என்ற பிரச்சினை எந்த அளவில் இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, திருச்சியிலும் கோயம்புத்தூரிலும் 'யூனிவர்சிடி சென்டர்' என்ற அளவுக்கு பல்கலைக் கழக மையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த மையங்களுக்கான வசதி வாய்ப்புகளைச் செய்வதற்கான முயற்சிகளில் இப்போது ஈடுபட்டிருக்கின்றோம். அவைகள் பல்கலைக் கழகக் கிளைகளாக உயர்ந்து திருச்சி நகரத்தில் இருக்கின்ற கல்லூரிகளுக்கெல்லாம் பயன்படுகின்ற முறையில் திருச்சி மையம் அமையும்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மதுரையில் புதிய பல்கலைக்கழகம் துவக்குகின்ற செயற்குறிப்பு இல்லாவிட்டாலும் பல்கலைக் கழக மானியக் குழுவின் சார்பில் தன்னுரிமை பெற்ற கல்லூரிகள் Autonomous Colleges ஆரம்பிப்பதற்கு சிபாரிசு இருக்கின்றது. அதைப்பற்றி ஆலோசனை செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பல்கலைக் கழகங்கள்தான் அதுபற்றி முடிவு செய்ய வேண்டும். பல்கலைக்கழகங்கள் முடிவு செய்து அதற்கேற்றவாறு சட்டங்களைத் திருத்துவதற்கு அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்யுமேயானால், அரசாங்கம் அந்தச் சட்டங்களைத் திருத்தித் தருவதற்கு ஆயத்தமாக இருக்கின்றது. ஆனால் அது பற்றிய முடிவினை பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினர், சிண்டிகேட் அவையினர் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

## *Scouts*

*327 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of Thiru S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether Scouts have been functioning in all the High Schools in the State; and

(*b*) if so, the details thereof?



## சாரணர் படைப் பிரிவுகள்

**திரு. எம். ராஜா அய்யர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகள் அனைத்திலும் சாரணர் படைப் பிரிவுகள் இயங்கி வருகின்றனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, சமீபகாலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் சாரணர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருகின்றது என்பதை அரசு அறியுமா? அது பற்றிய புள்ளிவிவரங்கள் அரசினிடம் இருக்கின்றதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அண்மையிலே நேற்றுத்தான் அது பற்றிய முழு விவரங்களை ஆராய்ந்து பார்த்தேன். சென்ற ஆண்டுக்கு முதல் ஆண்டு 42 ஆயிரத்து சில்லரை மாணவர்கள் சாரணர் இயக்கத்திலே ஈடுபட்டிருந்தார்கள். சென்ற ஆண்டு 63 ஆயிரம் பேர்கள் ஈடுபடுகின்ற அளவுக்கு இருக்கின்றார்கள். அதுமேலும் வளர வேண்டும். 75 லட்சம் மாணவர்கள் பயிலுகின்ற பள்ளிகளைப் பொறுத்துப் பார்க்கும்போது, 63 ஆயிரம் பேர்தான் சாரணர் இயக்கத்தில் ஈடுபட்டிருக்கின்றார்கள் என்பது மிகவும் குறைவான ஒன்று. கூடுமானவரையில் எல்லாப் பள்ளிகளிலுமே கட்டாயம் சாரணர் இயக்கம் இருக்க வேண்டும், அதற்கான திட்டங்களை எந்த வகையில் வகுக்கவேண்டுமென்பதைப் பற்றி பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். அவர்கள்தான் மாநிலத்தினுடைய சாரணர் இயக்கத்தினுடைய ஆணையாளராகவும் இருக்கின்ற காரணத்தால், அதுபற்றித் திட்டம் வகுத்துத் தரும்படியாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். ஓரளவுக்குப் பயன்படுகின்ற வகையிலே சாரணர் இயக்கம் அமையும் என்பதால், அதற்கு ஊக்கம் தருகின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, ஏ. சி.சி., என். சி. சி. ஆகியவைகளில் அதிக மாணவர்கள் சேருவதுதான் இந்தச் சாரணர் படையில் அதிகமாக மாணவர்கள் சேராமல் இருப்பதற்கு ஒரு காரணமாகுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** என்.சி.சி. பயிற்சி கூட குறிப்பிட்ட சில பள்ளிகளிலேதான் அமைத்திருக்கிறோம். குறிப்பிட்டவர்கள் தான் அதிலே சேருகின்றார்கள். அதிலே சேருகின்றவர்கள் போக மற்றவர்கள் ஏராளமான மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்களை இந்தச் சாரணர் இயக்கத்திலே ஈடுபடுத்துவது மிகவும் பயன்படுவதாக அமையும். என். சி. சி. க்கு ஆகின்ற அளவுக்கு அவ்வளவு பெரும் தொகை கூட இதற்குச் செலவாகாது. குறைந்த அளவு செலவுகூட நாம் இதற்குச் செய்யாமல்தான் இருந்து வருகிறோம். என்.சி.சி. ஆசிரியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 75 ரூபாய், 80 ரூபாய் என்று ஈடு கொடுத்து வருகிறோம். சாரணர் இயக்க ஆசிரியர்களுக்கு ஒன்றுமே தருவதில்லை. வாலண்டரி சர்வீசாகத்தான் வைத்திருக்கிறோம். அவர்களுக்கு ஒரு இன்சென்டிவ் மாதிரி மாதம் ரூ. 10 அல்லது ரூ. 20 தரவேண்டுமென்றுகூட நேற்று குழுவிலே கூறியிருக்கின்றார்கள். அதை அரசாங்கம் பரிசீலித்து வருகிறது. எல்லாப் பள்ளிகளிலும் சாரணர் இயக்கம் அமைப்பது மிக எளிது. அமைவது மிக முக்கியம். அதை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கும்படியாக பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

THIRU A. R. DAMODARAN : What is the average expenditure incurred by the State in the promotion of Scout movement in the High Schools, Sir?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பாரத் பி ஸ்கவுட்ஸ் என்ற மாநில அளவிலுள்ள அமைப்பின் பட்ஜெட்டில் ரூ. 2,82,000

4-20 வருகிறது. 2,800 சில்லரை உயர்நிலைப் பள்ளிகள் மாநிலத்தில் இருக்கிறபொழுது ரூ. 2,82,000 என்பது மிகக் குறைவான தொகை தான். அந்தத் தொகையை அதிகப்படுத்தி இந்த இயக்கத்தை விரிவுபடுத்துகிற எண்ணம் இப்போது இருந்து வருகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, முன்னால் இந்த சாரணியத்தின் அடிப்படைத் தத்துவத்தை 'குடிமைப் பயிற்சி' என்று பள்ளிப் பாடங்களில் சேர்த்து எல்லோருக்கும் போதிக்கப்பட்ட காரணத்தால், அதற்கு ஆதரவு இல்லாமல் இருந்தது. அக்காரணத்தை இன்று அரசு நிராகரித்து இந்தச் சாரணர் இயக்கத்தை எல்லாப் பள்ளிகளிலும் கட்டாயமாகத் தாவக்கு வதற்கு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சாரணர் இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் அதனுடைய தொண்டுத் தன்மையையும்





எல்லோரும் அறிந்துகொள்வதற்கு பாடங்களில் கட்டாயமாகச் சேர்க்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், எல்லாப் பள்ளிகளிலும் சாரணர் இயக்கம் ஏற்படுவதற்கான முயற்சிக்கு ஏற்றபடி திட்டங்களைத் தயாரிக்கும்படி கல்வி இலாகா இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

## *Grant to the Andhra Mahila Sabha Hospital*

* 328 *Q.*—THIRU G. VASANTHA PAI (on behalf of Thiru S. Vellapandian) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any grant has been given by the Government to the Andhra Mahila Sabha Hospital in Madras City; and

(*b*) if so, the details thereof?

## 'ஆந்திர மகளிர் சபா' மருத்துவமனைக்கு மானியம்

**திரு. ஜி. வசந்த பாய் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள ஆந்திர மகளிர் சபா மருத்துவமனைக்கு அரசால் மானியம் ஏதும் வழங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU G. VASANTHA PAI : Sir, in view of the fact that Government are contributing anything for the up-keep of the Tourists Hostel attached to the Andhra Mahila Sabha?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, as far as the information is available here, there is no grant for such section of the Andhra Mahila Sabha.

THIRU G. VASANTHA PAI : Sir, in view, of the fact that foreign tourists stay in that hostel, will the Government at least see that the condition of the Hostel is kept in such a manner as to bring some credit to the institution as well as the country?

---

@ 121-ம் பக்கத்தில் இணைப்பு I -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 ஏப்ரல் 2

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, it is not my concern. The Tourism Minister may consider about it.

**திரு. ஜார்ஜ் கோமகன் :** தலைவர் அவர்களே, "ஆந்திரா மகளிர் சபா" என்று இருக்கிறது. ஆந்திரா மகில சபா என்று கருதுகிறேன். ஆந்திரா மகில சபா மருத்துவ மனை மூலமாக குடும்பநலத் திட்டப்பணிகள் வேகமாக நிறைவேற்றப்படுகின்றனவா? குடும்பநலத் திட்டத்திற்காக என்று தனிப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு அரசாங்கத்தின் மானியம் ஓரளவு வழங்கப்பட்டிருக்கிறது. அதே போல் முட நீக்கி இயல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படிக் குறிப்பிட்ட பணிகளுக்காக உதவித் தொகை கேட்பதும் அதை ஒரு வரைமுறைப்படுத்தித் தருவதும் வழக்கம். அந்த முறையில் குடும்பநலத் திட்டத்திற்காக எவ்வளவு என்ற விவரம் இல்லை. ஆனால் அவர்கள் குடும்பநலத் திட்டப்பணிகளையும் செய்து வருகிறார்கள்.

*U.N.D.P. Project Reports*

* 329 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(a) whether the Government have received from the Union Government, any U.N.D.P. Project reports for developing minor fishing harbours in the State; and

(b) if so, the details thereof?

**ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டப்பணி அறிக்கைகள்**

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள மீன்பிடி சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கான ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டப்பணி அறிக்கைகள் ஏதும், மத்திய அரசிடமிருந்து இந்த அரசுக்கு வந்தனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?



1973 ஏப்ரல் 2]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து :** (அ) & (இ) தஞ்சை மாவட்டத்தில் மல்லிப் பட்டிணம், கோடிக்கரை ஆகிய இடங்களில் மீன்பிடி தோணித் துறை கட்டுவதற்காக ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தினர் தயாரித்த இரு அறிக்கைகள் மத்திய அரசிடமிருந்து தமிழ் நாடு அரசிற்கு வந்துள்ளன. மத்திய அரசு சில விவரங்களைக் கேட்டிருக்கின்றது. அவை சென்னை மீனள இயக்குநரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, என்ன விவரங்களை மத்திய அரசு கேட்டிருக்கிறது என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. THIRUMATHI SATYAVANI MUTHU : (1) Year-wise phasing of the number of ports and the landings and the correlation with the modernisation programme for the Fourth and Fifth Five-Year Plan periods ;

(2) verification of the cost of estimate given in the project reports with reference to the current schedule of rates of the State Government for similar works;

(3) arrangements proposed to be made for the work, estimated date of commencement and completion of the harbour in the event of the harbours being considered for action; and

(4) arrangements for the maintenance and operation of the harbour and provision to be made in the State budget for covering all major expenditure.

THIRU A. R. DAMODARAN : May I know whether there is any proposal to develop Porto Novo into a minor fishing harbour?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** எனக்குத் தெரிந்தவரையில் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** வினா 330 ஒத்தி வைக்கப்படுகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இதுமாதிரி அடிக்கடி வினாக்கள் எல்லாம் ஒத்திவைக்கப்படுகின்றன. கொடுக்கப்படுகிற வினாக்கள் கூட 10, 12 வினாக்களுக்கு மேல் இருப்பதில்லை. அமைச்சரவர்கள் காலையில் பேரவைக்கு வந்தார்கள். காலையில் அந்தக் கூட்டுறவுத் துறை அமைச்சர் விருந்தில் கூட கலந்து கொண்டார். ஆனால் இங்கு வரவில்லை. இதுபோல் அமைச்சர்கள் வரவில்லையென்றால், முன்கூட்டியே தெரிவித்தால், நலமாக இருக்கும். அவர்கள் வரவேண்டுமென்று போட்டுவிட்டு வராமலிருப்பதால் வினாக்கள் அடிக்கடி ஒத்தி வைக்கப்படும் நிகழ்ச்சி ஏற்படுவதை தலைவர்

அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** எவ்வளவு கேள்விகள் பதில் சொல்லப் படாமல் இருக்கின்றன என்று ஆராய்ந்து, அவை 750 கேள்விகள் என்று கணக்கெடுத்து, அவை எந்தெந்த அமைச்சர் சம்பந்தப்பட்டவை என்றெல்லாம் ஆராய்ந்து, அந்தந்த அமைச்சருக்கு நானே தனியாகக் கடிதம் எழுதி, அந்தக் கேள்விகளுக்கு உடனடியாக பதில் சேகரித்துத் தரவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொண்டு, அந்த முறையில் அவர்களும் முயற்சி செய்து, அந்த இலாகாவினருக்குத் தெரிவித்து அவர்களும் விடை அளித்தார்கள். ஆரம்பத்தில் 20, 25 கேள்விகளாக இருந்து கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து இப்போது 10-ல் நின்றுகொண்டிருக்கிறது. இதில் அமைச்சர்களும் அந்தந்த இலாகாவினரும் நம்முடன் ஒத்துழைப்பது நல்லது என்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

### *Seven demands of the Tamil Nadu Elementary School Teachers Federation*

*2 S.N. Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Elementary School Teachers Federation has submitted a Charter of seven demands to the Hon. the Chief Minister; and

(*b*) if so, the action taken by the Government on the demands?

### தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சம்மேளனத்தின் ஏழு கோரிக்கைகள்

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சம்மேளனம், ஏழு கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை, மாண்புமிகு முதலமைச்சர் அவர் களுக்குப் பணிந்தனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், அக்கோரிக்கைகள் குறித்து அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?



V2ll, 32 N72
N74·109;1
6 3094

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) அவையில் அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இந்த ஏழு கோரிக்கைகள் என்பது வெள்ளிவிழா மகாநாட்டில் நடந்த தீர்மானத்தையொட்டி இப்போது சமீபத்தில் கல்வி அமைச்சர்களிடத்திலும் முதலமைச்சர் அவர்களிடத்திலும் கொடுக்கப்பட்டவையாகும். ஆனால் அறிக்கையில் 1969-ம் ஆண்டில் நடைபெற்ற மகாநாட்டினுடைய கோரிக்கைகளுக்கு பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்தில் கொடுக்கப்பட்ட விஷயம் பற்றி நான் தேதியிட்டுக் குறிப்பிட்டுக் கேட்டிருந்தேன். அதற்கு விளக்கம் அளிக்கப்படவில்லை. அமைச்சர் அவர்கள் சமீபத்தில் கொடுக்கப்பட்ட ஏழு கோரிக்கைகளுக்கான பதிலை இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளையாவது அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதைக் குறிப்பிட்டு தனியாகக் கேட்பார்களேயானால், அது பற்றிய விவரங்களைத் தர முடியும். இன்ன சமயத்தில் இந்தக் கோரிக்கைகள் கேட்கப்பட்டன, இது சம்பந்தமாக இன்னின்ன கேள்விகளுக்கு இன்னின்ன கோரிக்கைகளுக்கு விளக்கம் வேண்டுமென்று கேட்டால், அதுபற்றிய விவரங்கள் தர முடியும். தனியாக ஒரு கேள்வி போட்டால், அதைத் திரட்டித் தரலாம்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, நான் குறிப்பிட்டுக் கேள்வி போட்டதே, முதலமைச்சர் அவர்களிடத்திலும் கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும் சமீபத்தில் கொடுத்து செலக்ட் கமிட்டியில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது பற்றிதான். அதில் முக்கியமாக அகவிலைப் படியைப் பணமாக ஆசிரியர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேடு ஆசிரியர்களுக்கும் ஊதிய விகிதம் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றும், இன்னும் தனியார் பள்ளி ஆசிரியர்களுடைய பாதுகாப்புச் சட்டம் 3—9—1969 லிருந்து, முன்தேதியிட்டு வழங்கப்படவேண்டுமென்றும் ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கக்கூடிய முறையில், தமிழ் நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணிக்கு எதிராக எந்தச் சங்கமும் அமைக்கும் முயற்சியில் ஈடுபடக்கூடாதென்றும் இப்படிப்பட்ட ஏழு கோரிக்கைகள் அமைச்சர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன என்று தெரிவித்துக்

@ 122-126-ம் பக்கங்களில் இணைப்பு II -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 ஏப்ரல் 2

கொள்ளுகிறேன். அதைப் பற்றி நாளையதினம் முடியுமானால், சமீபத்தில் கொடுத்த விண்ணப்பத்தை வைத்து, பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நாளை முடியுமானால் என்று சொன்னால், நாளை முடியும் என்று சொல்லுவதற்கில்லை. கேள்வி ரூபத்தில் போட்டால், அது பற்றிய விவரங்களைச் சொல்லுவதற்கு முயற்சி எடுக்கலாம்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2. உரிமைப் பிரச்சினை.

### உணவு அமைச்சர் கொள்கை பற்றிய அறிவிப்பை அவை நடக்கும் போது வெளியே வெளியிட்டது குறித்து

MR. CHAIRMAN : I have received notices of motions from Thiruvalargal G. Swaminathan and A. R. Damodaran to raise matters of privilege under rule 157 of the Council Rules, namely, (i) Thiru G. Swaminathan :

"இந்த அவை நடந்து கொண்டிருக்கும்போது, மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்கள், மதுரையில் நிருபர்களிடத்தில் நேற்றையதினம் (30—3—1973) பேசுகையில், நெல் அரிசி மொத்த விற்பனையை அடுத்துவரும் அறுவடைக் காலத்திலிருந்து (ஐப்பசி—கார்த்திகை) ஏற்க, தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்குமென்று கூறியுள்ளார். இது மிக முக்கியமான, மக்களைப் பாதிக்கும்படியான கொள்கையாகும். சட்ட மன்றம் நடந்துகொண்டிருக்கும்போது, முக்கியமான கொள்கை விளக்கங்களை மன்றத்திலேயே அளிக்கப்பட வேண்டுமென்பது விதியாகும். இதற்கு மாறாக உணவு அமைச்சரவர்கள், இந்த முக்கியமான அறிவிப்பை மேலவையில் தெரிவிக்காமல், நிருபர்களிடம் கூறியது, உரிமை மீறிய செயலாகும்".

(ii) Thiru A. R. Damodaran : "The policy announcement made by the Food Minister, Hon. Thiru Mannai P. Narayanaswami at Madurai to the press even while this House was in session and reported in the Press to-day (31-3-1973) regarding the take-over of the entire retail trade of kerosene by the Government of Tamil Nadu, especially when no indication of this policy was given either in the Budget or when the Policy Note on Food was taken



1973 ஏப்ரல் 2] [Mr. Chairman]

up for discussion in this House. This Statement made when the Legislative Council is in session is a breach of privilege of the House."

I want to know from the hon. Members how this constitutes a breach of privilege of the House.

பிற்பகல் 4-30

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, தமிழ்நாடு சட்ட மன்ற விதிகளின் 157-வது விதியின் கீழ் நான் கீழ்க்கண்ட உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு அனுமதி தருமாறு வேண்டுகிறேன். இந்த உரிமைப் பிரச்சினையை மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்களைக் குறித்து எழுப்புகிறேன். உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு முன்னால் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. மன்னை நாராயணசாமி அவர்களுக்கு அண்மையில் மதுரைக்கருகில் ஒரு சிறு கார் விபத்து ஏற்பட்டு, அந்த விபத்து சிறிய விபத்தாக அமைந்து, நல்ல முறையில் திரும்ப வந்ததற்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு நான் எனது உரிமைப் பிரச்சினையை ஆரம்பிக்கிறேன்.

இந்த அவை நடந்துகொண்டிருக்கும்போது மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் மதுரையில் 30—3—1973 அன்று நிருபர்களிடம் பேசுகையில், நெல்-அரிசி மொத்த விற்பனையை அடுத்து வரும் அறுவடைக் காலத்திலிருந்து, ஐப்பசி-கார்த்திகையிலிருந்து எடுத்துக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்குமென்று கூறியுள்ளார். இது மிகவும் முக்கியமான, மக்களைப் பாதிக்கக்கூடிய கொள்கையாகும். சட்ட மன்றம் நடந்துகொண்டிருக்கும் போது முக்கியமான கொள்கை விளக்கங்களை மன்றத்திலேயே அளிக்க வேண்டும் என்பது விதியாகும். அதற்கு மாறாக உணவு அமைச்சர் அவர்கள் இந்த முக்கியமான அறிவிப்பை மேலவையில் தெரிவிக்காமல் நிருபர்களிடம் கூறியது உரிமை மீறிய செயலாகும். இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு எனக்குத் தாங்கள் அனுமதி தருமாறு வேண்டிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கிற நேரத்தில் உணவு தானிய மொத்த வியாபாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். உணவு தானிய மொத்த வியாபாரத்தைப்பற்றி அவர்கள் குறிப்பிடுகிறபோது, குடியரசுத் தலைவரவர்கள் உரையில் 24-ஆம் தேதி டெல்லியில் அதைப்பற்றிச் சொன்னதாகவும், பிறகு டெல்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு அதிலே விவாதிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், நமது மாநிலத்தின் சூழ்நிலைக்கேற்ப, இன்றியமையாத பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் வகையில் உணவு தானிய மொத்த வியாபாரத்தை அரசு

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 ஏப்ரல் 2

நடத்துவதுபற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். நம்முடைய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உணவு இலாக்கா கொள்கை விளக்கக் குறிப்பை 27-ஆம் தேதியன்று இந்த மன்றத்தில் அளிக்கிறபோது, இதைப்பற்றி ஒன்றும் கூறாமல் தனியார் துறை வாணிபம் நடைபெற வாய்ப்பு அளித்து முடையிருப்பு வைத்துக்கொண்டு மிகக் குறைந்த அளவில் கட்டுப்பாடுகள் விதித்து 1970-ஆம் ஆண்டு முதற்கொண்டு அரசு பின்பற்றி வரும் உணவுக்கொள்கை வெற்றி பெற்றிருக்கிறது என்று அவர் சொன்னதிலிருந்து, தொடர்ந்து தனியார் இது போன்ற வாணிபம் நடத்துவது நல்லது என்பது போன்ற ஒரு கருததை தன்னுடைய கொள்கை பற்றிய விளக்கக் குறிப்பில் எடுத்துக் கூறியிருக்கிறார். அதற்கு மாறாக, அவை நடந்துகொண்டிருக்கும்போது, மதுரையில் சென்று ஐப்பசி-கார்த்திகையில் எடுக்கப்படுமென்று அவர் கருத்து தெரிவித்திருக்கிறார். இது சம்பந்தமாக 'Practice and Procedure of Parliament' என்ற புத்தகத்தில் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள் :

"It has also been held that policy statements should first be made on the floor of the House when the House is in Session before releasing them to the press or the public".

இந்த விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ள அனுமதிகேட்டு தாங்கள் அனுமதி கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, since I have also given notice of a motion of privilege in connection with the statement made by the Hon. the Minister for Food, I may be permitted to raise the matter before the Hon. Minister is given an opportunity to reply to it.

Under rule 157 of the Tamil Nadu Legislative Council Rules, I wish to raise a matter of privilege, namely, the policy announcement made by the Hon. the Food Minister Thiru Mannai Narayanaswami at Madurai to the Press even while this House was in session and reported in the Press on 31st March 1973 regarding the take-over of the entire retail trade in kerosene by the Government of Tamil Nadu, especially when no indication of this policy was given either in the Budget documents or when the Policy Note on Food was taken up for discussion in this House. This statement made when this House is in session is a breach of privilege of this House and I request permission to raise this issue.



1973 ஏப்ரல் 2] (Thiru A. R. Damodaran)

I do not wish to go into the merits of the policy announcement that has been made. But all that I want to say is that when both the Houses of Legislature are in session and when the Hon. the Chief Minister, while replying to the discussion on the Appropriation Bill, made no mention about this policy and even during the discussion on the Policy Note on Food, the Hon. Minister, in his reply on the 27th March 1973, did not give any indication regarding this major policy decision that seems to have been taken by the Government such a statement has been made outside the House. I raise this because we have been denied an opportunity to debate this matter. I also think that when the House is in session, such policy announcements should not have been made outside the House.

MR. CHAIRMAN : I want to know the views of the Hon. the Minister for Food .

***மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, பத்திரிகைச் செய்தியில், முழுவதும் நான் சொன்னதாகச் சொல்லி சில மாற்றங்களைச் செய்திருக்கிறார்கள். உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் 'நெல், அரிசி வர்த்தகத்தை ஏற்க' என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். உணவு அமைச்சர்கள் மாநாட்டில் விவாதித்த பின்னர் என்று தான் சொன்னேன். அடுத்து வரும் சீசனிலிருந்து, அல்லது ஐப்பசி/கார்த்திகை மாதம் என்று எதுவும் நான் சொன்னதாக எனக்கு நினைப்பு இல்லை, நான் சொல்லவுமில்லை, அவர்களாகவே சேர்த்துப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்னைக் கேட்டது, மத்திய சர்க்கார் உணவுப் பிரச்சினையில் கொள்முதல், மொத்த வியாபாரத்தையெல்லாம் சர்க்கார் ஏற்றுக்கொள்ளப் போகிறதா என்பது, அவர்கள் இதுவரையில் கோதுமை வியாபாரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றபடி அரிசியைப்பற்றி அடுத்த ஆண்டிற்கு ஆலோசிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மறுபடியும் உணவு மந்திரிகளைக் கூட்டிப் பேசி, அதற்குப் பின்னர் முடிவு எடுத்து, மத்திய சர்க்கார் கொள்கையை வகுப்பார்கள் என்றுதான் சொன்னேன். நிருபர்கள், அவர்களுக்குத் தகுந்தாற்போல் அதிலே போட்டிருக்கிறார்கள், 30—3—1973 அன்று மதுரையில் மத்திய உணவு அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையையும் அதே தினத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு வரவு-செலவு அறிக்கையில் கூறியிருக்கும் கருத்தையும் மனதில் வைத்துக்கொண்டுதான் உணவு அமைச்சர்கள் மாநாட்டில் விவாதித்த பின்னர் அடுத்து வரும் காரிப் சீசனில் நெல், அரிசி மொத்த விற்பனையை ஏற்க தேவையான நடவடிக்கைகளை சர்க்கார் மேற்கொள்ளும்

என்ற அளவிலே கூறினேனே தவிர, இங்கே நாங்கள் நிச்சயமாக எடுத்துக் கொள்ளப் போகிறோம், அந்தக் கொள்கையை நாங்கள் முடிவு செய்து விட்டோம் என்ற தன்மையில் சொல்லவேயில்லை. ஐப்பசி மாதம், கார்த்திகை மாதம், சீசன் என்று வேறு எந்தவிதமான பிரச்சினையையும் நான் பேசவில்லை. கோதுமை வியாபாரத்தைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அரிசியைப் பற்றிய பிரச்சினையை பின்னால் எடுத்துக்கொள்வோம், அதற்கு மறுபடியும் ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் உணவு அமைச்சர்களைக் கூட்டி மாநாடு நடத்துவார்கள், அதற்குப் பிறகுதான் கொள்கை வகுப்பார்கள், எங்களுடைய மாநிலத்திற்கு எந்தவிதமான கொள்கையும் முடிவு செய்யப்படவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறேன். அதைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இது போதுமா, இன்னும் சமாதானம் சொல்லவேண்டுமா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, பொதுவாக காரிப் சீசனிலிருந்து எடுத்துக்கொள்ளப் போவதாக முடிவு செய்திருக்கிறோம் என்று தற்போது கூட சொல்லுகிறார்கள். அதைத்தான் உரிமைப் பிரச்சினைக்காக எடுத்துக்கொள்கிறோம். அமைச்சர் அவர்கள், ஐப்பசி, கார்த்திகை என்று மாதம் சொல்லவில்லை, அவர்களாகவே போட்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். தினமணி பத்திரிகையில் இந்த மாதங்களையும் சொன்னதாகப் போட்டிருக்கிறார்கள். இப்பொழுது மறுமுறையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்ற கருத்தையேதான் இங்கேயும் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, முடிவு செய்வதாக இருக்கிறோம் என்று சொன்னால், இந்த முடிவுதான் எடுக்கப்போகிறோம் என்று அர்த்தமில்லை. எடுக்கிற முடிவு அதை எடுத்துக் கொள்கின்ற முடிவாக இருக்கலாம் அல்லது எடுப்பதில்லை என்று திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு ஆதரவான முடிவாகவும் இருக்கலாம். அது மட்டுமல்ல. முன் கூட்டியே ஒன்றை அவர் சொல்லிவிட்டார் என்பதற்கு, நானோ அல்லது அமைச்சரவையோ கலந்து பேசி இப்படி ஒரு முடிவு எடுத்திருந்தால், அதை வெளியிட்டு விட்டார் என்கின்ற அளவுக்கு நாம் எண்ணத்தோன்றும். ஆனால் அப்படி எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. நான் நிதி நிலை அறிக்கையைப் படிக்கின்றபோது, இதைப் பற்றி என்ன கருத்தைச் சொன்னேனோ, அதே கருத்திலேதான் இருக்கிறோம். அதற்குப் பிறகு அமைச்சரவைக் கூட்டம் கூட்டி அல்லது முதலமைச்சராகவோ உணவு அமைச்சரோடு கலந்து பேசி இப்படி ஒரு முடிவு எடுக்கலாமென்ற அந்தக் கருத்தை யாரும் தொடவேயில்லை. ஆகவே எந்த முடிவும் எடுக்கப்படாமலிருக்கும் போது, முடிவு எடுத்து விட்டதாக அவர் அறிவிக்க இயலாது. ஆகவே பத்திரிகையில் வரும்போது சில வார்த்தைகளை மாற்றிப் போட்டு விடலாம்.



என்மீது கூட இன்றையதினம் ஒரு உரிமைப் பிரச்சினை வருமோ என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஏனென்றால் புதுக்கோட்டையைப் பற்றி நேற்று நான் பூம்புகார் போயிருந்தபோது நிருபர்கள் கேட்டார்கள். தலைவர் காமராஜர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்கின்றபோது புதுக்கோட்டையைப்பற்றி அவரிடம் நிருபர்கள் கேட்டபோது அங்கேயிருக்கின்ற மக்களுடைய எண்ணங்களை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார், உங்களுடைய பதில் என்ன என்று கேட்டார்கள். நான் அப்பொழுது நிருபர்களிடம் சொன்னேன். புதுக் கோட்டையைப்பற்றி நிதி நிலை அறிக்கையில் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது அதைப்பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை என்று சொன்னேன். திரு. காமராஜர் சொன்னது பற்றி உங்களுடைய அபிப்பிராயமென்ன என்று கேட்டார்கள். மறுபடியும் சொன்னேன். அதற்காக வருவாய்த் துறையினுடைய அதிகாரி ஒருவர் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார் என்று சொன்னேன். ஆனால் இன்று தினமணிப் பத்திரிகையில் வந்திருப்பது கலெக்டர் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார் என்று. நிதி நிலை அறிக்கையில் அதற்காக வருவாய்த் துறை அதிகாரி ஒருவர் என்று சொல்லிவிட்டு இப்பொழுது கலெக்டர் என்று சொல்லியிருக்கிறார் என்று என் மீது உரிமைப் பிரச்சினை கொண்டுவரலாம். ஆனால் நான் சொன்னது வருவாய்த் துறை அதிகாரி என்று தான். தினமணி பத்திரிகையில் கலெக்டர் என்று வந்திருக்கிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு திருத்தமும் சொல்லிவிட்டேன். ஆகவே மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஒரு கொள்கை முடிவு எடுத்திருந்தாலும் அறிவித்திருக்கலாம். கொள்கை முடிவு எடுக்காமலேயிருக்கும்போது, அறிவித்திருக்க முடியாது. அந்த வகையில் அவர் சொன்ன விளக்கமே போதுமானது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அடுத்து மண்ணெண்ணெயைப் பற்றிச் சொன்னார்கள். நான் 27—3—1973 ஆம் தேதி அன்று இந்த அவையில் உணவுக் கொள்கை மீதான அறிக்கையில் நடந்த விவாதத்திற்கு பதிலளிக்கையில் மண்ணெண்ணெயைப் பொறுத்தவரையில் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்குமளவுக்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்திருக்கிறோம் என்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுத் துறையின் மூலமாக ஆவன செய்திருக்கிறோம் என்றும் சொன்னேன். அதைச் செயல்படுத்த நான் மதுரையில் ஒரு கூட்டத்தைக் கூட்டினேன். அங்கேயுள்ள கலெக்டரிடம் சொல்லி மக்களுக்குக் கிடைக்குமளவுக்கும் விலை உயர்வைத் தடுக்குமளவுக்கும் வழிவகைகளை ஆராயவேண்டுமென்று சொன்னேன். அப்பொழுது என்னைப் பத்திரிகைக்காரர்கள் கேட்டார்கள். இப்பொழுது சட்டசபை நடந்துகொண்டிருக்கும்

போது இங்கே நான் ஒன்றும் பேச முடியாது என்று கூட சொன்னேன். கார் ஆக்ஸிடென்டில் என் காலில் ஏற்பட்ட அடிபற்றிக் கேட்பதாகச் சொன்னார்கள். மண்ணெண்ணெய் விநியோகத்தை முறைப்படுத்துவதற்கு கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொடுக்கலாம் என்று சொன்னீர்களே, அது உடனடியாகச் செயல்படுமா என்று கேட்டார்கள். கூட்டுறவுத் துறை முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது, இரண்டு மாதங்களுக்குள் கூட்டுறவுத் துறையில் செய்யலாமென்று சொன்னேன். அதை மாற்றி சர்க்கார் எடுத்துக் கொள்ளும் என்று சொல்லிவிட்டார்கள். இந்த சர்க்கார் மண்ணெண்ணெய் வியாபாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமே எங்களுக்கு உதயமாகவில்லை. கூட்டுறவுத் துறையில் செயல்படுத்த வேண்டும் என்று முயற்சி மேற்கொண்டிருக்கிறோம் என்றுதான் சொன்னேன். இங்கே உறுப்பினர்கள் கூட அவ்வப்போது கூட்டுறவுத் துறை இருக்கின்றபோது எதற்காக தனியார் துறைக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருப்பது உங்களுக்குக் கவனமிருக்கலாம். கூட்டுறவுத் துறை என்று சொன்னால் நம்முடைய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்குத் தெரியும். கூட்டுறவு சொசைட்டி சாதாரணமாக 5, 6, 7, 8 மைல்களுக்கு ஒன்றுதான் இருக்கிறது. ஒவ்வொன்றின் கீழ் வருகின்ற ஹேம்லெட்டுகளைப் பார்த்து, அங்கேயெல்லாம் மண்ணெண்ணெய் போய்ச் சேர்ந்து அந்த மக்களுக்குக் கிடைப்பதற்கு வழி செய்ய அங்கே மண்ணெண்ணெயைக் கொண்டுபோக வேண்டிய வாகனங்கள் முதலியவை ஏற்பாடு செய்ய வேண்டும். இது இரண்டு மாத அளவுக்கு ஆகும், அதற்காக முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது என்று தான் சொன்னேன். பத்திரிகையில் இரண்டு மாதத்தில் சர்க்கார் எடுத்துக்கொள்ளும் என்று போட்டுவிட்டார்கள். அது மாதிரி நான் சொல்லவேயில்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, the Hon Minister has merely re-stated his policy in the matter of kerosene distribution. He now says that the Government will entrust the retail trade in kerosene to Co-operatives which in itself is a policy decision. The entrustment of a major retail trade entirely to Co-operatives is in itself a major policy decision. That is why I have raised this privilege issue. As I said, I do not want to go into the merits of the policy at this stage. My only objection is that he has mentioned this policy outside the House. I leave it to you, Mr. Chairman, to judge how far it is a breach of privilege and whether it is a contempt of the House or something else.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அன்றே இங்கு நான் பேசியிருக்கிறேன். கூட்டுறவுத் துறையின் மூலம் விநியோகம் செய்வதற்கான முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று இங்கே பேசியிருக்கிறேன். இதையே தான் அங்கேயும் சொல்லியிருக்கிறேன். மண்ணெண்
ணெயைப் பற்றிய பிரச்னை வருகின்றபோது, முதலமைச்சரவர்கள் பின்னே 4-40.
உணவு அமைச்சரவர்கள் பேசுகிறபோது மண்ணெண்ணெயை எப்படி விநி பி. ப.
யோகம் செய்வது என்கிற விளக்கங்களைச் சொல்வார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் 27—3—1973 அன்றே எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறோம் என்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுத் துறையின் மூலம் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறேன். இங்கே குறிப்பில் இருக்கிறது. அதையே தான் நான் அங்கே சொன்னேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** மாண்புமிகு உணவு அமைச்சர் கொடுத்த பதிலுக்குப் பிறகு நான் அனுமதி மறுக்கிறேன். ஆனால் இந்த மாதிரி சர்ச்சைகள் அடிக்கடி அவையிலே நடக்க வேண்டுமென்று விரும்புகின்றவன் நான். ஏனென்றால் நாம் இது நாள் வரையிலும் எவை எவை நல்ல பத்திரிகைகள் என்று நினைத்துக்கொண்டிருந்தோமோ அவைகளில் இது போன்ற புரட்டுச் செய்திகள் வருகின்றபோது, மக்களுக்கும், ஆள்கிற நமக்கும் இடைவெளி அதிகமாகப் போய் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ளமுடியாத நிலைமை இங்கே இருக்கிறது. அமைச்சரவர்கள் கொடுக்கின்ற பதில்கள் மூலம் ஒரு விளக்கத்தைப் பெறுகிறார்கள் என்ற காரணத்திற்காகவே இப்படிப்பட்ட விவாதங்களை அனுமதிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களும் இதை breach of privilege என்று எடுத்துக் கொள்ளாமல் breach of courtesy என்று எடுத்துக்கொள்வது நல்லது.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, 'Breach of privilege' ஆவது பரவாயில்லை. அமைச்சர்கள் 'breach of courtesy' பண்ணுவது இன்னும் "still worse" ஆகவே 'breach of courtesy' செய்யக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: The Hon. Chairman's ruling cannot be questioned. It stands, Sir.

### 3. அறிவிப்புகள்

#### (1) பேரவையிலிருந்து செய்தி

MR. CHAIRMAN: I have received messages from the Deputy Speaker, Legislative Assembly transmitting copies of the Presidency

[Mr. Chairman] [1973 ஏப்ரல் 2

Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 4 of 1973) and the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 6 of 1973), as passed by the Assembly and signed by him for the concurrence of the Council.

### (2) அவை அலுவல் குறித்து

MR. CHAIRMAN : I have to inform the House that the Legislative Council will meet on the 3rd April 1973 and again on 5th April 1973 to consider the Official Bills.

If any hon. Member has booked reservation in the Railways for journey tomorrow, he may cancel it and get reservation for travel on 5th night.

### 4. கவன ஈர்ப்பு

### விக் இந்தியா தொழிற்சாலையில் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதும் பதட்ட நிலையும் குறித்து.

**திரு. காட்டூர் கோபால்:** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனின் ஓர் அங்கமாகிய விக் இந்தியா தொழிற்சாலைக்கு முன்புறமும் உட்புறமும் தொழிலாளர்கள் தாக்கப்பட்டுள்ளதும், 21—3—1973 ஆம் நாளன்று முற்பகலில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவையின் ஒரு அங்கமாகிய விக் இந்தியா தொழிலாளர் சங்க உறுப்பினரும், கேண்டின் கமிட்டி உறுப்பினருமான திரு. பி. பத்தராயன் என்பவர் கடுமையாக வன்முறையால் தாக்கப்பட்டு கத்தியால் குத்தப்பட்டு படுகாயப் படுத்தப்பட்டுள்ளது, அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலைமை குறித்து."

*** மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அம்பத்தூரில் உள்ள விக் இந்தியா தொழிற்சாலையில் 603 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இதில் இரண்டு தொழிற் சங்கங்கள் இருக்கின்றன. இதில் அங்கீகாரம் பெற்றது (1) விக் இந்தியா தொழிலாளர் முன்னேற்ற சங்கம், தி.மு.க. வைத் தழுவியது. இச் சங்கத்தின் தலைவர் திரு. காட்டூர் கோபால், இதில் சேர்ந்த அங்கத்தினரின் எண்ணிக்கை சுமார் 400 பேர். (2) அங்கீகாரம் பெறாத குசேலரைத் தலைவராகக் கொண்ட (சி.ஐ.டி.யு) தொழிற் சங்கம் இருக்கிறது. இதில் சுமார் 100 பேர்கள் இருக்கின்றனர்.



1973 ஏப்ரல் 2] [திரு. என். வி. நடராசன்]

இக்கம்பெனியில் காட்டூர் கோபால் தலைமையில் உள்ள சங்கத்தினர் கடந்த மாதம் முதல் தேதி தங்களுக்கு மத்திய அரசு தொழிலாளர் சம்பள விகிதத்தில் ஊதியம் கொடுக்க வேண்டுமென்று சம்பளம் வாங்க மறுத்து விட்டனர். ஆனால் குசேலர் தொழிற்சங்கத் தொழிலாளர்கள் சிலர் மாத ஊதியம் பெற்றுக் கொண்டனர். இதிலிருந்து இரு சங்கத் தொழிலாளர்களுக்கும் பேச்சு வார்த்தையில் தகராறு இருந்தது.

21—3—1973-ம் தேதி காலை சுமார் 8-30 மணிக்கு பத்தராயன் என்னும் தி.மு.க. தொழிலாளர் வேலைக்கு வரும்போது கம்பெனி கேட்டுக்கு வெளியே குசேலர் (சி.ஐ.டி.யு.) சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் (1) தங்கம், (2) தஷ்யாணி, (3) தாஸ், (4) முனுசாமி இவர்கள் நின்றுகொண்டு பத்தராயனைத் திட்டிவிட்டு தாங்கள் பகல் 1 மணிக்கு வந்து பார்த்துக் கொள்கிறோம் என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டனர். பகல் 1-20 மணிக்கு (1) முனுசாமி, (2) ஜாயிஸ், (3) பால், (4) சம்பத், (5) சேகர், (6) தாஸ், (7) நாராயணன், (8) சந்தானம், (9) குட்டி, (10) பாலன், (11) வெங்கடேசன், (12) குட்டப்பன் ஆகிய இவர்கள் கம்பெனி வாயிலில் புகுந்து மேற்படி பத்தராயனை அடித்தார்கள், முனுசாமி கத்தியினால் பத்தராயனின் வலது கையில் குத்தினான், மற்றவர்களும் கையால் அடித்தார்கள், காலாலும் உதைத்தார்கள், என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேற்படி சம்பவம் நடக்கும்போது கம்பெனிக்கு எதிரில் உள்ள அத்திப்பேடு என்னும் கிராமத்தில் உள்ள பொது ஜனங்கள் சுமார் 50 பேர்கள் ஓடிவந்து முனுசாமியைச் சேர்ந்தவர்களை அடித்துத் துரத்தினர். கல்லாலும் கட்டையாலும் அடித்துத் துரத்தியதில் முனுசாமி தோழர்களுக்கும் காயம் ஏற்பட்டது.

மேற்படி கலவரம் நடந்தது அறிந்து தொழிற்பேட்டை காவல் நிலையத்தினர் விரைந்து சென்று, மேற்படி எதிரிகளில் கிடைத்த ஆறு பேர்களைக் காவல் நிலையம் கொண்டு வந்தனர்.

பத்தராயன் கொடுத்த புகாரின் பேரில் தொழிற்பேட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 76/73-ல் இ.பி.கோ. 147, 148, 448, 324 பிரிவுகளின் கீழ் ஒரு வழக்கும், முனுசாமி தோழர்களைச் சேர்ந்தவர்களில் சம்பத் என்பவன் கொடுத்த புகாரின் பேரில் குற்ற எண். 77/73-ல் இ.பி.கோ. 147, 148, 324 பிரிவுகளின் கீழ் மற்றொரு வழக்கும், பதிவு செய்யப்பட்டன.

இக்கலவரத்தில் முதலில் வன்முறைக்கு இறங்கியவர்கள் (சி.ஐ.டி.யு.) யூனியனைச் சேர்ந்த தொழிலாளர்கள்தான் என்று இதுவரை நடத்தப்பட்ட விசாரணையிலிருந்து தெரிய வருகிறது. குற்ற எண். 76/73-ல் இது வரை 5 பேர் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடப்பட்டு இருக்கிறார்கள். வழக்கு மேற்

கொண்டு விசாரணையில் உள்ளது. குற்ற எண். 77/73-ல் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. இந்த வழக்கும் மேற்கொண்டு விசாரணையிலுள்ளது. தொழிற்சாலை பக்கத்திலும், கிராமத்திலும் போலீஸ் பாதுகாப்பு செய்யப்பட்டு, இப்போது அமைதி நிலவுகிறது. மேற்கொண்டு யாதொரு விதமான அசம்பாவிதமும் நடக்கவில்லை.

**திரு. காட்டூர் கோபால்:** இந்தத் தொழிற்சாலையில் 500 பெண்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். பெண் தொழிலாளர்கள் பணியாற்றுகிற தொழிற்சாலைக்குள்ளேயே புகுந்து தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையைச் சார்ந்தவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த ஆண்டிலிருந்து இது வரையில் பல்வேறு தொழிற்சாலைகளைச் சேர்ந்த முன்னேற்றச் சங்கப் பேரவையைச் சார்ந்தவர்கள் இப்படியே தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிற காரணத்தால் இது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவர் அவர்களே, இந்த வழக்கு நீதி மன்றத்திலே இருக்கிறது. இதைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (1) 1973-ஆம் ஆண்டு சிறுவழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 4/1973)

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, Sir, I beg to move—

"That the Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill 1973 @ (L.A. Bill No. 4 of 1973), as passed by the Assembly, be taken into consideration".

Section 72-B of the Presidency Small Cause Courts Act, 1882, as amended by Tamil Nadu Act XII of 1955, provides for the payment of Court-fee at the rate of one-half of the fee payable on the plaint in a suit for similar relief, on applications for new trial filed under section 38 of the said Act. There is no provision in the Act for exempting the applications filed by pauper applicants under section 38 of the said Act from payment of the Court-fee.

@ 126-127-ஆம் பக்கங்களில் இணைப்பு -ஆக அச்சிடப்பட்டுள்ளது.



The High Court has recommended that a provision may be made for exempting pauper applicants from payment of Court-fees on applications filed under section 38 of the said Act. The Government have examined the High Court's recommendation and they have decided to amend section 74 of the said Act to enable the Court to receive applications from paupers under section 38 without payment or on part payment of fees mentioned in section 72-B. It is proposed to extend similar concession in respect of the fee payable by pauper applicants under section 72-A of the said Act also.

Under section 75 of the Presidency Small Cause Courts Act, 1882, the State Government have power to vary the amount of fees payable under sections 71 and 72. Section 72-A of the said Act as amended by Tamil Nadu Act XII of 1955 provides for the payment of fees prescribed in the Fifth Schedule to the Act on documents of any kind specified in the said Schedule. Article 6 of the said Schedule prescribes the fee on Vakalatnama or any paper signed by an Advocate signifying or intimating that he is retained for a party, including a memorandum of appearance, except where the party is a member of any of the Armed Forces of the union not in civil employment. According to sub-rule (6) of rule 4 of Order III of the Code of Civil Procedure, 1908, no Government Pleader or other Pleader appearing on behalf of the Government or on behalf of any public servant sued in his official capacity shall be required to present any document empowering him to act. In the absence of similar provision in the Presidency Small Cause Courts Act, 1882, difficulty is being experienced by Advocates appearing on behalf of Government, as such advocates have to file vakalatnama with the requisite fee. It has, therefore, been decided to amend section 75 of the Presidency Small Cause Courts Act, 1882, suitably so as to empower the State Government also to remit the fee payable under section 72-A of the said Act. It is also proposed to take power to remit or vary the fees payable under section 72-B of the said Act.

The Bill seeks to give effect to the above decisions.

Sir, I request the House to accept the Bill.

MR. CHAIRMAN : Does any hon. Member wish to speak?

(No hon. Member rose.)

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி —

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973-ஆம் ஆண்டு, சிறு வழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1973) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

"That the Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 4 of 1973), as passed by the Assembly, be passed."

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி.

"சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 1973-ஆம் ஆண்டு, சிறு வழக்கு மாநகர் நீதி மன்றங்கள் (தமிழ் நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1973) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1973).

* **மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (பேரவைச் சட்ட முன்வடிவு எண் 6/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.



சமய நிறுவனங்களில் உண்டியல்களையும் அத்தகைய ஏனைய பெட்டகங்களையும் வைத்துப் பராமரிப்பதற்குப் பொருந்துகிற விதிகள் தற்போது எதுவுமில்லை. மேற்சொன்ன நோக்கத்திற்காக விதிகள் இயற்றுவதற்கு தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 22/1959) வெளிப்படையான விதித்துறையும் இல்லை. இது குறித்து ஒரே சீரான நடைமுறையைப் பின்பற்றுவது அவசியமெனக் கருதப்படுகிறது. எனவே சமய நிறுவனங்களில் உண்டியல்களையும் அத்தகைய ஏனைய பெட்டகங்களையும் வைத்துப் பராமரிப்பதற்கு விதிகள் இயற்ற அரசுக்கு அதிகாரமளித்து, பி.ப.
மேற்சொன்ன சட்டத்தின் 116 வது பிரிவைத் திருத்துவதென்று முடிவு செய்யப் 4-50
பட்டுள்ளது. இந்தச் சட்ட வரைவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல்வடிவம் அளிக்கிறது. இம் மன்றம் இதனை ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் :** முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (பேரவைச்சட்ட முன் வடிவு எண் 6/1973) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

* **திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, இம்மாதிரியான அறநிலையங்களில் உண்டியல் வைப்பதுபற்றிச் சட்டம் வருவதை நான் வரவேற்கிறேன். இப்போது எந்தெந்த இடங்களில் உண்டியல்கள் இருக்கின்றன, எந்த நோக்கத்துடன் உண்டியல்கள் இருக்கின்றன என்பதே தெரியாமல் இருக்கிறது. இது விரும்பத்தக்க சட்டம். இது நிச்சயமாகத் தேவையான சட்டமும் கூட. கோயில்களில், சமய நிலையங்களில், அறநிலையங்களில் எந்த இடத்தில்தான் வைக்கவேண்டும் என்று குறிப்பிடவேண்டும். இதனுடைய நோக்கத்தைக் குறிப்பிட்டு, நல்ல பணிகளுக்கென்று பிரத்யேகமான உண்டியல்கள் அம்மாதிரியான நிலையங்களில் தேவை என்று நான் கருதுகின்றேன். அந்த உண்டியலை வைப்பது பெரிதல்ல. அதைத் திறக்கும்போது யார்யார் முன்னிலையில்தான் திறக்க வேண்டுமென்று திட்டவட்டமாக விதிகள் இயற்றப்பட வேண்டுமென்று கருதுகின்றேன். அந்த உண்டியலுக்குப் போடக்கூடிய பூட்டுகளை உடைத்துத் திறக்கும்போது அந்தக் கோயிலின் அறங்காவலர் ஒருவரும்,

---

@ 127-128-ம் பக்கங்களில் இணைப்பு IV -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அலுவலர் ஒருவரும் அறநிலையத் துறையின் அதிகாரி ஒருவரும் இருந்து அந்த உண்டியலைத் திறந்து அதில் எவ்வளவு பணம் இருக்கின்றது, பொருள் இருக்கின்றது என்று சேகரிக்கப்பட்டு எல்லாம் குறிப்பிட்ட நோக்கத்திற்குக் கைகூடுமாறும் அந்தப் பணத்தை வேறு யாரும் எடுத்துக்கொள்ளாதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கருதுகின்றேன். சமீபத்தில் ஒரு கோயிலில் ஒரு உண்டியலைத் திறக்கும்போது அதிலிருந்து ஒரு கற்றை நோட்டுகளை, அங்கிருந்த பணத்தைக் கூட வந்த ஒரு அலுவலர் எடுத்து தன் சட்டைக்குள் போட்டுக் கொண்டுவிட்டார் என்று அவர் மீது ஒரு வழக்கு இருப்பதாக அறிகிறேன். இம்மாதிரி திருக்கோயில்களிலும் சமய நிலையங்களிலும் இருக்கக் கூடிய உண்டியலில் கிடைக்கும் பணத்தை எடுத்துக்கொள்கின்றவர்களுக்குத் தண்டனை விதிப்பதற்கும் நமது சட்டத்தில் பிரத்யேகமாக இடம் இருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். இதைச் சாதாரண கிரிமினல் சட்டத்தின் கீழ் கொண்டுவரலாம் என்று சொல்வது சரியல்ல. சமயத்தில் நம்பிக்கையிருக்கின்றவர்கள் கொண்டுவந்து போடும் பணத்தை, இம்மாதிரி எடுப்பதை பெரும் குற்றமாகக் கருதி அம்மாதிரியாக எடுப்பவர்களுக்கு, நல்ல தண்டனை கடுமையான தண்டனை விதிப்பதற்கும் இந்த விதிகளில் இடம் கொடுக்கப்படவேண்டுமென்று கூறி நான் இதை வரவேற்கிறேன். வணக்கம்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின் திருத்தத்தை நான் வரவேற்கிறேன். கோயில்களில் பல இடங்களில் உண்டியல்கள் இப்போது வைக்கப்படுகின்றன. அதற்காக சட்டத்தின்படி அதற்கான விதிமுறைகள் இல்லை என்பதற்காக ஒரு முறையான வழக்கத்தைக் கொண்டு வருவதற்கான விதிகளையெல்லாம் தயாரிப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கும் மசோதாவாக இதைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இது ரொம்ப முக்கியமான மசோதா. அதை நான் வரவேற்கிறேன். இப்போதும் கூட இந்த இலாகாவைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர், அறங்காவலர் சிலபேர் இருந்துதான் அவர்கள் இந்த உண்டியலைத் திறக்கிறார்கள். இருந்தாலும் கூட இந்த உண்டியல்கள் வைக்கப்படுவதன் மூலம் ஏற்பட்டுள்ள கேடுகள், கெடுதிகள் இவைகளை மனதிலே கொண்டு நல்ல விதிமுறைகளை ஏற்படுத்துவது மிகவும் அவசியமென்று நான் கருதுகிறேன். இந்த உண்டியல்களிலே கோயில்களிலே உள்ள பரிசாரகர்கள் இவர்களுக்கெல்லாம் ஏதோ ஒரு பங்கு என்று சில சில கோயில்களிலே இருப்பதாகத் தெரிகிறது. உண்டியலிலிருந்து அவர்களுக்கு இவ்வளவு, இவர்



களுக்கு இவ்வளவு, பட்டர்களுக்கு இவ்வளவு என்று பிரித்துக்கொடுக்கக்கூடிய வழக்கம் இருந்துகொண்டிருப்பதாக நான் அறிகிறேன். அவர்கள் இந்த விதிகளை ஏற்படுத்துகிறபோது, வழக்கமாக இருந்துகொண்டிருக்கக்கூடிய இவைகளெல்லாம் எந்த அளவில் நியாயமானவை என்பதையும் மனதிலே கொண்டு இதற்கான விதிமுறைகளை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு அமைச்சரவர்கள் கொண்டுவந்த இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, இந்த உண்டியல் வைக்கிற மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். உள்ளபடியே தர்ம சிந்தனை மக்களுக்குத் தாராளமாக வளர்ந்திருக்கிறது. சட்டம் தேவைதான். ஆனால் உண்டியலை உடைத்து பணத்தை எண்ணுகின்றபோது, அதற்கு வேண்டிய பாதுகாப்பு தேவைப்படுகிறது. அதிலே தவறுகள் ஏற்படுமானால், கடுமையான சட்டம் இருக்க வேண்டும். தர்ம சொத்தைத் திருடி எவனாவது பிழைப்பானானால், அவனைக் கடுமையான குற்றத்திற்கு ஆளாக்க வேண்டும் என்பதை இந்தச் சட்டத்தில் சேர்க்க வேண்டும். இன்னொன்றையும் சேர்க்க வேண்டும். தர்மம் வழங்குகிறார்கள் என்றால், உண்டியல் பெட்டியை வைத்து விடலாம். ஆனால் உண்டியல் பெட்டியை வைத்துவிட்டு உண்டியல் பெட்டி பக்கத்திலே ஊரிலே பெயர்பெற்ற ஒரு கள்ளனை பக்கத்திலே வைத்துவிட்டால், உண்டியலிலே நயா பைசா கூட தேறாது. உண்டியல் பக்கத்திலே நிற்பவர்கள் நியாயமாகச் செலவு செய்யக்கூடியவர்களாக, தர்மவான்களாக, நியாயம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். அடிகளார் அவர்கள் பக்கத்திலே உண்டியலை வைத்தால், நான் கூட கையிலே உள்ள காசு பூராவையும் கொட்டுவேன். நான் மட்டுமல்ல தமிழ் நாடே கொட்டும். ஒரு நியாயமான கொள்கையுள்ளவர் என்று தமிழ் நாட்டிலே மற்றவர்களெல்லாம் பேசி அவருக்கு ஒரு தகுதி கிடைத்திருக்கிற காரணத்தாலேதான்.

திரு. ம. பொ. சிவஞானம்: தலைவரவர்களே, உண்டியல் பக்கத்திலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகோபால் அவர்களையே உட்கார வைத்துவிட்டால் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, எல்லோரும் கையை விட்டு எடுப்பார்கள். திரு. ராஜகோபால் தானே உள்ளே நுழைந்து எடுக்கக் கூடிய அளவுக்கு உடல் வலிமை படைத்தவர்.

திரு. சி. வி. ராஜகோபால்: அதற்காகத்தான் நானே ஒத்துக்கொள்ளவில்லை. எனக்கு எதுவுமே வேண்டாமென்று சொல்லுகிறேன். என்னை நம்ப மாட்டார்கள். ஆகவே அந்த உண்டியல் பக்கத்திலே போடுகிற அறங்காவலர்

களை அதற்குத் தகுந்தவர்களாக, பரவாயில்லை இந்த உண்டியலில் போட்டால் ஆண்டவனுக்குத்தான் போகும் என்று எண்ணுகின்ற அளவுக்கு நல்ல அறங் காவலர்களைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த நல்ல மசோதாவை வரவேற்று, உறுப்பினர் அனைவரும் நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர், திரு. ராஜா அய்யர் அவர்கள், உண்டியலை யார் யார் முன்னிலையில் திறக்க வேண்டுமென்று திர்ணயம் செய்துவிட வேண்டுமென்றும், அதைத் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே உண்டியல்களைத் திறந்து எண்ணுகிற நேரத்தில், அந்தப் பகுதியினுடைய ஆய்வாளர் அல்லது நிர்வாக அதிகாரி, அறங்காவலர்கள், மற்றும் பொது மக்களில் சிலரை வைத்துக் கொண்டு எண்ணுகிறார்கள். இன்னும் கொஞ்சம் பெரிய கோவில்களாக இருந்தால், எங்கே டிபாசிட் செய்திருக்கிறார்களோ, அந்த வங்கியினுடைய ஏஜன்டுகள் அல்லது அதனுடைய பிரதிநிதிகள் அங்கே வந்திருந்து, உண்டியலை எண்ணிப் பார்க்கின்ற காரியம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இருந்தாலும் இந்தச் சட்டத்திலே, புதிதாக விதிகளைச் சேர்க்கும்போது, யார் யார் இருந்து எண்ண வேண்டுமென்று தெளிவாகச் சேர்த்து, எதிர் காலத்திலே அத்தகைய உத்தரவை இடுவதற்கான, முயற்சிகளை மேற்கொள்கிறோம். அடுத்தபடியாக, பணத்தை எடுக்கிறவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே அப்படிப்பட்ட தண்டனைகள் கொடுப்பதற்கு நம்முடைய விதிமுறைகள் இடம் கொடுக்கின்றன. இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தைக் கூடச் சொன்னார்கள். அது எந்தஅளவிலே இருக்கிறதென்பதை ஆராய்ந்து, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கிறோம்.

அதற்கு அடுத்தபடியாக, திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டபடி உண்டியலிலிருந்து யாருக்கும் பங்கு கொடுப்பதில்லை. தட்டத்திலே போடும் காணிக்கையிலோ அல்லது அர்ச்சனைப் பங்கிலோதான், அங்குள்ள அர்ச்சகருக்கோ அல்லது பூசாரிக்கோ பங்கு இருக்குமே தவிர, உண்டியலிலே போடும் பணத்திலே பங்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே அந்தப் பிரச்சினையை நான் கிளப்ப வேண்டியதில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. வி. இராசகோபால் அவர்கள் சொன்ன நல்ல கருத்துக்களையும் மனதிலே கொண்டு, விதி முறைகள் வகுக்கப்படுமென்று தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.



மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் (6/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1973) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1973) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை பிற்பகல் நான்கு மணிக்குக் கூடும்.

பின்னர், சட்டமன்றம் ஒத்தி வைக்கப்பட்டது. 5·00 பி·ப.

## 6. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### 1. *Statutory Rules and Orders.*

85. Notification issued with G.O. Ms. No. 393, Rural Development and Local Administration, dated the 27th February 1973, in regard to date of commencement of the Tamil Nadu District Municipalities (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 5 of 1973). [*Laid on the table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

86. Notification issued with G.O. Ms. No. 2649, Rural Development and Local Administration, dated the 22nd December 1972, in regard to certain amendments to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 380 of 1961, dated the 10th May 1961, published at pages 211 to 212 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 24th May 1961 as subsequently amended. [*Laid on the table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act XXXV of* 1958).]

87. Notification issued with G.O. Ms. No. 2154, Rural Development and Local Administration, dated the 10th October 1972, in regard to specification of number of Councillors of certain Municipalities with effect on and from the date of next ordinary elections. [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

88. Notification issued with G.O. Ms. No. 3149, Agriculture, dated the 29th December 1972, relating to establishment of regulated market at Mettupalayam in respect of groundnut, tobacco, turmeric, maize, sugarcane jaggery and arecanut. [*Laid on the table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

89. Notification issued with G.O. Ms. No. 3145, Agriculture, dated the 29th December 1972, relating to opening of a regulated market at Sathyamangalam in Coimbatore district for the purchase and sale of cotton, groundnut, tobacco, turmeric, maize and sugarcane jaggery. [*Laid on the table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

90. Notification issued with G.O. Ms. No. 3146, Agriculture, dated the 29th December 1972, relating to inclusion of groundnut, chillies and sugarcane jaggery in the Lalgudi Market at Tiruchirappalli district. [*Laid on the table of the House under section* 29 (4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act*, 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

*B.—Reports, Notifications and other papers.*

**131. Notification issued with G.O. Ms. No. 502, Industries, dated the 22nd March 1973, making the Tamil Nadu cement Distribution (Licensing and Regulation) order, 1973.**



## இணைப்பு I

(79-ம் பக்கத்தில் 328-ம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையை காண்க.)

(அ) & (இ) நிகரச் செலவு அடிப்படையில், உயர்ந்த அளவு ரூ. 3,000 என்பதற்குட்பட்டு, 1967-68-லிருந்து ஆண்டு நிர்வாக மானியம் ஒன்றை முதற்கண், சென்னை ஆந்திர மகிள சபை மருத்துவ மனை இலவச மருந்தகத்திற்கு அளிக்க, அரசு, 1968-ல் ஒப்பளித்தது. இம் மானியத் தொகை பின்னர், 1970-71-லிருந்து செயலுக்கு வரும் வகையில் 1971 ஏப்ரலில் ரூ. 14,000 என்ற உயர்ந்த அளவுக்கு உயர்த்தப்பட்டது. நிறுவனத்தின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் பற்றிய விவர அறிக்கைக்கிணங்க நிகர பற்றுக்குறை அடிப்படையில் இம் மானியம் வழங்கப்படத்தக்கதாகும். 1971-72-ஆம் ஆண்டிற்கும் இந் நிறுவனத்திற்கு பேணுதல் மானியமாக ரூ. 14,000-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. புறநிலை நோயாளிப்பகுதியின் விரிவாக்கத்திற்காக கட்டிட இணை மானியமாக சிறப்பு நல நிதியிலிருந்து ரூ. 12,500-க்கும் அரசு 1972 ஜூனில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆனால், இந் நிறுவனத்திடமிருந்து தேவையான விவரங்கள் கிடைக்காமையால், இத்தொகை இன்னும் வழங்கப்படவில்லை. குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்று கட்டப்படுவதற்காக, மேற்கண்ட நிறுவனத்திற்கு அரசு, 1971 மே திங்களில் ரூ. 50,000-க்கும் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1971-ஆம் ஆண்டில் முன் மானியமாக ரூ. 25,000 வழங்கப்பட்டது. பாக்கி மானியத் தொகை ரூ. 25,000 சென்னை தலைமைப் பொறியாளர் (பொ.ப.து.) யிடமிருந்து இறுதி மதிப்பீட்டுச் சான்றிதழ் பெறப்பட்ட பிறகு வழங்கப்படும்.

மேற்கூறப்பட்டவை தவிர, உயர்ந்த அளவுத் தொகை ரூ. 18,000 என்பதற்குட்பட்டு, நிறுவனத்தின் பேணுதல் செலவில் ஏற்படும் ஆண்டுப் பற்றுக்குறையில் 75 சதவீதம் என்ற வீதத்தில், 1966-67-ஆம் ஆண்டிலிருந்து செயலுக்கு வரும் வண்ணம் சென்னை ஆந்திர மகிள சபை, ஈஸ்வரிபிரசாத் தத்தாத்ரேயா முடநீக்கியல் நிலையத்திற்கு மானியமாக அளிக்க 1968-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 1971-72-லிருந்து செயலுக்கு வரும் வண்ணம் அத்தொகை 1972, நவம்பரில் ரூ. 25,000 எல்லைக்கு உயர்த்தப்பட்டது. மேலும், சென்னை, ஈஸ்வரி பிரசாத் தத்தாத்ரேயா முடநீக்கியல் நிலையத்தில் எக்ஸ் கதிர் பகுதி கட்டப்படுவதற்காகும் செலவில் பாதி மானியமாக ரூ. 17,500 தொகை வழங்க, அரசு, 1970, செப்டம்பரில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அத்தொகை 1971, மார்ச்சில் அந்நிறுவனத்திற்கு அனுமதிக்கப்பட்டது.

## இணைப்பு II

(101-ஆம் பக்கத்தில் 2-ஆம் எண்ணுள்ள குறுகிய கால வினாவின் விடையைக் காண்க.)

**கோரிக்கை எண் I :** ஆசிரியர்களுக்காக தனியானதொரு ஊதியக்குழு அமைத்தலும், அக் குழுவில் ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளரைச் சேர்த்துக்கொள்ளலும்.

இரண்டாவது ஊதியக்குழு முன்னரேயே அமைக்கப்பட்டு, அக் குழுவின், பரிந்துரைகள், ஆசிரியர்களுக்கான பரிந்துரைகள் உட்பட, அரசால் செயல் படுத்தப்பட்டு விட்டன. ஆகவே, ஆசிரியர்களுக்காக தனியே ஒரு ஊதியக்குழு அமைத்திட வேண்டும் என்ற கேள்விக்கு இடமில்லை.

**கோரிக்கை எண் (அ):** மாதமொன்றுக்கு ரூ. 30 வீதம் இடைக்கால நிவாரணம் அளித்தல் :

இரண்டாம் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அரசால் முன்னரேயே செயல் படுத்தப்பட்டு விட்டதால் இடைக்கால நிவாரணம் அளிப்பது பற்றிய பிரச்னைக்கு இடமில்லை.

**கோரிக்கை எண் II (இ):** பஞ்சப்படியில் 2/3 பங்கினை சம்பளத்துடன் இணைத்தல் பற்றி.

இது முன்னரேயே இரண்டாவது ஊதியக் குழுவினால் செய்யப்பட்டுவிட்டது.

**கோரிக்கை எண். III :** ஆசிரியர்களின் ஓய்வுபெறும் வயதினை 58 ஆக உயர்த்துதல்.

அரசு, எல்லாவிதமான நிர்வாகத்தின் கீழ் உள்ள பள்ளிகளிலும் பணியாற்றும் ஆசிரியர்களின் ஓய்வுபெறும் வயதினை 1973-74-ஆம் ஆண்டிலிருந்து 58 ஆக இருக்கும் என நிர்ணயம் செய்து ஆணைகளிட்டு விட்டது. மேலும், அரசு, பள்ளி திறந்த பின்பு ஓய்வுபெறும் வயதான 58-ஐ அடையும் ஆசிரியர்கள், பள்ளி கோடை விடுமுறைக்காக மூடப்படும்வரை, மீண்டும் பணியில் அமர்த்தப் பட்ட ( Re-employment ) ஆசிரியர்கள் என்ற வகையில் பணியில் தொடர்ந்து இருக்கலாம் எனவும் அனுமதித்து ஆணை வெளியிட்டுள்ளது.

**கோரிக்கை எண் III (அ):** திருமணக்கடன்—

முன்னராகவே, அரசு, ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் திருமணத்திற்காக முன்பணம் பெறலாம் என அனுமதித்து ஆணை





வெளியிட்டது. அவ்வாறே மற்ற நிர்வாகங்களின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்களும் திருமணத்திற்காக முன்பணம் பெறலாம் என அனுமதித்து ஆணைகள் வெளியிட்டுள்ளது.

**கோரிக்கை எண். III (இ):** கைத்தறித் துணி வாங்குவதற்காக கடன் கொடுத்தல்.

உதவிபெறும், ஆரம்ப, மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் தங்களுடைய வருங்கால வைப்பு நிதியிலிருந்து கைத்தறித் துணிகள் வாங்கும்பொருட்டு முன்பணம் பெறலாம் என அனுமதித்து ஆணைகள் இடப் பட்டுவிட்டன.

**கோரிக்கை எண். III (ஈ):** இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்புக்குப் பதிலாகப் பணம் பெறுதல்.

இப்பொருள் குறித்தும் ஆணைகளிடப்பட்டுவிட்டன.

**கோரிக்கை எண். III (உ):** உதவிபெறும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப்படி அளித்தல்.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் விகிதத்திலேயே ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுவதற்கான அரசாணைகள் முன்னரேயே இடப் பட்டுவிட்டன.

**கோரிக்கை எண் IV (அ):** குளிர்காலப்படி.

உள்ளாட்சி நிர்வாகங்களின்கீழ் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு உள்ளது போலவே, உதவிபெறும் ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் குளிர்காலப் படி வழங்குவதற்கான அரசாணைகள் இடப்பட்டு விட்டன.

**கோரிக்கை எண். IV (இ):** மருத்துவச் சலுகை.

உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், அரசு மருத்துவமனைகளில் இலவசமான மருத்துவ உதவி அளிக்கும்படிக்கான ஆணைகள் அரசால் முன்னரேயே இடப்பட்டுவிட்டன. மருத்துவச் செலவுகளை உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசு ஏற்றுக் கொடுப்பதற்கான ஆணைகளிடப் படவில்லை.

**கோரிக்கை எண் (ஈ):** ஆசிரியர்களுக்கான வைப்பு நிதியிலிருந்து விழாக் கால முன்பணம் அளித்தல்.

உதவிபெறும் பள்ளி ஆசிரியர்கள் தங்களுடைய இருப்பில் உள்ள வருங்கால வைப்பு நிதியிலிருந்து விழாக்கால முன்பணம் பெறுவதற்கான ஆணைகள் அரசால் இடப்பட்டு விட்டன.

**கோரிக்கை எண் IV (உ):** ஆசிரியர்களுக்கான வைப்பு நிதியிலிருந்து 50 சதவிகிதம் வரை முன்பணம் பெற வசதி செய்தல்.

இது குறித்தும் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விட்டன.

**கோரிக்கை எண். IV (ஊ):** சம்பளக் காசோலைகளை மாற்றும் பொருட்டு ஆசிரியர்-நிர்வாகிகள் வெளியில் செல்லும் காலத்ினை பணிக்காலமாகக் கருதுதல்.

சம்பளக் காசோலைகளை மாற்றும் பொருட்டு பள்ளியினை விட்டு, ஆசிரியர் நிர்வாகிகள் வெளியே செல்ல நேர்கையில் அவர்கள் பள்ளி வாராதிருக்கும் அக்காலம், வேற்றுப் பணிக்காலம் (…on other duty) என, பள்ளியின் வேலைகள் தடைபடாத பட்சத்தில், கருதப்படலாம் என அரசு ஆணைகள் இட்டு விட்டது.

**கோரிக்கை எண். IV (எ):** ஆசிரியர்களுக்குச் சட்ட பூர்வமான பணிப் பாதுகாப்பு அளித்தலும், பொதுவான பணிப்பதிவேடு வைத்தலும்.

உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களின் பணிப் பாதுகாப்பினை நோக்கில் கொண்டு, அரசு, "தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (கட்டுப்படுத்தும்) மசோதா, 1972" என்ற ஒரு மசோதாவினை 10—8—1972 அன்று சட்டப் பேரவையில் ஆய்வுக்காக வைத்தது. அம்மசோதா, கூட்டுத் தேர்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கு பொதுவான பணிப்பதிவேடு ஏற்படுத்த வேண்டும் என்ற பொருளும் அரசின் பரிசீலனையிலுள்ளது.

**கோரிக்கை எண். V (அ):** அனைத்து, இடைநிலைப் பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருக்கும் ஆசிரியர்களுக்கும், அவர்கள் எந்த வகுப்பினிற்கு போதிப்பினும், இடைநிலை ஊதியம் வழங்குதல்.

இக்கோரிக்கை அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. தற்சமயம், இடைநிலை ஆசிரியர்கள், இளநிலை ஊதியம் பெற்றுப் பணி புரிந்துவரும் இளநிலைப் பணியிடங்களை இடைநிலைப் பணியிடங்களாக படிப்படியாக திட்டத்தின்மூலம் மேம்படுத்துவதற்கான திட்டமொன்றை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. அதன்படி, அரசு இதுவரை 24,500 இடைநிலைப் பணியிடங்களை, அப்பொழுதுள்ள இளநிலைப் பணியிடங்களுக்குப் பதிலாக ஏற்படுத்தி ஆணையளித்திருக்கிறது. மிகுதியுள்ள இடங்களும், இடைநிலைப் பணியிடங்களாக 1973-74-ஆம் ஆண்டும், அதன்பின் வரும் சில ஆண்டுகளிலும் மேம்படுத்தப்படும்.



**கோரிக்கை எண். V (இ):** ஆரம்பப்பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியருக்கான படி அளித்தல்.

தலைமை ஆசிரியர் உள்ளிட 4 அல்லது அதற்கு மேல் ஆசிரியர்கள் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர்க்கான பணிப்படி கொடுக்க அரசு ஆணைகளிட்டுவிட்டது. நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்களுக்கு தனியானதொரு சம்பள விகிதமும் அளிக்கப்பட்டு விட்டது.

**கோரிக்கை எண். V (ஈ):** முழுநேரமாகவோ, அல்லது பகுதி நேரமாகவோ பணிபுரியும் கைத் தொழில் ஆசிரியர்கள் அனைவருக்கும் இடைநிலை ஊதியம் அளிக்கக் கோரிக்கை.

நடுநிலைப் பள்ளிகளில் சுமார் 268 பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களும், உயர்நிலைப் பள்ளிகளில் 38 பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களும் பணி புரிந்து வருகின்றனர். இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி, பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களின் ஊதியம் ரூ. 30 லிருந்து ரூ. 60 (நிலையானது) என உயர்த்தப்பட்டுள்ளது. மத்திய அரசின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கான உதவித் திட்டத்தின்கீழ், அரசு, 176 உயர்தர ஆரம்பப் பாடசாலைகள்/உயர்நிலைப் பள்ளிகள், 176 முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர்கள் பணியிடங்கள் ஏற்படுத்தி ஆணையிட்டுள்ளது. இம்முழுநேரப் பணியிடங்களில் நியமனம் செய்வது, அந்தந்த நிர்வாகங்களின் கீழ் தற்சமயம் பணி புரிந்துவரும் பகுதி நேரக் கைத்தொழிலாசிரியர்கள் எவரேனும் இருந்தால் அவர்களிலிருந்தே செய்யப்பட வேண்டும். மிகுதியுள்ள பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களையும், முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்களாக மாற்றுவது அரசின் பரிசீலனையிலுள்ளது.

**கோரிக்கை எண் VI :** அரசு ஆணை எண் 250, கல்வி, நாள் 29—2—1964-ல் விதிக்கப்பட்ட ஆசிரியர்-மாணவர் விகிதம் பற்றிய ஆணைகளைச் செயல்படுத்தல்.

அரசு ஆணை எண். 250 (நிலை), கல்வி, நாள் 19—2—1964-ல் இடப்பட்ட ஆசிரியர்-மாணவர் விதம் பற்றிய ஆணைகள் முடிந்த மட்டும், அரசின் நிதி நிலைக்கும், திட்டச் செலவுகளுக்கும் உட்படும்வரை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**கோரிக்கை எண் VII : ஆசிரியர்களுக்குப் பணிப் பாதுகாப்பு பற்றிய கோரிக்கை.**

*உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களின் பணிப்பாதுகாப்பினை நோக்கில் கொண்டு, அரசு, "தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (கட்டுப் படுத்தும்) மசோதா, 1972" என்றதொரு மசோதாவினை 10—8—1972 அன்று சட்டப் பேரவையில் ஆய்வுக்காக வைத்தது. அம்மசோதா, சட்ட மன்றத்தின் கூட்டுத் தேர்வுக் குழுவுக்கு* (Joint Select Committee) *ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளது.*

### இணைப்பு

*[112-ஆம் பக்கத்தில் இனம் 5 (1)-க்கான அடிக்குறிப்பை காண்க.]*

L.A. BILL NO. 6 OF 1973.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Presidency Small Cause Courts Act, 1882, in its application to the State of Tamil Nadu.*

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Act, 1973.

(2) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. *Amendment of section 74, Central Act XV of* 1882.—In section 74 of the Presidency Small Cause Courts Act, 1882 (Central Act XV of 1882) (hereinfter referred to as the principal Act),—

(i) for the words and figures " applications under section 41 ", the words and figures " applications under section 38 or under section 41, as the case may be ", shall be substituted;

(ii) for the words and figures " sections 71 and 72 ", the words, figures and letters " sections 71, 72, 72-A and 72-B, as the case may be ", shall be substituted.





3. *Amendment of section 75, Central Act XV of* 1882.—In section 75 of the principal Act,—

(i) for the marginal heading, the following marginal heading shall be substituted, namely :—

" *Power to vary or remit fees*— ";

(ii) for the words and figures " vary the amount of the fees payable under sections 71 and 72 ", the words, figures and letters " vary or remit the amount of the fees payable under sections 71, 72, 72-A and 72-B as the case may be " shall be substituted.

### இணைப்பு IV

*[115 ஆம் பக்கத்தில் இனம் 5 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]*

L.A. BILL NO. 4 OF 1973.

(As passed by the Assembly.)

*A Bill further to amend the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act*, 1959.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Act, 1973.

2. *Amendment of section* 116, *Tamil Nadu Act* 22 *of* 1959.—In sub-section (2) of section 116 of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959),—

(1) in clause (xxv), the word ' and ' occurring at the end shall be omitted;

(2) in clause (xxvi), the word ' and ' shall be added at the end; and

(3) after clause (xxvi), the following clause shall be added, namely :—

" (xxvii) (a) the manner in which the hundials and other receptacles in a religious institution for putting as offerings cash or other valuables, shall be installed, maintained, opened and sealed; and

(b) ensuring proper safeguards of such hundials and receptacles. ".

## தமிழ் நாடு சட்ட மன்றம்.

செவ்வாய்க்கிழமை, 1973 ஏப்ரல் 3.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

### உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்.

#### 1. வினாக்கள்-விடைகள்.

*All-India Services Competitive Examinations*

@ *311. Q.—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that the number of successful candidates from Tamil Nadu in All-India Services Competitive Examinations is on the decrease ; and

(b) if so, whether there is any proposal with the Government to improve their efficiency ?

அனைத்திந்திய போட்டித் தேர்வு

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அனைத்திந்திய போட்டித் தேர்வில் தமிழ் நாட்டிலிருந்து கலந்து கொண்டோரில் தேறியவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது உண்மையா ?

(இ) ஆமெனில், அவர்களது திறனை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) & (இ) விடை (b) அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இங்கு அளிக்கப்பட்டுள்ள விடையில் அனைத்திந்தியப் பணிகள் போட்டித் தேர்வுக்காக இந்தியப் பொது நிர்வாகக் கழகத்தின் தமிழ் நாட்டுப் பிரிவுக்கு ஆயிரம் ரூபாய் பொருளுதவி செய்ய ஒப்பளித்துள்ளது என்று மட்டும் போட்டிருக்கின்றார்கள். எந்தப் பணிக்காக

---

@ 31—3—1973 ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.

(b) 271 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

இந்த ஆயிரம் ரூபாய் ஒப்படைக்கப்பட்டுள்ளது? அவர்கள் என்ன பணியை தற்போது மேற்கொண்டுள்ளார்கள் என்று அறிய விரும்புகிறேன். அடுத்தபடி, அரிஜனங்கள், பழங்குடி மக்கள், பின் தங்கிய வகுப்பினர் ஆகியவர்களுக்காக தேர்வு முன் பயிற்சி அளிக்கும் நிலையங்கள் இரண்டு அரசால் நடத்தப்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த நிலையங்கள் எங்கே நடத்தப்படுகின்றன? அதிலே எத்தனை மாணவர்கள் படித்து வருகின்றார்கள்? அதே சமயத்தில், கடந்த 5 ஆண்டுகளாக நடந்த அனைத்திந்தியப் பணிகள் போட்டித் தேர்விலே வெற்றி பெற்ற மாணவர்கள் எத்தனை பேர்கள், ஒவ்வொரு ஆண்டும் எத்தனை பேர்கள் தேறி வந்திருக்கின்றார்கள் என்ற விவரத்தை முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இந்தியப் பொது நிர்வாகக் கழகத்தைச் சேர்ந்த தமிழ் நாட்டு வட்டாரக் கிளையின் செயலாளரோடு இந்த நிலைமை குறித்து ஆலோசிக்கப்பட்டது. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளில் ஒருவராலும், இந்தக் கிளையின் உறுப்பினராகிய ஒருவராலும் ஆய்வு ஒன்றை மேற்கொள்ள நிலையான ஏற்பாடுகள் இருப்பதாக இந்தக் கிளையின் தலைவராக இருப்பவர் தெரிவித்துள்ளார். இந்தக் கிளையின் தலைவராக இருப்பவர் திரு. சி. ஏ. ராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ். (ரிட்டையர்ட்), கௌரவச் செயலாளராக இருப்பவர் திரு. காஜி, ஐ.ஏ.எஸ். ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு மேற்கொண்டு பரிசீலனை செய்வது குறித்து, பணிகளை நிர்ணயிக்க, பொது நிர்வாகக் குழுவிடம் ஒப்படைக்க ஒப்புகொண்டு, சுருக்கெழுத்தாளர், தட்டச்சு செய்தல் போன்ற காரியங்களுக்காக ரூபாய் ஆயிரத்திற்கு அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது. இதனுடைய வேலைகள் இன்னும் ஆரம்பமாக வேண்டிய நிலையில் இருக்கின்றன. இன்னொன்று கேட்டார்கள். பழங்குடி மக்களுக்குப் பயிற்சி நிலையம் எங்கே இருக்கிறது என்று கேட்டார்கள். அவை இந்தியாவிலேயே இரண்டு இடங்களிலே இருக்கின்றன. இன்று சென்னையில் ஒன்றும், மற்றொன்று அலகாபாத்திலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. பழங்குடி மக்களைப் பொறுத்தவரையில், 1966-67-ல் இந்த நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் 42 பேர்கள். எத்தனை பேர்கள் தேர்வுக்குச் சென்றார்கள் என்ற குறிப்பில்லை. ஆனால் யாரும் தேர்வு பெறவில்லை. 1967-68-ல் 38 பேர்கள் இந்தப் பயிற்சி நிலையத்திலே சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். இதில் எத்தனை பேர்கள் தேர்வுக்குச் சென்றார்கள் என்று தெரியவில்லை, ஆனால் ஒருவர் தேர்வு பெற்றார். 1968-69-ல் 27 பேர்கள் பயிற்சி பெற்றார்கள், ஒருவர் தேர்ச்சி பெற்றார். 1969-70-ல் 22 பேர்கள் பழங்குடி மாணவர்கள் பயிற்சி பெற்றார்கள், ஒருவர் தேர்வு பெற்றார். 1970-71-ல் 23 பேர்கள் பயிற்சி பெற்றார்கள், யாரும் தேர்வு பெறவில்லை. 1971-72-ல் 43 பேர்கள். இதில் 22 பேர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வுக்கு அனுப்பப்பட்டார்கள். இதில் 5 பேர்களுக்கு ஐ.ஏ.எஸ். இண்டர்வியூ





வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். பழங்குடி மக்களைப் பொறுத்த வரையில், பின் தங்கிய வகுப்பினரைப் பொறுத்த வரையில், 1971 நவம்பர் மாதம் அவர்களுக்கான பயிற்சி நிலையம் ஒன்றை இந்த அரசு துவக்கியுள்ளது. அதில் 1971 நவம்பரில் சேர்க்கப்பட்டு, 1972 அக்டோபரில் தேர்வு எழுதியவர்கள், அனுமதிக்கப்பட்டவர்களுடைய மொத்த எண்ணிக்கை 12. அதில் பயிற்சிக் காலம் முடியும் முன் விட்டுச் சென்றவர்கள் 4 பேர்கள். 8 பேர்கள் அக்டோபரில் தேர்வு எழுதினார்கள். இப்போது ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வில் வெற்றி பெற்று இண்டர்வியூவிற்கு வருபவர்கள் 3 பேர்கள்.

**திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு தலைவரவர்களே, அனைத்திந்தியப் பணிகள் போட்டித் தேர்வுகளில், நாடு முழுவதும் ஆங்கிலம் போதனை மொழியாக இருந்த காலத்தில், தென் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் மிகுதியாக வெற்றி பெற்றார்கள் என்று தெரிகிறது. வட புலத்தில் இப்போது இந்தியோ அல்லது பிரதேச மொழியோ போதனை மொழியாக ஆக்கபபட்டு தீவிரமாக அமுலுக்கு வந்துகொண்டிருக்கின்றது. நாம் ஆங்கிலத்தை போதனை மொழியாக நீடித்து வைத்துக்கொண்டிருக்கிறோம். இந்த போதனை மொழி வேற்றுமைதான் அனைத்திந்திய போட்டித் தேர்வில் நம்மவர்கள் பின்தங்குபவர்களாக இருக்கக் காரணமாக இருக்கிறது. குறிப்பாக பின்தங்கிய வகுப்பினரே பிற வகுப்பினரை விடவும் பின் தங்குவதற்கு காரணம் அவர்களால் அந்நிய மொழி ஒன்றை மீடியமாக எடுத்துப்படிக்க முடியாமல் போனதுதான் என்பதையும் அரசு அறியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஆங்கிலத்திலேயும் தேர்வு எழுதலாம் என்று இருக்கின்ற காரணத்தால், இந்தக் காரணம் பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை.

**திரு. ம. பொ. சிவஞானம்:** தலைவரவர்களே, ஆங்கிலத்தில் தேர்வு எழுதுவது பற்றிச் சொல்லவில்லை. விஷய ஞானத்திலே ஆங்கிலத்தை மீடியமாகக் கொண்டு படிப்பதால் பின் தங்கிவிடுகின்றனர் என்பதுதானே தவிர, தேர்வு எழுதுவதற்குரிய மொழி எது என்பது அல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, விஷய ஞானத்தைப் பொறுத்த வரையில், ஆங்கிலத்தின் மூலமாக. தமிழுக்கு அடுத்து ஆங்கிலத்தின் மூலமாக, பெறுகின்ற விஷய ஞானத்தைவிட இந்தியின் மூலமாக நிச்சயமாகப் பெற முடியாது என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

**திரு. எம். ராஜா அய்யர்:** தலைவரவர்களே, அனைத்திந்தியப் போட்டிகளில் தமிழ் நாட்டிலிருந்து தேர்ச்சி பெறுபவர்கள் எண்ணிக்கை குறைந்துகொண்டு

வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். சென்ற 5 ஆண்டுகளாகத் தேர்ச்சி பெற்றவர்களில் எத்தனை சதவிகிதம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கூற முடியுமானால், உண்மையாகக் குறைந்திருக்கிறதா அல்லது எடுத்தவர்களுடைய எண்ணிக்கை குறைவா என்பதை அறிந்து கொள்ள இயலும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, எனக்கு வந்த விவரப்படி, 1968-ல் 9 சதவிகிதம். அதில் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 121 பேர்கள். அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 11 பேர்கள். 1969-ல் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 100 பேர்கள். அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 8 பேர்கள். 1970-ல் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 96. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 8 பேர்கள். 1971-ல் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 111 பேர்கள். அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 10 பேர்கள். 1972-ல் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 144 பேர்கள். அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 11 பேர்கள். ஆக சதவிகிதம் 1968-ல் 9, 1969-ல் 8 சதவிகிதம், 1970-ல் 8 சதம், 1971-ல் 9 சதவிகிதம், 1972-ல் 8 சதவிகிதம். இப்படித்தான் சதவிகிதங்கள் ஏறத்தாழ இருக்கின்றன. அதிக வித்தியாசம் ஏற்பட்டுவிடவில்லை.

*Damages due to floods in Tiruppur, Coimbatore district*

@ * 312 Q.—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN): Will the Hon. the Chief Minister be pleased to state the number of (i) loss of lives and (ii) the value of the damages to properties caused on account of the floods in Tiruppur, Coimbatore District during September 1972 ?

**கோவை மாவட்டம் திருப்பூரில் ஆற்று வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம்**

**திரு. வில்சன் அப்பலோஸ்** (திரு. எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

கோவை மாவட்டம் திருப்பூரில் ஆற்று வெள்ளத்தினால் 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏற்பட்ட (1) உயிர் சேதம், (2) பொருள் சேதம் எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 28—9—72 இரவு திருப்பூரில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக—

(அ) 18 பேர் உயிரிழந்தனர். 400 கால்நடைகள் இறக்கப்பட்டன.

(இ) விரயமான சொத்தின் மொத்த மதிப்பு ரூ. 1,61,165 ஆகும்.

---

@ 31—3—1973 ஆம் தேதி வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.



*Craftsmen Certificates*

* 331 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the holders of the Craftsmen certificates of the Government Industrial Technical Institutes are deemed ineligible for appointment as Mechanics in Pre-Technological Courses in high schools ; and

(b) if so, the reasons therefor ?

**கைவினைஞர் சான்றிதழ்கள்**

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசுத் தொழில், தொழில் நுட்ப நிறுவனங்களால் அளிக்கப்படும் கைவினைஞர் சான்றிதழ்கள் பெற்றிருப்பவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் புகுமுக தொழில் நுட்பப் பாடமுறைகளில் இயந்திரக் கம்மியர்களாக (Mechanics) நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவர்கள் என்று கருதப்படுகிறார்களா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) உயர்நிலைப் பள்ளிகளில் இயந்திர கம்மியர்கள் நியமனம் பெற நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் அரசினர் தொழில் நுட்ப பயிலகத்தில் அளிக்கப்படும் கைத்தொழில் சான்றிதழ் சேர்க்கப்படவில்லை. அத்தகுதியை சேர்க்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே என்னுடைய உரையில் கூறினமாதிரி, இந்தச் சிறிய பிரச்சினை வெகு காலமாக அரசின் பரிசீலனையில் இருக்கின்றது. அதில் அரசு சீக்கிரமாகவே முடிவு எடுத்து 'ஐ.டி.ஐ. சர்டிபிகேட், கிராப்ட்ஸ்மன் சர்டிபிகேட் ஹோல்டர்ஸ்' இதற்குத் தகுதியுள்ளவர்கள் என்ற முடிவை கூடிய சீக்கிரத்தில் கூறுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதோடு சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கின்றது. அப்படிச் சேர்ப்பதற்கான அளவுக்குத் தகுதி, திறமை மற்றவைகள் எல்லாம்பற்றி ஆராய வேண்டிய காரணத்தால், அது பரிசீலனையில் இருக்கின்றது. அதைப்பற்றி ஆராய்ந்து முடிவு காண முயற்சி எடுக்கலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இதற்கு முன்னால் பொதுத் தகுதி 'பர்ஸ்ட் பார்ம்' என்றும், 5 ஆண்டுகள் அவர்களுக்கு 'ஓர்க்ஷாப் எக்ஸ்பீரியன்ஸ்' இருந்தால் போதும் என்றும்தான் இருக்கின்றது. இப்போது எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் படித்துவிட்டு இரண்டு ஆண்டுகள் ஐ.டி.ஐ.-ல் படித்துவிட்டு அவர்கள் அங்கு கொடுக்கக்கூடிய கிராப்ட்ஸ்மன் சர்டிபிகேட் பெறுகிறார்கள். நாம் விதித்திருக்கும் விதி அந்த விதியைவிட எந்தவிதத்திலும் குறைவானதல்ல என்பதை அரசு மனதில் கொண்டு சீக்கிரம் முடிவு எடுத்தால், ஐ.டி.ஐ. படித்து வெளியேறும் பல மாணவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு இடமிருக்கும் என்பதை அரசு ஏற்றுக்கொள்ளுகின்றதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விரைவிலே முடிவு காண்பதற்கான முயற்சி எடுக்கப்படும்.

## *Engineering Instructors in High Schools*

* 332 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any special pay was paid to Engineering Instructors in High Schools up to 2nd October 1970;

(b) whether it is being continued thereafter ;

(c) if not, the reasons therefor ;

(d) whether it was taken into account while refixing their salaries after 2nd October 1970; and

(e) if not, the reasons therefor ?

### உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பொறியியல் ஆசிரியர்கள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பொறியியல் ஆசிரியர்களுக்கு 2—10—1970 வரையில் சிறப்புச் சம்பளம் ஏதேனும் வழங்கப்பட்டதா ?

(இ) அந்த சிறப்புச் சம்பளம் 2—10—1970-க்குப் பின்னரும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறதா ?



(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

(எ) 2—10—1970-க்கு பின்னர் அவர்களுடைய ஊதியங்களைத் மாற்றியமைத்தபோது, அது கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதா ?

(ஐ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். முதுநிலைப் பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 35-ம் இளநிலை பொறியியல் ஆசிரியர்களுக்கு ரூ. 25-ம் தனிச் சம்பளம் அளிக்கப்பட்டு வந்தது.

(இ) இல்லை.

(உ) திருத்தப்பட்ட சம்பள விகிதம், முந்திய சம்பள விகிதத்தையும் தனிச் சம்பளத்தையும் கணக்கில் கொண்டு திருத்தி அமைக்கப்பட்டதால் 2—10—1970 முதல் தனிச் சம்பளம் கொடுக்கக்கூடாது என உத்தரவு இடப்பட்டது.

(எ) இல்லை. இருப்பினும் தனிச்சம்பளத்தை சம்பள நிர்ணயம் செய்யும் போது கணக்கில் எடுத்துக்கொள்ளலாம் என்று அரசு 26—2—73-ல் உத்தரவிட்டுள்ளது.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Engineering Sections in Secondary Schools*

* 333 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether the Government have ordered the continuance in service of all unqualified Senior and Junior Mechanics serving in the Engineering Sections in Secondary Schools ;

(b) if so, the details thereof ; and

(c) the qualifications which the Government propose to prescribe for them ?

### உயர்நிலைப் பள்ளிகளின் பொறியியல் பிரிவுகள்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளின் பொறியியல் பிரிவுகளில் பணியாற்றும் தகுதி பெறாத முதுநிலை, இளநிலை கம்மியர் (Mechanics) அனைவரையும் தொடர்ந்து பணியில் வைத்துக்கொள்வதற்கான ஆணை எதையேனும் அரசு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அந்தக் கம்மியர் என்னென்ன தகுதிகள் பெற்றிருக்க வேண்டுமென்று அரசு வரையறுக்கக் கருதியுள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கும் முழுத்தகுதி பெறாத இளநிலை முதுநிலை மெக்கானிக்குகளில் மூன்று பள்ளி ஆண்டுகளுக்கும் அதற்கு மேலும் பணியாற்றியுள்ளவர்களை கோடை விடுமுறைகளில் பணியிலிருந்து நீக்காமல் பணியில் தொடர்ந்து இருந்து வர அனுமதிக்கும்படியும், மற்றவர்களை வழக்கம் போல் பள்ளி ஆண்டு முடிந்தபின் தற்காலிகமாக நீக்கிவிடலாம் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.

(உ) இது அரசின் பரிசிலனையில் உள்ளது.

### *Headmasters of Aided Secondary Schools*

* 334 *Q.*—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether G.O. Ms. No. 2033, dated 24th September 1960 and G.O. Ms. No. 1858, dated 20th November 1967, of the Education Department provide for a higher scale of pay for Headmasters of aided Secondary Schools under private management in which there are more than 25 sections ;

(*b*) if so, whether this higher scale of pay has been allowed to all the Headmasters of such schools in Kanyakumari district ; and

(*c*) if not, the reasons therefor ?

### மானியம் பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்

**திரு. எம். ராஜா அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையில் 24—9—1960 ஆம் நாளன்று பிறந்த 2033 ஆம் எண் அரசாணையும், 20—11—1967 ஆம் நாளன்று பிறந்த 1858 ஆம் எண் அரசாணையும் 25 வகுப்புப் பிரிவுகளுக்கும் அதிகமாகவுள்ள, மானியம் பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு உயர்சம்பள விதத்துக்கு வகை செய்கின்றனவா ?



(இ) ஆமெனில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இத்தகைய பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் அனைவருக்கும் இந்த உயர்வித சம்பளம் அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) மாற்றலாகியுள்ள பகுதிகளில், தனியார் உயர்நிலைப் பள்ளித் திட்டத்தின் கீழ் மானியம் பெறும் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு 1960-க்கு முன்பு கொடுக்கப்பட்ட சம்பள விதமும், அரசுப் பணியில் இதற்கு நிகரான பதவிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு வழங்கிய சம்பள விதமும் ஒரே மாதிரியாக இருந்தன. ஆகவே, மாற்றலாகியுள்ள பகுதிகளில் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 1—6—60-லிருந்து முடிவு செய்து திருத்தியமைக்கப்பட்ட சம்பளத்தை அதே பகுதியில் தனியார் துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்குவதென ஏற்றுக்கொண்டது. இத் திருத்தச் சம்பள விதம் மானியம் பெறும் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குப் பொருந்தும்படிச் செய்யவில்லை.

### *Urdu Language Teachers*

* 335 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Urdu Language Teachers serving in the High Schools in our State ; and

(*b*) the number of such Pandits who enjoy Grade I scale of salary ?

### உருது மொழி ஆசிரியர்கள்.

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நம் மாநிலத்தில் உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உருது மொழி ஆசிரியர்கள் எத்தனை பேர் ?

(இ) அத்தகைய பண்டிதர்களில் எத்தனை பேர் தாம் I-க்கான சம்பள விதம் பெறுகின்றனர் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 63.
(இ) 27.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, உருது முன்ஷி முதல் தரம் 27 பேர்கள் இருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் ஓய்வு பெற ஓய்வு பெற,
பி.ப. 4-10 அந்த முதலாவது தர உருது மொழி முன்ஷிகளை இரண்டாவது நிலைக்கு மாற்றி விடுகிறார்கள் என்று அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? எல்லோரும் முதல் நிலை உருது மொழி முன்ஷிகளாக இருப்பதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் முதல் நிலை உருது மொழி ஆசிரியர்களுடைய எண்ணிக்கை வரவரக் குறைந்து வருகிறது என்பதை அரசு அறியுமா?

MR. CHAIRMAN : Supplementaries should always be short, Thiru Rajah Iyer.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதல் நிலை உருது மொழி ஆசிரியர்கள் என்று கருதப்படுகிறவர்கள் எண்ணிக்கை குறைந்து அப்படி முதல் நிலையில் இருந்தவர்கள் சிலர் கீழே இறக்கப்பட்டதாக விண்ணப்பங்கள் வந்தன. ஏற்கனவே இருந்தவர்களாக இருந்தால், இறக்க வேண்டாம் என்று பரிசீலிக்கக் கூறப்பட்டிருக்கிறது. முதல் நிலை என்று கருதப்பட்டவர்கள் அந்த இரண்டாம் நிலையில் இருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் எப்படி முதல் நிலைக்கு உயர்த்தப்படுகிற நிலைக்கு வந்திருக்கிறதோ, அதே மாதிரி கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்து, 2,000 பேர்களும், அதற்குப் பிறகு 260 பேர் இரண்டாவது நிலையிலிருந்தாலும் முதல் நிலைத் தகுதி பெற்றிருக்கிற காரணத்தினால் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்கலாமென்ற முடிவிற்கிணங்க, இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

## *Keerampoor Town Panchayat*

* 336 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Keerampoor Town Panchayat was previously within the jurisdiction of Thuraiyoor Range, Tiruchirappalli district;

(*b*) if so, the reason for the taking out that Town Panchayat from Thuraiyur;



(*c*) whether the people of Keerampoor represented to include this town panchayat with Thuraiyoor Municipality;

(*d*) whether they requested in the representation to convert the Town Panchayat into a Panchayat if it is not possible to include with Thuraiyoor; and

(*e*) if so, the step taken thereon?

## கீரம்பூர் பேரூராட்சி

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி** (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம் துறையூர் சரகத்தைச் சேர்ந்த கீரம்பூர் பேரூராட்சி ஏற்கனவே துறையூருடன் சேர்ந்திருந்ததா?

(இ) ஆமெனில், துறையூரை விட்டுப் பிரிக்கப்பட்டதின் காரணம் என்ன?

(உ) கீரம்பூர் மக்கள் துறையூர் நகராட்சியில் சேர்வதற்கு விண்ணப்பித்தார்களா?

(எ) அவ்விண்ணப்பத்தில் துறையூருடன் சேர்க்க முடியாவிட்டால் பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றுவதற்குக் கேட்டுக்கொண்டார்களா?

(ஐ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) நிர்வாக நலனைக் கருதி, 1945-ம் ஆண்டில் துறையூரிலிருந்து பிரிக்கப்பட்டு தனி ஊராட்சியாக ஏற்படுத்தப்பட்டது.

(உ) கீரம்பூர் பேரூராட்சி, தனது 18—9—72-ம் நாளிட்ட 71-வது தீர்மானம் மூலம் துறையூர் நகராட்சியுடன் இணைவதற்கு சம்மதம் தெரிவித்து கருத்தினை அளித்திருக்கிறது.

(எ) அரசினருக்கு இதுபற்றி விண்ணப்பம் எதும் வரவில்லை.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Underground Railway Scheme*

* 337 Q.—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the estimated cost for the underground Railway Scheme to be implemented in the City of Madras ; and

(*b*) the years within which the Government propose to complete this Scheme ?

## பாதாள ரயில் திட்டம்

**திரு. வில்சன் அப்பலோஸ்** (திரு. எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் அமைக்கப்படவிருக்கும் பாதாள ரயில் திட்டத்துக்கான செலவு மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எத்தனை ஆண்டுகளில் இத்திட்டத்தை முடிக்க அரசு திட்டமிட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) இப்பொருள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

## *Temporary Staff of the Survey and Land Records Department*

* 338 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any representation has been received in November 1971 from Surveyors and Draftsmen serving in the Survey and Land Records Department regarding the anomalies in the matter of absorption of temporary staff in regular service ; and

(*b*) if so, the action taken thereon ?



## நில அளவை—நில ஆவணங்கள் துறையில் உள்ள தற்காலிகப் பணியாளர்கள்

**திரு. எம். ராஜா அய்யர் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்காலிகப் பணியாளர்களை முறையான பணியில் வைத்துக் கொள்வது தொடர்பான முரண்பாடுகள் குறித்து நில அளவை—நில ஆவணங்கள் துறையில் பணியாற்றும் நில அளவையாளர், வரைபட வரைவாளர் ஆகியோரிடமிருந்து 1971, நவம்பரில் முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எம். ராஜா அய்யர் :** தலைவர் அவர்களே, இந்த முறையீடு 1971 நவம்பரில் அரசுக்குக் கிடைக்கப் பெற்றதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். 1973 வரையிலும் இந்தப் பரிசீலனை முடிவடையாமல், அரசு ஆணை வெளியிடாத நிலை இருக்கிறது. இதை துரிதப்படுத்தி உடனடியாக அரசு ஆணை வெளியிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இந்த இலாகாவைச் சார்ந்த ஒருவர் உயர்நீதி மன்றத்திற்குச் சென்றார். ஒரு ரிட் மனு உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது. அதில் காலதாமதம் இருக்கிறது. வேறு சிலவற்றையெல்லாம் அரசு வருவாய் துறை வாரியத்தோடு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு முடிந்த பின் சீக்கிரம் ஒரு முடிவு செய்ய முடியும்.

## *Financial Assistance to the Flood Victims*

* 339 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state the details of the financial assistance given to flood victims in the State during December 1972 and January 1973 ?

## வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்படும் நிதியுதவி

**திரு. எஸ். வெள்ளபாண்டியன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம் மாநிலத்தில், 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களிலும், 1973 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு வழங்கப்பட்ட நிதி உதவியின் விவரங்கள் யாவை ?

[1973 ஏப்ரல் 3

THE HON. THIRU P. U. SHANMUGAM : A statement @ is placed on the table of the House.

## Betel Leaf Production

*310 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any incentives are given to betel leaf production in this State : and

(b) if so, the details thereof ?

## வெற்றிலை உற்பத்தி

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில் வெற்றிலை உற்பத்திக்காக ஊக்க உதவிகள் ஏதேனும் அளிக்கப்படுகின்றனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) தமிழ் நாட்டில் வெற்றிலை உற்பத்திக்கு விசேட சலுகை அளிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## Audit Reports of the Co-operative Central Banks

‡* 330 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state the names of the Co-operative Central Banks in the State which have not placed their Audit Report at the Annual General Body Meeting for the last three years ?

## கூட்டுறவு மத்திய வங்கிகளின் தணிக்கை அறிக்கைகள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

@ 271–272 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

‡ 2—4—1973 ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்டது.



1973 ஏப்ரல் 3]

இம் மாநிலத்தில், கடந்த மூன்று ஆண்டுகளாகத் தங்கள் தணிக்கை அறிக்கைகளை ஆண்டுப் பொதுக்குழுக் கூட்டத்தில் வைக்காத கூட்டுறவு மத்திய வங்கிகள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தமிழகத்தில் உள்ள 16 மத்திய கூட்டுறவு வங்கிகளும் 1968-69, 1969-70, 1970-71 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளை தங்கள் பொதுக் குழுக் கூட்டங்களில் வைத்துள்ளன.

அந்தப் பதினாறு வங்கிகளின் 1971-72-ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை கிடைத்த தகவல்களின்படி, 4 வங்கிகள் இதுவரை பொதுக் குழுக் கூட்டங்களைக் கூட்டி, அந்தக் கூட்டங்களில் 1971-72-க்கான தணிக்கை அறிக்கைகளையும் வைத்துள்ளன.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (1) ஆளுநரிடமிருந்து செய்தி.

### Message from the Governor

MR. CHAIRMAN : I have received a message from the Governor of Tamil Nadu recommending to the Legislative Council the consideration of the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1973.

### (2) பேரவையிலிருந்து செய்திகள்

MR. CHAIRMAN : I have also received a message from the Deputy Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973), as passed by the Assembly and signed by him, for the concurrence of the Council.

I have further received a message from the Deputy Speaker, Legislative Assembly, transmitting a copy of the Tamil Nadu Genral Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12

of 1973), as passed by the Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

### 3. கவன ஈர்ப்பு

#### (1) தேவாரப்பட்டி ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வது குறித்து.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

"பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆசிரியர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டளையிடப்பட்டும், இதுவரையில் அவர்கள் எடுத்துக் கொள்ளப்படாத காரணத்தால், 28—3—73 நாளிலிருந்து சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்வதாக அறிவித்திருந்தும், இப்போது அவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். மதுரை மாவட்டம் தேவாரப்பட்டி ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வது குறித்து".

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், தேவாரப்பட்டியிலுள்ள ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளியில் நிர்வாகத்தில் பலவிதமான முறைகேடுகள் இருந்ததனால், அப்பள்ளியின் ஏற்பையும் மானியத்தையும் ரத்து செய்து திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் 25—6—70 அன்று ஆணையிட்டார். அவ்வாணையினை எதிர்த்து பள்ளி நிர்வாகி சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் வழக்குத் தொடுத்தார். சென்னை உயர்நீதி மன்றம் மேற்கூறிய ஆணைகளுக்கு இடைக்காலத் தடையுத்தரவு அளித்தது. நீதிமன்றத்தின் ஆணைக்கு இணங்க பள்ளியை ஏற்புடையதாகவே கருதி, 1971 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வரை ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டது. பின்னர், உயர்நீதி மன்றம், 29—10—71 அன்று பள்ளி நிர்வாகியின் ரிட் மனுவைத் தள்ளுபடி செய்தது. ஆகவே, பள்ளியின் ஏற்பும், மானியமும் அந்நாளிலிருந்தே ரத்து செய்யப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது.



அப்பள்ளியில் வேலை செய்து வந்த 2 இடைநிலை ஆசிரியர்கள், 6 இளநிலை ஆசிரியர்கள் ஆகியவர்களில் 2 இடைநிலை ஆசிரியர்கள் கழக (அரசு) உயர்நிலைப் பள்ளியில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விட்டனர். அரசு முன்னதாகவே இப்பொருளைப் பரிசீலனை செய்து, ஈ. வி. வி. சாலா முதுநிலை ஆதாரப் பள்ளியில் வேலை பார்த்து, அப்பள்ளியின் ஏற்பும் மானியமும் ரத்து செய்யப்பட்டதால் வேலையிழந்த ஆசிரியர்களுக்கு அவ்வட்டாரத்திலுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் வேலை வாய்ப்பு அளிக்கத்தக்க நடவடிக்கை எடுக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

வேலையிழந்த ஆசிரியர்கள், அவர்களுடைய கோரிக்கையை வலியுறுத்தும் நோக்கத்தோடு மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலகத்தின் முன்பு உண்ணாவிரதம் ஆரம்பித்தார்கள் எனவும், உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும் முன்பே திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் அவ்வாசிரியர்களுக்கு ஆத்தூர் பஞ்சாயத்துக் கூட்டுமன்றப் பள்ளிகளில் வேலை கொடுப்பதற்காகத் தாம் எடுத்துவரும் நடவடிக்கைகளை விளக்கியுள்ளார் எனவும் அரசுக்குத் தகவல் வந்துள்ளது. உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்ட பின்பும், திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர் அவ்வாசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் தான் எடுத்து வரும் உடனடி நடவடிக்கைகளை விளக்கி உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு அவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். அவர்களும் அதற்குச் சம்மதித்துள்ளார்கள். மாவட்டக் கல்வி அலுவலர், திண்டுக்கல், இது குறித்து மேல் அறிக்கை அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, திண்டுக்கல் மாவட்டக் கல்வி அலுவலர், அவ்வட்டார ஊராட்சி ஒன்றியத்துக்கும், மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மீதமுள்ள 6 ஆசிரியர்களையும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் வேலைக்கு எடுத்துக்கொள்ளுமாறு கோரி எழுதியுள்ளார். கிராம வளர்ச்சித் துறை இயக்குநருக்கும் அரசு இது குறித்துத் தக்க ஆணையிட்டு குறிப்பிட்ட ஆசிரியர்களுக்கு வேலை கொடுக்க மேல்நடவடிக்கை எடுத்துள்ளது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, இன்னும் மூன்று மாதத்திற்குள் அந்த ஆசிரியர்களுக்கு வேலை கொடுப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்த அரசு உறுதி கூறுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, விரைவில் அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்டக் கல்வி அலுவலருக்கும் மாவட்ட ஆட்சியாளர் அவர்களுக்கும் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளருக்கும் எழுதியிருக்கிறார்கள்.

## தேவாரப்பட்டி ஈ.வி.வி. சாலா முதுநிலை ஆதாரப்பள்ளி ஆசிரியர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்வது குறித்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 ஏப்ரல் 3

அதைத் தவிர கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அதற்கான நடவடிக்கை எடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். எப்படியும் விரைவில் அவர்களுக்கு வேலை கொடுக்கும் முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

(2) வட ஆற்காடு மாவட்டத்தில் மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் பேரிழப்பைக் குறித்து.

பி.ப. 4-20 THIRU V. ISVARMURTI : Mr. Chairman, Sir, on behalf of Thiru L. Balaraman, I wish to call the attention of the Hon. the Minister for Electricity to a matter of urgent public importance, namely, the heavy loss to the agriculturists since the crops about to be harvested and the standing crops have been affected due to the stoppage of power completely for the last three or four days in many parts of North Arcot district due to short supply of power.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, 15—2—73 முதல் மின்சார வெட்டு 75 சதவிகிதமாக உயர்த்தப்பட்டதிலிருந்து விவசாயத்திற்காக தரப்படுகிற மின்சாரம் பகல் நேரத்தில் நான்கு மணி நேரத்திற்கும் இரவில் கையிருப்பைப் பொறுத்து இரவு 10 மணி முதல் மறு நாள் காலை 6 மணி வரை கொடுக்கப்பட வேண்டும் என்றும் உத்திரவிடப்பட்டது.

மார்ச் திங்கள் முதல் வாரத்தில் மாநில விவசாயப் பிரதிநிதிகள் மாண்புமிகு முதலமைச்சரை சந்தித்து சிலபல இடங்களில் 4 மணி நேரத்திற்குக்கூட மின்சாரம் தடையின்றி தரப்படுவதில்லை என்றும் அத்துடன் 4 மணி நேர சப்ளையை 6 மணி நேரத்திற்கு உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர். இக்கோரிக்கையை ஆராய்ந்தபின் வேலூர் மின் திட்டப் பகுதியில் விவசாய மின் இணைப்புகள் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு முதல் பிரிவுக்கு காலை 4 மணி முதல் 9 மணி வரையிலும் இரண்டாவது பிரிவுக்கு காலை 8½ மணி முதல் பகல் 1½ மணி வரையிலும், மூன்றாவது பிரிவுக்கு பிற்பகல் 1 மணி முதல் மாலை 6 மணி வரையிலுமாக ஒவ்வொரு பிரிவுகளும் 5 மணி நேரத்திற்கு பரீட்சார்த்தமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.

நெய்வேலி அனல் மின் நிலையத்தில் மார்ச் திங்கள் 23, 24-ஆம் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும் மார்ச் திங்கள் 25, 26, 27-ஆம் தேதிகளில் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் 110 மெகவாட் கொதிகலனிலுள்ள குழாய்களில் பழுது



1973 ஏப்ரல் 3] [திரு. ஓ. பி. இராமன்]

ஏற்பட்டு மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டதாலும் மார்ச் திங்கள் 23 ஆம் தேதியிலிருந்து 27-ஆம் தேதி வரை தமிழ் நாட்டில் மின்சார விநியோகத்தில் சில தட்டுப்பாடுகள் ஏற்பட்டன.

மேலும் ஆரணி துணை மின்நிலையத்தில் இந்தச் சமயத்தில் பழுது ஏற்பட்டதால் வடாற்காடு மாவட்டத்திலுள்ள சந்தவாசல், களம்பூர், திமிரி பகுதிகளில் மின்சாரம் கொடுப்பதில் தடங்கல் ஏற்பட்டது. இந்தப் பழுதுகள் நிவர்த்திக்கப்பட்டு தற்சமயம் முழு அளவில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(1) தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, "சட்டப் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1955-ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைக்காரர்களின் பாதுகாப்புச் சட்டத்தில் கூறியுள்ளபடி குத்தகை பாக்கி, நிலத்தை பயிரிடத் தவறியது போன்ற குறிப்பிட்ட காரணங்களுக்காக அன்றி மற்றபடி, பயிரிடும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதிலிருந்து பயிரிடும் குத்தகைக்காரர்களுக்கு இச்சட்டத்தின் மூலம் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. இதன் பின்னர், குத்தகை உரிமைப் பதிவேடுகளை தயாரிப்பதற்கும், பேணி வருவதற்குமாக, தமிழ் நாடு 1966-ஆம் ஆண்டு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவணங்கள் சட்டம் இயற்றப்பட்டது. மாநிலம் முழுவதும் இச்சட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. 1973, பிப்ரவரி 26-ஆம் நாளன்று வரவு-செலவுத் திட்ட உரையின் வாயிலாக முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு வேளாண்மை சீர்திருத்தத்தில் மற்றொரு நடவடிக்கையாக, பயிரிடும் குத்தகைக்காரர்கள் தாங்கள் குத்தகைக்கு பயிரிடும் நிலங்களை நில உடைமையாளர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளும் உரிமையை அவர்களுக்கு அளிக்க சட்டம் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது.

---

@ 273–288 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ப. உ. சண்முகம்] [1973 ஏப்ரல் 3

பயிரிடும் குத்தகைகாரர் ஒருவர் தாம் பயிரிடும் நில உடைமையில் அடங்கியுள்ள நிலம் சம்பந்தமாக நிலச்சொந்தக்காரருக்குள்ள உரிமை, பாத்தியதை பற்று, ஆகியவற்றை நில உடைமையாளர் என்ற வகையிலும் பயிரிடும் குத்தகைக்காரர் என்ற வகையிலும் தாம் வைத்திருக்கும் நிலத்தின் மொத்தப் பரப்பு 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேற்பட்டிருக்கக் கூடாது என்றும் நிபந்தனைக்குட்பட்டு, நில உரிமையாளர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளும் உரிமையை பயிரிடும் குத்தகைக்காரர்களுக்கு அளிக்க இச்சட்ட வரைவில் வகை செய்யப்பட்டுள்ளது. நில உடைமையாளர்களிடமிருந்து உரிமை, பாத்தியதை, பற்று ஆகியவற்றை வாங்கிக்கொள்வதற்காக பயிரிடும் குத்தகைதாரர் செலுத்தத்தக்க விலை விவரம் பின்வருமாறு :—

(அ) ஒப்பந்தம் மூலம் விலை நிச்சயிக்கப்பட முடிந்தால் அத்தகைய ஒப்பந்தத்தின் மூலம் செலுத்தப்படும் தொகை ;

(ஆ) அத்தகைய ஒப்பந்தம் எதுவும் ஏற்பட முடியாவிடில் வாங்கப்படும் நிலம் அல்லது அதன் பகுதிக்காக செலுத்தப்பட்ட நியாய வாரத்தினைப் போல் 12 மடங்காக ஏற்படும் மொத்தத் தொகையுடன் நிலவுடைமையாளருக்கு சொந்தமாக, அதிலுள்ள கட்டுக்கோப்புக்கள், கிணறுகள், விசையேற்றங்கள், ஆகியவற்றின் மதிப்பில் பாதித் தொகையும் சேர்த்து பயிரிடும் குத்தகைக்காரர் செலுத்த வேண்டும்.

பயிரிடும் குத்தகைக்காரர் நிலத்தின் விலை முழுவதையும் ஒரு மொத்தமாகச் செலுத்த இயலாதாகையால் வாங்கும் விலை ரூ. 500 ஆகவும் அதற்கு மேற்பட்டுமிருந்தால் வாங்கும் விலையை 12 சம ஆண்டுத் தவணைகளில் பயிரிடும் குத்தகைக்காரர்கள் செலுத்த இச்சட்ட வரைவில் வகை செய்யப்பட்டுள்ளது.

தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மிகவும் புரட்சிகரமாக ஒரு சட்டத்தை இயற்றிக்கொண்டிருக்கிறோம். சமுதாயத்தில் ஒரு பகுதி மக்களின் வாழ்வுக்காக இந்த மன்றத்தினுல் நிறைவேற்றப்பட இருக்கிற சட்டத்தின் விளைவுகளைப் பற்றி விவாதிக்க இருக்கிறோம். அப்படிப்பட்ட விவாதம் நடக்கிற நேரத்தில் மன்ற உறுப்பினர்கள் இங்கே தருகின்ற புதிய விளக்கங்களை கொஞ்சம் கவனித்து அவரவர்கள் தங்கள் விளக்கங்களை அளித்து அதன் மூலமாக மன்றத்திற்கு உதவியாக இருக்க வேண்டுமென்று நான் தங்கள் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1973 ஏப்ரல் 3] [திரு. ப. உ. சண்முகம்]

வாங்கும் விலை முழுவதையும் ஒரு மொத்தமாக ஒரே தடவையில் செலுத்துவதானுல் மொத்த விலையில் முக்கால் பங்கை மட்டுமே அவர் செலுத்தினுல் போதுமென்றும், பயிரிடும் குத்தகைக்காரருக்கு விருப்ப உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

சிறு நில உடைமையாளருக்கு இடர் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதற்காக, தமிழ் நாடு 1955-ஆம் ஆண்டு வேளாண்மை வருமானவரிச் சட்டம் அல்லது 1961-ஆம் ஆண்டு இந்திய வருமான வரிச் சட்டம் (மத்தியச் சட்டம் 43/1961) ஆகியவற்றின் கீழ் வரி செலுத்துவதற்கு உட்படாத நில உடைமையாளர் எவரும் தாம் குத்தகைக்கு விட்ட நிலப்பரப்பில் பாதி அளவுக்கு மேற்படாத நிலத்தை சொந்தமாகப் பயிரிட குத்தகைக்காரர்களிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இச்சட்ட வரைவில் வகை செய்யப்பட்டுள்ளது ; ஆனுல், அத்தகைய நில உடைமையாளர் சொந்தமாகவும் பயிரிடும் குத்தகைதாரர் என்ற வகையிலும் மொத்தம் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்துக்கு மேற்பட்டு வைத்திருக்கக் கூடாது. நில உடைமையாளர் நிலத்தைத் திரும்பப் பெறும் அவரது உரிமையை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தலாம்.

மேலும், சமயநிறுவனங்கள், அறநிலையங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகியவை பாதிக்கப்படாவண்ணம் பார்த்துக்கொள்ளும் பொருட்டு அந்நிறுவனங்களுக்குச் சொந்தமாயுள்ள 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு இச்சட்டம் பொருந்தாதெனவும், 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்திற்கு அதிகமாயுள்ள நிலத்திற்கு மட்டுமே இச்சட்டம் பொருந்தும் எனவும் வகை செய்யப்பட்டுள்ளது. மற்றும், விதவைகள், உடலூனமுற்றவர்கள், மனநோயாளிகள், உரிய வயது அடையாதவர்கள் ஆகியோர் இதனுல் பாதிக்கப்படாதிருப்பதற்காக, அத்தகையோருக்கும் சொந்தமான நிலங்களின் மொத்தப் பரப்பு 2 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேற்படாமலிருந்து, அவர்கள் அவ்வாறு விதிவிலக்குப் பெற விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்குச் சொந்தமான அந்த நிலங்களுக்கு விதிவிலக்களிப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

தலைவரவர்களே, இந்தச் சட்டம் மிகவும் முக்கியமான சட்டமாகும். இந்தச் சட்டத்தின் மூலமாக தமிழ் நாட்டில் இதுகாறும், நீண்ட நெடுநாட்களாக உழவர் பெருமக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த பெருமாற்றம் ஏற்படுவதற்கான முயற்சிகள் நடைபெறவிருக்கின்றன. அதற்கான வாய்ப்பு இந்தச் சட்டம் மூலம் வரவிருக்கிறது. நில உடைமையாளர்களிடமிருந்து உழுகின்ற குத்தகைதார்கள் உரிமைகளைப் பெறவும், பாதுகாப்புப் பெறவும் பல சட்டங்களைச் செய்து வந்தோம். குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், குத்தகைதாரர் வாரம் கொடுப்பதற்கான பாதுகாப்புச் சட்டம், கையேறு வாரம், மாட்டேறு

வாரம் என்று இப்படிப்பட்ட சட்டங்களைப் படிப்படியாக இயற்றி வந்தோம். சென்ற ஆண்டே தமிழ்நாடு அரசு, அதுவும் முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டு இந்தச் சட்டத்தைக் கொண்டுவருகின்ற நோக்கத்தோடுதான் முந்தைய ஆண்டே ஒரு முறையோடு, ஒரு வரையோடு நிறைவேற்றுவதற்குத் துணையாக குத்தகைப் பதிவேடு சட்டம் என்று ஒன்றைத் தயாரியுங்கள் என்று சொன்னார்கள். அதன்படி குத்தகைப் பதிவேடு சட்டம் தயாரித்து, தமிழ் நாடு முழுவதும் எவ்வளவு குத்தகைதாரர்கள் இருக்கிறார்கள் என்று நாம் அதிகார பூர்வமாகப் புள்ளி விவரங்கள் தயாரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் சேகரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் முழுவதுமாக முடிந்து விட்ட புள்ளி விவரங்கள் என்று சொல்லிவிட முடியாது. திருத்தங்களுக்குட்பட்ட புள்ளி விவரங்கள்தான். குத்தகைதாரர்கள் தாங்கள் நிலத்தை உழுகின்றோமா இல்லையா என்று அந்த குத்தகைப் பதிவேடு சட்ட அதிகாரியிடம் பதிவு செய்து கொள்ளலாமென்று சொன்னோம். ஒருவேளை நிலச் சொந்தக்காரர்கள் குத்தகைதாரர்களைப் பதிவு செய்யவொட்டாமல் மிரட்டித் தடுத்துவிட்டால் என்ன செய்வதென்று அதை இன்னும் எளிமையாக்கினோம். இந்தச் சட்டத்தை இன்னும் எளிமையாக்குவதற்கு அதிகாரிகள் போய் விசாரித்து அவர்களாகப் பதிவு செய்துகொள்ளலாம். பக்கத்து நிலத்தை உழுதுகொண்டிருக்கிறவன் சாட்சியம் சொன்னால், பதிவு செய்து கொள்ளலாம், அது கூட தேவையில்லை. அந்த அதிகாரி இவர்தான் குத்தகைதாரர், ஓட்டிக்கொண்டிருந்தார், உழுதுகொண்டிருந்தார் என்று தன் மனதில் பட்டால், அவரே பதிவு செய்து கொள்ளலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த இலாகா அந்தச் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு பூராவும் அதிகாரிகளைப் போட்டு புள்ளி விவரங்களைத் தயாரித்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகளும் சில புள்ளி விவரங்களைத் தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே சொன்னதுபோல் இப்பொழுது தயாரிக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்கள் மேற்கொண்டு சேர்க்கப்பட வேண்டியவர்கள் இருக்கலாம். குத்தகைதாரர்களைப் பதிவு செய்யவொட்டாமல் நிலச்சுவான்தார்கள் மிரட்டியோ, உருட்டியோ அல்லது பினாமிகளாக வேறு யார் பேரிலேயோ எழுதி வைத்திருக்கலாம், வேறு பல சூழ்நிலை காரணமாகவும் குத்தகைதாரர்கள் வந்து பதிவு செய்துகொள்ள முடியாத நிலைமையும் இருக்கும் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** தலைவரவர்களே, ஏன்றால் குத்தகைச் சீட்டு எழுதி வைத்துக்கொண்டு கொடுத்து வந்தார்கள். அவர்கள் குத்தகைதாரர்களாக இல்லையா?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, குத்தகைதாரர் எழுதிக் கொடுத்திருந்தாலும் கொடுக்காவிட்டாலும், அவர் நிலத்தை உழுது கொண்டிருந்தால் அவர்தான் குத்தகைதாரர்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, ஒரு குத்தகைதாரர் முன்பு எழுதிக் கொடுத்திருந்தார். இப்பொழுது அப்படியில்லை. அவர் குத்தகைதாரரா இல்லையா என்று திரு. அப்துல் வகாப் அவர்கள் கேட்கின்றார்கள். எழுதிக் கொடுத்து அந்த நிலைமையை ஒத்துக்கொண்ட பிறகு, சந்தேகம் எங்கேயிருக்கிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இந்தச் சட்டப்படி எழுதிக் கொடுத்திருக்க வேண்டிய அவசியமேயில்லை. நிலத்தை உழுதுகொண்டிருக்கின்றவர் யார் என்று தெரிந்து அதிகாரியிடம் வந்து சொன்னாலே போதும். இதைப்பற்றி குத்தகைதாரர் சட்டத்திலேயே சொல்லியிருக்கிறோம். இப்பொழுது கிடைத்துள்ள புள்ளி விவரங்கள்படி 3,88,483 பேர் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இதிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்ற நிலப் பரப்பு 5,90,164 ஏக்கர் ஆகும். இந்த 3,88,483 பேர் பூராவும் நாம் நிறைவேற்றுகின்ற சட்டத்தின் மூலம், அவர்கள் உழுதுகொண்டிருக்கின்ற நிலத்தை, பாதி நிலமல்ல, முழு நிலத்தையும் சட்டத்திற்குட்பட்டு வாங்குகின்ற பி.ப. 4-30
உரிமையைச் சட்டப்படி அளிக்கின்றோம். ஒரு குத்தகைதாரர் நிலத்தை வாங்க வேண்டுமென்று விரும்பினால், அங்கே இருக்கின்ற 'ஆதரைஸ்டு ஆபீசருக்கு' அதிகாரம் பெற்ற அதிகாரிக்கு மனுச்செய்து கொண்டால் போதும். அந்த அதிகாரி அதனுடைய விலையை நிர்ணயிப்பார். 'பேர் ரெண்ட்' எவ்வளவு என்று நிர்ணயித்து, நிலத்தில் எவ்வளவு வருமானம் வரும் என்று நிர்ணயித்து, 'பேர் ரெண்ட்' 40, 60 என்று நிர்ணயிக்கப்படுகிறது. அந்த 40 பங்குத் தொகையை 12 ஆல் பெருக்கி அந்த நிலத்தின் விலையை அந்த அதிகாரி நிர்ணயிக்கிறார். விலையை நிர்ணயித்ததற்குப் பிறகு, குத்தகைதாரர் முதல் தவணை செலுத்திய பிறகு, மறுதவணை செலுத்தத் தவறினால், சட்டப்படி மீண்டும் அவர் கேட்பதற்கு லாயக்கு அற்றவர் ஆகிவிடுகிறார். முதல் தவணை செலுத்திய உடனே நிலம் அவருக்குச் சொந்தமாக்கப்படுகிறது. முதல் தவணை கொடுத்து விட்டு அடுத்த தவணை ஒரு வேளை கொடுக்கத் தவறினால், என்ன செய்வது? நிலத்தின் சொந்தக்காரரின் பணத்திற்கு அரசாங்கம் பாதுகாப்புச் செய்ய வேண்டும். ஒரு சமுதாயச் சீர்திருத்தச் சட்டம் வருகின்ற சமயத்தில் சில பேருக்கு இழப்பீடு செய்யலாமே தவிர, ஒரு பெரிய பாதகத்தையே செய்து விடக்கூடாது என்பதற்காக மிகப் பொறுப்போடு இந்த அரசு அவர்களுக்கு

ஒரு பாதுகாப்பு வைத்திருக்கிறது. ஒருவேளை அவர்கள் அப்படிக் கொடுக்கத் தவறி விடுவார்களேயானால், நிலச் சொந்தக்காரர், 'ஆதரைஸ்டு ஆபீசர்' இடமிருந்து ஒரு அதிகாரத்தை வாங்க வேண்டும். அவர் ஒரு 'சர்டிபிகேட்' கொடுப்பார். அடுத்த தவணை கொடுக்கவில்லை என்று கொடுக்கிற அந்த சர்ட்டிபிகேட், நீதி மன்றத்தில் கொடுக்கப்பட்ட டிக்கிரிக்குச் சமானம். அதை வைத்துக்கொண்டு 'எக்ஸிகியூட்' செய்யலாம். அதை வைத்துக்கொண்டு நேராக சொத்தை ஜப்தி செய்யலாம். வேறு வழியிலும் பணத்தை வசூல் செய்யலாம். இன்னும் சொல்லப்போனால், அதை வைத்துக்கொண்டு எந்த நிலத்தைக் கொடுத்தாரோ அதே நிலத்தை ஜப்தி செய்து எடுத்துக்கொள்ளலாம். அதன் மூலம் நிலம் குத்தகைதாரருக்கு இல்லாமல் செய்து விட்டு, நிலச் சொந்தக்காரரே எடுத்துக்கொள்கின்ற, சொந்தமாகிற சூழ்நிலை கூட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இது வரையில் தமிழ் நாட்டுச் சட்டத்தில் நிலச் சொந்தக்காரர் குத்தகைக்கு விட்ட நிலத்தை அந்தக் குத்தகைதாரர் பாக்கி கொடுக்கத் தவறிவிட்டால் அன்றி, அல்லது நிலத்தை ஓட்ட மறுத்தால் அன்றி, அந்தக் குத்தகைதாரரிடமிருந்து அந்த நிலத்தைத் திரும்பப் பெறமுடியாது, எடுக்க முடியாது. நண்பர் திரு. சுவாமிநாதன் போன்றவர்கள்கூடச் சொல்லி வந்திருக்கிறார்கள். குத்தகைக்கு நிலத்தைக் கொடுத்திருக்கிறோம், ஆனால் எங்களுக்குப் பணமே வருவதில்லை, எப்படியாவது பணம் கிடைத்தால் நிலத்தை விற்றுவிடலாம் என்று வருத்தப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தின் மூலம் குத்தகைதாரருக்கு இந்த உரிமையைக் கொடுக்கிறோம், இந்த உரிமையைக் கொடுப்பதானது ஒரு பெரிய சமுதாய மாற்றம் ஆகும். தமிழ் நாட்டில்—இந்திய துணைக் கண்டத்தில் செய்யப்பட்டிருக்கின்ற பல்வேறு நிலச் சீர்திருத்தச் சட்டங்களில், தமிழ் நாட்டில் செய்யப்பட்டிருக்கின்ற சட்டம், கொஞ்சம் முறையோடு செய்யப்பட்டிருக்கின்ற சட்டம். இதற்காக கூடிய மத்திய நிர்வாகச் சீர்திருத்தக் குழுவில் கூட விவாதிக்கப்பட்டது. அதிலே தமிழ் நாட்டுச் சட்டத்தைப் பாராட்டியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்று அமைதியோடு நடைபெறுகின்ற மாற்றங்கள் இன்றைய தினம் சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற நேரத்தில் இதிலே அக்கறை கொண்டிருக்கின்ற சிலபேர் மட்டும் இதிலே கலந்துகொண்டு உரையாற்றக் கூடும். ஆனால் நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது. தமிழ்நாட்டில் 4 லட்சம் குடும்பங்களுக்கு நிலம் அவர்களுக்குச் சொந்தமாகிற உரிமையை அவர்களுக்கு அளிக்கின்றோம் என்று நினைக்கும்போது, நாம் அந்த மகத்தான மாற்றத்தை



இங்கே நிறைவேற்றுகின்ற சட்டத்தைக் கொண்டுவருகின்றோம். அவ்வளவு பெரிய புரட்சிகரமான சட்டத்தை நாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். இதேபோல, நாம் இம்மன்றத்தில் குடியிருப்புச் சட்டத்தை நிறைவேற்றினோம். அந்தக் குடியிருப்புச் சட்டத்தின் மூலம் தமிழ் நாட்டில் உரிமை பெறவிருக்கின்ற—பெற்று இருக்கின்றவர்கள், தஞ்சை மாவட்டத்தில் லட்சத்தி ஐம்பத்தேழாயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. இன்னும் தமிழ்நாடு முழுவதும் இது போல் 1½ லட்சம் குடும்பங்கள் வரக்கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாகக் கூட கிடைப்பதற்கான சட்டங்களை நாம் இயற்றிக்கொண்டிருக்கிறோம். இப்படிப் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்துகின்ற புதுப் புதுச் சட்டங்களை நாம் செய்திருக்கிறோம். ஆனால் இன்றைய சட்டம் ஏழை விவசாயிகளுக்குப் பாதுகாப்பாகவும் அதே நேரத்தில் நிலச் சொந்தக்காரருக்கு பெரிய ஆபத்து வந்து விடாதபடி பாதுகாப்பாகவும் கொண்டுவந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தில் ஒரு முக்கியமான திருத்தத்தை இன்று காலை முதலமைச்சர் அவர்கள் சட்ட சபையில் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலத்தை ஒரு நிலச்சுவான்தார் தனக்குச் சொந்தமாக வைத்துக்கொள்ளலாம். 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் 'பப்ளிக் டிரஸ்டு ஆக்டின்' கீழ் தானே சொந்தப் பயிர் வைக்கலாம் என்று இருக்கின்றது. அது வேறு விஷயம். இது 'டெனன்ட்' சட்டத்தைப் பொறுத்து மட்டும்தான். அவர்கள் நிலம் குத்தகைக்கு விட்டிருந்தால், சொந்தச் சாகுபடிக்கு 20 ஸ்டாண்டர்டு ஏக்கரை பப்ளிக் டிரஸ்ட் ஆக்டின்படி வைத்துக்கொள்ளலாம். டெனன்ட் ஆக்டின் கீழ் குத்தகைக்குவிட்டதுபோக, 10 ஸ்டான்டர்டு ஏக்கர் நிலம் அவர்கள் வைத்துக்கொள்ளலாம். வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லும்போது குத்தகைதாரரை வெளியேற்றக் கூடாது. இருக்கின்ற நிலைமை தொடர்ந்து நீடிக்கும் என்று சட்டத்தில் சொல்லியிருக்கிறோம். அதே போல் விதவைகள், மைனர்கள், பயிரிடுகின்ற நிலையில் இல்லாமல் உடல் ஊனம் உள்ளவர்கள், இவர்களுக்கு எல்லாம் 2 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை விதி விலக்கு விடப்பட்டிருக்கிறது. அதிலும் நாம் சொல்லியிருக்கிறோம். ராணுவத்தில் பணியாற்றுகிறவர்கள்—அவர்களுக்கு எல்லாம் கூட இந்தச் சட்டத்தால் பாதிப்பு ஏற்படாதிருக்கும்படி நாம் வகை செய்திருக்கிறோம். எனவே, ஒரு சமுதாய மாற்றத்தைச் செய்யவிருக்கின்ற இந்த மகத்தான சட்டத்தை இந்த மாமன்றம் விவாதித்து, தமிழகத்துக்கு பெருமை தேடித் தருகின்ற சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்கள் மூலம் இந்த மன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): முன்மொழியப்பட்ட தீர்மானம்:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

THIRU G. SWAMINATHAN :Mr. Chairman, Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Land Owners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973), as passed by the Assembly, be referred to a Select Committee consisting of 15 Members of the Legislative Council :—

(Names of Members will be announced later)"

THIRU A. R. DAMODARAN : Sir, I second it.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, அவர் 'மூவ்' பண்ணிவிட்டார், போதும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, இந்தச் சட்டம் மிகுந்த புரட்சிகரமான சட்டம் என்பதாகவும், பல லட்சக்கணக்கானவர்கள் பாதிக்கப்படுகின்ற அல்லது பயன் அடைகின்ற ஒரு சட்டம் என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 'புரட்சிகரமான' என்ற வார்த்தை சட்டமன்றங்களில் அடிக்கடி ஒலித்துக்கொண்டிருக்கிறதே தவிர, அதனாலே நாட்டு மக்களுடைய வாழ்வில் எந்த விதமான புரட்சியும் ஏற்படவில்லை, அப்படி நான் கருதுவதற்கில்லை. அது மாநில அரசு....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கத்தியின்றி, இரத்தமின்றி நடக்கின்ற புரட்சி அப்படித்தான் இருக்கும் ..

திரு. ஜி. சுவாமிநாதன் : மாநில அளவில் இருக்கின்ற சட்டங்களானாலும், மத்திய அரசளவில் இருக்கின்ற சட்டங்களானாலும், பல சட்டங்கள் புரட்சிகரமாக இருக்கின்றன. நாட்டு மக்களுடைய நல்வாழ்க்கையை நல்ல முறையில் அபிவிருத்தி பண்ணுவதற்காக சட்டங்கள் கொண்டுவரப்படுகின்றன என்று





கடந்த பல ஆண்டுகளாக, அதிலும் குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளாக நாட்டு மக்களிடையே இந்தப் 'புரட்சிகரமான' என்ற வார்த்தை கூறப்பட்டு வருகிறது என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் நான் இந்த சமயத்தில் தெரிவிக்கக் கூடிய கருத்து என்னவென்றால், புரட்சிகரமான சட்டம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவதை அப்படியே வாதத்திற்காக ஒப்புக்கொண்டு, அந்தப் புரட்சிகரமான சட்டத்தால் பல லட்சக்கணக்கான பேர்கள் பயனும், பாதிப்பும் அடைகிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டோமானால், இவ்வளவு புரட்சிகரமான சட்டத்தை, தமிழ் நாடே கண்டிராத ஒரு சட்டத்தை, ஒரு கூட்டு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பி அங்கு கலந்து ஆலோசித்து இந்த அரசு செய்யாமல் எங்களிடத்திலே மிக விரைவாகக் கொண்டு வந்திருக்கிறது. மிக விரைவாகக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்று சொன்னால், எங்களுக்குக் கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிட்டு, இந்தச் சட்டத்தை ஒரு கூட்டு ஆய்வுக் குழுவுக்கு விடவேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தபடியாக, அதைக் கூட்டு ஆய்வுக் குழுவுக்கு விடவேண்டும் என்று நினைத்தால்—அதைப்பற்றி அதிகமாகப் பேச வேண்டியதில்லை என்று வருகிறபோது—அதற்கு மாறாக, இந்தச் சட்டமன்றத்தில் உடனடியாக எடுத்து, இன்றைய காலையில் மிக விரைவில், சுறுசுறுப்போடு நிறைவேற்றப்படக்கூடிய நிலையைப் பார்த்தோம். அதேபோலத்தான் நம்முடைய மேலவைக்குக் கொடுக்கப்பட்ட நேரத்திலும், அதே போல் கூட்டு ஆய்வுக் குழுவுக்குக் கொடுக்கப்படாமல் இன்றைய தினம் நிறைவேற்றப்படும் என்று நிலைமையைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல, இன்றைய காலையில் நம்முடைய அரசின் சார்பாக சில பல திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்தத் திருத்தங்களை கூட்டு ஆய்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "சில கட்சியினர் உடனடியாக இதை நிறைவேற்று என்று சொல்லுகிறார்கள். சிலர் இதை கூட்டு ஆய்வுக் குழுவுக்கு அனுப்பவேண்டும் என்று சொல்லுகிறார்கள், அது மாதிரி ஒரு கருத்து தெரிவிக்கிறார்கள்", என்று சொன்னார்கள். அரசாங்கம் ஒரு கருத்தை எடுத்த பிறகு, நேற்றைய தினம் நான் பத்திரிகையில் படித்தேன், அதனுடைய விவாத்தை வைத்துச் சொல்லுகிறேன். அரசின் சார்பாக அந்த மாதிரி எண்ணம் ஏற்பட்ட பிறகு தான், அதை ஆய்வுக் குழுவிற்கு விடவேண்டுமென்று அபிப்பிராயம் உருவாகியிருக்க வேண்டும். எங்களுக்கு கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் அதன்படிதான் இருக்கவேண்டும். அரசின் மனம் எவ்வளவு விரைவாக மாறுகிறது என்பதற்கு.....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் நேற்று பேரவையில் சொன்னதை நண்பர் திரு. சுவாமிநாதன் அப்படியே மாற்றிச் சொல்லுகிறார்கள். ஒரு வேளை எந்தப் பத்திரிகையில் அப்படி மாறி வந்திருக்கிறதோ எனக்குத் தெரியவில்லை. எந்தப் பத்திரிகையை அவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்களோ அதுவும் எனக்குத் தெரியவில்லை. நேற்று நான் மிகத் தெளிவாகப் பேரவையில் குறிப்பிட்டிருக்கிறேன். திரு. மணலி கந்தசாமி அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, நான் குறுக்கிட்டுச் சொன்னேன். இதை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; இல்லை, இதைக் கொஞ்சம் ஆறப்போட்டு, ஆய்வுக் குழுவுக்கு விட்டு யோசித்து நிறைவேற்ற வேண்டுமென்று மற்றும் சில நண்பர்கள் இங்கே வாதிட்டிருக்கிறார்கள். ஆகவே இரண்டுக்கும் பொதுவான ஒரு சமாதானமான முடிவை நான் சொல்லுகிறேன். இதை ஆய்வுக் குழுவிற்கு அனுப்பி நீண்ட நாள் ஆக்குவதைவிட இன்று மாலையிலேயே, எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசி, அங்கே சொல்லப்படுகின்ற யோசனைகளைக் கொண்டு, வருவாய்த் துறை அமைச்சர்களையும், என்னையும் மற்ற அமைச்சர்களையும் கலந்துகொண்டு, நாளைக் காலையிலே சில திருத்தங்கள் கொண்டுவருவதற்கான வழி வகை ஏற்படும் என்ற வகையிலே கேட்டுக்கொண்டேன். அதற்கு ஏற்ப நேற்று மாலையிலே எல்லாக் கட்சித் தலைவர்களையும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கலந்து பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் என்னைக் கலந்து பேசி சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அது தான் உண்மை. நான் ஏதோ எடுத்த முடிவை மாற்றிக்கொண்டேன் என்று கூறுவது சரியல்ல...

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, முதலமைச்சர் தற்போது சொன்ன கருத்தைத்தான் நான் பத்திரிகையில் பார்த்தேன். நான் அரசு எடுத்த முடிவு
4-40 பி.ப. களை மாற்றிக்கொண்டது என்று சொல்வதற்குக் காரணம் அரசினுடைய ஒப்புதலோடு போடப்பட்ட நிகழ்ச்சி நிரலிலே என்ன போட்டிருந்தார்கள்? ஆய்வுக் குழுவிற்கு விடப்பட வேண்டுமென்ற கருத்து அதிலே எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அப்படித் தெரிவிக்கப்பட்டதன் அர்த்தம் என்று நாங்கள் கருதுவது அரசாங்கத்தினுடைய சார்பிலே இது ஆய்வுக் குழுவிற்கு விடவேண்டுமென்ற அபிப்பிராயமாக இருந்திருக்கிறது என்பது. அந்த அபிப்பிராயத்தை நான் சொன்னேன். அது இல்லையென்று மறுக்க முடியாது என்று கருதுகிறேன்.

MR. CHAIRMAN : Is it the opinion of the Government or of the hon. member ?



**திரு. ஜி. சுவாமிநாதன்:** I feel it is the opinion of the Government. அது தான் அரசினுடைய மனம். அதாவது கிட்டத்தட்ட 2 நாட்களுக்கு முன்னால் சட்ட சபையில் அது கொண்டுவரப்படுகிறபோது, அரசினுடைய மனம். அதற்குப் பிறகு அரசினுடைய மனம் மாறி, அதைக் கூட்டு ஆய்வுக் குழுவிற்கு விடவேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினைகள் பேரவையில் பேசப்படுகிறபோது, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கட்சித் தலைவர்களைக் கலந்து பேசிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். நம்முடைய முதலமைச்சரவர்கள் என்ன சொல்லி.....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அதிலிருந்து இந்த அரசு எதிலும் பிடிவாதமாக இருப்பதில்லை என்ற உண்மை புலனாகும் என்று கருதுகிறேன். இன்னொன்றையும் ஞாபகப்படுத்துகிறேன். இது போலத் தான் விவசாய வருமான வரிச் சட்டம் கொண்டு வரப்பட்டுப் பேரவையில் கடைசியாக நிறைவேறுகிற கட்டம். அந்தக் கட்டத்தில் நான் எழுந்து இது ஆய்வுக் குழுவிற்கு விடப்படும் என்ற முடிவைத் தெரிவித்தேன். அப்போது எல்லாமே நிறைவேறி அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது என்று சொல்லப்படுகிற நேரத்தில் இது ஆய்வுக் குழுவிற்கு விடப்படும் என்ற கருத்தைச் சொன்னேன். இப்போதும் நேற்றைய தினம் இது செலெக்ட் கமிட்டிக்கு விடப்படுமென்ற நிலைமையிருந்தாலும் கூட பலருடைய அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்கிற நிலைமையில் ஒரு முற்போக்குச் சட்டம் விரைவில் நிறைவேறுவது உசிதம் என்கின்ற வகையில் ஆய்வுக் குழுவிற்கு விடப்படும் என்பதை மாற்றிக்கொண்டோம். ஆகவே, ஆய்வுக் குழுவிற்கு விடப்படுவது என்கிற நிலையிலிருந்து நேற்றைய தினம் அப்படி மாற்றிக்கொண்டோம்? அது போல விவசாயி வரிச் சட்டம் நிறைவேறியிருந்தபோது ஆய்வுக் குழுவிற்கு விடப்படும் என்று மாற்றச் செய்தோம். மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்தை இந்த அரசு மதிக்கிறது. இந்த இரண்டு கருத்துக்களும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, அரசு இந்தக் கருத்தைச் சொன்னாலும், எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டதை நான் கூற விரும்புகிறேன். பேரவையிலே இந்த மசோதா நிறைவேற்றப்பட்டாலும் கூட, பேரவையின் ஆய்வுக் குழுவிற்கு விடப்படும் என்றார்கள். நாங்களும் இதை அரசு எண்ணிக்கொண்டிருக்கிறது என்று நினைத்திருந்தோம். அப்படியே அங்கே நிறைவேற்றப்பட்டாலும், மறுநாள் இந்த அரசு இந்த அபிப்பிராயத்தின் அடிப்படையில் ஆய்வுக் குழுவிற்கு விடும் என்று எண்ணிக்கொண்டிருந்தோம். அரசினுடைய

அபிப்பிராயம் கடைசி வரையில் இப்படியே இருக்கும். மூன்றுவது மீடிங் வரை இந்த ஒரு வாய்ப்பை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அமைச்சரவை அளிக்கும் என்கிற ஒரு கருத்தைக் கொண்டிருந்தது என்று நான் சொல்கிறேன். அதிலேயிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னுல், அரசு இந்தப் பேரவையில் நிலச் சீர்திருத்தத்திலே லட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கக் கூடிய விஷயத்தைப்பற்றி நிலையான, உறுதியான ஒரு கருத்தைக் கடைசி நிமிஷம் வரையில் கொண்டிருக்கவில்லை என்ற கருத்தைத் தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, ஒரு சின்னத் திருத்தத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். லட்சக்கணக்கான மக்களைப் பாதிக்கக் கூடியதல்ல. லட்சக்கணக்கான மக்களுக்கு நன்மை செய்யக் கூடியது. இதை மட்டும் திருத்திக்கொண்டால், சரியாகப் போயிருக்கும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் இரண்டு வார்த்தையையும் சேர்த்துச் சொன்னேன். லட்சக்கணக்கானவர்களுக்குப் பயன் அளிக்கக் கூடியது என்று சொன்னுலும், லட்சக்கணக்கானவர்களைப் பாதிக்கக் கூடியது என்று சொன்னுலும், இரண்டு கருத்துக்களையும் நான் சொல்வதற்குக் காரணம் நிலச்சுவான்தார்களைப் பாதிப்பதாகும். குத்தகைதாரர்களுக்கு அதனுலே விளைவுகள், நல்ல விளைவுகள் ஏற்பட முடியுமென்ற கருத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்கிருர்கள். என்னுடைய பேச்சிலே இது நிலச்சுவான்தார்களையும், குத்தகைதாரர்களையும் இரு சாரார்களையும் பாதிக்கக் கூடியதான ஒரு சட்டம் என்ற கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட ஒரு நிலை உருவாகி வருகிற காரணத்தினுலே, இதனுலே விளைகிற பலன்களை விட பாதிப்புகள் அதிகம் என்று எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்று மாலை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தலைவர்களையெல்லாம் சந்தித்து இதைப் பற்றிப் பேசலாம் என்று சொன்னுர்கள். எங்கள் கட்சி உறுப்பினர்களிலே நானும் ஒருவன். கிட்டத்தட்ட 4 மணி அளவிலே அந்தக் கூட்டத்தை அங்கே அமைத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்திற்கு நானும் மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், இந்த அவையிலே இருக்கின்ற தலைவர்களும் அழைக்கப்பட்டோம். அப்படி அழைக்கப்பட்டது, இது மாதிரி ஒரு சிறந்த கருத்தைப் பேசுவதற்காக. அழைக்கப்பட்ட நேரம், மாண்புமிகு தலைவரவர்களே, நம்முடைய மேலவை கூடுகிற நேரம். 4 மணிக்குச் சரியாக அந்தக் கூட்டத்தை அங்கே கூட்டினுர்கள். அதுவும் அந்தக் கூட்டத்தைக் கூட்டின பிறகு, நான் சென்று தெரிவித்தேன். மேலவையை அமைச்சரவை மறந்து விடுகிறது என்பதற்காக நான் இதைச் சொல்கிறேன். ஏனென்றால் . . .



MR. CHAIRMAN : The honourable Member should have informed me and then I would have asked the concerned Minister about it.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி :** தலைவரவர்களே, நேற்று விருந்திலே அவர்களைச் சந்தித்தபோது 4-30 மணிக்கு வைத்துக்கொள்ளுங்கள், நாங்களும் வந்து விடுகிறேம் என்று சொன்னுர்கள். அவர்களுக்கு ஏற்றுற்போல 4-30 மணிக்கு வைத்துக்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** நேற்றைக்கு கேள்வி நேரம் முடிந்த பிறகு வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னீர்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அப்படிச் சொல்ல வேண்டிய நிலைமையிலே நான் இருந்தேன் என்பதைத் தான் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** நேற்று நடந்த சமாசாரத்தையெல்லாம் இங்கே சொல்கிறீர்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, அதைத் தங்களிடத்திலே சொல்லக் கூடிய வாய்ப்பு இப்போது தான் கிடைத்தது என்பதற்காக இதை நான் சொல்கிறேன். அப்போது எங்களுக்குச் சொல்லியதற்குப் பிறகு நமது மேலவை கூடுகிறது என்பதையும், மேலவைத் தலைவரவர்களை, அதிலே கலந்து கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை அவர்களுக்கு அளிக்கப்பட்டது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதை வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறேம் . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இவர்களுக்குச் சொல்லியதற்குப் பிறகு மேலவைத் தலைவரவர்களுக்கு இந்தக் கருத்து தெரிவிக்கப்பட வேண்டும் என்பதல்ல. நேற்று மந்திரியானம் நானும், கல்வியமைச்சரும், முதலமைச்சரும் போய்க்கொண்டிருக்கும்போது, காரிலே போகும்போது, முதலமைச்சரவர்கள் தெரிவித்தார்கள் : முன்கூட்டியே 'போன்' செய்து எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் நாயுடு அவர்களுக்குச் சொல்லுங்கள் என்று. அவர் சொன்ன வார்த்தையைச் சொல்கிறேன் : நீ சொல்கிறுயா அல்லது நான் சொல்லட்டுமா என்று கூடக் கேட்டார்கள். இல்லை, நானே சொல்லி விடுகிறேன் என்று சொன்னேன். எனவே அவையின் செயலாளர் சொன்னதற்குப் பிறகு இது தெரிந்ததாகக் கருத வேண்டாம். ஏற்கெனவே செய்யப்பட்ட முடிவு அப்படியே தான் இருக்கிறது . . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, நாங்கள் விருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அதுவும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வகாப் அளித்த சிறந்த விருந்தை நாங்கள் சாப்பிட ஆரம்பிக்கிற நேரத்திலே தான் எங்களுக்கே அது தெரிவிக்கப்பட்டது. தெரிவிக்கிறபோது நம்முடைய சபையினுடைய செயலாளர், பேரவையினுடைய செயலாளர் அவர்கள் 4 மணிக்குக் கூட்டம் கூடுகிறது என்று தெரிவித்தார்கள். ஒருவேளை அந்த விருந்திற்குச் செல்வதற்கு முன்னாலே 4 மணிக்கு என்று அமைச்சர் தெரிவித்து, அவர் ஒரு சமயம் மறந்து விட்டாரோ அந்தச் சந்தடியிலே என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் அப்படி எல்லோரும் இருக்கும்போது 4 மணி என்று சொல்லியிருக்கலாம். அது முக்கியமான விஷயம் என்பதால் சொல்கிறேன்.

(மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் தலைமை)

நேற்று மாலையிலே அமைச்சருடைய அறையில் நாங்கள் இதைப்பற்றி விவாதித்தோம். இப்படிப் பல தலைவர்கள் விவாதித்தோம். அங்கே விவாதித்தீர்களே, விவாதத்தின் முடிவு என்ன ஆயிற்று என்று பார்த்தீர்களானால், ஆங்கிலத்திலே சொல்வார்களே " There was much heat and less of light "

என்று, அது போல அமைச்சரவர்கள் நேற்றையதினம் பேசுகிறபோது சொன்னார்கள். இது மாதிரியான கருத்தை நீங்கள் சொல்லலாமா என்று கூடக் கேட்கலாம். கிட்டத்தட்ட 2½ மணி நேரம் அந்தக் கூட்டம் நடந்ததில் எல்லோரும் இரு பக்கமும் ஆவேசமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும், ரொம்ப விறுவிறுப்பாகவும் பேசுகிற காரணத்தினாலே அங்கே அதிக வெப்பம் இருந்ததே தவிர, ஒளி காணப்படவில்லை என்ற கருத்தை நம்முடைய அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதை நான் குறிப்பிடுவதற்கு என்ன காரணம் என்று சொன்னால், இரண்டு மணி நேரத்திற்குள் இது மாதிரி முக்கியமான கருத்தையெல்லாம் சொல்லியும் ஒளி தெரியவில்லை, ஒளி தெரியாத நிலைமையில் கூட இருந்ததாகச் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நேற்று அங்கு வந்து பங்கேற்ற தலைவர்களுக்கெல்லாம் ஏதோ தவறான எண்ணம் வரும்படி, திரு. சுவாமிநாதன் பேசுவது சரியல்ல. ஒளி கொடுத்தார்கள் எல்லோரும். நான் வேடிக்கையாக எல்லோரும் ஏ.ஸி. ரூமில் இருக்கிறோம். ஆனால் குளிர் கூட இல்லையே என்று சொன்னேன். பேச்சு வார்த்தையிலே சூடுவருகிறது என்று அவர்கள் தான் சொன்னார்கள். இது ஏதோ சொன்னவர்களிடத்திலே ஒளியில்லை என்று



நான் நினைக்கவும் இல்லை. எல்லோரும் தங்களுடைய அறிவு ஒளியை வழங்கித் தான் இது உருவாகியிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மற்றவர்கள் தவறாகக் கருத வேண்டும் என்பதற்காக அல்ல நான் சொல்வது. ஏனென்றால் இந்தப் பிரச்னையை இங்கு வற்புறுத்துவதற்கு ரொம்ப முக்கியத்துவம் இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டுவதற்குத்தான் நான் இந்தக் கருத்தினை எடுத்துச் சொன்னேன். அப்படி இரண்டு, இரண்டரை மணி நேரம் பேசியதிலிருந்து இரண்டு முக்கியமான திருத்தங்கள் கொண்டுவரப்பட இருக்கின்றன. முடிவு எடுக்கும்போது இது ஆய்வுக் குழுவிற்கு விடப்படுமானால் பல முக்கியமான திருத்தங்களை வெளியிடுவதற்குரிய வாய்ப்புகள் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கக் கூடும். அதை அமைச்சரவை அநாவசியமாக இழந்து விட்டதே என்ற வருத்தமான செய்தியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே நம்முடைய உறுப்பினர்கள், தலைவர்களுக்கு மதிப்பு அளிக்கிற வண்ணம் அவர்களுடைய கருத்தைக் கேட்டுப் பிடிவாதமாக இல்லாது இருக்கிற ஒரு அமைச்சரவை கடைசி நிமிஷத்திலேனும் மேலவையில் இதைக் கூட்டாய்வுக் குழுவிற்கு விடுவதற்கான ஒப்புதலை அளிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இதிலே நான் இன்னொன்றையும் சொல்வேன். அதிலே மாறுபாடு வருகிறது என்று பார்க்கிறபோது, மூன்றாவது திருத்த மசோதா ஆகஸ்டு 1972-லே நம்முடைய அவையிலே இங்கே நிறைவேற்றப்பட்டது. அன்றைக்கு ஒரு ஆய்வுக் குழுவை நாம் போட்டோம். அந்த ஆய்வுக் குழுவில் முதலமைச்சரவர்களும், நானும், மற்றவர்களும் உறுப்பினர்களாக இருந்து கிட்டத்தட்ட 2, 3 மாதங்கள் அதை ஆராய்ந்து, பல சிறு ஸ்தாபனங்களிடத்திலிருந்தெல்லாம் அறிக்கைகளை வாங்கி, பல ஊர்களில் கிட்டத்தட்ட நூற்றுக் கணக்கானவர்களை நம்முடைய தலைவர்கள் சந்தித்து அதற்கு மேலே தான் ஒரு சட்டத்தைப் போட்டோம். அந்தச் சட்டத்திலே என்ன சொன்னோம்? 4-50
இரண்டு முக்கியமான கருத்துக்களைச் சொன்னோம். எக்ஸம்ஷன் என்ற பி.ப.
அளவிலே, அந்த மூன்றாவது திருத்த மசோதாவிலே நம்முடைய இந்து கோவில்கள், மசூதிகள், சர்ச்சுகள், மடங்கள் ஆகியவைகளுடைய நிலங்களை எடுக்கக் கூடாது என்ற விதி விலக்கை நாம் கொடுத்தோம். அது மட்டுமல்ல. கல்லூரிகள், பள்ளிகள், பாலிடெக்னிக்குகள், ஆரம்பப் பள்ளிகள் இவைகளை நடத்துவதற்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அதை அந்தச் சட்டத்திலே கொடுத்தோம். கல்லூரிக்கு 50 ஏக்கராவும், உயர்நிலைப் பள்ளிகளுக்கு 20 ஏக்கரா நிலமும், பாலிடெக்னிக்குகளுக்கு 20 ஏக்கரா என்றும் சொன்னோம்.

ஆரம்பப் பள்ளிகளுக்கு 12 அல்லது 15 ஏக்கரா என்று சொன்னோம். ஆனால் இந்த ஆறேழு மாதங்களுக்குள்ளாக உடனடியாக எல்லாவற்றையும் மாற்றித் திருவது என்ற அளவிலே இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இன்றைய காலையிலே, கோவில்களுக்கும், சர்ச்சுகளுக்கும் 10 ஏக்கர் என்ற அளவிலே கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது, எவ்வளவு விரைவாகக் கொள்கைகளை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. ஒரு உறுதியான எண்ணத்தோடு செயல்படவில்லை என்பதைப் பார்க்கும்போது, இந்தச் சட்டம் பல மக்களைப் பாதிக்கக்கூடியதென்ற அளவிலே, நான் மிகவும் வருந்துகின்றேன் என்கின்ற என்னுடைய கருத்தை . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர்களே, நான் ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த எண்ண ஓட்டத்தோடு ஓட்டமாகத் தொடர்ந்து சொன்னால்தான் சரியாக இருக்குமென்று கருதுகிறேன். ஏற்கெனவே ஒரு ஆய்வுக் குழு சுற்றி வந்ததைப்பற்றிச் சொன்னார்கள். நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட விதி விலக்கை எப்படி எப்படி கொடுக்கலாம்,—டிரஸ்ட் சட்டத்தைப் பற்றி—என்பதற்காகச் சுற்றி வந்தோம். அதிலே விலக்குக் கொடுத்தோம். நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட விதி விலக்கு வேறு. 1960-ம் வருஷத்திய சட்டத்திலே, அந்த "institutions" 20 ஸ்டாண்டர்டு ஏக்கர்வரை சொந்தப் பயிர் வைக்கலாமென்று இருக்கிறது. அது வேறு. குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் என்ற ஒன்றை இயற்றியிருக்கிறோம். அந்தக் குத்தகைதாரர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குகிற சட்டம் இது. கோவில் நிலமாக இருந்தாலும், மசூதி நிலமாக இருந்தாலும், மாதா கோவில் நிலமாக இருந்தாலும்—எந்த அற நிலையத்திற்குச் சொந்தமாகவிருந்தாலும், குத்தகைதாரர்கள் என்றுதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு உரிமையாக்க வேண்டுமென்ற சட்டம் இது. நான் இன்னுமொன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த ஒரு சட்டமும் நிரந்தரமாக, அச்சடித்து எழுதி வைக்கப்பட்டதாக இருக்க முடியாது. ஆரியல் சட்டத்தை இத்தனை முறை திருத்திக் கொண்டிருக்க மாட்டார்கள். திருத்த வேண்டிய அவசியமும் வந்திருக்காது. கால வேகத்தில் சட்டங்கள் திருத்தத்திற்கு உட்பட்டவைதான். இந்தச் சட்டமும் எதிர் காலத்தில் திருத்தப்படலாம், திருத்தப்பட முடியாதென்று சொல்ல முடியாது. ஆகவே காலத்தை ஒட்டி, தேவைக்கு ஏற்ப, சட்டங்களைத் திருத்துவதற்குத்தான் சட்டமன்றங்கள் இருக்கின்றன. ஒரு முறை சட்டம் இயற்றிவிட்டு, இதுவே போதுமென்று சொன்னால், சட்டமன்றங்கள் தேவையில்லை. இருக்கிற சட்டமே போதுமென்று, நாட்டினுடைய நிர்வாகம் நடந்துகொண்டிருக்கும்.



காலத்தையொட்டி சட்டங்களைத் திருத்த வேண்டியிருக்கிறதென்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் ஒன்றுக்கொன்று முரணான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். மூன்றாவது திருத்த மசோதாவிலே உச்சவரம்பு கொண்டுவந்தோம். உச்சவரம்பு கொண்டுவருகிறபோது, கல்லூரிகளுக்கு 50 ஏக்கர் இருக்கலாமென்று சொல்லி, பாக்கி நிலத்தை நாம் எடுத்துக் கொண்டோம். இந்தச் சட்டம் என்ன சட்டமென்றால், உச்சவரம்பு அல்ல. குத்தகைதாரர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தினுடைய அளவு, அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமா அல்லது கொடுக்கப்படக்கூடாதா என்பதுதான் பிரச்சினை என்று சொன்னார்கள். ஆனால் அந்த அளவில் சொல்கிறபோது, கல்லூரிகளுடைய நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லை அல்லது பள்ளிகளுடைய நிலங்கள் பாதிக்கப்பட மாட்டாதென்ற அளவிலேகூட தொனிக்கும் படியாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதே சமயத்தில், பின்னால் வருகிறபோது, 'சட்டங்கள் மாறிக்கொண்டேதான் இருக்கும்; மாறாமல் சட்டம் இருக்குமென்று சொல்ல முடியாது' என்ற கருத்தைச் சொல்கிறார்கள். ஆனால் அது எப்படியானாலும், உச்சவரம்பானாலும், குத்தகைதாரர்களுக்கு நிலம் கொடுக்க வகை செய்யும் இந்தச் சட்டமானாலும், அதனுடைய "net result" என்று சொல்லக் கூடிய அளவில் என்ன ஆகிறதென்றால், அவர்கள் நிலம் வைத்துக்கொள்ள முடியாதென்ற அளவிலேதான் பல கல்லூரிகள் இருக்க முடியும். பல கல்லூரிகளிலே சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் சிலர் இருக்கலாம், சொந்த நிலம் இல்லாதவர்கள் பலர் இருக்கலாம். இவர்கள் குத்தகைதாரர்களுக்குக் கொடுத்திருக்க முடியும். அதனாலே விளைகிற விளைவுகளைப் பார்க்கும்போது, நிலங்கள் இல்லாத நிலைமையை நாம் கொண்டு வருகிறோமென்பதைப் பார்க்கிறோம். நான் சொல்வதெல்லாம், 6 மாதங்களுக்குள்ளாக, நாம் தீர்க்கமாக ஒரு முடிவு எடுத்ததை எந்தக் காரணத்திற்காக மாற்றுகிறோமென்ற அடிப்படையில்லாமல் மாற்றுகிறீர்களே என்பதுதான் என்னுடைய கருத்தாகும். ஏனென்றால் கல்லூரிகளுக்கு முதலிலே ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்தச் சட்டத்தை நம்முடைய சட்டமன்றத்திலே வைக்கிறபோது அதிலே கொடுக்கப்பட்டிருந்தது, இந்த 50 ஏக்கர்கள், 40 ஏக்கர்கள், 15 ஏக்கர்கள், 12 ஏக்கர்கள் அல்ல. 75, 80 ஏக்கர்கள் அளவிலே, வேறு விதமாக கல்லூரிகளுக்கும், பள்ளிகளுக்கும் வைத்திருந்தார்கள். சட்டமன்றத்திலே வந்து, அதற்குப் பின்னாலே 'செலக்ட்' கமிட்டிக்குப் போய், அங்கே மாறுதல் கொண்டுவந்தார்கள். இப்போது மறுபடியும் மாறுதல் கொண்டு வருகிறார்

களென்ற கருத்தைத்தான் நான் சொல்கிறேன். அடிக்கடி இப்படி மாற்றிக் கொண்டேயிருந்தால், நாட்டிலே உள்ள மக்களுக்கு, சட்டத்திறன் பற்றுக் குறைய விளைவுகளால் எந்தவிதமான நிரந்தரமும் இல்லாமல் போய்விடுமென்ற ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தலைவரவர்களே, அடிக்கடி அமைச்சரவர்கள் குறுக்கிட்டுப் பேசுவதினாலே, எனக்கு ஒதுக்குரிய காலத்தையும் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் :** குறுக்கிடாமல் பேசுவது உங்கள் கையில் இருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சில சமயங்களிலே அது எனக்கும் வாய்ப்பாக இருக்குமென்று அமர்ந்துகொள்வதும் உண்டு. வாய்ப்பு இல்லாத சமயங்களிலே அமராது இருப்பதும் உண்டு. அது சந்தர்ப்பத்தைப் பொறுத்ததாகும்.

குத்தகைதாரர்களுடைய நிதி உதவிக் கழகம் என்ற பெயரிலே ஒரு கழகம் ஒன்றை அமைக்கப் போவதாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள், தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருந்தார்கள். இதை ஏற்கனவே முதலாக வரவேற்றவர்களில் நானும் ஒருவன். நான் இதை வரவேற்று, பத்திரிகைகளுக்கும் சொன்னேன். அதை, மிக நல்ல, சிறந்த அபிப்பிராயமென்று வெளியிட்டதற்குக் காரணம், சட்ட மன்றத்திலே நானும், மதிப்பிற்குரிய திரு. எ. ஆர். தாமோதரன் அவர்களும் அடிக்கடி இந்தக் கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். குத்தகைதாரர்கள் என்ற நிலைமையில் பலருக்கு நிலங்களைக் கொடுத்துவிட்டு, அதனால் எந்தவிதமான வருமானமும் இல்லாமல், அதற்காக அரசாங்கத்தினுடைய அளவிலே 'மாரடோரியம்' என்று போட்டு, 4 வருஷம் நீ குத்தகை கொடுக்க வேண்டியதில்லை என்று சட்டம் போடுவது; பிறகு ஒரு ஆண்டு கொடுத்தால் 4 ஆண்டுகளைத் தள்ளிவிடுவோம் என்று சொல்லுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இவையெல்லாம் இருக்கிறபோது, நான் ஆங்கிலத்தில் சொன்னதுபோல, உரிமை ஒருவருக்கும், அதை அனுபவிக்கிற பாத்தியதை இன்னொருவருக்கும் இருக்கிற காரணத்தால், இந்த மாதிரி ஒரு சட்டம் வருவது நல்லது, நிதி உதவிக் கழகம் வருவது நல்லதென்ற கருத்தைச் சொன்னேன். அதற்கு முக்கியமான காரணம், இந்தக் குத்தகைதாரர்களுக்கு நிதி உதவிக் கழகம் பணம் கொடுத்து, அந்தப் பணத்தை நிலச்சுவாந்தார்களுக்கு அவர்கள் முழுமையாக அளித்துவிட முடியும்; ஆகவே நிலச்சுவாந்தார்களுக்கு இதனால் நன்மை ஏற்படும்; குத்தகைதாரர்களுக்கும் பயன் ஏற்படுமென்று



நான் நினைத்தேன். ஆனால் இந்தச் சட்டத்தைப் பார்க்கிறபோது, நிதி உதவிக் கழகம் என்ற வாசகமோ அல்லது வார்த்தைகளோகூட இல்லை. நான் காலையிலே, அமைச்சரவர்கள் பேசியபோது கேட்டேன். அது ஆலோசிக்கப்பட்டு வருவதாக அவர்கள் சொன்னார்கள். அதை எப்படியெல்லாம் வைப்பதென்பதைப் பற்றித் தீர்மானிக்க வேண்டுமென்ற கருத்தை சட்ட மன்றத்திலே அவர்கள் சொன்னார்கள். நிதி நிலை அறிக்கையில் குத்தகைதாரர்கள் நிதி உதவிக் கழகம் அமைப்பதையும், அதே சமயத்தில் ஒரு சீர்திருத்தம் கொண்டு வருவதையும், இரண்டையும் இணைத்துதான் முதலமைச்சரவர்கள் கொடுத்தார்கள். அப்படி இணைத்துச் சொன்னதிலே, அந்த நிதி உதவிக் கழகத்தைப் பற்றிய பெயரே இல்லாதபோது ஒரு நிலைமையைப் பார்க்கிறபோது, அந்த முடிவு என்னவாயிற்று என்று தெரியவில்லை. யாருக்கு, எப்போது பணம் கொடுக்கப் போகிறார்களென்பது தெரியவில்லை. இப்போது பணம் கொடுக்க வேண்டிய அவசியமில்லையென்ற நிலைமையை உருவாக்கி விட்டார்கள். ஏனென்று சொன்னால், அவர்கள் ஒரு ஆண்டு கழித்துக் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு ஒவ்வொரு ஆண்டும் கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லுகிறபோது, குத்தகைதாரர்களுக்கு எதற்காக நிதி உதவிக் கழகத்தை நீங்கள் வைக்கப் போகிறீர்கள்; எதற்காக நீங்கள் பணம் கொடுக்கப் போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன். நிலத்தை வாங்குவதற்காக வேண்டுமானால் பணம் கொடுக்கலாம். பன்னிரண்டு தவணைகளில், பணத்தை நிலச்சுவாந்தார்களுக்குக் கட்டிவிடு; முதலில் ஒரு தவணை கட்டிவிடு; அடுத்த அடுத்த ஆண்டில் கட்டிக்கொண்டிரு என்று இருக்கிறது. கட்டாவிட்டால், நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப்போல, நிலச்சுவாந்தார்கள், அந்த குத்தகைதாரர்களுடைய நிலங்களை ஜப்தி செய்யலாம் அல்லது திரும்பக்கூட எடுத்துக்கொள்ளலாமென்று சொன்னார்கள். இது ரொம்பப் புரட்சிகரமான விஷயம். இதை எப்படி அவர்கள் சட்ட மன்றத்தில் சொல்கிறார்களென்று தெரியவில்லை. பல ஆண்டுகளாக, குத்தகைதாரர்களுக்கு நிரந்தரமான உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுவது சோஷலிசமாகும். ஆனால், இந்தச் சட்டத்தைப்போல், சோஷலிசத்திற்கு விரோதமான சட்டம், குத்தகைதாரர்களை வெளியேற்றக்கூடிய சட்டம் வேறு ஒன்றுமில்லை என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நிலச்சுவாந்தார்கள், அவர்களை வெளியேற்றுவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுத்திருக்கிறதென்று அவர்கள் சொன்னார்கள். இவ்வளவு ஆண்டுகளில் பணம் கொடுக்கவில்லையென்றாலும்கூட 'Teanats Permanant Rights' என்று சொன்னார்கள். பணம் கொடுக்காவிட்டாலும்கூட, பணத்தை கோர்ட் மூலமாக வாங்கிக்கொள்ளலாமே தவிர,

'resumption right' இருக்கக்கூடாதென்று, அதிலே இந்திய அரசியல் சொல்லப்பட்ட நிலச் சீர்திருத்த முறை இருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள், புரட்சிகரமான இந்தத் திட்டத்திலே என்ன சொல்கிறார்களென்றால் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படியானால், அதிலே மாத்திரம் திருத்தம் கொண்டுவரவேண்டுமென்று திரு. சுவாமிநாதன் விரும்புகிறாரா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, இன்னும் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். இப்பொழுது நீங்கள் 'ரிஸம்ஷன்' என்ற அளவிலே எடுத்துக்கொள்ளச் சொல்வதைப்பற்றி நான் என்ன கருதுகிறேன் என்பதைக் கூற விரும்புகிறேன். திட்டத்தில் 5 லட்சம் சாகுபடியாளர்கள் இருக்கிறார்களென்று சொன்னார்கள். அந்த லட்சம் சாகுபடியாளர்களென்று சொன்னால், திட்டத்தில் 3 அல்லது 4 லட்சம் நில உடைமையாளர்கள் இருக்கக்கூடும். இந்த 4 லட்சம் நில உடைமையாளர்களும் பாதிக்குப் பாதி நிலம் வேண்டுமென்று கேட்டால், தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய 5 லட்சம் குத்தகைதாரர்கள் விலகக்கூடிய சூழ்நிலை ஏற்படும். நில உடைமையாளர்கள் நிலத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலையும், இவர்கள் கோர்ட்டுக்குப் போகும் சூழ்நிலையும் ஏற்படும். இந்த மசோதாவிற்கு நாம் பெயர் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், இது 'சாகுபடியாளர்கள் நிலம் வாங்க வகை செய்யும் மசோதாவல்ல'; இது 'சாகுபடியாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்ற வகை செய்யும் மசோதா' என்ற என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை, குத்தகைதாரர்களை வெளியேற்றுவதற்காகவே ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டு வந்து, அதைப் புரட்சிகரமான சட்டம் என்று சொன்னால், அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியுமென்று எனக்குத் தெரியவில்லை. இன்னுமொரு முக்கியமான கருத்தைச் சொல்ல நான் விரும்புகிறேன். குத்தகைதாரர்கள் நிதி உதவிக் கழகத்தை உடனடியாக அமைப்பதற்கான வழிமுறைகளை நீங்கள் செய்யவேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நிலத்தைக் கொடுப்பதைப்பற்றி யாருக்கும் ஆட்சேபணையில்லை. இதை மறுபடியும் திருப்பித் திருப்பிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டிலே சிறிய நிலச்சுவான்தார்களாக இருப்பவர்கள், தங்களுக்கு நிலம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று யாரும் கருதவில்லை. அப்படிக் கருதுபவர்கள் 5 சதவிகிதம்கூட இருக்க முடியாது. ஏனென்றால், வருமானமும் இல்லாமல், அதற்குக் கிஸ்தி கட்டிக்கொண்டு, அதற்கு வேண்டிய செலவுகளைச்





செய்துகொண்டு, நீங்கள் நிலத்தையும் வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அந்த நிலம் எதற்காக வேண்டுமென்று பலரும் நினைப்பது வாஸ்தவந்தான். ஆனால், அதைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, எல்லோரும் கொடுக்கிற பொருளுக்கு விலை வேண்டுமென்று எண்ணுவது இயற்கை. என்னுடைய நிலத்தை நீங்கள் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னால், என்னுடைய நிலத்திற்கு விலை வேண்டுமென்று கேட்பதில் என்ன தவறு இருக்கிறதென்பதைத்தான் நான் கேட்கிறேன். அதிலும், முன்னாலே நிலச்சீர்திருத்தச் சட்டத்திலே 15 ஏக்கருக்கு மேலாகவுள்ள நிலங்களை எடுத்தீர்கள். அதற்கு இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று 'காம்பென்சேஷன்' வைத்தீர்கள். அப்படி 15 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று சொன்ன பிறகு, அந்த 15 ஏக்கரை பண்ணையாக வைத்துக்கொண்டிருப்பவன் மட்டும் சாகுபடி செய்ய முடியும்; குத்தகைக்கு விட்டவன் நிலத்தை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி, அதற்கு நீங்கள் 'காம்பென்சேஷன்' கொடுப்பதாகவிருந்தால், அதை உபரி நிலமென்று நீங்கள் எண்ணமுடியாது. 'Acquisition' என்ற அளவிலே, நீங்கள் நிலத்தை ஆர்ஜிதம் செய்தீர்களென்ற அளவிலே இருக்குமேதவிர, அது அதிகபட்சமான நிலமல்ல. சென்னையில், 'Housing Board'-ல் நிலம் எடுக்கிறார்கள். சட்ட வரம்பிற்குட்பட்ட என்னுடைய நிலத்தை எடுப்பதற்காக Acquisition Act -லே, பக்கத்தில் இருக்கிற நிலத்தின் 'Market value' பார்த்து ஒரு ஏக்கருக்கு 25,000 ரூபாய் என்று நிர்ணயம் செய்யக்கூடிய நிலைமைகள் சென்னையில் இருக்கின்றன. ஆனால் கிராமத்திலே இருக்கக்கூடிய நிலைமை ஒருவனுக்கு 15 ஏக்கர் பண்ணை சாகுபடி செய்யலாம் என்று சொல்லி, அந்த 15 ஏக்கரிலே பல காலம் பாடுபட்ட உழவன், அதிலே 60 சதவீதம் கொடுத்தானே அவனுக்கு மட்டும் 'நீ' எடுத்துக் கொள்ளக்கூடாது என்று சொன்னால், அதை Acquisition முறையில் நீங்கள் செய்ய வேண்டுமே தவிர அதற்கு காம்பென்சேஷன் என்ற அளவிலே கொடுப்பது சரியானது அல்ல என்ற கருத்தை நான் சொல்லிக்கொள்வேன். 5-00

இன்னொன்றுகூட நான் சொல்வேன். நம்முடைய 'லாண்ட் சீலிங் ஆக்ட்' லே மொத்தத்திலே 5 ஆயிரம் ரூபாய் வருமானம் வரக்கூடியவர்களுக்கு 12 தடவை என்று வைத்தீர்கள். இதிலேயும் அமைச்சர் அவர்கள் 'நான் இதிலேகூட அப்படித்தான் சொல்லியிருக்கிறேன்' என்று சட்ட மன்றத்திலேயும் சொன்னார்கள். அதாவது நிலச்சீர்திருத்தத்திலே 12 தடவை என்று வைத்திருப்பதைப்போல, இந்தச் சட்டத்திலேயும் வைத்திருக்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள். அது தவறு என்பது என்னுடைய கருத்தாகும். காரணம் என்னவென்றால், உச்சவரம்புக்கு மேற்பட்டு வைத்திருப்பவர்களுடைய நிலத்தை

எடுக்கும்போது 12 தடவையிலே நீங்கள் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். அதே நேரத்தில் உச்சவரம்புக்குட்பட்டு வைத்திருக்கக்கூடியவர்களுடைய நிலத்தை எடுக்கும்போதும் 12 தடவை என்று சொல்லுகிறீர்கள். ஆகவே அந்த நிலச்சீர்திருத்தத்திலே 1961 சட்டத்திலோ அல்லது 1973 சட்டத்திலோ உள்ளதுபோல் நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அது தவறாகத்தான் முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொரு கருத்தையும் சொல்லிக்கொள்கிறேன். இப்போது நம்முடைய கல்லூரிகளுடைய நிலங்களை எடுக்கிறீர்கள், நம்முடைய பள்ளிகளுடைய நிலங்களை எடுக்கிறீர்கள். 3-வது திருத்தச் சட்டத்திலே என்ன காம்பென்சேஷன் கொடுத்தீர்கள்? 3-வது திருத்தச் சட்டத்திலே போன ஆண்டு ஆகஸ்டு மாதத்திலே 12 தடவையிலிருந்து ஆரம்பித்து 2 தடவைக்குக் கொண்டுவந்து நிறுத்தினீர்கள். ஒரே கல்லூரி, ஒரே பள்ளி, ஒரே ஆஸ்டலினுடைய நிலத்தைப் பற்றிய விஷயத்தில் 12 தடவையிலிருந்து 2 தடவைக்குக் கொண்டு வந்து நிறுத்தினீர்கள். இன்றைக்கு குத்தகைதாரர்கள் நிலத்திற்கு 12 தடவையில் கொடுக்கிறோம் என்று சொல்லுகின்றீர்கள். நான் என்ன குறிப்பிட விரும்புகிறேன் என்றால், இதுவரையிலே நிலச்சுவான்தாரர்களிடமிருந்து எடுத்ததை, ஜமீன்தார்களிடமிருந்து எடுத்ததை, இனாம்தாரர்களிடமிருந்து எடுத்ததைப் பற்றி எல்லாம் அரசாங்கம் 'கேரண்டி' கொடுத்தது. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய நிலச்சுவான்தாரர்களுக்கு, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருக்கக்கூடிய ஜமீன்தாரர்களுக்கு அரசாங்கம் 'கேரண்டி' கொடுத்து, அந்த நிலங்களை எடுத்துக் கொண்டு நாங்கள் அதற்கு ஜவாப்தாரி என்று சொன்னார்கள். ஆனால் ஏழை எளிய, சாதாரணமான நிலைமையில் இருக்கின்ற ஒரு சாதாரணக் குடியானவனுக்கு அந்தப் பணத்தை நாங்கள் 12 தடவையில் கொடுப்பேன்; அதுவும் அதிலே கட்டிடம் ஏதேனும் இருந்தால், அது எந்த விதத்தில் இருந்தாலும், அதாவது அது பல வருடங்களுக்கு முன்னதாகக் கட்டப்பட்டிருந்தாலும் அதற்கு 50 சதவிகிதம் தான், அதற்குப் போன ஆண்டுதான் ரூ. 10,000 செலவு செய்திருந்தாலும், அதற்கும் நான் பாதி தான் கொடுப்பேன் என்கின்றீர்கள். 12 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டிருந்தாலும்கூட பாதி தான் என்று சொல்கின்றீர்கள். அதிலேயும் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், அந்த நிலத்தை வைத்துக்கொள்வது என்று சொல்வது, கிணறு இருக்கிறதே அந்த இடத்தை, பம்பு செட்டு இருக்கிறதே அந்த இடத்தை, சாகுபடி செய்திருக்கின்ற இடத்தை, நாற்று வளர்க்கக்கூடிய இடத்தை, வைக்கோல் அடித்து போர் வைக்கிற இடத்தை அவர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்று தான் அர்த்தம். உள்ளே நுழையக்கூட வழியில்லாத முறையிலே நிலச்சுவான்தாரருக்கு இடமில்லை என்று சொன்னால், எப்படி இந்த நிலத்தைச் சாகுபடி செய்ய முடியும்? அப்படிப்பட்ட நிலைமையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது என்ற கருத்தினை நான் சொல்ல விரும்புகிறேன். இன்னொன்று யாரிடமிருந்து வாங்குகிறார்கள் என்ற அளவிலாவது தெளிவு அரசாங்கத்துக்கு இருக்கிறதா என்று பார்த்தால், அதுவும் இல்லை என்பதைத்தான் நான் துரதிருஷ்டவசமாகச் சொல்லவேண்டியிருக்கிறது. நேற்றையதினம் அமைச்சர் அவர்களிடத்திலே பேசிக்கொண்டிருக்கும்போது, நான் ஒரு ஏக்கரிலிருந்து 5 ஏக்கருக்கு உள்ளாக நிலம் வைத்திருக்கக்கூடிய நிலச்சுவான்தார்களிடம் சாகுபடி செய்யக்கூடிய விவசாயிகள் எத்தனை பேர் என்று கேட்டேன் குத்தகைதாரர்கள் எத்தனை பேர் என்று கேட்டால், என்னிடம் புள்ளிவிவரம் இல்லை என்று சொன்னார்கள். என்னிடம் புள்ளிவிவரம் இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திலே கிட்டத்தட்ட 42 சதவிகிதம்பேர் ஒரு ஏக்கருக்கு உள்ளாக நிலம் உள்ள நிலச்சுவான்தாரர்களிடம் சாகுபடி செய்துகொண்டிருப்பவர்கள் இருக்கிறார்கள். ஐந்து ஏக்கருக்கு உள்ளாக இருக்கும் நிலச்சுவான்தாரர்களிடம் சாகுபடி செய்துகொண்டிருப்பவர்கள் 46 சதம் இருக்கின்றார்கள். தஞ்சை ஜில்லாவிலே மொத்த நிலச்சுவான்தார்களிலே கிட்டத்தட்ட 6 லட்சம் பேராவது இருக்கலாம் என்று நினைக்கிறேன். அந்த அளவிலே குத்தகைச் சாகுபடிக்கு கொடுக்கக்கூடிய அளவிலே நீங்கள் பார்ப்பீர்களேயானால், 5 ஏக்கருக்கு உள்ளாக கிட்டத்தட்ட 90 சதவிகிதம் பேர்கள் இருக்கிறார்கள்.



வருமானம் வரக்கூடியவர்களுக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய காம்பென்சேஷன் என்ன என்று பார்க்கலாம். கணபதியா பிள்ளை அவர்கள் மிகத் தெளிவாக அதைப்பற்றிச் சொன்னார்கள். ஒரு ஏக்கருக்கு எவ்வளவு வருமானம் வரும் என்ற அளவிலே கணக்குப்போட்டதில், 'நாலுகை பண்ணைச் சாகுபடி வைத்திருந்தால்கூட 510 ரூபாய்தான் இருபோக நிலத்திற்கு வருமானம் கிடைக்கும்' என்று அவர்கள் சொன்னார்கள். குத்தகைதாரரிடம் அந்த ஒரு ஏக்கரை விட்டிருந்தால், 40 சதம் கிடைக்கும். அதாவது 200 ரூபாய் கிடைக்கும். ஒரு ஏக்கருக்குள் வைத்திருக்கின்ற ஒரு நிலச்சுவான்தாரருக்கு, 40 சதம் கிடைக்கும்; ஒரு நிலச்சுவான்தாரருக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய காம்பென்சேஷன் ரூ. 2,400. 5 ஏக்கர் அளவிலே வைத்திருக்கக்கூடிய, 46 சதம் இருக்கக்கூடிய நிலச்சுவான்தாரர்களுக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய காம்பென்சேஷன் 12 ஆயிரம் ரூபாய். அதற்கு மேல் 10 ஏக்கர் வரையிலே வைத்திருக்கக்கூடியவர்களுக்கு, தஞ்சை மாவட்ட நிலச்வசான்தாரருக்கு, நீங்கள் கொடுக்கக்கூடிய காம்பென்சேஷன், 24,000 ரூபாய். 15 ஏக்கருக்கு மேலே வைத்திருக்கக்கூடிய

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 ஏப்ரல் 3

தஞ்சை மாவட்ட நிலச்சுவான்தாரர்களுக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய காம்பென்சேஷன் 36,000 ரூபாய்தான். இந்த ரூ. 2,400-லிருந்து ரூ. 36,000 வரை, 500 ரூபாய் வாங்கிக்கொண்டு 12 ஆண்டுத் தவணையிலே வாங்கிக்கொள் என்று சொல்கிறார்கள். அதுவும் எப்படி யாரிடம் வாங்கிக்கொள்வது என்கிறார்கள் யார் கொடுக்கமாட்டார்களோ அவர்களிடம் கையைக் காட்டிவிடுகிறார்கள். பழைய காலத்திலே சொல்வார்கள் 'கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்தார்கள்' என்று. ஆங்கிலத்திலே " Rob Paul and pay Peter " என்று சொல்வார்கள். அது போல நாங்கள் அதற்குப் பொறுப்பல்ல. ஏன் பொறுப்பில்லை? அரசாங்கம் எடுத்து உபரி நிலத்தைக் கொண்டுபோய் குத்தகைதாரர்களிடத்திலே கொடுத்தார்கள். 90 சதம் பேர்களிடத்திலேயிருந்து இன்னும் பணமே வரவில்லை என்ற நிலைமை அரசாங்கத்திற்கே இருக்கின்றது. அரசாங்கக் கடனை யாரும் கொடுப்பதில்லை. 'அது கூட்டுறவுக் கடனா? அல்லது அரசாங்கக் கடனா? அப்படியென்றால் அதைத் திருப்பிக் கொடுக்காதே" என்று சொல்லுகின்ற நிலைமைதான் எல்லா இடத்திலும் வந்துவிட்டது. ஆகவே நாங்கள் எடுத்து அவர்களிடம் கொடுத்தால், அவர்கள் அரசாங்கத்திற்குப் பணம் கொடுக்கமாட்டார்கள். அது அரசியலாகப் போய்விடும். அதை சில கட்சிக்காரர்கள் பயன்படுத்துவார்கள். ஆகவே நீங்கள் நேராகப் போய் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னால், அந்த நிலச்சுவான்தாரே அவர்களிடம் போய் வாங்குவது சிரமம். அதனுடைய அனுபவம் எங்களுக்குத் தெரியும். நாங்கள் வாங்கி அனுபவப்பட்டவர்கள். வாங்காமல அனுபவப்பட்டவர்கள். எதற்காக நான் சொல்லுகிறேன்? ஒரு தடவை அவர்கள் கொடுப்பார்கள். அடுத்த தடவை கொடுக்கவேண்டிய போது நிச்சயமாக அவர்கள் கொடுக்க மாட்டார்கள். கொடுக்காமல் போனால் என்ன செய்வது? சர்டிபிகேட் வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னால், கீழ் மட்டம் முதல், மேல் மட்டம் வரையில் சர்டிபிகேட் வாங்குவதற்குள்ளாக கொடுக்கக்கூடிய லஞ்சம் பயங்கரமான லஞ்சம். இந்தக் குத்தகைதார் மசோதாவினாலே நிறையப் பணம் சேர்ப்பவர்கள் பல பேர்கள் இருக்கின்றார்கள். நான் எம்.எல்.சி. என்று தெரியாமல், என்னுடைய நிலத்திற்காக இருக்கக்கூடிய ஒரு தாசில்தார் என்னுடைய வீட்டுக்கே வந்து என்னுடன் பேசுகிறார். என்னுடன் அவர் பேசுகிற மாதிரியிலிருந்து அவர் ஏதோ எதிர்பார்க்கிறார் என்ற அளவிலே இருக்கிறார் என்று நினைக்கிறேன். நான் விசாரிக்கிறபோது, அவர் பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார் என்று தெரியவந்தது. இந்த குத்தகை மசோதாவிலே பதிவு ஏட்டிலே இருப்பது எல்லாம் சரி என்று நானே ஒத்துக்கொள்ள மாட்டேன் என்பதை அமைச்சர் அவர்களேகூட சொல்லியிருக்கின்றார்கள்.



1973 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** திரு. சுவாமிநாதன் வீட்டிற்கு வந்த அதிகாரியை வைத்துக்கொண்டு நான் சொல்லவில்லை. நான் பொதுவாகச் சொல்லுகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** யாராவது இருக்கலாம். அமைச்சர் அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். அது சரியான தகவல் அல்ல. ஏன் அது சரியான தகவல் அல்ல. suo motu என்று அவர்கள் போட்டார்கள். தனியாக நிர்ணயிக்கலாம் என்ற அதிகாரத்தைக் கொடுத்தார்கள். நமக்கு இருக்கின்ற துர்ப்பாக்கியம் எல்லாம் அது மாதிரி அதிகாரம் இல்லை. அந்த அதிகாரம் ஏதாவது கொடுத்தால், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி எவ்வளவு பணம் பண்ணலாம் என்ற அபிப்பிராயம் எல்லோருக்கும் வந்துவிட நிலைமை உருவாகிவிடுகிறது. அப்படியெல்லாம் பணம் பண்ணுகிறார்கள். ஆகவே இந்த நிலைமை என்ன ஆகும்? அங்கே இருக்கிற தாசில்தாரிடமோ அல்லது ஆதரைஸ்ட் ஆபீசரிடமோ போய் அவரிடத்திலே சர்டிபிகேட் வாங்குவதற்குள்ளாக தாவா தீரும். அதற்கும் மேலே கோர்ட்டுக்கெல்லாம் போய், அமைச்சர் அவர்கள் அவர்கள் மேலே நீங்கள் 'எவிக்சன் பெடிசன்' போடலாம் அல்லது 'அட்டாச் செய்யலாமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் காலத்திலே நகரங்களிலே இருப்பவைகளைக்கூட 'அட்டாச்' செய்யமுடியாது என்ற கருத்தை நான் அவர்களுக்குச் சொல்லுகிறேன். கிராமத்திலே போய் எதுவும் செய்ய முடியாது. அதுவும் நம்முடைய மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் திரு. ஏ. கே. சுப்பையா, திரு. மணலி கந்தசாமி போன்றவர்கள் இருக்கக்கூடிய இடங்களில், உரிமையுள்ள உடைமையாளர்கள் அல்ல, அமீனாகூட அங்கே போய் நுழைய முடியாது. எனக்குகூட கொஞ்ச நிலங்கள் இந்த இடங்களில் இருக்கின்றன. போய் 'அட்டார்' செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் கொடுக்காவிட்டால் என்ன செய்யலாம்? அவர்களை ஜெயிலிலே போடலாம். ஜெயிலிலே எவ்வளவு நாட்கள் போட முடியும்? ஆறு மாதங்கள் போடலாம். அதற்கும் நூறு ரூபாய் பணம் கொடுக்க வேண்டும். அவர்களுடைய வீட்டிலே என்ன இருக்கும்? வீட்டிலேயும் ஒன்றும் கிடையாது ஜப்தி செய்வதற்கு. கொடுக்கவில்லையென்றால், நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறீர்கள். திருப்பி அந்த நிலத்தை எடுத்துக்கொண்டு யார் சாகுபடி செய்வது? கிராமங்களுக்குப் போய் சாகுபடி செய்ய முடியாது. "சட்டி சுட்டதடா, கை விட்டதடா" என்று சொல்வார்களே, அப்படித்தான் இருக்கின்றது எங்கள் நிலைமை. நிலம் எங்களுக்குத் தேவையில்லை என்கிறோம். நீங்கள் நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள், உங்களை முதலாளிகளாக ஆக்குகிறோம் என்று சொல்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 ஏப்ரல் 3

கிறீர்கள். நிலத்தை எடுத்துக்கொண்டு சாகுபடி செய்யுங்கள் என்கின்றீர்கள். அப்படிச் சொன்னால் யாரால் சாகுபடி செய்ய முடியும்? அதற்கு நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்? அதற்கு "நாங்கள் பொறுப்பு ஏற்றுக்கொள்ள மாட்டோம். அடுத்த ஆண்டு அவர்கள் கொடுக்காவிட்டால் நீங்கள் போய் விவசாயியினிடத்திலே வாங்கிக்கொள்ளுங்கள். அதைப்பற்றி எங்களுக்குக் கவலை யில்லை" என்கிறீர்கள். இப்படி நீங்கள் சொன்னால், நிலைமை என்ன ஆகும்? ஒரு ஆண்டு கொடுத்தவர்கள், அடுத்த ஆண்டு நிலம் விளையவில்லை என்று சொல் வார்கள். தள்ளிப் போட வேண்டும் என்று அரசாங்கத்திடம் மனுப் போடு வார்கள். அதன்பின் நம்முடைய அரசாங்கமும் பலகட்சித் தலைவர்களும் சொல்வார்கள். அதைப்பற்றிய நிலைமைகளை எண்ணிப்பார்த்து, அவைகளைத் தள்ளிப்போடலாம் என்று சொல்லிவிடுவார்கள். அரசாங்கம் அதையும் நிறை வேற்றக்கூடும். அதன்பின் இன்னும் 2, 3 ஆண்டுகளுக்குக் கொடுக்கமாட்டார்கள். நான்காவது வருடம், அதற்கு மாரடோரியம் கொடுக்க வேண்டுமென்று கேட் பார்கள். அந்த வருடத்தில் அது மாதிரிக் கொடுத்துவிட்டால், அதற்கு அடுத்த 4 வருடங்கள் கொடுக்கவேண்டாம் என்று சொல்லிவிடுவார்கள். அதற்கும் சரி என்று தலையாட்டுவார்கள். ஆக 12 ஆண்டுக் காலத்திலே இந்திய நாடு எப்படிப் போகிறது என்று யார் கண்டார்கள்? மாதத்திற்கு மாதம் மாறிக்கொண்டிருக்கிறது. ஆறு மாதத்தில், இப்போது மாறுகிறதைப் பார்க்கிற போது, ஆண்டுக்கு ஆண்டு புரட்சிகரமான திட்டங்கள் என்று வந்துகொண் டிருக்கின்றபோது, 12 ஆண்டுக் காலம் யார் சாஸ்வதம் என்று தெரியாத நிலை யிருக்கும்போது, அடுத்த ஆண்டு, அடுத்த மாதம் எப்படி இருக்கும் என்பதை நாம் சொல்ல முடியாது, நமக்குத் தெரியாது. நம்முடைய இந்திய அரசவை, மதிப்பிற்குரிய இந்திரா அம்மையார் வைத்திருக்கும் செயல்முறைத் திட்டங் களையெல்லாம் பார்க்கின்றபோது, எப்படி இருக்கும் என்று தெரியவில்லை. இந்த ரூ. 2,400-ஐ வாங்குகின்றவனுக்கு இப்போது மாதத்திற்கு எவ்வளவு கிடைக் கிறது? திரு. கணபதியா பிள்ளை அவர்கள் 'ஒரு ஏக்கர் உள்ளவனுக்கு ஒரு மாதத்திற்கு கிடைப்பது ரூ. 17 தான் வருமானம்' என்று சொல்லியிருக்கின் றார்கள். அதுவும் இருபோகம் சாகுபடி பண்ணுகிறவனுக்கு அவ்வளவுதான் கிடைக்கிறது. அந்தக் கணக்குப்பார்த்தால், 5 ஏக்கர் உள்ளவனுக்குக் கிடைப்பது ரூ. 80, 10 ஏக்கர்கள் உள்ளவனுக்குக் கிடைப்பது ரூ. 160, 15 ஏக்கர்கள் உள்ளவனுக்குக் கிடைப்பது ரூ. 240 என்று ஆகிறது. நேற்றைய தினம் மத்திய அரசிலே சொல்லியிருக்கின்றார்கள். 'பியூன்'களுக்கு ரூ. 185 கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே அவர்கள் போட்டிருக்கின்றார்கள். 1970-லே . . .



1973 ஏப்ரல் 3] [திரு. ஜி. சுவாமிநாதன்]

"In 1970, the pay of a peon in a nationalised bank was Rs. 227, in the Reserve Bank Rs. 265, an engineering company Rs. 217, an oil mill Rs. 293, electrical manufacturing company Rs. 279, petroleum company Rs. 218 and in the pharmaceutical industry Rs. 385." பியூன்கள் வாங்குகிற சம்பளம் எவ்வளவு? அவர்களுக்கு ஆண்டு வருமானம் ஆயிரக்கணக்கில் போகிறது. ஆனால் அதிகபட்சமாக 15 ஏக்கர் வைத்திருக்கின்றாரே அவருக்கு வரக்கூடிய வருமானம் எவ்வளவு என்று பார்த்தீர்களானால் ரூ. 240 தான். 90 சதவிகிதம் நிலச்சுவான்தார்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 80-க்குள்ளே வருமானம் வரக்கூடிய நிலைமைதான் இருக் கிறது. இவர்களைப் பார்த்து '12 ஆண்டுகளுக்குள்ளே வாங்கிக் கொள்ளுங்கள்' என்று சொல்கிறார்கள். அவனைக் கை காட்டி விட்டால், எப்படிக் காலம் கடத்துவது இந்த நாளில் நிலச்சொந்தக்காரர்கள். நீங்கள் எடுத்துக்கொள் ளுங்கள், எடுத்துக்கொள்ளுங்கள் என்று திருப்பித் திருப்பிச் சொல்லுகின்றோம். அதற்கு ஆட்சேபணையே இல்லை. நீங்கள் பொருள்களை வழங்க வேண்டுமென்று கேட்கின்றீர்கள். நாங்களும் எங்களுடைய பொருள்களை எடுத்துக்கொள் ளுங்கள் என்று சொல்கின்றோம். அப்படி இருக்கும்போது, அந்தப் பொருள் களுக்குரிய விலையைக் கொடுக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக அரசு சொல்வதென்ன? "நீங்கள் கொடுத்துத்தான் ஆகவேண்டும். ஆனால் நாங்கள் அதற்கு 'கேரண்டி' கொடுக்க மாட்டோம். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள்", என்று சொல்லுகின்றீர்கள். அதே சமயத்திலே இது ஒரு புரட்சிகரமான திட்டம். எந்த அரசாங்கமும் இதற்கு முன் தமிழ் நாட்டிலே செய்ததே கிடையாது என்று சொல்கின்றீர்கள். யாருக்கு வேண்டும் அந்தத் திட்டம்? நான் அமைச்சர் அவர்களிடத்திலே கேட்க விரும்புகிறேன். நீங்கள் திரும்ப ஆலோசனை செய்யவேண்டும். இன்றைய தினத்திலே பேசிக் கொண்டே போகலாம். இப்போது அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறார்களே, இந்த அமெண்ட்மெண்டிலே என்ன போட்டிருக்கிறார்கள்? 'எல்லோரும் திரும்ப ரிசம்ப்சன் பண்ணலாம்' என்று போட்டிருக்கிறார்கள். அது மிகப் பயங்கர மான நிலைக்குக் கொண்டுபோய்விடும். 2 ஏக்கர் வைத்திருப்பவன் 'ரிசம்ப்சன்' பண்ணலாம். 10 ஏக்கர் வைத்திருப்பவன் திருப்பி வாங்கிக்கொள்ளலாம், 15 ஏக்கர் வைத்திருப்பவன் திருப்பி வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். எல்லா நிலச்சுவான்தார்களும் 'ரிசம்ப்சன் பெடிஷன்' போடுவார்கள். அப்போது எல்லா டெனன்ட்சும் பாதிக்கப்படுவார்கள். இதை எப்படி அரசாங் கத்தினர் கவனிக்காமல் இருந்தார்கள்? 4 லட்சம் பேர்கள்மீது பெடிஷன் போட்டால், 4 லட்சம் பேரை வெளியேற்ற ஆரம்பித்தால், நிலைமை என்ன வாகும்? அது எப்படி அரசுக்குப் புரியவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதிலே யார் யாருக்கு உரிமையில்லை என்பதையும் தெரிவித்திருக்கின்றோம். வருமான வரி கட்டுபவர்கள், விவசாயத் துறை வரி கட்டுபவர்கள் இவர்களுக்கு உரிமை கிடையாது என்று நாங்கள் சொல்லியிருக்கின்றோம். நிலத்திலிருந்து பாதிப்பேர்கள் வெளியேற்றப்படு வார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். அப்படிக் கிடையாது. 5 ஏக்கர் சாகுபடி செய்து கொண்டிருக்கின்ற ஒரு விவசாயி அந்த நிலத்தை வாங்க வேண்டுமென்று கருதுவானேயானால், அவன் மனுப்போட்டால், அதிலே 2½ ஏக்கர் நிலத்தை விற்றுவிட்டாலும், மீதியுள்ள நிலத்தை சொந்தக்காரர் சொந்த உபயோகத்திற்காகப் பயிர் செய்ய உரிமை இருக்கிறது. அந்த 2½ ஏக்கர் நிலம் அந்த விவசாயிக்குத்தான் சொந்தமே தவிர, வெளியேற்றுவது என்ற பிரச்சினையே கிடையாது. அந்த நிலைதான் இருக்கிறது. அந்த விவசாயியே விலைக்கு வாங்கிக்கொள்ளலாமே தவிர, அந்த விவசாயியை வெளியேற்றிவிட்டு, வேறு விவசாயிக்குக் கொடுப்பது என்பதுகூடத் தவறு. 5 ஏக்கர் பயிர் செய்துகொண்டிருக்கின்றார் ஒருவர் குத்தகைக்கு எடுத்து. அதில் 2½ ஏக்கர் நிலம் சொந்தக்காரருக்கு; மிச்சம் 2½ ஏக்கர் குத்தகை தாரருக்கு. இந்தக் குத்தகைதாரர், அதாவது அந்த 5 ஏக்கரைப் பயிர் செய்து கொண்டிருக்கின்றாரே அதே குத்தகைதாரர், அதை விலைக்கு வாங்கிக் கொள்கின்ற உரிமை அவருக்கு இருக்கின்றது.

திரு. செ. முத்துசாமி : தலைவர் அவர்களே, காவேரி நீர் பாயக்கூடிய தஞ்சை மாவட்டத்திலே நஞ்சைப் பகுதியிலே ஒரு ஏக்கருக்கு ரூ. 240 வருமானம் என்று
பி.ப. கேள்விப்படுவது மிக ஆச்சரியமாக இருக்கிறது. வறண்ட பகுதியில் சேலம்
5-10 மாவட்டத்திலே கூட கூடுதலான வருமானம் வருவதாகப் பார்க்கிறோம். இப்படி இந்த விவரத்தில் கிடைக்கிறது என்பதைக் கேட்கும்பொழுது ஆச்சரியமாக இருக்கிறது. உயர்நீதி மன்ற நீதிபதி கணபதியா பிள்ளை அவர்கள் அறிக்கையின்படி இருந்தாலும் கூட அந்த அறிக்கை உண்மை தானா என்ற சந்தேகம் வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : 1969-ம் ஆண்டில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட உயர்நீதிமன்ற நீதிபதி கணபதியா பிள்ளை அவர்கள் பல்வேறு கணக்குகளைச் சொன்னார்கள். என்ன சொன்னார்?

Let me take the typical example of a person owning 5 acres of wet lands. The total expenditure will be so much

என்று சொல்லி கணக்கெல்லாம் போட்டார். என்ன சொல்லுகிறார்?



"The net income for a land owner owning 5 acres of lands will be Rs. 2,553.75"

என்று போட்டுவிட்டு, அதற்கு மேலே அந்த லேண்டு ஓனர் வட்டி, தான் தனியாகச் செய்ய வேண்டிய காரியங்களுக்காக, அவர்களுக்கு ஒரு சம்பளம் என்று எல்லாம் போட்டு, வருஷத்திற்கு ரூ. 2,550-க்கு மேல் வருகிறது. மாதம் ரூ. 210. இது நம் அரசாங்கத்தினுடைய விவரங்களிலிருந்து தான் தெரிகிறது என்று மீண்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே இப்படியிருக்கிற நிலைமைகளைப் பார்க்கிறபொழுது, அரசாங்கம் இதைப்பற்றி இன்னும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டுமென்ற கருத்தை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டு இதை ஒரு ஆய்வுக் குழுவின் கருத்துக்காக விடுவதற்கு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். முடிவாக ஒன்று சொல்லுவேன். அமைச்சர் அவர்கள் முரண்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். நேற்றையதினம் அவர்கள் இந்தக் கூட்டம் நடந்தபோது என்ன சொன்னார்கள்? நிலச்சுவான்தாரர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கிறது, நிலத்தைத் திருப்பி எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். நம்முடைய அவையில் பிரேரேபித்துப் பேசுகிற பொழுதும் கூடச் சொன்னார்கள். நிலச்சுவான்தாரர்களுக்குப் பணம் கொடுக்காவிட்டால், அந்த நிலத்தின் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டு திரும்பி வாங்கிக்கொள்ள நிலச்சுவான்தாரர்களுக்கு உரிமையிருக்கிறது என்று நம்முடைய சபையில் சொன்னார்கள். இப்போது என்ன சொல்லுகிறார்கள்? அவர்கள் 'அட்டாச்' செய்து பணம் வராவிட்டால், அவர்கள் திரும்ப அதிலே கல்டிவேட்டிங் டெனண்டாக 'கன்டினியு' பண்ணுவார்களேயானால், எப்படிப் பணத்தை வாங்க முடியும்? திரும்பக் கேட்கிறேன். ஒன்று நிலத்தை வாங்கலாம் என்ற நிலைமை இருக்கவேண்டும். அதில் போய் 'அட்டாச்' செய்து திருப்பி கல்டிவேட்டிங் டெனண்டாக, குத்தகைதாரர்களாக இருப்பார்கள் என்று சொன்னால், பணம் கொடுக்காவிட்டாலும் கூட பணம் எப்படி வரும்? இரண்டும் கெட்ட நிலைமையை அமைச்சர் அவர்கள் . . . .

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தை வைத்துக்கொண்டு பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ நிலத்திலிருந்து பாதிப் பேர் வெளியேற்றப்படுவார்கள் என்று சொன்னார்கள். வெளியேற்றப்பட மாட்டார்கள் என்று சொன்னேன். நிலச் சொந்தக்காரர்கள் ஆவார்கள் என்று ஒரு விளக்கம் சொன்னேன். அதற்கு முன்பு சொன்ன கருத்து ஒரு தவணை கட்டிவிட்டு அடுத்த தவணை கட்டாவிட்டால், இன்ன செய்யலாம் என்று சட்டம் இருக்கிறது என்று சொன்னேன். இந்த அளவுக்கு நண்பர் சுவாமிநாதன் குத்தகைதாரர்களுக்காக வாதிடுவார்கள் என்று தெரிந்திருந்தால்,

[திரு. ப. உ. சண்முகம்] [1973 ஏப்ரல் 3

நீங்கள் வைத்திருக்கிற ஹவுசிங் போர்டு தான் வீட்டுச் சொந்தக்காரன். நீ யார் என்று சொன்னால் ஹயர் பர்சேஸர். பன்னிரண்டு ஆண்டுகள் பணம் கட்டி முடிக்கிற வரையில் நீங்களே சொல்லுகிறீர்கள். அந்தப் பணத்தைக் கட்டிவிட்ட பிறகு நான் வீட்டுக்கு டைட்டில் வேண்டுமென்று கேட்டால், பின்னால் அந்த நிலத்துக்கு இன்னும் அதிகமாக விலை வேண்டுமென்று கோர்ட்டில் சொல்லுவார்களேயானால், ரூ. 1,000 கொடு, நான் 'பார்ஷியலாக'-க் கொடுக்கிறேன் என்று பார்ஷியல் ஓனராக ஒத்துக்கொள்ளுகிறார்கள். இன்னொரு ஆயிரம் ரூபாய் கட்டிவிட்டால் உன்னை 'புல் ஓனர்' என்று 'டிக்ளேர்' பண்ணுகிறேன் என்று உங்கள் வாரியம் சொல்லுகிறது. அதைத் தான் கேட்கிறோம். நியாயமான முறையில் ஒரு தவணை கட்டியவுடன் நீ 'ஓனர்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டால், எப்படி வாங்க முடியும்? அரசாங்கத்தை ஓனராக, நிலத்திற்கு அதிபதியாக, முதலாளியாக நிலத்திற்கு உரியவராக ஆக்குங்கள். அவர்கள் 'ஹயர் பர்சேஸ்' என்ற முறையில் வாங்கலாம். அதற்கு 'காரண்டி' கொடுங்கள். உங்களுக்குப் பணம் கட்ட முடியாது என்ற நிலைமை தான் என்று தெரியும். அமைச்சர் சட்டத்திலே இன்னும் கொஞ்சம் பாதுகாப்பாகப் போட்டிருப்போம். எந்தக் காரணத்தையும் முன்னிட்டு குத்தகைதாரர்கள் வெளியே போகமாட்டார்கள் என்று போட்டிருக்கலாம். அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. ஏனென்றால் அவர் இரண்டு பக்கத்திற்கும் வாதாடுகிறார்கள். முடிவு என்ன சொல்லப் போகிறாரோ, காத்துக்கொண்டிருக்கிறேன். அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், சட்டத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இந்த உரிமையை உழவனுக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த உரிமையை குத்தகை தாரர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். இந்த உரிமைகளைக் கொடுத்திருப்பதில் தீவிர சோசலிசம் பேசுகிற கட்சிக்காரர்கள் கூட ஏற்றுக்கொண்டு பாராட்டியிருக்கிறார்கள். இது சோசலிசத்திற்கு விரோதமான கருத்தல்ல. இதுவரையில் அவர் இரண்டு பக்கத்திற்கும் வாதாடியிருக்கிறார்கள். அவருடைய முடிவை ஆவலுடன் தெரிந்துகொள்ளக் காத்திருக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் சட்ட மன்ற உறுப்பினர் என்ற வகையில் நாட்டு மக்கள் அனைவருக்கும் வாதாடக் கடமைப்பட்டவன். எப்படி அமைச்சர் அவர்கள் சொல்லுவார்கள் என்று தெரியவில்லை. யாரோ ஒருவர் டெனண்டுக்காகவோ அல்லது நிலச்சுவான்தாரர்களுக்காகவோ மட்டும் வாதாடினால், சமுதாயத்தின் ஒரு பகுதியினருக்கு வாதிடுவதாகும். சட்டமன்ற உறுப்பினர் என்று இருப்பவர் இரண்டு பக்கத்தையும் பார்த்து அதன் விளைவுகளைக் கண்



1973 ஏப்ரல் 3] [திரு. ஜி. சுவாமிநாதன்]

காணித்து இரண்டு பக்கத்தின் சாதக பாதகங்களையும் எடுத்துச் சொல்ல வேண்டும். அந்த முறையில் ஒரு நல்ல சட்ட மன்ற உறுப்பினராகப் பணியாற்றுகிறேன் என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, இன்னும் ஆசு சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குத்தகைதாரர் தவணை முறையில் ஒரு ஆண்டு கட்டிவிட்டு அடுத்த ஆண்டு கட்டாவிட்டால் அவன் நிலத்திலிருந்து வெளியேற்றப்படக்கூடாது என்பது தங்களுடைய வாதமா?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** எங்கும் நிலத்தை எடுத்துக்கொண்டு விட்டால் இப்போது ஹவுசிங் போர்டு இருக்கிறது. (குறுக்கீடு) இதை ஏன் பேசக் கூடாது? அமைச்சர் பதில் சொல்ல முடியாது என்று வருகிறபோது அதற்குப் போக வேண்டாம் என்று எப்படிச் சொல்ல முடியும்? ஹவுசிங் போர்டு இங்கு இருக்கிறது. நிலத்தை எடுக்கிறார்கள். எடுத்து அவரவர்களுக்கு வீடு கட்ட வாய்ப்பு அளிக்கிறார்கள். வாய்ப்பு அளித்து ஒருவர் வீடு கட்ட வருகிறார். யார் ஓனர்? 12 ஆண்டுகள் வரையில் அந்தப் பணத்தைக் கட்டுகிறவரையில் மாதவன் அவர்களை இரண்டு ஆண்டுகளுக்கு முன் கேட்டபோது, "டில்லியில் கூட வாதிட்டோம். அதற்குப் பல கோடிக்கணக்கான ரூபாய் தேவைப்படுகிறது. அதுமாதிரி வைப்பது இயலாத காரியம்" என்று கேள்வி பதிலுக்கே சொன்னார்கள். அதற்குப் பிறகு நிதி உதவிக் கழகம் என்று போட்டுக்கொண்டு உங்களால் கோடிக்கணக்கான ரூபாயை தாங்க முடியாது என்று சொல்லி இன்னொருவர் தலையில் கட்டுவது என்பது சரியானதல்ல. நான் கேட்கிறேன் இந்தச் சென்னையில் இருக்கிற ஹவுசிங் போர்டு . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிதி உதவிக் கழகம் என்பதை அரசாங்கம் கைவிடவில்லை. அரசாங்க நிதி உதவிக் கழகம் என்பது தனியாக வருகிறது. இந்தச் சட்டத்தால் குத்தகைதாரர்களுக்கு நிதி உதவி நிச்சயமாக வரும். முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். வரவே வராது, சொல்லவே இல்லையென்று பேசிக் கொண்டிருப்பது சரியில்லை. அது உண்டு.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இதே பிரின்சிபிளை, இந்த நிலைமையை சென்னைக்குக் கொண்டு வாருங்கள். சென்னையில் வீடு வாங்கியிருக்கிறார்கள். வாங்கியிருப்பவர்கள் ஒரு 'இன்ஸ்டால்மெண்டு' வாங்கிக்கொண்டு அவர்களை உரிமையாளர்களாகச் சொல்லுங்கள். அவர்கள் பணம் கட்டாவிட்டால் அதற்குமேல் தாவா போடுங்கள் என்ற நிலைமையில் வைத்துக்கொள்ளுங்கள். இங்கே அனுஷ்டிக்க முடியாத நிலையை சாதாரண ஏழை எளிய மக்களுக்கு, வாய் பேசத் தெரியாத

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 ஏப்ரல் 3

லட்சக்கணக்கான மக்களுக்கு, சட்டசபையில் பேச முடியாத மக்களுக்கு உற்பத்தி செய்வது சரியானது இல்லையென்று நான் மீண்டும் சொல்லுகிறேன். குத்தகைதாரர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். நிச்சயமாக லட்சக்கணக்கானவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நான் சொல்லிக்கொள்ளுகிறேன். இதுவரையில் கொடுத்தது போதாது என்று 'விதவைகள், உடல் ஊனமுற்றோர், மைனர்ஸ்' என்று இவர்களுக்குக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இந்த நிலைமைகள் வருகிற போது, இன்னும் கெட்ட விளைவுகள் தான் இந்தச் சட்டத்தால் ஏற்படப் போகின்றன. முடிவாகச் சொல்லுவதெல்லாம் இந்தச் சட்டத்தால் நாட்டு மக்களுக்குப் பயனில்லை. நிலச்சுவான்தாரர்களுக்கும் பயனில்லை. இந்தச் சட்டத்தால் குத்தகைதாரனுக்கும் பயனில்லை. ஆகவே யாருக்கும் பயனற்ற இந்தச் சட்டத்தை இவ்வளவு விரைவாக அமைச்சர் அவர்கள் கொண்டு வந்ததற்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, இதன் பயங்கரமான விளைவுகளை ஏற்க இந்த அரசு தயாராக வேண்டுமென்ற எச்சரிக்கையையும் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்து, அமருகிறேன்.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** தலைவர் அவர்களே, என் பேரில் இருக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் விரிவாக இந்த சட்டத்தில் இருக்கக்கூடிய சிக்கல்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். எங்களைப் பொறுத்த வரையில், கொள்கையளவில் இதை வரவேற்கிறோம் என்றாலும், சில அரசியல் உண்மைகளை இந்த நேரத்தில் சொல்லாமலிருக்க முடியவில்லை. நாங்கள் தீவிர வலதுசாரி வாதத்தை ஆதரிக்காவிட்டாலும், அதே நேரத்தில் தீவிர இடதுசாரி வாதத்தையும் ஆதரிக்க முடியாது. இந்தச் சட்டம் ஏன் இவ்வளவு விரைவாக இந்தச் சபையில் வந்திருக்கிறது என்பதற்கு, உண்மையிலே சொல்லப்போனால், சில அரசியல் கட்சிகளினுடைய போட்டா போட்டிதான் காரணம். நாம் முந்தி இதைச் செய்தோம், நாங்கள் இதில் புரட்சியை முதலில் செய்தோம் என்று ஆளும் கட்சியினர் ஒரு ஆர்வம் காட்டியிருக்கக்கூடிய உணர்ச்சிகளை நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆகவேதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவ்வளவு ஒரு பெரிய புரட்சிகரமான திட்டத்தைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கும்போது, உறுப்பினர்கள் சரியாகக் கவனம் செலுத்தவில்லையென்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், உண்மையிலே கவனம் செலுத்தாததற்குக் காரணம் எப்படியிருந்தாலும், இந்தச் சட்டத்தை இதே ரூபத்தில் அவசரமாக 'பாஸ்' செய்யப் போகிறார்கள். ஆகவே அதில் அக்கறை செலுத்துவதில் நன்மை ஒன்றுமில்லையென்ற காரணத்தால், நாங்கள் அதைப்



1973 ஏப்ரல் 3] [திரு. வ. ஈஸ்வரமூர்த்தி]

பற்றிப் பெரும் வருத்தத்தோடு இந்தத் திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். குறிப்பாகச் சொல்லப் போனால், இந்தச் சட்டத்தால் நிச்சயமாகக் குத்தகைதாரர்கள் பயன் அடைய மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

(மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் தலைமை)

அதேபோல் நிலச் சொந்தக்காரர்கள் பாதி நிலத்தை எடுத்துக் கொள்வதென்றால், அனுபவத்தில் எனக்குத் தெரியும், நிச்சயமாக நீங்கள் போய் 5. 20. பி. ப-
எடுத்துக்கொள்ளுங்கள் என்று அனுமதி விட்டாலும்கூட இன்றையதினம் கிராமங்களில் இருக்கின்ற சூழ்நிலையில், நாம் போய் எடுத்துக்கொள்ள முடியாது. இது வன்முறையில் முடியும். அவ்வளவு சுலபமாக ஒரு குத்தகைதாரர் கையிலிருக்கக்கூடிய நிலத்தை நிலச்சுவான்தார் போய் எடுத்துக்கொள்ள முடியாது. மேலும் இந்தச் சட்டத்தில் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள், "குத்தகைதாரர் காட்டக்கூடிய இடங்களை குத்தகைதாரர் வைத்துக் கொள்ளலாம்" என்று. குத்தகைதாரர்கள் நிச்சயமாக எந்த இடங்களைக் காட்டுவார்கள்? கிணறுகள் உள்ள இடங்களை, நல்ல கட்டிடங்கள் உள்ள இடங்களை, மற்றும் பம்ப்செட்டுகள் உள்ள இடங்களைக் காட்டும்போது, நிலச்சுவான்தார் எந்த இடங்களை எடுத்துக்கொள்வது என்பதிலே ஒரு பெரிய குழப்பம் ஏற்படப்போகிறது. இந்தப் புரட்சிகரமான திட்டத்தால் நிலையான புரட்சி ஏற்படுமானால், நாம் அதை வரவேற்கலாம். ஆனால் இது அவசரமாக இந்த உருவத்தில் நிறைவேற்றப்படுவதனால் புரட்சிக்குப் பதிலாக குழப்பம் தான் ஏற்படும். அமைதியான புரட்சிக்குப் பதிலாக வன்முறை சம்பவங்கள் கிராமங்களில் ஏற்படுமென்று அஞ்சுகிறோம். இன்னும் இந்தச் சட்டம் உண்மையிலேயே நிதானமாக ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டிய ஒன்று. அவசரமாக நிறைவேற்றப்படுகிற சட்டம் என்பதற்கு ஒரு முக்கிய உதாரணம் சொல்ல வேண்டுமானால், இந்தச் சட்டம் முனிசிபல் எல்லைகளுக்குட்பட்டு, அர்பன் லேண்ட் என்று சொல்லக்கூடிய நிலங்களையும் வகைப்படுத்த உதவி செய்கின்றது. நமக்கெல்லாம் தெரியும், முனிசிபல் எல்லைக்குள் 'அர்பன் லேண்ட்' என்று சொல்லக்கூடிய நிலங்களை விவசாய நிலங்கள் என்று எடுக்கும்போது, அந்த நிலங்களை வைத்திருக்கும் குத்தகைதாரர்களுக்கு அதை வாங்கும் உற்சாகம் இல்லையென்றாலும், 'ஸ்பெகுலேஷன்' என்று சொல்லக்கூடிய கொழுத்த லாபம் அடிக்கக்கூடியவர்கள் அவர்களை உற்சாகப்படுத்தி அந்த நிலத்தை ஏக்கரா ரூபாய் 2,000 என்று வாங்கிக் கொண்டு, தன் கையகப்படுத்திக் கொண்டு, பிறகு அதே நிலங்களை ரூ. 50,000 இலட்சம் ரூபாய்க்கு விற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டம்

ஏழைகளுக்குப் பயன்படும் சட்டமாக, சிறு விவசாயிகளுக்குப் பயன்படும் சட்டமாக இருந்தால், கொள்ளை அடிக்கக்கூடியவர்கள், கொள்ளை லாபம் அடிக்கக்கூடியவர்கள் விவசாய நிலங்களாக வாங்கி ஏழைகளிடம், வீடுகள் கட்டுவோர்களிடம் கொள்ளை அடிக்கும் வாய்ப்பைக் கொடுக்கக் கூடிய சட்டமாக இருக்கிறதென்பதை ஏன் அரசாங்கம் யோசனை பண்ணவில்லை என்று இந்த நேரத்தில் கேட்க ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஒரு தவறான எண்ணத்தை மனதில் வரவழைத்துக் கொண்டு கொள்ளை லாபம் அடிக்கின்றவர்கள்—இப்பொழுது அது நாகரீகமாகிவிட்டது கொள்ளை லாபம் அடிக்கின்றவர்கள் என்று பேசுவது—நகர்ப்புற சொத்துக்களைப் பயன்படுத்துவார்கள் என்று கூறுகிறார். 'கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புரொடெக்ஷன் ஆக்ட்' என்ற சட்டத்தின்படி யார், யார் டெனன்ட்ஸ் என்று "டிக்ளேர்" செய்திருக்கிறோம் 'கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புரொடெக்ஷன் ஆக்ட்'-படி யார், யார் டெனன்ட்ஸ் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்குத் தானே தவிர அர்பன் லேண்டில் எங்கேயாவது ஒரு 'டெனன்ட்' இருப்பார். ஒரு கட்டிடம் வாங்கி குத்தகை வைத்திருக்கிறார் என்றால் அது இதிலே வராது. சாகுபடி செய்யும் பூமியிலுள்ள குத்தகைதாரர் தானே தவிர, குத்தகைக்கு பூமியை வாங்கி கட்டிடம் கட்டி வைத்திருந்தால், அதைச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புரொடெக்ஷன் ஆக்டின் கீழ் யார், யார் 'டெனன்ட்ஸ்' என்று விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. யார், யார் அதிலே வருகிறார்களோ அவர்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகின்ற உரிமை இது.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** தலைவரவர்களே, அந்த விளக்கம் விளக்கமாகவே இருக்கிறது. முனிசிபல் எல்லைக்குள் 'கல்டிவேடிங் டெனன்ட்ஸ்' என்று பலர் விவசாய நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இப்படி முனிசிபல் எல்லைக்குள் நிலம் வைத்துக்கொண்டால், அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு. கல்டிவேடிங் டெனன்ட்ஸ் புரொடெக்ஷன் ஆக்டின் கீழ் நிலம் எங்கெங்கே வைத்துக்கொண்டாலும், கார்ப்பரேஷன் எல்லைக்குள் நிலம் வைத்திருந்தாலும், குத்தகை வைத்திருந்தாலும், பாதுகாப்பு உண்டு. அவர்களுக்கு இந்தச் சட்டத்தில் அதிகாரம், உரிமை உண்டு.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** தலைவரவர்களே, இது ஒரு புரட்சிகரமான திட்டமில்லை. அத்தகையவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று சொன்னால்,



நடைமுறையில் அதனுடைய விளைவு என்ன என்று பார்க்கவேண்டும். நாளைக்கே ஒரு குத்தகைதாரர் தனக்கு என்று அந்த நிலத்தை வாங்குகிறான். பன்னிரண்டில் ஒரு பங்கு ரூபாயை, அதாவது ரூ. 2,000 கொடுத்து, அல்லது ரூ. 3,000 கொடுத்து விட்டு, அந்த நிலத்தைத் தனக்குச் சொந்தமாக்கி வைத்துக் கொண்டு, வீட்டு மனைகளாகப் பிரித்து, ஒரு ஏக்கரை லட்சம் ரூபாய்க்கு விற்கும் நிலைமை வருமென்பதை அமைச்சரவர்கள் அறியாதவர் அல்ல. ஆகவே அந்த அடிப்படையில் நீங்கள் இந்த முனிசிபல் எல்லைக்குள் வருகிற நிலங்களை வைத்துக்கொண்டு, கொள்ளை லாபம் அடிக்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றீர்களா? கொள்ளை லாபம் அடிப்பதைத் தூண்டி விடுகிறீர்கள் என்பதுதான் பொருளாகின்றது.

மேலும் இந்தப் பன்னிரண்டு மடங்கு விலையை வைத்து, அதிலே ஒரு பங்கு பணம் கொடுத்தவுடனேயே நிலச் சொந்தக்காரனாகி விடுகிறான் என்று 'சர்டிபிகேட்' கொடுத்து விட்டீர்கள். நிச்சயமாக அவனை அந்த நிலத்தை வாங்குவதற்குத் தூண்டும் சட்டமாக இல்லை. நிலத்தை வாங்க முடியாதவனாக இருக்கலாம், வாங்குவதற்கு தன்னிடத்திலே போதிய பணம், போதிய வருமானம் இல்லாதவனாக இருக்கலாம். அவனை இப்பொழுது தூண்டிவிடுகிறீர்கள். பன்னிரெண்டில் ஒரு பங்கைக் கட்டிவிட்டு சர்டிபிகேட் வாங்கி வைத்துக்கொள்கிறான். அவன் பாங்கியில் பணம் வாங்கி நிலத்தை அபிவிருத்தி செய்ய முடியாது. ஏனென்று கேட்டால், முழுப் பணத்தையும் கட்டி முழுச் சொந்தமான பிறகுதான் கொடுக்க முடியும் என்று நிச்சயமாகச் சொல்வார்கள். ஒரு தடவை பெயரை, உரிமையை மாற்றி வைத்துக் கொண்டு, அடுத்து பணம் கட்டாவிட்டால், அந்த டிரான்ஸாக்ஷன் முதல் அவனை நீக்கி திரும்ப எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. டிக்ரி செய்து நிலத்தை எடுத்துக்கொள்ளலாமென்று சொல்லப்படுகிறது. டிக்ரி செய்து நிலத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற முறையே கலோனியல் முறையாகும். டிக்ரி செய்து, அதை நிறைவேற்றுவது என்ற பழக்கமே இப்பொழுது குறைந்து வருகிறது. இப்பொழுது டிக்ரியை யாரும் கொண்டு போய் யதார்த்தமாக நிறைவேற்ற முடிவதில்லை. 1973 ஆம் ஆண்டில் புரட்சிகரமான திட்டம் என்று சொல்லி, டிக்ரி செய்து, பெற்றுக் கொள்ளலாம் என்று சொல்வதில் என்ன புரட்சி இருக்கிறது, என்ன முற்போக்கு இருக்கிறது, என்ன சாதனை இருக்கிறது என்பதை அரசாங்கத்திடம் கேட்க விரும்புகிறேன். குறிப்பாக, என்னுடைய வாதமெல்லாம் இந்தப் பன்னிரெண்டில் ஒரு மடங்கு கொடுத்துவிட்டு வாங்கிக் கொள்ளலாம் என்று வைத்தால், நூற்றுக்கு 97 பங்கு 'will be premature purchases' இப்படி வாங்குகிறவர்களுக்கு பிறகு கட்ட வேண்டிய அக்கறை

வராது. இன்று நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னதுபோல், அரசாங்கம் கடன் என்று வைத்துக்கொண்டால், கடன் பாக்கி என்று வைத்துக் கொண்டால், அதற்குப் பல காரணங்களைச் சொல்லித் தள்ளிக்கொண்டே போகலாம். ஆகவேதான் இந்தச் சட்டத்தை வரவேற்கிறேன், வரவேற்கிறேன் என்று சொன்னேன். அதை விரிவாக இயற்ற வேண்டும் என்று யோசனைகள் கூடச் சொல்கிறோம். குறைந்தது மூன்றில் ஒரு பங்கு கொடுத்த பிறகு, அந்த உரிமையைக் கொடுப்பது நல்லது. அல்லது ஒரு ஐம்பது சதவீதம் கொடுத்த பிறகு உரிமையைக் கொடுங்கள். அப்பொழுதுதான் உண்மையாக அந்தக் குத்தகைதாரர் வாங்குவதற்கு வருகிறார் என்று எண்ணக்கூடும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது புரட்சிகரமான சட்டமில்லை; பன்னிரெண்டில் ஒரு மடங்கு கொடுத்து விட்டால் நிலத்தைக் கொடுத்து விடுவது என்பது புரட்சிகரமான திட்டமில்லை; ஆனால் 50 சதவீதம் கொடுத்து விட்டால், மகா புரட்சி என்று சொல்கிறார். அது என்ன புரட்சியோ எனக்குத் தெரியாது.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, இது ஒரு காகிதப் பூ சோஷலிசம். இதிலே எந்த விதமான சோஷலிசமும் இல்லை, முற்போக்கும் இல்லை. பன்னிரெண்டில் ஒரு பங்கு தொகையைக் கட்டிவிட்டு பெயர் மாற்றிக்கொண்டால் அது சோஷலிசமாகிவிடாது.

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, let me be frank about one fact. This is purely a tenant oriented Bill.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பிராங்காகப் பேசியதற்கு நன்றி, வரவேற்கிறேன். இவ்வளவு தெளிவாகச் சொல்லியிருப்பதை வரவேற்கிறேன். ஆனால் சில நிமிஷங்களுக்கு முன்புதான் நிலச்சுவான்தார்கள் 50 சதவீதத்தை எடுத்துக்கொள்ளலாம், மீதியுள்ள 50 சதவீதத்தை, பணம் கொடுக்காவிட்டால், டிக்ரி செய்து எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நண்பர் திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி ஒரு புரட்சிகரமான சட்டத்தை நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம். அதைப் புரட்சிகரமான சட்டம் என்று சொல்லக்கூடாது என்ற எண்ணத்தில் அவர் அப்படிச் சொல்கிறார். அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். இன்னும் இரண்டு ஆண்டுகள் பொறுத்து அல்லது மூன்று ஆண்டுகள்





பொறுத்து அல்லது 1976 தேர்தலுக்குப் பின், காலத்தின் வேகத்தையொட்டி இன்னும் வேகமாக மாறுதல்களைச் செய்ய வேண்டிய அவசியமிருக்கலாம். அப்படி அவசியம் ஏற்படக்கூடிய காலத்தில் வரலாம், வருவதற்காக யோசனை செய்துகொண்டிருக்கிறார்கள், வரக்கூடும், உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று. காம்பன்சேஷன் கேட்கக்கூடாது என்று சட்டம் போட வாய்ப்பு வரும். இதெல்லாம் வராது என்ற நம்பிக்கையில்லை, எதிர்பார்க்கின்றவைகள் தான். இதெல்லாம் வந்துகொண்டேயிருக்கிறது, எதிர்நோக்கிக் கொண்டே இருக்கிறோம் என்பதை மறந்துவிடத் தேவையில்லை.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் வரக்கூடியவைகளைப்பற்றிச் சொன்னார்கள். நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு படியும் உறுதியாக இருக்க வேண்டும். 25 ஆண்டுக்காலமாக நிலச் சீர்திருத்தம் என்று எவ்வளவோ நாம் செய்து வந்து.....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நாங்கள் எடுத்து வைக்கின்ற படி உறுதியானது மட்டுமல்ல, உன்னதமான படியுமாகும்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : தலைவரவர்களே, நோக்கம் உன்னதமாக இருக்கலாம். ஆனால் அதிலே செய்யக்கூடிய திட்டங்கள் உண்மையாக யாருக்கு என்று போடுகிறோமோ, யார் பயன் பெற வேண்டுமோ அவர்களுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். இவ்வளவு அவசரமான முறையில் இந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்திருக்கும் காரணம் அரசியல் நோக்கமே தவிர, உண்மையிலே அந்த விவசாயி, அந்தக் குத்தகைதாரர் பயன் பெற வேண்டும் என்பதல்ல என்று நிச்சயமாக, உறுதியாகச் சொல்ல முடியும். இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம். ஆனால் அதைச் சரியாக ஆராய்ந்து அதனாலே பாதிக்கப்படக்கூடிய எல்லாத் தரப்பு மக்களையும் கலந்து ஆலோசித்துக் கொண்டு, இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் என்ன சங்கடம் இருக்கிறது என்பதை அரசாங்கம் இதுவரையில் தெளிவுபடுத்தவில்லை. இந்த அவசர கோலத்தில் இந்தச் சட்டத்தை செய்வதைத் தவிர வேறு எந்த அம்சத்தையும் நான் எதிர்க்கவில்லை. ஆகவே எங்களுடைய திருத்தங்களைக் கொடுத்திருக்கிறோம். இந்தச் சட்டத்தின் பயன், உன்னதமான பயன் யாருக்குப் போகவிருக்கிறதோ அவர்களுக்குப் பயன்படும் முறையில் அமையப் பெறவில்லை. எங்களுடைய ரிசர்வேஷனை, இந்தச் சட்டத்தால் வரக்கூடிய பாதகங்களை இந்த நோக்கில் எடுத்துக் கூறாமலிருக்க முடியாது. நான்கு

லட்சம் குத்தகைதாரர்களுக்கு நன்மை செய்ய வேண்டும். நாம் இதை இப்பொழுதே சரி செய்யாவிட்டால், நான்கு லட்சம் குத்தகைதாரர்களை ஏமாற்றக்கூடிய சட்டமாக இது இருக்கும். அதனால் வரக்கூடிய குழப்பங்கள், பின் விளைவுகளுக்கு இந்த அரசாங்கம் பதில் சொல்ல வேண்டியிருக்கும் என்ற எச்சரிக்கையைத் தெரிவித்துக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

பி.ப. * THIRU A. R. DAMODARAN : Hon. Chairman, Sir, this
5-30 Bill will have very far-reaching effects on concepts of property, concepts of compensation and concepts in the land-tenurial system and it is for this reason that I rise to support the demand made by the hon. Members that it would have been better if this had been considered by a Select Committee, not with the intention of watering down the Government's avowed objective of giving land to the tiller but to see that in achieving this object, no unnecessary hardship is caused either to the small landowner or to the tenant who is at present tilling the soil. Sir, in bringing forward a Bill of this kind, I would have been happy if the Hon. Minister had been able to give us some details, some statistics as to how exactly this Bill is going to operate when it is brought into force. For example, Sir, since Members have made the charge that there are over 390,000 tenants cultivating 590,000 acres as per the tenancy rights records, I would like to konw whether the Hon. Minister will be able to tell us how many small landowners owning less than five standard acres will take action to evict tenants from their present occupation of the land. The Hon. Minister did not give us any figures when Thiru G. Swaminathan said that over 2 lakhs of small landowners are likely to take action to evict almost 2 lakhs of tenants and occupy that portion as has been guaranteed by this Bill. I am sure that everybody will agree that this was not the main objective of this Bill. The whole trouble is : In all our Land Ceiling Acts and in various measures that we have been bringing forward in our country for the past twenty-five years, we have not got the necessary statistics and that is why whenever the Ministers have moved such far-reaching measures, they have always promised something which, unfortunately, has not materialised when the Bill is actually



brought into effect. The declarations we have been consistently making in this House for the last five years have made the landowners realise that the ownership of land is a wasting asset in our country. I say it is a wasting asset, not because it is immoral or evil to hold the land, and I do not think anybody will say that it is immoral or evil. Although some who have extreme views may express the view that land ownership is in itself bad and that all lands should belong to the tillers, others have argued also that if this concept of land belonging to the tiller is accepted, it would have far-reaching effects on those who work in factories, who work in mills, who work in houses and who work in shops. I shall not go into the merits of that argument, because, as I said, I fully support the idea of the Government handing over the lands to the tenants. But, what I am in total disagreement is the manner in which the Government seek to achieve this objective. As my hon. Friend Thiru Swaminathan said, when land is acquired in Madras for the State Housing Board, say, for about 25 acres of land, compensation at the rate of Rs. 50,000 per acre is paid and the man receives the entire amount in one lumpsum. When my hon. Friend, the Minister for Transport, brought forth his revolutionary Bill to nationalise Road Transport, one of the clauses contained in that Act was that the first instalment of Rs. 10,000 would be paid in one lumpsum to the transport-owner as compensation for the buses taken over and that the balance amount would be paid as per the agreement between the transport-owner and the Government and if no agreement was possible, in a certain manner which was defined, that is, partly in cash and partly in bonds. Sir, in this Bill, although the objective of handing over the land to the tiller of the soil is an unexceptionable objective, I must confess that the Government have been absolutely merciless in so far as the small landowner is concerned. Let us take the specific case of a man owning 5 to 6 standard acres. If he has given 3 or 4 standard acres on lease, he is told that in 12 years ' time, he will be paid the value of the land that will be taken over by the tenant. It really means that if a tenant pays the rent for 12 years from today, then the land that he is tilling will become his own. It also implies that every year this

small landowner who is himself owning 4 or 5 standard acres of land will have to walk to numerous Revenue authorities, the Authorised Officer, the Deputy Tahsildar and the Tahsildar, and you want this small landowner to become a confirmed litigant and to go to Court every year to collect the amount that is rightfully his share. People may say that the ownership of land is in itself bad. I am not prepared to accept that. For decades, Sir, our forefathers were under the impression that land was a good asset and that if a person makes provision for his children by purchasing a few acres of land in a village, he would be making a very good gift to his children. Unfortunately, that legacy does not exist today. In my opinion, it is a sin for any father to give any land to his children, because he will be bequeathing not only wealth but innumerable problems. When such is the case and when the Hon. the Chief Minister, in his Budget statement, remarked that he was going to bring forth a Bill that would result in land belonging to the tiller, he connected that statement with another statement, namely, that he was also thinking of a Tenants Finance Corporation which would finance money for the purchase of such lands. I was reading only the other day, Sir, how the Gujarat Land Development Bank had already authorised its officials to advance money for the purchase of land. I do not know why the Hon. the Minister for Co-operation who has been assured of 78 or 80 crores of rupees during the year by way of various loans to Co-operative institutions has not been active in this regard and has not sought to organise a Tenants Finance Corporation. When he has organised so many Corporations for the growth of mushroom, pine apple, coconuts, banana, etc., it would have been helpful if a Tenants Finance Corporation had been organised. Not only that. Much of the feeling generated by this Bill, much of the agony and much of the anxiety which the small landowners have would have been mitigated to a considerable extent, if the Hon. Minister had merely stated that as per the Land Ceiling Act, such land would vest in the Government and the landowner would get his compensation either in cash or in bonds redeemable within 5 or 6 years. The Government are evading the responsibility of collecting the dues from the tenants. If even the powerful Government, having such a majority



representation in the Legislature, feel they cannot collect the money due from 200 thousand tenants in Tamil Nadu, I am afraid it is something that we cannot swallow so readily. I, therefore, feel very strongly indeed and that is why we wanted a Select Committee. Not that we wanted to prevent the tillers from becoming the owners of the soil but we wanted that justice should be done to thousands of small landowners who were now being forced to sell their lands by an enforced sale and who were also being asked to collect the money in 12 years' time. Sir, in the fixation of purchase value, certain criteria have been laid down, as so many multiples of fair rent.

In the case of religious institutions and charitable endowments, பி.ப.
Sir, only 5 months ago, the Hon. Minister brought forth a Bill 5-40
in which he excluded lands belonging to religious institutions as not coming within the purview of the Land Reforms Amendment Act. Today, there is no doubt this is a very revolutionary measure, in so far as religious institutions, charitable endowments and Mutts are concerned. I am afraid, in spite of the 24th and 25th Amendments to the Constitution. Since freedom of worship has been guaranteed, this particular Bill, although it may come within the purview of agrarian reform, makes serious inroads into the rights and privileges of religious and charitable institutions. Yesterday, the Hon. Minister was pleased to give certain figures regarding the lands owned by the temples, by Muslim Trusts and by Christian Trusts, and the number of tenants who would be benefited if the lands belonging to the temples were taken over by the tenants. Sir, I am one of those who really believe that temples and other charitable institutions are no longer in a position to get rent from the tenants, especially in view of the various Bills that have been brought forth by this Government in the past, particularly the Bill stating that if a tenant paid one year's rent, he would be exempted from payment of all arrears of rent. This has introduced an atomosphere or feeling amongst the tenants that if they are able to delay paying rent, then the Government would come forth with some measure which would enable them to escape from the obligation of payment. While I do not state that all these lands must permanently remain with these institutions—I do not think it is either desirable

or even proper—I must state that in so far as the compensation for such lands is concerned, the market value must be given to such institutions, because in a period of inflation they will not be able to maintain the huge institutions which have to be maintained from current incomes. I believe that in so far as religious institutions and religious and charitable trusts are concerned, the Government must make up their mind, to be more liberal because they are conferring a big right on the tenant. I know it as a landowner and for the past three or four years, I have been selling my lands with all dispatch and I know how happy the tenants are to purchase them at an agreed price without the agency of a Bill of this kind and without the agency of the Government. Most of the landowners who have some foresight have started selling their lands. But the poor man who is being caught to-day is the person who is owning about 5 acres and who is unable to sell the land for some reason or other. I, therefore, fully agree with the view that for the small landowner, it is imperative, absolutely imperative, that a Tenants Finance Corporation should be set up and that funds are obtained for purchase of lands by tenants. Enormous funds are available and since this is a measure which will ensure social justice, the cost of ensuring social justice must be borne as much by the Government as by the small landowner or by the tenant concerned.

Reference was made to agricultural land in urban areas. My hon. Friend Thiru Isvarmurti mentioned it. He did not quote any illustration and I wish, with your permission, to quote a specific illustration concerning Cuddalore. Five years ago when I was the trustee of the Pataleeswarar temple, I asked the Executive Officer to prepare certain details regarding the acreage of agricultural lands owned by the temple, the tenants who were occupying those lands and the annual rents that were being paid either in the form of paddy or in cash to the temple. I found that out of 8 acres of first class agricultural land, the total annual lease amount that was collected was less than Rs. 2,000, that even this sum of Rs. 2,000 had not been collected for the past three or four years and that the tenants were in arrears to the extent of three or four instalments. Sir, I put up a proposal which was accepted by the Hindu Religious and Charitable Endowments Department



for sale of the lands. Out of this 8 acres, we sold 2 acres 45 cents for Rs. 2,75,000 in public auction. The balance of 3 to 4 acres of land is still left adjoining these lands. These lands are now classified as agricultural lands and they are being cultivated by certain tenants and they have not paid their lease amounts for the past three or four years. Under this Bill, the value of the agricultural land is 12 times the fair rent and the fair rent of those lands will be anywhere between 200 to 300 rupees per acre. The value of those lands will be fixed somewhere between Rs. 2,400 to Rs. 3,600 per acre. If the tenant pays the first instalment of Rs. 300, he comes into the ownership of one acre of land which today anyone will be prepared to buy for Rs. 60,000. What does the Hon. Minister consider this to be? Is this a measure of social justice ? Are we encouraging a new gang of speculators ? Should we not atleast stipulate that a tenant who purchases this land must not sell it for 10 years and should put it to agricultural use ? Should we not at least say that until all the instalments are paid, this land should not be sold, mortgaged or in any other way done away with ? It is only because we wanted to investigate all matters and make suggestions to the Minister that we were hoping that a Select Committee would be set up. Unfortunately, the pressure, possibly from the Opposition parties and possibly from the Members of the ruling party itself, has resulted in their rushing through the Bill in such record time, because always if you give time to think and cnsider the provisions in detail, some details will come to light which may not be entirely convenient to the Government. Therefore, this is the problem that is likely to arise in every urban area. In Municipalities like Thanjavur, Tirunelveli, Tiruchirappalli and Madurai you are going to sell agricultural land at Rs. 3,000 or Rs. 4,000 per acre and the very same lands could be sold later at more than Rs. 50,000 or Rs. 60,000 per acre. It is so late that even if we give amendments they are not likely to be accepted. That is why we wanted a Select Committee.

May I refer to another point ? It has been stated that if the tenant pays the first instalment, then he will receive the right of ownership of the land. Very well, Sir. The second, the third and the subsequent instalments will be treated as the first charge

on the land, excepting for the Government dues. Then, how are we going to benefit the tenant by this Bill ? When, after the payment of the first instalment, the tenant who has become the owner of the land wants to go to the Land Development Bank to borrow money from the Bank, what sort of security will he give to the Bank ? He has paid only one instalment and there are 11 more instalments to be paid. Will the Land Deveopment Bank
பி.ப. 5-50 give him money ? If they give money, will it be treated as the first charge on the property or will the instalments due to the owner be treated as first charge ? These are all the complicated questions that arise and that is why I have said that this method of paying in instalments will give rise to many problems and will ultimately mean that after receiving 2 or 3 instalments which may itself take 4 to 5 years, the poor landowner will give up in despair and ultimately the tenant will become the owner of land without paying any more to the owner. When we want justice to be done, it should be done both to the small landowner and to the tenant. This may be a tenant-oriented legislation. At the same time, we have accepted the principle that some amount of compensation or some value should be paid. That is why we are very strongly of the opinion that the Government are evading their responsibility by shoving their responsibility on to the tenants to pay to the landowner, while trying to do their duty as they rightfully should. I have also given notice of certain amendments and I shall explain those amendments when we take up the Bill for clause-by-clause consideration. I would only like to state that the provision that has been made in this Bill that the land should go to the tiller is a desirable thing and I am prepared to accept it. But the provision that has been made that the owner should recover the price in 12 annual instalments is absolutely discriminatory and absolutely one-sided and extremely harsh and merciless in so far as the small landowners are concerned. Thank you, Sir.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப்:** மாண்புமிகு தலைவரவர்களே, குத்தகைதாரர் உரிமைச் சட்டத்தின் பேரிலே பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். குத்தகைதாரர் உரிமைச் சட்டத்தை, முஸ்லீம் லீக் கட்சியின் சார்பிலே நான் ஆதரிக்கின்றேன். இந்தச் சட்டம், புரட்சிகரமான சட்டமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தச் சட்டத்திலே புரட்சி ஒன்றுமில்லையென்று



நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிட்டார்கள். உண்மையிலே, இது சமுதாயத்தில் பெரும் மாற்றத்தை உருவாக்குகிற சட்டம். இந்தச் சட்டத்தை ஆதரிப்பவர்கள் வெறி பிடித்து ஆதரிப்பார்கள். அதேபோன்று இந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் வெறி பிடித்து எதிர்ப்பார்கள். எனவே பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய சட்டமாக இது அமைந்ததன் காரணமாக, இதை ஒரு புரட்சிகரமான சட்டமென்று குறிப்பிடுவதிலே பொருத்தமிருக்கிறதென்றுதான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இது உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் உருவான சட்டமென்று நான் நினைக்கிறேன். இந்தக் கருத்து இன்றைக்கு எல்லோராலும் வரவேற்கப்பட்டாலும், 1,400 ஆண்டுகளுக்கு முன்பு நபிகள் நாயகம் வெளியிட்ட கருத்தாகும். இந்தக் கருத்தை அமல்படுத்த முயலக்கூடிய முயற்சியை நான் முழு மனதுடன் ஆதரிக்கின்றேன். இந்தச் சட்டத்தை, கருத்தின் அடிப்படையிலே, எல்லோரும் ஆதரித்துப் பாராட்டக்கூடியதாக இருந்தாலும், சில திருத்தங்கள் அவசியமென்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சட்டத்தை இங்கே பிரேரேபித்துப் பேசியபோது சொன்னார்கள். ஏனைய மாநிலங்களிலும் இது போன்ற சட்டங்களிருந்தாலும், இந்தச் சட்டம் இந்த மாநிலத்தில் முறைப்படி உருவாக்கப்பட்டு, பிரேரேபிக்கப்படுகிறதென்று பெருமனதுடன் சொன்னார்கள். உண்மை தான். கேரளாவில் இருக்கக்கூடிய இதே போன்ற சட்டத்தில்—நான் படிக்கவில்லை—உள்ள சில ஷரத்துக்களை என்னிடம் சொன்னார்கள். அது சரியென்று ஒப்புக்கொள்ளக்கூடிய நிலையில் இல்லை. ஆகவே இங்கு வந்துள்ள சட்டம், அதை விடச் சிறந்த சட்டமென்பதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். நண்பர் திரு. அறிவழகன் அவர்கள் கேட்டார்கள், "இந்தச் சட்டத்தில் உங்களுடைய நிலை என்ன?" என்று. என்னைப் பொறுத்தமட்டில், இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன். ஆனால் சில திருத்தங்கள் வேண்டுமென்று விரும்புகிறேன். என்னுடைய ஆதரவை, முழு ஆதரவாக அளிக்க முடியவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். socialistic pattern of society —'சமதர்ம சமுதாயம்' எங்கள் குறிக்கோள் என்று சொல்வது Fashion ஆகப் போய் விட்டது. இந்தச் சட்டம் அந்த நோக்கத்தை நிறைவேற்றும் அடிப்படையில் இருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்திலேயுள்ள சில ஓட்டைகள், குறைகள், அந்த நோக்கத்தை ஈடேற்றுவதிலே சரியாக இயங்க முடியாத நிலையை உருவாக்குகின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுபற்றி, நேற்று தலைவர்களுடைய கூட்டத்தில் விவாதிக்க வேண்டுமென்று தெரிவித்தார்கள். நானும் அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டேன்.

[திரு. கே. எஸ். அப்துல் வகாப்] [1973 ஏப்ரல் 3

இந்தச் சபையில் உள்ள பல தலைவர்களும் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். அங்கு சென்று, என்னுடைய கருத்துக்களைப் பேசும்போது, இந்தச் சட்டத்தை முழுக்க முழுக்க எதிர்த்துப் பேசினேன். நான் இந்தச் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையை ஏற்றுக்கொண்டேன். அதிலுள்ள பல ஷரத்துக்களை எதிர்க்கக்கூடிய நிலையில், எதிர்த்துப் பேசக்கூடிய நிலையில், பேசினேன். ஆனால் இன்றைக்கு அந்த எதிர்ப்பை வாபஸ் வாங்கக்கூடிய நிலையில் பேசுகிறேன். காரணம், நான் அங்கே பேசியபோது, என்னுடன் இருந்த தலைவர்களுக்குத் தெரியும். அங்கே பேசியபோது, மத ஸ்தாபனங்களுக்கு 10 ஏக்கர்கள் ஒதுக்க வேண்டுமென்று நான் சொன்னேன். அந்தக் கருத்து, அப்போது, அந்த இடத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இன்று காலை பேரவையில் நடந்த விவாதத்தில் நானும் இருந்து கவனித்துக்கொண்டிருந்தேன். அங்கே என்னுடைய கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, மத ஸ்தாபனங்கள், தர்ம ஸ்தாபனங்களுக்கு 10 ஏக்கர் விதி விலக்கு உண்டு என்ற அறிவிப்பை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதைக் கேட்டு நான் பூரிப்பு அடைந்தேன். அதற்காக மனமார்ந்த நன்றியை, என் இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நான் சொன்ன மற்றொரு கருத்து, 5 ஏக்கருக்குக் கீழ் வைத்திருக்கக்கூடிய தனிப்பட்ட நபர்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டுமென்று சொன்னேன். ஆனால் அந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்படாத நிலைமையைக் காண்கிறேன். அப்படி ஏற்றுக் கொள்ளப்படுவதுதான் நியாயமென்று இப்போதும் சொல்கிறேன். இன்றைக்குச் சட்டம் வருகிறது. அது நிரந்தரச் சட்டமாக இல்லாமல், பின்னால், சிறிது காலத்திற்குப் பிறகாவது, அரசாங்கத்தின் மூலம் ஏதாவது திருத்தத்தைப் பிரேரேபித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுடைய நிலத்தையும் பிரித்துக் கொடுக்கக்கூடிய நிலையுள்ளது. ஒரு ஏழைக்கு அந்த ஒரு ஏக்கரில் தான் சர்வமும் அடங்கியிருக்கிறது. வேறு எந்த வருவாயும் இல்லை. ஒரு ஏக்கர் வருவாயில் குடும்பத்தை நடத்த வேண்டும், குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஏழைகள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய ஒரு ஏக்கரைக் கூடப் பிரித்து, விவசாயிக்குக் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. இந்த அம்சம் நியாயத்திற்குப் புறம்பானதென்று உணர்கிறேன். சமதர்ம சமுதாயம் என்றால், பணக்காரர்களிடமிருந்து வாங்கி ஏழைகளுக்குக் கொடுத்து, கீழே உள்ளவனை மேலே உயர்த்தி, மேலே உள்ளவனைக் கீழே இறக்கி, சமநிலையாக்குவதாகும். ஒரு ஏக்கர் உள்ளவனுக்கு,



1973 ஏப்ரல் 3] [திரு. கே. எஸ். அப்துல் வகாப்]

வருஷத்திற்கு 250 ரூபாய்தான் கிடைக்குமென்று திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். ஒரு வருஷத்தில் 250 ரூபாய் கிடைக்கக்கூடிய இடத்திலிருந்து, பாதியைப் பிரித்து, 125 ரூபாயில் வருஷம் பூராவும் குடும்பம் நடத்துவது என்பது நியாயமா? சாகுபடியாளன் ஒரு ஏக்கரில் பாதியை வாங்கிக்கொள்கிறான். இதேபோன்று பல இடங்களில் அந்தச் சாகுபடியாளன் வேலை செய்கிறான். எனவே அங்கே வேறு பங்கு, இங்கே வேறு பங்கு என்று 5 ஏக்கர்களுக்கு உரிமையாளனாக ஆகிவிடுகிறான். ஒரு ஏக்கருக்குச் சொந்தமான ஏழையை, தன்னுடைய நிலத்தில் பாதியைக் கொடுத்துவிட்டு, மீதி நிலத்தை வைத்துக்கொண்டு குடும்பம் நடத்து என்றால், அவன் பிச்சை எடுத்துத்தான் குடும்பம் நடத்த வேண்டும். வெவ்வேறு இடங்களில் வேலை செய்யக்கூடிய விவசாயி, பரம ஏழையினிடத்திலிருந்து ½ ஏக்கர் வாங்கிக்கொண்டு, மற்ற இடங்களிலும் பங்கு வாங்கிக்கொண்டு, 5 ஏக்கருக்கு உரிமையாளனாக ஆகிறான். ஆனால் இவனுக்கு ½ ஏக்கர்தான். இது நியாயமற்ற நிலை. இந்த நிலையை மாற்றித்தான் ஆக வேண்டும். விவசாயச் சாகுபடியாளனுக்கு, குறைந்த பட்சம் 5 ஏக்கர் கிடைத்ததுபோல, ஏழை ஜனங்கள், குறைந்த பட்சமாக 5 ஏக்கருக்கு உரிமை பெற வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்த விரும்புகிறேன். அதற்கான திருத்தம் இன்றில்லாவிட்டாலும், நாளை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நாளையென்றால், நாளைக்கே அல்ல, மறு வருஷத்தில். ஒரு வருஷத்திற்குப் பிறகு In future

அடுத்து, நான் சொல்ல விரும்புவது, உழவனுக்கு நிலம் சொந்தமென்ற அடிப்படையில் இந்தச் சட்டம் அமைகிறது. சாகுபடியாளர்கள் ஒவ்வொருவரும் உழுபவர்களா? எத்தனையோ சாகுபடியாளர்களை எனக்குத் தெரியும். பெரிய அளவுக்கு, சாகுபடியாளர்கள், கீழே ஆள் வைத்து வேலை வாங்குகிறார்கள். அவர்கள் நிலத்தில் கால்கூட வைக்காமல், 35 ஏக்கர், 50 ஏக்கர் அவர்களுடைய சாகுபடியில் இருக்கிறது. அவர்களுக்கும் நிலம் வாங்கிக் கொடுக்கும் நிலை இருக்கிறது. நியாயமாக உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்றால், சாகுபடியாளர்கள் நிலத்தில் யார் யார் வேலை செய்கிறார்களோ அவர்களுக்கு நிலம் கொடுக்கக்கூடிய நிலையில் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சாகுபடியாளர்களுக்கு நிலமென்ற நிலையை உருவாக்கி விட்டோம். இந்த அடிப்படையிலே உழுபவனுக்கு நிலம் சொல்லவில்லையென்று சொன்னார்கள். சொந்தச் சாகுபடி செய்பவர்களிடம், பலர் வேலைசெய்கிறார்கள். அவர்களும் உழவர்கள்தான். குத்தகைதாரர்களுக்கு உழைக்காமலே கிடைக்கக்கூடிய நிலை வந்தால், தனியாரிடத்தில் வேலை செய்யக்கூடிய

உழவர்களுக்கும் நியாயமான நிலையைக் கொடுக்க வேண்டும். குத்தகைதாரர்களாக இல்லாவிட்டாலும், தனியாரிடத்தில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு, உழுபவனுக்கு நிலம் சொந்தமென்ற கருத்து, உலகம் பாராட்டக்கூடிய கருத்தாக அமையும். அப்பொழுதுதான் அது நியாயமான சட்டமாக அமையும். அந்த நிலைமையில் அந்தச் சட்டத்தைத் திருத்தி, சொந்தச் சாகுபடி செய்பவர்களிடத்தில் வேலை பார்த்து வரக்கூடியவர்களுக்கு நிலம் கிடைக்கும் வகையில் அந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய காம்பென்சேஷன் பற்றியது.
6–00 காம்பென்சேஷன் 12 தவணைகளிலே கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.
பி. ப. ஆரம்பத்திலேகூட நான் சொன்னேன், அதாவது உதாரணத்திற்குச் சொல்கிறேன். ஒரு பரம ஏழை ஒரு ஏக்கர் வைத்துக்கொண்டு ஜீவனம் நடத்தக்கூடியவனாக இருக்கின்றான் என்றால், அவன் அதில் ½ ஏக்கர் கொடுத்துவிட்டால், அந்த ½ ஏக்கர் நிலத்திற்குரிய கிரயத்தை 12 ஆண்டுகள் தவணைகளிலே வாங்க வேண்டும் என்று இருக்கின்றது. ஆக அதை வாங்கினால் என்ன, வாங்காமல் இருந்தாலும் என்ன பலன்? அதிகமான ஏக்கர் நிலம் விடுபவர்களுக்கு மொத்தமாகக் கொடுக்காவிட்டாலும், 5 ஏக்கருக்குள் உள்ளவர்களிடமிருந்து வாங்கக்கூடிய நிலங்களுக்காவது, அதன் சொந்தக்காரர்களுக்கு உடனடியாக அந்தத் தொகை போய்ச் சேரக்கூடிய முறையில்—முழுத் தொகை—வகை செய்ய வேண்டும். நண்பர் திரு. கணபதிநாதன் அவர்கள் கூடச் சொன்னார்கள். நிதி உதவிக் கழகம் என்று பட்ஜெட் ஸ்பீச்சிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இந்த ஆக்டிலே அந்தப் பெயரைக் கூடக் காணோம். அந்த நிதி உதவிக் கழகத்தின் மூலமாக இந்த நிலங்களுக்கான தொகைகள் உடனடியாகக் கொடுக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்தால், அது நியாயமாக அமையும் என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மத ஸ்தாபனங்களுக்கு 100 ஏக்கர்கள் வரையில் விதி விலக்குக் கொடுத்த ஒரு நல்ல செய்கைக்காக எங்கள் சமுதாயத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். வணக்கம்.

* **தவத்திரு குன்றக்குடி அடிகளார்**: மாண்புமிகு தலைவரவர்களே, நிலத்தை உழுகின்றவர்கள், நிலத்தை விலை கொடுத்து வாங்கிக்கொள்கின்ற உரிமையை வழங்குகின்ற இந்தச் சட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கின்றது. அரசினுடைய நல்ல நோக்கத்தை, நல்லெண்ணத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அண்மைக் காலமாகவே நம்முடைய நாட்டில் உள்ள நிலவுடைமை



யாளர்களுக்கும், நிலத்தை உழுபவர்களுக்கும் இடையே நல்ல சுமுகமான உறவு இல்லை. அதனாலே அடிக்கடி மனக்கசப்புகள் ஏற்படுவதும், பாக்கிகள் ஏற்படுவதும் தவிர்க்க முடியாதனவாகிப் பல்வேறு சிக்கல்கள் உருவாகி வந்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் இப்படி ஒரு சட்டத்தைச் செய்வதன் மூலம் அதற்கு ஒரு விடிவு காலம் காணலாமா என்று அரசு எண்ணுவதையும், அதனுடைய நல்லெண்ணத்தையும் என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அந்த வகையில் அரசினுடைய நல்ல நோக்கத்தை வரவேற்றுப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இதைப் புரட்சிகரமான சட்டம் என்று சொல்லுகின்றார்கள். புரட்சியும், புரட்சிகரமாக வளருகின்ற சமுதாயத்திலே மாறுதலும் தவிர்க்க முடியாதவை என்பதிலே நமக்குக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அங்ஙனம் காலத்தில் மாறுதல் ஏற்படுகிறபோது, இரண்டு தரப்பிலும் மனக்கசப்புகள் ஏற்படாமலும், அடிக்கடி வழக்கு மன்றங்களுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படாமலும், வழக்கறிஞர்களுக்கு வேலை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லாமலும் சிக்கல்கள் இல்லாதவாறு அந்தச் சட்டங்களைச் செய்வதென்பது சமுதாயத்திற்கு மிக அவசியமானதாக இருக்கின்றது. கிராம மட்டங்களிலே நில உடைமையாளர்களும், நிலத்தை வாங்குகின்றவர்களும் அதாவது உழுபவர்களுக்கும் இடையே மனக்கசப்புகள் தொடர்ந்து வளரும்படியாக சட்டங்களுடைய விதிகள் அமையுமானால், அதனாலே சமுதாயத்தின் அடித்தளத்திலே மன உறவுகளும், மனிதாபிமானமும்கூட கெடுவதற்கான வாய்ப்பு ஏற்படும். அவைகளையெல்லாம் நம்முடைய அரசு கவனத்தில் ஏற்றுக் கொள்ளவேண்டும். திருவள்ளுவர் சொன்ன "நன்றாற்றலுள்ளும் தவறுண்டு" என்ற அறிவுரைப்படி போல, நல்லதைச் செய்கின்றபோது, அரசு தன்னுடைய நல்லெண்ணத்திற்கு ஏற்றவாறே, அவைகளிலே சிக்கல்கள் இல்லாமல் இரண்டு தரப்பினரையும் பொறுத்த வரையில் அரசைப் பொறுத்த வரையில் அவர்கள் வலிமையற்றவர்கள் என்பதனால், அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்பதிலே இரண்டுபட்ட கருத்துக்கு இடமிருக்காது. அதே நேரத்தில் வலிமை உடையவர்களாக இருப்பவர்களை வலிமையற்றவர்களாக ஆக்கி விடுவதனாலே, அவர்களை மீண்டும் கை தூக்கி விடுவதற்காக புதிய சட்டங்கள் செய்யவேண்டிய சிக்கல்கள் வராமல் அமைவது அவசியம் என்று கருதுகிறேன். உண்மையிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் பூம்புகாருக்குச் சென்று கலைக்கூடத்தைப் பற்றியெல்லாம் ஆய்வுசெய்து வந்திருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தைப் படித்தபோது அதிலே ஒரு வார்த்தை நினைவுக்கு வந்தது. கோவலனை இளங்கோவடிகள் 'கருணை மறவ' என்று

பாராட்டுகின்றார். ஒரு மதம் பிடித்த யானை, வெறிபிடித்து வருகிறபோது, அதாவது மணிமேகலையினுடைய பிறந்தநாள் விழாவினைக் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது, பரிசில் வாங்க ஒரு வறிய அந்தணர், பார்ப்பனர், வயது முதிர்ந்தவர் வந்தார். அந்த யானை அவரைப் பிடித்துத் தூக்கிவிட்டது. கோவலன் பார்த்தான். அந்த முதிய பார்ப்பனரை விடுதலை செய்ய வேண்டும். யானையையும் கொல்லக்கூடாது, கோவலனும் சாகக்கூடாது. ஆக இந்த மூன்று பேரையும் பாதுகாக்கின்ற அளவில் அந்தக் கோவலன் யானையினுடைய மத்தகத்திற்குள்ளே பாய்ந்து அந்த முதிய பார்ப்பனரை விடுதலை செய்து, யானையையும் கொல்லாது, தன்னையும் சாகடித்துக் கொள்ளாமல் இருந்தான் என்பதனாலே, அதிலே மறத்தன்மை இருந்தது, அதே நேரத்தில் கருணையும் இருந்தது, எனவே 'கருணை மறவ' என்று வாழ்த்தினார்கள்.

அதைப் போலவே இந்த நிலச்சுவான்தாரர்களிடத்திலே அகப்பட்டுக்கொண்டிருக்கின்ற உழவர்களைப் பாதுகாக்கின்ற முயற்சியிலே நிலச்சுவான்தார்கள் நசித்துப்போகாமலும், இந்த இரண்டுக்கும் இடையே இருக்கின்ற சமுதாய அமைப்பு சிதையாமலும் இருக்க எப்படிச் செய்யலாம் என்பதை நம்முடைய நிறைமதிக்க வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கூர்ந்த மதியோடு சிந்தித்து அவைகளால் ஏற்படவிருக்கின்ற விளைவுகளை, சிக்கல்களைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், 12 ஆண்டுகளுக்குப் பிறகு விலையை வாங்கிக் கொள்வது என்பது தனி மனிதருக்கு எவ்வளவு சிரமமோ அதைவிட அதிக சிரமம் இந்தத் திருக்கோயில்களைப் பொறுத்தவரையில், என்பதில் யாருக்கும் ஆட்சேபனை இருக்க முடியாது. விலை நிர்ணயம் என்னும்போது, வருகின்ற வருவாயே நியாயமான விலையாக, குத்தகை விலையே நிர்ணயமாகச் செய்யப்பட்டிருக்கின்றது. 12 ஆண்டுகள் கழித்து நம்முடைய திருக்கோயில்கள் நிலைமை என்னவாகும் என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்கக் கூட பயங்கரமாக இருக்கின்றது. தமிழ் நாட்டினுடைய ஒப்பற்ற கலைச் செல்வங்கள், ஒப்பற்ற வரலாற்றுச் செல்வங்களாக இருக்கின்றன. ஒருக்கால் அரசு தீவிரமாக ஏதாவது செய்ய வேண்டுமென்று விரும்பினால், எனக்குக்கூட ஆட்சேபணையில்லை. அவைகளை இந்த சமூகத்தினுடைய பொது உடைமையாக ஆக்கி, அந்த உழுபவர்களை அவற்றிலேயிருந்து பிரிக்க முடியாத உறுப்பினராக அங்கத்தினராக ஆக்கி, அவர்களுக்கு அதிலே ஒரு 'இன்டரஸ்ட்', 'பர்சனல் ரைட்' ஆக ஆக்கிக் கொடுத்து, அவைகள் சிதைந்துபோகாமல் இருக்க அந்தப் பெரிய திருக்கோயில்களையும், அதைச் சார்ந்த உழவர்களையும் கூட்டுறவுப் பண்ணை அமைப்பாக ஆக்குவதிலேகூட எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை. அவைகளை தனி ஒரு உழவருடைய உடைமையாகக் கருதக்கூடாது. அது ஒரு நிறுவனமாக



ஆகிவிட்டது. அரசு எப்படி பொதுமையானதோ அதேபோல் இந்த நிறுவனங்களின் நிலங்கள் சமுதாயத்தினுடைய மையக் கேந்திரங்களாக இருப்பதால், அவற்றிலும் வரலாற்றுப்போக்கில் மிகப்பெரிய விளைவுகள் ஏற்பட முடியும். சென்ற 2, 3 அல்லது 15 ஆண்டுகளில் இந்து அறநிலைய ஆட்சித் துறை அறிக்கையைப் பார்த்தால், அரசு எடுத்துக்கொள்கின்ற அத்தனை முற்போக்குத் திட்டங்களுக்கும், கோடிக்கணக்கில் இந்த நிறுவனங்கள் பணத்தினை வழங்கியிருக்கின்றன. பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் என்றால், கண்ணொளி வழங்கும் திட்டம் என்றால், அந்த நிறுவனங்கள் வாரி வழங்குவதைப் போல, வேறு யாரும் வழங்கவில்லை என்பது தெளிவு. எனவே அவைகளை அரசினுடைய கஜானா என்று சொல்வதற்கு பதிலாக வேறு ஒரு பெயரில் ஒரு கஜானா என்று பொருளே தவிர அவைகளை தனி உடைமைபோல் கருத முடியாமல் இருக்கின்றது. அவைகளுக்கு வேறு ஏதாவது அமைப்பில் அங்கே உழுகின்ற உழவனுக்கு பாதுகாப்புத் தேவை என்பதிலே கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. பாதுகாக்கின்ற போதே, அந்த உழவனை நிறுவனத்தோடு இணைந்து கூட்டு அமைப்பாக, அவனைப் பிரிக்க முடியாத ஒரு பகுதியாக, உறுப்பினனாக ஆக்கி, அந்த நிலத்திலே, அந்தக் கோயில்களுக்கு இருக்கின்ற பூரணத்துவமான உரிமையில் அந்த விவசாயிகளையும் பங்குதாரராக ஆக்கி, ஏதாவது புதிய பார்வையில் அந்த நிறுவனங்களின் அமைப்பு சிதையாமல், அந்தப் பாரம்பரியம் நிலைப்பதற்குரிய முயற்சிகளை எடுத்துக்கொள்வது மிகவும் அவசியமானது. இப்போதுள்ள நிலைமை ஒரு ஆண்டுக்குரிய வருவாயைத்தான் 12 ஆண்டுகளில் தரப்போகிறது. 12 ஆண்டுகளிலேகூட முதல் ஆண்டு தந்து விட்டால், நிலம் அவனுக்கு உடமையாகிவிடுகிறது. கோயில்களைப் பொறுத்த வரையில், அவ்வளவு சுலபமாக வசூல் செய்ய முடியாதென்பது நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. 4 ஆண்டுகளுடைய பாக்கியை வஜா செய்த போது மிகுதியாக பாதிக்கப்பட்டது நம்முடைய திருக்கோயில்கள்தாம். இதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களிடத்திலே, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். காரணம் என்னவென்றால் ஏற்கெனவே திருக்கோயில்களுக்கு சுயேச்சையான அதிகாரம் கிடையாது. இறை பணியாளர்கள், அறங்காவலர்கள், அப்புறம் இந்து அறநிலைய ஆணையர்களிடத்திலே அனுமதி வாங்கித்தான் நடவடிக்கை எடுக்க முடியும். பல்வேறு விதமான சம்பிரதாயச் சடங்குகள் இருப்பதால், அவைகள் உடனடியாக தங்களுடைய உடைமைகளைப் பாதுகாத்துக்

[தவத்திரு குன்றக்குடி அடிகளார்] [1973 ஏப்ரல் 3

கொள்ளவோ அல்லது வேறு வாய்ப்புகளோ இல்லாமல் இருக்கின்றன. எனவே இந்தத் திருக்கோயில்களைப் பொறுத்தவரையில், அறநிலையங்களைப் பொறுத்த வரையில் நிலைமை சரியாக இல்லை. திருவிழா நடத்துவது ஒரு புறம் இருக்கட்டும், பூசைகள் செய்வது அப்புறம் இருக்கட்டும், இந்த மதுரைப் பெருங்கோயில், தஞ்சைப் பெருங்கோயில் போன்றவைகளிலெல்லாம் இப்போது இருக்கின்ற நிலைமை சரியாக இல்லை. நான் இப்போது இரண்டு மூன்று கோயில்கள் பற்றிக்கூட புள்ளிவிவரம் போட்டுப்பார்த்தேன். ஆயிரம் ரூபாய் வருமானம் கொடுத்தால்தான் இந்த வருமானம் வரும். இப்போது நமக்கு 12 ஆண்டும் சேர்த்தால் ரூ. 500 தான் கொடுக்கிறார்கள். ஒரு பங்குக்கு 46 ரூபாய். இங்கே பக்கத்திலே இருக்கின்ற கோவூர் என்ற ஊரில் ஒரு பங்குக்கு ரூ. 46 தான் குத்தகை வருகிறது. இதை நாம் 12 ஆண்டுக்குப் போட்டுப் பார்த்தால் என்ன வரும்? அந்த ரூ. 46 வட்டி வருகிற ஒரு நிலைமை விலையாக நினைத்தால்கூட ஆட்சேபணையில்லை. அந்தமாதிரி நிலைமைகளை அரசு நன்றாக எண்ணிப்பார்த்து, அந்த சமுதாய அமைப்பிலே பல வேலைபாடுகளைச் செய்கின்றபோது, சிறப்பாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஒரு தவணைத் தொகை கொடுத்தபிறகு, அதை வாங்கிக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அது தெளிவாக சட்டத்தில் இல்லை. கோர்ட்டுக்குப் போகலாம், எக்ஸிக்யூட் பண்ணிக்கொள்ளலாம் என்று இருக்கின்றது. ஒரு தடவை பணம் கொடுத்த பிறகு, மறுதடவை நாம் கோர்ட்டுக்குப் போக வேண்டும். அதற்கு முடியாமல் போனால், 3-வது தடவைக்கு கோர்ட்டுக்குப் போக வேண்டும். அப்படியே 4-வது தடவைக்கும் கோர்ட்டுக்குப் போக வேண்டும். இதற்கெல்லாம் மௌண்ட் ஒட்டி வழக்கைப் போடுவது, வக்கீல் பீசும் கொடுத்து கோர்ட்டுக்குப் போய் வருவது சாத்தியமல்ல. அரசு இன்னொன்றையும்கூட கருணையோடு பரிசீலிக்க வேண்டும். இப்போது பெரிய ஜமீன்களுக்கு சட்டம் செய்கின்றபோதெல்லாம் ரொம்பக் கருணையோடு சட்டம் செய்திருக்கின்றார்கள். நிறைய நிதி சமாளித்து, அத்துடன் நிறையப் பொறுப்பையும் அரசு ஏற்றுக்கொண்டது. அந்தச் சட்டங்கள் எல்லாம் வந்தும், கடுமையான வகையில் நிலவுடைமைப் பொறுப்பை இந்தக் கோயில்கள் எல்லாம் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இப்போது மத ஸ்தாபனங்களுக்கு இருப்பது ரொம்பக் குறைவு. அப்போது வழங்கப்பட்ட பாதுகாப்புகள், உரிமைகள்கூட இல்லை. Estate Abolition Act அல்லது Minor Inam Abolition Act-ஐ எடுத்துக்கொண்டால் கூட, அதிலெல்லாம் விதிகள் தாராளமாக இருக்கின்றன. அறநிலையங்களைப் பொறுத்த வரையில், சமுதாயத்தைப் பொறுத்த வரையில், அவைகள் நலியும் நிலைமைக்கு



1973 ஏப்ரல் 3] [தவத்திரு குன்றக்குடி அடிகளார்]

இன்றைக்கு ரொம்பக் கடுமையான சட்டங்கள் வருகின்றன. எல்லாப் பண்டங்களின் விலையும் ஏறிக் கொண்டு வருகிறது. ஆனால் நம்முடைய அரசுப் பார்வையில் நிலத்தின் விலை வரலாக் குறைந்து கொண்டு வருகிறது. 6-10 பி.ப. Minor Inam Abolition Act. பாஸ் செய்த போது, 20 பங்கு விலை என்று அரசே நிர்ணயித்திருக்கிறது. ஆனால் இப்போது 12 பங்கு என்று அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால், நம்முடைய திருக்கோயில்களைப் பொறுத்த வரையில், அவறறை இவைகள் மிகக் கடுமையாகப் பாதிக்கும். தெளிவாகச் சொல்லப்போனால், 1, 2 கோவில்களைத் தவிர மற்றக் கோவில்களை தொல்பொருள் ஆராய்ச்சி இலாகாவிடம் ஒப்படைப்பதைத் தவிர, வேறு வழியில்லாமல் போகும். மதுரைக்கு, திருப்பரங்குன்றம் இருந்து காப்பாற்றினால் தவிர வேறு வழியில்லை. திரு. தென்னரசு அவர்களும் காவேரி மணியம் அவர்களும் திருப்பரங்குன்றத்தை மதுரையிலிருந்து பிரிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள். திருப்பரங்குன்றத்தை மதுரையிலிருந்து பிரித்துவிட்டால், சமயபுரத்தை ஸ்ரீரங்கத்திலிருந்து பிரித்துவிட்டால், இரண்டு கோவில்களை மட்டும் பாதுகாக்க முடியுமே தவிர வேறு எந்தவிதமான வழிபாடு போன்றவைகள் செய்ய முடியாது. நான் மீண்டும் வற்புறுத்த ஆசைப்படுகிறேன். தனி உடைமைகளைப் போல நிறுவன உடைமைகளைக் கருதாமல், நிறுவன உடைமைகளுக்கு நாம் வேறு விதமான பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். உழவர்களுக்கு எவ்வளவு நல்ல பாதுகாப்பு கொடுக்கலாமோ செய்யுங்கள். அவனை நிறுவனங்களோடு இணைத்து, கூட்டுக் குடும்பங்களாக்கி, 'ஸ்டேட் பார்ம்' என்பது போல் அவனைப் பங்குதாரனாக்கி, கோவில்களையும் பங்குதாரர்களாக்கி, அவர்களுக்கு வேண்டிய நலன்களைச் செய்யுங்கள். அதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது. உழவர்கள் சமுதாயத்தின் முதுகெலும்புபோல இருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்புக்குரிய அனைத்து விதிகளையும் நாம் எந்த வகையிலும் மறுக்கத் தயாராயில்லை. அதே சமயத்தில் இன்னொரு புறத்தில் கூரையைப் பிரித்து குளிர் காய்வதுபோல் ஒரு கம்பை வைத்து எரித்து குளிர் காய்வதுபோல் ஆகிவிடக்கூடாது. கூரை என்பது சமுதாயத்தினுடைய பாதுகாப்புக்குத் தேவை. குளிர் ரொம்ப அதிகமாக இருந்தாலும்கூட, அதில் ஒரு கம்பைப் பிரித்து நாம் குளிர்காய்ந்துவிட்டால், சமுதாயத்துக்கு காலப் போக்கில் என்ன ஆகும் என்பதை ஆராய்ந்து இந்த நிறுவனங்களைப் பொறுத்த வரையில் நம்முடைய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இந்தத் தடவை நம்முடைய அறநிலைய அமைச்சர் அவர்கள் திருக்கோவில்களில் வேலை செய்கிறவர்களுக்கு ஊதிய

உயர்வெல்லாம் அளித்தார்கள். இந்தச் சட்டம் வந்த பிறகு எந்த ஊதிய உயர்வைப் பற்றியும் கனவிலே நினைத்துப் பார்க்க முடியாது. உடனடியாக ஆட்குறைப்புத் திட்டம் திட்டுவதைத் தவிர . . .

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களே இது மாதிரிச் சட்டம் வரும் என்று தெரிந்து சொன்னார்களா, தெரியாமல் சொன்னார்களா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தெரிந்து தான் சொன்னேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிந்து சொன்னேன் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எப்படி நிறைவேற்ற முடியும்? காலையிலிருந்து குறுகிய காலம் தான் இருந்தாலும்கூட, பல்வேறு திருக்கோவில்களின் விவரங்களை வாங்கிப் பார்த்ததில், நடைமுறைத் திட்டங்களில் குறைந்தது 30-லிருந்து 10 விழுக்காடு வருமே தவிர, அதிலே எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. ஒருக்கால் தற்போது இவ்வளவு சம்பளம் கொடுக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் நினைத்திருக்கலாம். அவர்கள் பெருந்தன்மைக்கு நம்முடைய நன்றி, பாராட்டு. ஒரு நிலையை நினைத்துக்கொண்டு இந்த 10 ஸ்டாண்டர்டு எக்கர் உள்ள நிறுவனங்களுக்கு விதிவிலக்கு என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் வகாப் சொன்னார். கிராமப் புறங்களில் 10 ஸ்டாண்டர்டு எக்கருக்குள் இருக்கிற கோவில்கள் இந்தச் சட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்று பொருளே தவிர 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலங்களை எல்லா நிறுவனங்களும் வைத்துக்கொள்ளலாம் என்பது இதில் பெறப்படுகிற விதியல்ல. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், ஒரு இடத்தில் திரும்ப நிலங்களை சாகுபடிக்கு எடுத்துக்கொள்கிற ஒரு நிலச்சுவான்தார் 5 ஸ்டாண்டர்டு எக்கர் நிலம் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் அறநிலையங்கள் பொது டிரஸ்ட் சட்டத்தின்கீழ் 20 ஏக்கர் சாகுபடிக்கு வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அந்த 20 ஏக்கரை ஒவ்வொரு நிறுவனமும் குறைந்த பட்சம் வைத்துக்கொள்ளலாம், அதற்கு மேலேதான் இந்தச் சட்டம் அமுலாவது என்று சொன்னால், ஓரளவு அந்தக் கோவிலிலுள்ள பாத்தியங்கள் போன்றவைகளுக்கு . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** விளக்கம் சொல்லி விடுகிறேன். ஏற்கெனவே பேசும்பொழுது கூடச் சொன்னேன். 'பப்ளிக் டிரஸ்ட்' சட்டத்தின்கீழ் ஒவ்வொரு அறநிலையமும், [illegible], 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் சொந்தப் பயிருக்கு வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது.



சொந்தப் பயிருக்கு வைத்துக்கொள்ளும் நிலத்தைப்பற்றிப் பிரச்சினை இல்லை. அந்த நிலம் அப்படியே இருக்கிறது. இப்போது அதற்கு மேல் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தைப் பற்றித் தான் பிரச்சினை. அதற்கு மேல் அவர்களுக்கு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் கொடுப்பதைப்பற்றித் தான் பிரச்சினையே தவிர தாராளமாக வைத்துக்கொள்ளலாம். குத்தகைக்கு விடப்பட்ட நிலத்தைப் பற்றித் தான் பிரச்சினை. பெர்சனல் கல்டிவேஷன் சட்டத்தில் இருப்பது பற்றி ஆட்சேபணையில்லை.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பல நிறுவனங்கள் அந்த 20 ஏக்கர் நிலத்தை சாகுபடிக்குக் கட்டாயமாக வைத்துக் கொள்ளலாம் என்ற நிபந்தனையைப் பின்பற்றவில்லை. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் என்னுடைய நிறுவனங்களில் கூட இந்த 20 ஏக்கரை வைத்துக் கொள்ளவில்லை. ஆதலால் இப்படிப்பட்ட ஒரு நிபந்தனை வரும், சங்கடம் வரும் என்று எதிர்பார்க்காமல் இருந்திருக்கிறார்கள். எனவே இந்த 20 ஸ்டாண்டர்டு ஏக்கரை ஏற்கெனவே சாகுபடிக்கு வைத்திருந்தாலும் வைத்தில்லாது போனாலும், அந்த நிறுவனங்களுக்குக் கொடுப்பது என்று இருந்தால் தான் நல்லது. ரேஷன் காலத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன். கேள்விப்பட்ட செய்தி ஒரு மூர்த்திக்கு ஒரு திருமேனிக்கு ஒரு ஆளுடைய ரேஷன் என்று கொடுத்ததாக. நாம் ஒரு குடும்பத்திற்கு 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைக்கிறபொழுது, பெரிய திருக்கோவில்களைப் பார்க்கிறபொழுது, அவைகள் சாகுபடிக்கு வைத்திருந்தாலும், வைத்துக்கொள்ளாது போனாலும், அவைகளுக்கு உயர்ந்தபட்ச வரம்பு நிலத்தை எடுத்துக் கொடுக்கிற பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். பல நிறுவனங்கள் அதை வைத்துக்கொண்டிருக்காது, கட்டுப்படியாகவில்லையென்ற காரணத்தினாலோ அல்லது வேறு பல காரணங்களுக்காகவோ. பொதுவாக இந்த சமூகத்தைப் பொறுத்த வரையில், அது ஒரு விழிப்பான சமூகம். அதுவும் அறநிலையங்களைப் பொறுத்த வரையில் ஒரு விழிப்பான சமூகம் என்று சொல்ல முடியாது. அந்த வகையில் மற்ற மத ஸ்தாபனங்களைவிட இவர்கள் ரொம்ப பலவீனப்பட்டவர்கள் என்பதை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்களும் புரிந்து கொள்ளாமல் அல்ல. அதாவது தவறிப் போய் ஏதாவது செய்ய வேண்டுமானாலும் 25 ஆண்டுக் காலமாக உங்களுடைய அறநிலையங்களின் சட்டத்தால் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. மற்ற நிறுவனங்கள் மாற்று செய்வதற்குரிய வழிவகைகள் இருந்தது போல், இவர்களுக்கு வழிவகைகள் இல்லை. இப்படியெல்லாம் வரும் என்று பலர்

மாற்று வகைகளைச் செய்திருப்பார்கள். ஆனால் இந்து சமய நிறுவனங்கள் அப்படி மாற்று ஏற்பாடு செய்ய வசதியில்லாமல் ஏற்கெனவே சட்டத்தின் மூலம் மேலாதிக்கம் செய்யப்பட்டிருக்கிறது. அவைகளை நாம் புரிந்துகொண்டு, இந்த 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் பொது டிரஸ்டின்கீழ் வைத்திருக்கலாம் என்பதை நிபந்தனையின்றிச் செய்து, எல்லா நிறுவனங்களும் ஏற்கெனவே வைத்திருந்தாலும், வைத்து இல்லாது போனாலும் அவற்றை உடைமையாக்கிச் சாகுபடி செய்யலாம் என்பது போல் செய்வது ரொம்ப அவசியமானது. பிறகு 12 பங்கு என்று நிர்ணயித்திருக்கிறார்கள். நான் திருத்தத்தை வற்புறுத்தத் தயாராக இல்லை. நியாயமாகக் கொடுக்க வேண்டிய வருமானத்தை விலையாக நிர்ணயித்திருக்கிறார்கள். 'Natural Justice' இயற்கை நியாயம் என்று சொல்லுகிறபோது, என்ன வருமானம் வருகிறதோ அந்த வருமானத்தைத் தரக்கூடிய மூலதனத்தைத் தான் அதனுடைய விலையென்று நிர்ணயிப்பது ஒரு இயற்கையான வழக்கு. ஒருக்கால் அரசுக்கு அதிலே உடன்பாடு இல்லாதுபோனாலும் 12 என்பதை 10 என்று வைத்துக்கொண்டாலும் பாவாயில்லை. ஆனால் உடனடியாக ஒரே தடவையில் கொடுக்கும்படி செய்வது, நிறுவனங்களைப் பொறுத்தவரையில், நல்லது. அந்த நிதி உதவிக் கழகத்தைப் பொறுத்தவரையில், நான்கூட அந்த நம்பிக்கையில்தான் இருந்தேன். அதாவது அந்த நிதி உதவிக் கழகம் வருகிறது; உடனடியாகப் பணத்தைக் கொடுக்கிறார்கள்; அதை வாங்கி, அற நிலையங்களை எங்கேயாவது முதலீடு செய்யச் சொல்லலாம்; அதிலிருந்து வரக்கூடிய வட்டியிலிருந்து நிர்வாகத்தை நடத்தலாம் என்று. ஆனால் இப்போதிருக்கிற நிலைமையில், அதாவது துண்டு துண்டாகக் கொடுப்பதால், இந்த அறங்காவலர்கள் பலர் அதைத் திருவிழாக்களுக்காகச் செலவழித்து விடுவார்கள். அந்தப் பணம் மூலதனமாகச் சேராது. ஏனென்றால் வருமானத்தை மட்டும் கொடுப்பதால் மூலதனமாகச் சேர வழியில்லை. ஆதலால், 10 ஆண்டுகள் கழித்து அந்த நிறுவனங்களை நடத்துவதில் சிக்கல்கள் ஏராளமாக ஏற்படும் என்பதை நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தோடு எண்ணிப் பார்க்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். கூடுமான வரையில் ஒரே தடவையில் கொடுக்க வேண்டுமென்று சட்டம் செய்வது தான் பாதுகாப்பு. திரும்பத் திரும்ப அந்த நிலச்சுவான்தாரர்களுக்கும் மற்றவர்களுக்கும் குறிப்பாக நிறுவனங்களுக்கும் இடையே வழக்குகள் ஏற்படும்படியான ஒரு சட்டம் ஏற்பட்டு, அதன் மீது பல வழக்குகள் உருவாவது சமூகத்தின் மன உறவைக் கெடுத்துவிடுகிறது. அந்த அடிப்படையில் மனக்கசப்பு உண்டாக்கும் என்று கூற ஆசைப்படுகிறேன். முன்பு கூட நிலச்



சீர்திருத்தம் பற்றி பேசுகிறபொழுது அரசுத் தரப்புக்கு, என் தரப்பிலிருந்து எடுத்துச் சொல்லப்பட்ட செய்தி, இந்த நிலங்களை எடுத்துக் கொள்வதைப் பொறுத்த வரையில் ஆட்சேபணையில்லை. ஏனென்றால் நிலச்சுவான்தார்கள் என்று சொன்னால், கசப்பாகப் பார்க்கிற மனோபாவம். வருமானம் வருவாகாமல் அதற்குத் திரும்பத் திரும்பக் கொடுக்கிற தொல்லை அதிகமாக இருக்கிறது. ஆனால் இந்த நிறுவனங்கள் நெடிய வரலாறு பாதிக்காமல் இருப்பதற்குரிய சூழ்நிலையைச் செய்யவேண்டும்.

அடுத்து, போன தடவை நம்முடைய சட்டம் வந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் கூட ஒரு குறிப்பிட்ட வழக்கைச் சொன்னார். இதில் நிலச்சுவான்தாரர்களாக இருக்கிறவர்கள், வருமான வரி கட்டுகிறவர்கள். விவசாய வருமானவரி கட்டுகிறவர்கள் விவசாயிகளாக இருந்தால், அவர்களுக்கு இந்த நிபந்தனை செல்லாதபடிக்கு பாதுகாப்புத் தர வேண்டும். பலர் வருமான வரி கட்டுகிறவர்கள் கூட 10 ஏக்கர், 5 ஏக்கர் கோவில்களின் நிலத்தை வாங்கி வைத்திருக்கிறார்கள். அவர்கள் வருமான வரி, விற்பனை வரி கட்டுகிறார்கள். மற்றும் வியாபாரம் செய்கிறார்கள். அவர்கள் உழவர் என்று வருவதனாலேயே, வேறு துறையில் அவர்களுக்கு வருமானம் இருப்பதால், அவர்கள் பாதுகாப்புக்குரியவர்கள் அல்ல. எனவே உண்மையாக விவசாயிகளாக இருக்கிறவர்களுக்கு விவசாய வருமான வரியோ வருமான வரியோ கட்டாதவர்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து பாதுகாப்புத் தந்து அவர்களுக்கெல்லாம் சலுகையை ரத்து செய்தால், நேரடியாக நிலங்கள் உழவர்களுக்குப் போய்ச் சேரும். அப்படிச் செய்வதும் அவசியமானதென்று நான் கருதுகிறேன். இப்படியாக இந்தச் சட்டத்தின் நல்ல நோக்கங்கள் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அவைகளில் இருக்கிற பின் சிக்கல்களை கொஞ்சம் விரைவின்றி தீர்மானமாக ஆய்வு செய்வதில் அரசு கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக திருக்கோவில்களைப் பொறுத்த வரையில் நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவைகள் எல்லாம் நிறுவனங்கள். தமிழக அரசைப போல அவைகள் ஒரு சார்பு நிறுவனங்கள். 'ஸ்டேட் இன்ஸ்டிடியூஷன்ஸ்'. நேராகவே 80 விழுக்காடு கோவில்கள் உங்களுடைய ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட்டன. நீங்களே காசோலை போட்டு எடுக்கக்கூடிய அளவுக்கு உங்களுடைய ஆட்சிப் பொறுப்பில் வந்திருக்கிற நிறுவனங்கள் கூட ஏன் பாதிக்கும்படியாகச் செய்ய வேண்டும்? அவர்களுக்கும் பாதுகாப்புத் தந்து உழவர்களுக்கும் பாதுகாப்புத் தந்து, தெளிவாகச் சொன்னால், இந்த உழவர்களையும் இந்தக் கோவில்களையும் பங்குதாரர்களாகச் சேர்த்து ஏதாவது

பண்ணைகளை அமைக்க முடியுமா என்று ஆராய்ந்து பார்க்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

பி.ப. 6-20 **மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, எப்படி இரண்டு பேருக்கும் பாதுகாப்பு கொடுக்க முடியும்? இரண்டு பேருக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமானால், எந்த முறையில் இந்தச் சட்டம் அமைய வேண்டுமென்று பரிசீலனை செய்யலாம். கோவிலுக்குச் சொந்தமாக நிலமும் இருக்கிறது. குத்தகையும் வந்து கொண்டிருக்கிறது. குத்தகைதார்—நிலச்சுவான்தார் ரிலேஷன்ஷிப்பைப் போக்க வேண்டுமென்பதுதான் சட்டத்தின் நோக்கம். இதன் மூலம் பணமும் கிடைக்கிறது, பாதி நிலமும் கிடைக்கிறது. யாரோ குத்தகைதாரரை நம்பிக்கொண்டிருக்காமல், இவ்வளவு வசதி சட்டத்தில் செய்திருக்கிறது. கோவிலுக்கு எப்படி ஆபத்து உண்டாகும்?

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, பாதி நிலம் கிடைக்கிறது என்று சொல்கின்றார். எப்படி என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, ரிசம்ப்ஷன் பவர் கொடுத்திருக்கிறார்கள். இதில் உங்களுக்கு நிச்சயமாகப் பயன் கிடைக்கும். இதனால் நிலச்சுவான்தாரர்களுக்குப் பயன் கிடைக்கும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, இரண்டு பேருக்கும் பாதுகாப்பு கொடுப்பது பற்றியும், திருக்கோவில்களைப் பற்றியும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை அன்புகூர்ந்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு தொழில்களுக்கெல்லாம், தனியார் துறையில் கம்பெனிகளில் இருப்பதுபோல் விவசாயத் துறையில், இந்த மாதிரி விவசாயிகளைப் பங்குதாரர்களாக்கி, ஒரு கூட்டுப் பண்ணைபோல் ஆக்கி, அவர்களுக்கும் உரிமை, இவர்களுக்கும் உரிமை இருக்கிறது என்ற முறையில் அந்த இரண்டு பேருக்கும் கூட்டுச் சொத்தென்று ஆக்கினால், அவர்களோடு கோவில்களும் இணைந்து அவர்களுடைய நலன்கள் எல்லாம் நிச்சயமாக இந்த நிறுவனங்களால் பாதுகாக்கப்பட வேண்டுமென்று காரண்டியும் கொடுத்தால், இந்தத் தலைமுறையில் இந்து சமுதாயத்திற்கு இந்துக் கோவில்களே பாதுகாப்பாக இருந்தன என்ற அந்த மாற்றத்தைச் செய்யலாம் அல்லவா? ஆகவே அதிலே இரண்டு பேருக்கும் பாதுகாப்பு இருக்குமென்று நான் கூறிக்கொண்டு இதை அமைச்சர் அவர்கள் ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. எம். எம். பக்கர் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் குத்தகைதாரர் பூமி சட்டத்தின் மீது நான் சில கருத்துக்களைச் சொல்வதற்கு ஆசைப்படுகிறேன். பொதுவாக இந்தச் சட்டத்தின் நோக்கத்தை நாங்கள் ஆதரித்தாலும், இது அவசர கோலத்தில் அள்ளித் தெளிப்பதுபோல் மிக மிக அவசரமாகவும், தீவிரமாகவும் கொண்டுவரப்பட்டிருக்கின்ற காரணத்தால், இதிலே சிறு நிலச்சுவான்தாரர்கள் பெருமளவில் பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாகவே 1952-ஆம் ஆண்டிலிருந்து எந்த அரசு இங்கே வந்தாலும், விவசாயத் துறையிலே கையை வைத்து, மேலும் மேலும் நில உடைமையாளர்களுடைய உரிமையைப் பாதிப்பதான ஒரு கொள்கையைக் கையாண்டிருப்பதாகத் தான் எனக்குத் தோன்றுகிறது. அதுவும் 25-வது அரசியல் சட்டத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதற்குப் பிறகு, எல்லா மாநில அரசுகளும் இதிலே கை வைப்பதற்கு சட்டங்கள் கொண்டுவருவதில் முக்கியத்துவம் காட்டுகின்றன. காரணம் மத்திய அரசினுடைய தலையீடு இல்லாமல், மாநில அரசுகள் கை வைக்கக்கூடிய தாராளமாகக் கை வைக்கக்கூடிய ஒரே துறை விவசாயத் துறை என்றிருப்பதுதான். அப்படித்தான் இருக்க முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. பொதுவாக பைபிளிலே இந்த விவசாயத்தைப்பற்றிச் சொல்கின்றபோது, இஸ்லாமியர்களுடைய நம்பிக்கையிலும் கூட, முதல் முதலில் நிலத்தைக் தோண்ட ஆரம்பித்ததே ஒரு கொலையைச் செய்துவிட்டுத்தான் என்று பைபிள் சரித்திரம் கூறுகிறது. முதலிலே மனிதன் பூமியைத் தோண்ட ஆரம்பித்ததைப்பற்றி ஒரு சகோதரன் இன்னொரு சகோதரனைக் கொலை செய்து விட்டு என்ன செய்வது என்று திண்டாடிய நேரத்தில் இரண்டு காகங்கள் வந்ததாகவும், அவைகளில் ஒன்று செத்து விட்டதாகவும், உடனே இன்னொரு காகம் குழியைத் தோண்டி அதைப் போட்டு விட்டபோது அதைப் பார்த்திருந்த கொலை செய்தவனும் செத்தவனைப் புதைத்ததாகவும் சரித்திரம் உண்டு.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** அந்தக் காகம் எதைச் சாப்பிட்டது? ஏதாவது சாப்பிட்டிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

**திரு. எம். எம். பக்கர் :** தலைவரவர்களே, இந்த விவசாயத் துறையில் இவ்வளவு கஷ்டம் இருப்பதற்குக் காரணம் அதன் தலையிலே அடிக்கடி கை வைப்பதுதான். இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தை நான் ஆதரிப்பதாகச் சொன்னேன். எனக்கு முன்னால் பேசிய எங்களுடைய கட்சியின் தலைவர் அவர்கள் உழுபவனுக்கு நிலம் அளிப்பது நபிகள் நாயகம் அவர்

களால் சொல்லப்பட்ட கருத்து என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அந்த நிலச் சொந்தக்காரர்களுடைய உரிமையை சரியான காம்பென்சேஷன் இல்லாமல் எடுத்துக்கொள்ளக் கூடாது. அது எல்லா மதங்களினுடைய கொள்கையாகத்தான் இருக்கும் என்று நான் உணருகிறேன். அமைச்சர் அவர்கள் அந்தக் காம்பென்சேஷன் எல்லாம் சரியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது, அதை அவர்கள் வாங்கிக்கொள்ளலாம் என்று இந்தச் சட்டத்தைப் பிரேரேபிக்கும்போது சொன்னார்கள். ஆனால் நான் தஞ்சை மாவட்டத்தில் பிறந்த விவசாயி என்ற முறையில், இந்தச் சட்டம் அந்தப் பகுதிகளில் எப்படிப் பட்ட விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நான் சிறிது சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர், நான்கு ஏக்கர் என்று சிறு, சிறு நிலங்களை வைத்துக்கொண்டு வாழ்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் ஒரு வழக்கமுண்டு. பொதுவாக, அதுவும் குறிப்பாக முஸ்லீம்களைப் பொறுத்த வரையில், பலர் வெளிநாடுகளுக்குச் சென்று பிழைக்கின்றவர்கள். சிலோன், பர்மா, இந்தோனீசியா, மலேசியா, ஹாங்காங் போன்ற நாடுகளுக்குச் சென்று பிழைக்கின்றவர்கள். அவர்களெல்லாம் ஏதோ வெளிநாடுகளுக்குச் சென்று கொஞ்சம் பணம் சம்பாதித்துக் கொண்டு வந்து, இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் நிலம் வாங்கி தங்களுடைய குடும்பங்களுக்கு இங்கே வைத்து விட்டு, திரும்பவும் போய் விடுகிறார்கள். ஒரு முறை போனால் பத்து வருஷம், ஐந்து வருஷம் என்ற காலத்திற்கு வருவதில்லை. இங்கே தங்கியுள்ள அவர்களுடைய குடும்பங்கள் இந்தச் சொத்தை வைத்துக் கொண்டு தான் ஜீவனம் நடத்த வேண்டும். இந்த மாதிரியான குடும்பங்கள் ஆயிரக்கணக்கிலுண்டு. இந்தச் சட்டத்தின் மூலமாக விவசாயிதான் நிலத்தை எடுத்துக்கொள்ளலாம். அதே சமயத்தில் சிறு நிலச் சொந்தக்காரர்கள் நில உரிமையாளர்கள் வேண்டுமானால், பாதியை எடுத்துக்கொள்ளலாம் என்று இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், அதை எடுத்துக்கொண்டு என்ன பண்ணுவது என்பதுதான் பிரச்சினை. இங்கே வீட்டில் குழந்தைகள், பெண்கள், விதவைகள், தான் இருப்பார்கள். அவர்கள்தான் இந்தக் குடும்பத்தை நடத்திக்கொண்டிருப்பார்கள். வீட்டுக்குச் சொந்தக்காரன் மலேசியா, ஹாங்காங், பர்மா போன்ற இடங்களுக்கு ஏழு வருஷம், எட்டு வருஷத்திற்கு முன்னால் போயிருப்பான். அவர்களிடமிருந்து தகவலே இருக்காது.

(மாற்றுத் தலைவர் திரு. க. அறிவழகன் தலைமை)

அப்படிப்பட்ட இடங்களில் பாதியை நில உடைமையாளர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னால், எடுத்துக்கொண்டு அவர்கள் என்ன செய்ய



முடியும்? அவர்கள் போய் விவசாயம் செய்ய முடியாது. இந்த நிலைமையில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் டிஸ்லொகேட் ஆக்கப்படுகின்ற ஒரு தன்மை தஞ்சை மாவட்டத்தில் நிச்சயமாக ஏற்படவிருக்கிறது. அதற்குத்தான் காம்பென்சேஷன் கொடுத்து விட்டோமே என்று அமைச்சர் அவர்கள் சொல்லக் கூடும். காம்பென்சேஷன் எங்கே கொடுத்திருக்கிறார்கள்? காம்பென்சேஷன் கொடுக்கப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பத்தாயிரம் ரூபாய் காம்பென்சேஷன் வருமென்றால், அதை பன்னிரண்டு வருஷத்தில் கட்டச் சொல்லியிருக்கிறார்கள். இது சரிதானா, அந்தப் பணம் எப்பொழுது கிடைக்கும், அது வரையில் என்ன செய்வது என்று கேட்டால், 5 சதவிதம் வட்டி போட்டுக் கொடுக்கச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்ல முடியும். இதை வட்டி போட்டுக் கொடுப்பது என்றுதான் சொல்ல முடியுமே தவிர, காம்பென்சேஷன் என்று சொல்ல முடியாது. அப்படித்தான் நினைக்க முடிகிறதே தவிர, காம்பென்சேஷனாகாது. ஒவ்வொரு ஆண்டும் குத்தகை பாக்கியை அளந்து விட்டு, பன்னிரண்டு ஆண்டுகளில் காம்பென்சேஷனைக் கழித்து விடலாம் என்று சொல்லக்கூடும். ஒவ்வொரு ஆண்டும் குத்தகையைத் தந்து விடுவதானால் அந்தப் பணத்தை எப்படி சேமித்துப் போட்டு வைக்க முடியும்? அவன் ஜீவனத்திற்குச் செலவு செய்து விடுவானே தவிர, அந்தப் பணத்திலிருந்து ஒரு காசு கூட மிஞ்சப் போவதில்லை. பெரியவர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 5 சதவிதம்தான் ஆகிறது என்று எடுத்துக்காட்டிப் பேசினார். நான் என்ன சொல்கிறேன் என்றால், நிலத்தை எடுத்துக்கொள்ளுங்கள், அதற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒரு தொழில் செய்வதற்கு வழி செய்து கொடுங்கள். நிலம் அவர்களுக்கு வேண்டாம். உழுபவர்களுக்கே இருக்கட்டும். ஐந்து ஏக்கர் நிலத்தையுமே எடுத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு குறைவாகக் கொடுத்தாலும், ஒரே தவணையாகக் கொடுத்து விடுங்கள். அவர்கள் ஏதாவது ஒரு தொழிலை ஆரம்பித்துக் கொள்ளலாம். நிலத்தைக் கொடுத்து விட வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். அதற்குப் பிறகு கிராமங்களில் என்ன தொழில் செய்ய முடியும்? தஞ்சாவூர் மாவட்டம் போன்ற பகுதிகளில் விவசாயத்தை விட்டால் வேறு என்ன தொழில் இருக்கிறது? இதனால் நிலைமை என்னவாகப் போகிறது? அரை ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருக்கின்றவர்கள் கஷ்டப்படப் போகிறார்கள். அங்கே நெருக்கடி ஏற்படப் போகிறது. அது மட்டுமல்லாமல், அங்கே சிறு விவசாயிகள் குடும்பங்களிலே பெரிய டிஸ்லொகேஷன் ஏற்படப் போகிறது. இந்த மாதிரியான சூழ்நிலையில் அவர்களுக்கு இதற்குப் பின்னால் என்னென்ன வழி வகைகளைச் செய்வது என்பதுபற்றி இந்த அரசு ஒன்றுமே சொல்லவில்லை. ஆகையினால் சர்க்கார் பணத்தைக் கொடுத்து விட்டு விவசாயி

களிடமிருந்து அரசாங்கம் வாங்கிக்கொள்ளலாம். அமைச்சர் கணக்குப்படி இரண்டு லட்சம் உரிமையாளர்கள் தங்களுடைய நிலங்களை எடுத்துக்கொள்ள
பி. ப, 6-30 லாம். இந்த இரண்டு லட்சம் உரிமையாளர்களும் ஒரு வருஷம் குத்தகை தருவார்கள். 12 வருஷத்தில் ஒரு வருஷம் தருவார்கள். அடுத்த வருஷம் அவர்களிடமிருந்து யார் வாங்குவது? அவர்கள் பேருக்கு பட்டா மாறுவதற்கு ஒரு வருஷம் குத்தகை தருவார்கள். அவர்கள் வாங்கிக்கொள்ளலாம். கோர்ட்டுக்குப் போகலாம் என்றால் ஒரு ஆண்டில் இரண்டு லட்சம் விவசாயிகள், இரண்டு லட்சம் நிலச்சுவான்தார்கள் என்று 4 லட்சம் பேர் கோர்ட்டில் போய் நிற்கவேண்டிய நிலைமை வரும். போலீசை வைத்து, அதிகாரிகளை வைத்து எடுத்துக்கொள்ளலாம் என்றால், முடியாது. கிராம நிலைமையைப்பற்றித் தெரியாமல் இருக்கிறார்கள். நாங்கள் குத்தகைக்கு சில நிலங்களை விட்டிருக்கிறோம். கொடுத்தால் தான் வாங்க முடியும். கோர்ட்டில் போய் டிக்ரி வாங்கினால், 'போசஷன்' எடுக்க முடியுமா என்பது சந்தேகம். அப்படியே போனால், வம்புச் சண்டை வரும். கொலை கூட நடக்கலாம். அதனாலே சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு எந்தவிதமான பலனும் ஏற்படப் போவதில்லை. இரண்டு ஏக்கர் நிலம் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். அதில் பாதியை எடுத்துக்கொள்வது என்றால், எப்படி எடுத்துக்கொள்வது? யார் விவசாயம் செய்வது? எல்லோரும் கேட்க ஆரம்பிப்பார்கள். 4 லட்சம் பட்டாதாருக்குப் பிரித்துக் கொடுக்கும்போது, அவர்கள் எடுத்துக்கொண்டால் விவசாயிகளின் கதி என்ன ஆவது? அதையெல்லாம் யோசியாமல், அவசரமாகக் கொண்டு வந்து விட்டார்கள், நம்முடைய காருண்ய அரசு அவசரமாகக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். சட்டம் போட்ட நோக்கத்தை ஆதரிக்கிறேன். ஆனால் அதிலுள்ள குறை நிறைகளைக் களைவதற்கு என்று ஒரு பொறுக்குக் கமிட்டி அமைக்க வேண்டும். ஏனோ அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்ளக் கூடாது என்று நினைக்கிறார்கள். நான் இப்போது பேசுவது எல்லாம் எதிர்த்து அல்ல, அவர்கள் உள்ளத்தில் ஒரு கருணையைச் சுரக்கச் செய்ய முடியுமா என்பதற்குத் தான் பேசுகிறேன். நான் எதிர்த்துப் பேசி இதைத் தடுத்து விட முடியும் என்று நினைக்கவில்லை. கருணையோடு இதை நோக்குங்கள், ஒரு ஏழை வாழட்டும், உழவன் வாழட்டும். அவனை விட மோசமான நிலையில் இருக்கின்ற நிலச்சுவான்தாரின் நிலையையும் பார்க்கவேண்டும். அவர்களுக்குப் பாதகம் ஏற்படாதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

காலஞ்சென்ற ஜீவானந்தம் அவர்கள், நான் முதலாளிகளை ஒழிக்க வேண்டுமென்றால், 40 ரூபாய்க்குப் பெட்டிக் கடை வைத்திருக்கிறவர்களும் சண்டைக்கு வருகிறார்கள் என்று பேசுவார்கள். அது மாதிரி தஞ்சாவூர் ஜில்லா மிராச



தார்கள் ஒரு காலத்தில் 1,000, 2,000 வேலி நிலம் என்று வைத்துக்கொண்டு என்ன என்னவோ செய்துகொண்டிருந்தார்கள். அந்தக் காலம் மலையேறி விட்டது. ஆனால் சிறு நிலச்சுவான்தார்கள் இந்த நிலத்தை வைத்துக்கொண்டு தான் வயிறு வளர்த்துக்கொண்டு வருகிறார்கள். அதிலிருந்து வருகின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு தான் தங்கள் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறார்கள். 'காம்பென்சேஷன்' என்று வரும்போது, பெரிய பெரிய ஜமீன்தார்களுக்கெல்லாம் முழுவதும் கொடுத்து விடுகிறார்கள், அவர்கள் எல்லாம் பெரிய கோடீஸ்வரர்கள். உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்தார்கள். ஆயிரக்கணக்கான வேலி நிலங்களை வைத்துக்கொண்டிருந்தவர்கள் எல்லாம் அதை என்ன பண்ணினார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் சட்டத்தை ஏமாற்றி விட்டார்கள் அல்லது அவர்களுக்குக் காம்பென்சேஷன் கிடைத்து விட்டது. ஆனால் வாய்க்கும் கைக்கும் திண்டாடிக்கொண்டு 2, 3 ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிகளிடம் போய், 12 வருஷத்தில் கொடுத்து வாங்கிக்கொள் என்று சொல்லுவது இந்த சர்க்காருடைய கருணை உள்ளத்திற்கு நியாயம் ஆகாது. ஆகையினாலே அவர்கள் இதைச் சிந்திக்க வேண்டும். இப்போது கூட அருமை நண்பர் திரு. சுவாமிநாதன் சொன்னதுமாதிரி, இந்த அவையில் ஒரு பொறுக்குக் கமிட்டி போட்டு பரிசிலனை செய்யலாம்; வேண்டாம் என்று சொல்லவில்லை. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு ஆறுதல் வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு தூரம் நான் பேசுகிறேன். இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்ற முடியும், முடியாது என்று நாங்கள் பேசவில்லை. அது முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். தெரிந்தும் ஏன் பேசுகிறேன் என்றால், நல்லெண்ணத்திலுள்ள இந்த அரசிடம் இப்படிப்பட்ட நியாயமான வாதங்களை எடுத்துச் சொல்லும்போது, அவர்கள் உள்ளத்தில் நிச்சயமாகப் படும். ஏழைகளாக உள்ள குடும்பங்களுக்கு ஏதாவது சாதகங்கள் ஏற்படும் என்பதற்காகத் தான் பேசுகிறேன். அதை அமைச்சர் அவர்களும் இந்த அரசும் பரிசிலனை செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஒரு வார்த்தை சொல்லி நான் முடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அரசு இப்போது வைத்திருக்கின்ற சட்ட முறையினாலே ஒரு குழப்பமான நிலைமை தஞ்சாவூர் ஜில்லாவில் ஏற்படவிருக்கிறது. இந்தச் சட்டத்தின் பின்விளைவுகள் என்னவென்று, இன்று வரை, நேற்று வரை, எங்களுக்குத் தெரியவில்லை. நேற்று தான் நான் கூடப் படித்தேன். இதன் விளைவு நாளை மறுநாள் தஞ்சாவூரில் தெரியும். குழப்பமான நிலைமை ஏற்படும். அந்த நிலைமை ஏற்படாமலிருப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவது சர்க்காருடைய கடமை. குழப்பமும் சிக்கலும் ஏற்படாமல் தடுப்பதற்கு இப்போதே இந்த

அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நாங்கள் சொன்னவற்றை கருணையோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள சிறு நிலச் சுவான்தார்கள் 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பதாக வைத்துக்கொள்வோம். அவர் அந்த 5 ஏக்கரை குத்தகைக்கு விட்டிருக்கிறார். அவர் ஒரு ஏழை, கஷ்டப் படுகிறார். இப்போது அந்த நிலத்தை எடுத்துக்கொள்ளப் போகிறீர்களே என்பது வாதம். இப்போது அந்த 5 ஏக்கரை யாரோ ஒருவரிடம் குத்தகைக்கு விட்டு விட்டு பணம் வருமா வராதா அதை வஜா செய்வதற்கு சட்டம் கொண்டுவரப்படுமா என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற நிலை வேறு. நாம் போட்டிருக்கின்ற சட்டத்தில், 2½ ஏக்கர் அவர்கள் கையிலிருந்து வாங்கி சொந்தத்தில் வேளாண்மை பண்ணலாம் அல்லது விற்கலாம். இன்னொரு 2½ ஏக்கருக்கு வாரம் அல்லது பணம் பெற்றுக்கொள்ள லாம். இது நாம் கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தின் நோக்கம். இந்தப் பணம் உடனடியாகக் கிடைக்குமா என்ற கவலையைத் தெரிவிக்கிறீர்கள். இதற் காகத் தான் 'டெனன்ஸி கார்ப்பரேஷன்' போட்டிருக்கிறோம். அந்த 'டெனன்ஸி கார்ப்பரேஷன்' வருமானால், இந்த ஏழை நிலச்சுவான்தாருக்கு உடனடியாகப் பணம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யலாமா என்று பரிசீலிக்கப்படும். ஆகவே, இந்தச் சட்டத்தினால் சிறு நிலச்சொந்தக்காரருக்கு பாதகம் என்று வாதிடுவது சரியல்ல ....

**திரு. ஜி. சுவாமிநாதன் :** முதலிலேயே சொன்னேன். இதனால் குத்தகை தாரர்கள் பெரும் அளவில் பாதிக்கப்படப் போகிறார்கள். இன்று வரையிலே குத்தகைதாரரை வெளியேற்ற முடியாது என்று சட்டம் போட்டு, இத்தனை நாளும் வெளியேற்ற முடியாத நிலைமை இருந்தது. அத்தனை குத்தகைதாரர் களையும் வெளியேற்றுகின்ற வகையிலே இந்தச் சட்டம் செய்யப்பட்டிருக் கின்றது. 5 ஏக்கர் உள்ளவர்கள் 2½ ஏக்கர் வேளாண்மைக்கு எடுத்துக் கொள்ளலாம். 1 ஏக்கர் வைத்திருக்கிறவர் ½ ஏக்கர் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, எல்லா குத்தகைதாரர்களையும் பாதிக்கின்ற ஒரு சட்டத்தை நிறை வேற்றியிருக்கிறீர்கள் என்று முதலில் நான் இந்தக் கருத்தைச் சொன்னேன். லட்சக்கணக்கான குத்தகைதாரர்கள் பாதிக்கப்படப் போகிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த ஒரு ஏக்கருக்கு சொந்தக்காரராக மாறுகிறார். இது வரையில் குத்தகைதாரராக இருந்தார். இப்போது பாதி நிலத்திற்குச் சொந்தக்காரராக மாறுகிறார்.



**திரு. ஜி. சுவாமிநாதன் :** பாதி நிலத்திற்குச் சொந்தக்காரர் ஆகிறார் என்றால், பாதி நிலத்தைக் குத்தகைதாரரிடமிருந்து எடுக்கிறார் என்று அர்த்தம். குத்தகைதாரரை வெளியேற்ற முடியாது என்ற நிலை மாறி, சட்டம் வருவதை எதிர்பார்த்து அவ்வளவு குத்தகைதாரர்களுக்கும் 50 சதவிகிதம் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுகின்ற நிலைமையை உருவாக்கியிருக் கின்றீர்களே, இந்தக் காருண்ய மிக்க சர்க்கார் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அது தப்பு. அப்படி எந்த நிலச்சுவான் தாருக்கும் உரிமை கொடுத்திருக்கிறோம் என்றால், வருமான வரி கட்டாதவர்கள், விவசாய வருமான வரி கட்டாதவர்களுக்குத்தான். அதிலேயும் பெரிய பணக்காரர்களைப் பொறுத்த வரையில், அப்படியே வாங்குவதாக இருந்தால், 5 ஏக்கருக்கு மேலே வாங்க முடியாது. அந்த அளவுக்கு குத்தகைதாரருக்குப் பாதுகாப்பதுதான்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் சொன்னேன். 5 ஏக்கர் வரையுள்ள பி.ப. 6-40
குத்தகைதாரர்கள் 90 சதவிகிதம் தஞ்சாவூர் ஜில்லாவில் வைத்திருக்கிறார்கள். ஆகவே, 90 சதவிகிதம் குத்தகைதாரர்கள் பாதிக்கப்படுவார்கள் ....

**திரு. சி. வி. ராஜகோபால் :** துணைத் தலைவரவர்களே, குத்தகைதாரர்கள் நிலஉடைமைச் சட்டத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் வருவது மிகவும் நல்லதுதான். சாலச் சிறந்ததும் கூட. இந்தச் சட்டத்தைப்பற்றியே பேசுகிற போதெல்லாம் இது முற்போக்குள்ள சட்டம் என்று சொல்வது சாலப் பொருத்தமானது கூட. ஆனால், முற்போக்குச் சட்டம் என்று சொல்லவில்லை. இங்கே வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இதை புரட்சிகரமான திட்டம், புரட்சிகரமான திட்டம் என்றார்கள். எனக்கே கொஞ்சம் பயம் கூட வருகிறது. உள்ளபடியே புரட்சி என்பது ரஷ்ய நாட்டிலே நடந்திருக்கிறது, பிரான்சு நாட்டிலே நடந்திருக்கிறது. அங்கே ரத்த வெள்ளமாக ஓடிற்று. இவைகளையெல்லாம் புரட்சி என்பார்கள். இங்கே தமிழ் நாட்டிலே அப்படிப்பட்ட தலை போகிற புரட்சிகள் ஒன்றுமில்லை. நல்ல முற்போக்கான ....

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** சோவியத் புரட்சியிலே ரத்தம் வந்தது என்று சொல்கிறார்கள். முதற் புரட்சியிலே ரத்தம் சிந்தியதா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

[1973 ஏப்ரல் 3

**திரு. சி. வி. ராஜகோபால்:** பிரன்ச் புரட்சியிலே ரத்தம் சிந்தியதாக வரலாறு இருக்கிறது. அப்படிப்பட்ட புரட்சிகள் என்பதற்காக நான் அந்தக் கருத்தை . . .

THIRU G. SWAMINATHAN : On a point of order, Sir. May I know whether inconvenient questions can be asked in this House ?

THIRU C. V. RAJAGOPAL : It is not at all an inconvenient question. Thavathiru Adigalar wants to know something about what I am telling.

ஆகையினாலே இதைப் புரட்சிகரமானது என்று சொல்கிறபோது, அது யாரோ கம்யூனிஸ்டுகள் சொல்கிறது போல இருக்கிறது. கம்யூனிஸ்டுகள் 'புரட்சி' என்று சொல்வதைக் கேட்டு அன்றைக்கே நடுங்குவேன். இது புரட்சிகரமான
ப.ஏ. தல்ல. நாம் சில மாறுதல்களை, சில சட்டங்கள் மூலமாக, நம்முடைய ஆட்சியிலே செய்கிறோம். இந்தச் சட்டம் உள்ளபடியே நல்ல சட்டம் தான். இதிலே சிறு குழப்பங்கள் எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 12 தவணைகளில் பணத்தைக் கொடுத்து விட்டால் போதும் என்றார்கள். நிலத்தை எடுத்துக்கொள்கிறவனுக்கு ஒரு பொறுப்பு இருக்க வேண்டுமல்லவா? நிலத்தின் கிரயத்தில் ஒரு பகுதியை முதல் தடவை கொடுத்து விட்டு அல்லது இரண்டு மூன்று தடவைகளுக்குக் கொடுத்து விட்டு, பிறகு கொடுக்காமல் இருக்கலாம். அதைக் கொடுப்பதற்கு ஒரு பொறுப்பு இருக்க வேண்டும். அப்படிப் பொறுப்பு வரவேண்டுமென்றால் நிலத்தின் மொத்தக் கிரயத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கொடுத்து மிச்சமிருப்பதைக் கொஞ்சம், கொஞ்சமாக இன்ஸ்டால்மெண்டில் கொடுக்கும்படி செய்யலாம். இரண்டாவது . . .

**திரு. ஜி. சுவாமிநாதன்:** உறுப்பினர் பேசும்போது மற்றவர்கள் தலையிட்டுப் பேசவேண்டாமென்று சொல்வது . . . .

**திரு. சி. வி. ராஜகோபால்:** நல்ல சட்டம். ஆனால், நாட்டு மக்களுக்கு நிலம் தர வேண்டுமென்று எண்ணினால், அதற்கு காடு கரம்பைகள் ஏராளமாக இருக்கின்றன. லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள், இரண்டு லட்சம், நான்கு லட்சம் ஏக்கர் நிலங்கள், உழுது பயிரிடுவதற்கு ஏற்ற நிலங்கள் இருக்கின்றன. ஆளுக்கு இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர் என்று பிரித்துக் கொடுக்கலாம். இது





நல்ல சட்டம். முற்போக்கான சட்டம். மக்களுக்கு, அதிலும் உழுபவர்களுக்கு உழுது பயிரிடும் வகையில் நிலம் கிடைக்க வழி செய்கின்றது. இந்தச் சட்டத்தை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த மசோதாவின் மீது நான் சொல்லவேண்டுமென்று கருதியிருந்த பல நல்ல கருத்துக்களை அரசுக்கு பல சகோதர அங்கத்தினர்கள் இதமாக இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நான் மறுபடியும் எடுத்துச் சொல்லி நேரத்தைப் போக்க வேண்டாமென்று கருதுகிறேன். அவர்கள் சொன்ன கருத்துக்களையெல்லாம் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த அரசுக்கு இந்தச் சட்டத்தை இவ்வளவு அவசரமாகக் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பது இந்த அரசினுடைய அல்லது அதை சார்ந்திருக்கக் கூடிய கட்சியினுடைய தலைவிதியோ, தலையெழுத்தோ என்று கூட நான் கருதுகிறேன். ஏனென்றால் இவ்வளவு அவசரமாகக் கொண்டு வந்திருக்க வேண்டியதில்லை. இதைப்பற்றி யோசிப்பதற்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே இது ஒரு பொறுக்குக் குழுவிற்கு விடப்பட்டு அவர்கள் மறுபடியும் இந்தச் சபையிலே அமருகிறபோது, இப்போது வந்திருக்கிற மாதிரிச் சட்டத்தை நிறைவேற்ற சம்மதிப்பார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் கட்சியிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் சாதகமாக இருக்கமாட்டார்கள் என்ற முடிவிற்கு அரசு வந்துவிட்டது என்று நான் கருதுகிறேன். ஆகையினாலே இங்கே நிர்ப்பந்திக்கப்பட்டு, கொண்டுவரப்பட்ட இந்த மசோதா இவ்வாறு அவசரமாக நிறைவேற்றப்படாமலிருந்தால், அக்கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பலர் இதை மனதிலே இதமாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. அண்மையில் இந்தக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கிற சோதனைகளை உத்தேசித்துப் பார்க்கின்றபோது, இப்போது இதைக் கொண்டு வந்தாக வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஆளுங்கட்சிக்கு ஏற்பட்டு விட்ட பரிதாப நிலைமையை நான் காண்கிறேன். ஆகையினாலே தான் இவ்வளவு அவசரமாக . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சட்டசபையிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர்களெல்லாம் பாராட்டி வரவேற்றிருக்கிறார்கள். இப்போது நீங்கள் எதிர்க்கிறீர்கள். இந்தச் சட்டத்தின் நோக்கத்தையே எதிர்க்கிறீர்களா?

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு**: இப்படி எதிர்க்கிறீர்களா, இல்லையா என்று கிரிமினல் கோர்ட்டிலே வக்கீல் கேட்கிற மாதிரி உண்டு, இல்லை என்று இரண்டிலே ஒரு பதிலைச் சொல்லு என்று அமைச்சரவர்கள் கேட்பதற்கு நான் பதில் அளிக்கப்போவதில்லை. அப்படி என்னை மடக்க வேண்டாம். நம்முடைய அதிருஷ்டவசத்தில் நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞரும் கூட. ஆகையினாலே நான் அதற்காக....

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: உண்மையைத் தான் நான் சொன்னேன். கீழ் அவையில் பாராட்டி வரவேற்றிருக்கிறார்கள். சில எக்ஸம்ஷன்கள் வேண்டு மென்று கேட்டார்கள். நீங்கள் பீடிகை போடுவதைப் பார்த்தால், ஏதோ சட்டமே மோசமானது, நாங்கள் வேறு ஏதோ நோக்கத்தோடு கொண்டு வருவதைப் போல் தோன்றியது என்று சொல்வதால் தான் கேட்டேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு**: இந்தச் சட்டமே மோசம் தான். வேறு ரூபத்தில் வர வேண்டும் என்று சொல்கிறேன். மோசமோ, மோசம் என்று சொல்கிறேன். அது வேறு ரூபத்திலே வர வேண்டும். இந்த ரூபத்திலே வந்திருக்கக் கூடாது. இது பொருத்தமில்லை. அரசாங்கத்திற்குத் தனியாக ஒரு நோக்கமிருக்கிறது. இல்லை என்று அரசு சொன்னாலும், வேறு ஒரு நோக்கம் இருப்பதாக அரசாங்கம் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் கூட, ஏதோ உள்ளூற இருக்கிற நோக்கத்திற்காக இந்தச் சட்டம், இந்த மசோதா ரூபமாகக் கொண்டு வரப்படுவதற்கு அவசியம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகையினாலே, ஆராயப் போதிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவில்லை, அவகாசம் தரப் படவில்லை. பொறுக்குக் குழுவிற்கு இதை அனுப்பலாம். அதை மறுத்து அவசரம், அவசரமாக இந்தச் சட்டம் செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட காரணங்களால் நில மடந்தைக்கு கடந்த பல வருஷங்களாக ஏற்பட்டிருக்கக் கூடிய இன்னல்கள் எவ்வளவோ இருக்கின்றன.

"அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல—தன்னை
இகழ்வார் பொறுத்தல் தலை"

என்றார் வள்ளுவர். நில மடந்தைக்கு எவ்வளவோ பொறுமை. அந்த நில மடந்தையினுடைய அருளால் உயிர்களெல்லாம் ஜீவிக்கின்றன. அந்த நில மடந்தையினால் உயிர்களெல்லாம் ஜீவிப்பதற்கு ஏற்காத நிலைமைகள், அல்லது மாறுபாடான நிலைமைகள் நாட்டிலே தோன்றுகின்றன. நில மடந்தை சீறினால் உத்பாதங்கள் கூட நிகழ்ந்து விடுமோ என்று நாம் கவலைப்பட வேண்டி யிருக்கிறது.



அன்பர்கள் இவைகளைச் சொன்னார்கள். பொதுவாக தஞ்சை ஜில்லாவைப் பற்றி யோசிக்க வேண்டும். நாம் ரொம்ப யோசிக்க வேண்டும். நிதானமாக யோசித்துச் செய்ய வேண்டும். காலம் கடந்து விடவில்லை. இப்போது கூட பொறுக்குக் குழுவிற்கு விடலாம். யோசிக்கலாம். மேலும் ஆழ்ந்து யோசிக் கலாம். இன்னும் ஆற அமர யோசித்துச் செய்ய வேண்டும் என்று நான் சொல்கிறேன். விவசாயத்தைப்பற்றி, விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், அனுபவம் உள்ளவர்கள் இங்கு பலர் பேசினார்கள். விவசாயத்திலே இப்படிப் பல ஆண்டுகளாக.....

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்**: ஒரு சிறிய சந்தேகம். சிறு சந்தேகம் தான். யோசிக்கலாம், பொறுமையோடு இருக்க வேண்டும், இதையெல்லாம் ஆழ்ந்து யோசித்துப் பார்த்துச் செய்ய வேண்டுமென்றெல்லாம் சொல்கிறீர்கள். ஆனால் நான் ஒன்றை ஞாபகப்படுத்தினால், தவறாக நினைக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். இரண்டொரு ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே குறிப்பாக குத்தகை செலுத்த முடியாத வர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வெளியேற்றப்பட வேண்டிய சூழ்நிலையில் இப்படி குத்தகை செலுத்தாதவர்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்ற சட்டம் வந்தது. வெளியேற்றப்பட வேண்டு மென்ற சட்டம் வந்தும் நிலத்தை அனுபவித்து வந்தவர்களை சிவில் சட்டம் போட்டு வெளியேற்ற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானார்கள். அப்போது அவர் சார்ந்திருக்கிற கட்சியினுடைய பெரும் தலைவர் ஆற அமர ஒரு பொறுக்குக் குழுவிற்குப் போய் யோசித்துச் செய்யலாம் என்று சொன்னாரா என்றால், இல்லை. "உழவர்களை வெளியேற்றினால் போராட்டத்திற்கு நான் தலைமை வகிப்பேன். அந்த போராட்டத்திற்கு நான் வருவேன். அப்படி ஏதாவது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் போராட்டத்திற்கு நான் தலைமை வகிப்பேன்" என்று சொன்னார். இப்போது உழவர்களுக்கு நன்மை செய்கிற நோக்கிலே, இப்படி யோசிக்கலாம் என்று சொல்வது உழவர்களுக்கு நன்மை செய்யக்கூடாது என்பது போலாகும். உழவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்ப தற்குச் சட்டம் கொண்டு வந்தால், யோசிக்கலாம் என்று சொல்வது சரியல்ல. இப்படிப் போராடுவோம் என்று சொல்கிறவர்கள் "வலுவோடு நான் இதை ஆதரிக்கிறேன். இப்படிப் பாதிப்பை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்" என்று இன்னும் தீவிரமாகப் பேசியிருக்கலாம். அதை விட்டு விட்டு இன்னும் யோசிக்க வேண்டுமென்று அவர் தலைவர் சொன்ன கொள்கைக்கு மாறாக, பிற்போக்கான கொள்கையைச் சொல்லிக் கொண்டிருப்பது சரியல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1973 ஏப்ரல் 3

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** ஆகவே நியாயமாக பாதிக்கப்படக்கூடிய சாகுபடியாளர்களுடைய உரிமையைப் பாதுகாக்க நான் தலைமை தாங்குவேன் என்று சொன்ன வார்த்தையே அரசை, தி.மு.க. அரசை கிடுகிடுக்க வைத்து விட்டது என்று நான் கருதுகிறேன். அப்போது அந்த வார்த்தையை அவர் சொல்லியிருக்காவிட்டால், இந்த அவசரம் அப்பொழுது அரசுக்கு ஏற்பட்டிருக்காது. இந்த மாதிரி நிலைமைகளை அரசியலிலே சில சந்தர்ப்பங்களிலே கொண்டுவந்து விட்டு விடும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இது மாதிரி ஏதாவது சட்டங்களைக் கொண்டு வரும்போது அதற்கெல்லாம் ஒரு காரணம் கற்பித்துக் கொண்டிருக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

* **திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொன்னது எப்படிப் பொருத்தம் என்று எனக்குப் புரியவில்லை. நிலத்தை விட்டு வெளியேற்றுவதைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தான் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இப்போது யாரும் நிலத்தை விட்டு வெளியேற்றப்படவில்லை. அப்படி ஒன்றும் நடந்து விடவில்லை. இப்போது எந்த விதமான அவசரமும் இல்லை. வெளியேற்றுவதைத் தடுக்க ஏற்கனவே சட்டம் இயற்றி விட்டோம். வெளியேற்றினால் நான் போராட்டத்திற்கு முற்படுவேன் என்று எங்கள் தலைவர் திரு. காமராஜ் சொன்னார்களேயொழிய, இப்போது வெளியேற்றுகிற காரியம் எங்கேயும் நடைபெறவில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நான் இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லியிருக்க வேண்டும். விளக்கமாகச் சொல்லத் தவறி விட்டேன் என்று கருதுகிறேன். நிலச் சீர்திருத்தச் சட்டம் என்று ஆரம்பித்த நாளிலேயிருந்து உழுபவனுக்கு நிலத்தை சொந்தமாக்க வேண்டுமென்று எல்லாக் கட்சியினரும் சொல்லிக்கொண்டு வருகிறோம். அதிலே கட்சி மாறுபாடில்லாமல் போட்டி போட்டுக்கொண்டு யார் தீவிரவாதி, யார் முன்னுக்குப் போவது என்று சொல்லிக்கொண்டு வருகிறோம். உழவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று சொல்லிக் கொண்டு வந்தவர்கள், இப்படி உழவர்களை நிலத்தை விட்டு வெளியேற்றும்போது, போராட்டத்திற்குத் தலைமை வகிக்கிறேன் என்று சொன்னவர்களெல்லாம் கூட இன்றைக்கு உழுபவனுக்கு நிலத்தைச் சொந்தமாக்குகிற, வாங்கிக்கொள்கிற உரிமையைக் கொடுக்கிற சட்டம் கொண்டு வருகிற நேரத்தில், அதை எதிர்க்கிற பாணியில் பேசுவது சரிதானா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.



1973 ஏப்ரல் 3]

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவரவர்களே, உழுபவர்களுக்கு நிலத்தை உரிமையாக்கும், சொந்தமாக்கும் அவசரத்திலே, அண்மையில் சட்டம் ஆக்கப்பட்டு, ஒரு வருஷ காலத்திற்குள் அவர்களை நிலமற்றவர்களாக ஆக்குகிற அளவிலே இந்தச் சட்டம் இருக்கிறதே என்று கவலைப்படுகிறோம். இந்தச் சட்டத்தினுடைய விளைவுகள் அப்படி இருக்கிறதே என்று கவலைப்படுகிறோம். எப்படி இந்தச் சட்டம் நன்மை பயக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களோ, அதே போன்று இந்தச் சட்டம் அவர்களுக்கு தீமை பயக்குமென்று கருதுவதற்குக் காரணங்களிருக்கின்றனவென்று நான் கருதுகிறேன். அதைத்தான் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆகையினால் இப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலே, மக்களும், நாமும் யோசிப்பதற்கு—நான் ஆங்கிலம் கற்காதவன். இந்தச் சட்டம் கெஜட்டில் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்டது—தமிழிலே இந்தச் சட்டத்திற்கு ஒரு பிரதி கொடுத்திருக்கிறார்களாவென்றால் இல்லை. தமிழிலே இந்தச் சட்டத்தைப் பார்த்து, படித்து, தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் இருக்கிறார்கள். இந்தச் சபையிலும், அந்தச் சபையிலும் மெஜாரிட்டி அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலத்தில் இருப்பதால் அதனுடைய நுணுக்கங்கள், விளக்கங்கள் முதலியவற்றைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. சட்ட சபையில் உட்கார்ந்துகொண்டு, எனக்கும் தெரியுமென்று பாவனை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த உண்மையை அரசினர் அறிய மாட்டார்களா? இந்தச் சட்டத்தின் நோக்கம் என்ன? எப்படி இந்தச் சட்டம் வரையப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி யோசிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை இந்த அரசு அளித்திருக்கிறதாவென்று பார்க்க வேண்டும். இது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இதற்கு முன்பு நிறைவேறிய சட்டங்களும் இப்படித்தான். சட்டச் சிக்கலைத் தடுக்கப் போடுகிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை. தமிழில் கொடுக்கக்கூடாதென்பது அல்ல. சட்டச் சிக்கலைத் தடுப்பதற்காக ஆங்கிலத்தில் கொடுக்கிறோம். எப்போதும் இப்படிக் கொடுப்பதுதான் முறை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவரவர்களே, ஆங்கிலத்தில் இருக்கும் சட்டவரைவுதான் சரி என்று கீழே ஒரு வரி போட்டு, தமிழிலே அதனுடைய சாராம்சத்தை வெளியிட்டு, கீழே இரண்டு வரி எழுதிவிட வேண்டியதுதானே. இதை ஏன் செய்ய முடியவில்லையென்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட நிலைமையிலே இந்தச் சட்டம் எவ்வாறு சாதக பாதகமாக

அமையுமென்பதைக்கூட விரைவாகத் தெரிந்துகொள்வதற்கு இயலாததொரு நிலை ஏற்பட்டுவிட்டது. இவைகளையெல்லாம் இப்படி அவசரம் அவசரமாகக் கருதிப் பார்க்கிறபோதுதான், மக்கள் ஆட்சியின் பெயரால் நடைபெறும் சர்வாதிகாரம் என்று வர்ணிப்பதற்குக் காரணமாக அமைகிறது. கற்பனை இல்லையே; யோசித்துப் பார்க்க வேண்டும். இப்படிச் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிடுகிறதென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மட்டுமல்ல. மக்கள், சட்டக் காடு என்ற புதருக்குள்ளிருந்து மீள முடியாமல் ரொம்பவும் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த ஒரு பொருளாதாரப் பேராசிரியர் சொல்கிறார் :

“தனி மனிதன் தன் நன்மைக்காக மற்ற தனி மனிதர்களுடன் சேர்ந்து நாட்டை அமைத்தான். காட்டு வாழ்க்கையிலிருந்து நாட்டு வாழ்க்கைக்கு வரும் பொருட்டே அரசைச் சமைத்தான்; சட்டங்களை இயற்றினான். இயற்றிய சட்டங்களோ எண்ணிக்கையில் அடங்காத அளவிற்கு மலை என உயர்ந்து நிற்கின்றன. மனிதன் இன்று வாழும் இடம் சட்டக் காடு (Jungle of Laws) என்று சொல்கிறார். இதிலே இருக்கிறது. (குறுக்கீடு) “முன்போ காட்டுச் சட்டத்தின் ( Law of Jungle ) பிடியில் கிடந்தான். காட்டுச் சட்டத்தில் பெரிய மனித மிருகம் சின்ன மனித மிருகத்தை வதைத்தது. இன்று சட்டக்காடு அவனை நிரந்தரமாக அடிமைத் தளையில் சிக்க வைத்து செழிக்கிறது. சட்டக் காட்டின் அடர்ந்த பகுதியில் மனிதன் தொலைந்து போனான். சட்டமும் அவனை மிருகத்தனமாகத்தான் நடத்துகிறது” என்று சொல்கிறார். இன்று அவசரம் அவசரமாக, நல்ல நோக்கத்தோடு காரியங்கள் செய்யும்போது (குறுக்கீடு) ஒரு அவகாசத்தோடு, அந்தச் சட்டத்தை பலருக்கும் விளக்கி, மக்களுக்குப் புரியும்படியாகச் செய்து, அதனுடைய நல்ல பலனை நாட்டிலே உண்டாக்கும்படியான சூழ்நிலையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டம் அவசரம் அவசரமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. புரட்சிகரமான சட்டமென்று அவர்கள் சொல்கிறார்கள், இல்லையென்று மற்றவர்கள் சொன்னார்கள். இந்த மசோதாவின் நோக்கம் நிறைவேறுமென்ற நம்பிக்கை அரசுக்கு இல்லையோ என்று கருத வேண்டியிருக்கிறது. இது சட்டப் பிரச்சினை. இதை நான் அனாவசியமாகச் சொல்கிறேன் என்று கருத வேண்டாம். ‘Statement of Objects and Reasons’ என்பதற்குக் கீழே எந்தச் சட்டத்திலேயும், ‘The Bill seeks to achieve the above object’ என்று இருக்கும். இதிலே இல்லை. ஆகையினால் சர்க்காருக்கே இதன் பலனில் நம்பிக்கையில்லை.



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, அவையிலே இதுவரையில் ஆங்கிலத்தில் படித்துப் பார்க்கவில்லை, இதெல்லாம் புரியவில்லையென்று சொன்னதெல்லாம் தப்பு போல் தோன்றுகிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** தலைவரவர்களே, எனக்குத் தெரிந்தது அரைகுறை இங்கிலீஷ். அரசுக்கே, இந்த மசோதா நம்பிக்கையில்லாத மசோதாவாக அமைந்திருக்கிறது. முடிவாக நான் கேட்டுக்கொள்கிறேன். அதிக நேரத்தை அனாவசியமாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்று கருதுகிறேன். பல நல்ல கருத்துக்களை என்னுடைய சக உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரஷ்ய நாட்டிலே தலைக்கு 26 ஏக்கர் நிலம் இருக்கிறது. நமக்கோ 30 செண்ட்கூட இல்லை. சராசரியாக, நஞ்சை, புஞ்சை நிலங்களைச் சேர்த்துப் பார்த்தாலே அந்த நிலைமை இருக்கிறது. ஆகையினால் இதைப் பற்றி நன்றாக யோசித்து ஏற்பாடு செய்ய வேண்டும். (குறுக்கீடு) பில் ரூபத்திலே உருவானதிலேயே இல்லை. நம்முடைய சக நண்பர், திரு. சுவாமிநாதன் அவர்கள், இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று கொண்டுவந்துள்ள திருத்தத்தை நான் ஆதரித்து, அரசு அந்தத் திருத்தத்தை அன்போடு ஏற்று, இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று கூறி, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். சக்திமோகன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மசோதாவை எனது கட்சியின் சார்பிலே மனதார வரவேற்கிறேன், ஆதரிக்கிறேன். இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலே, நமது அரசின் சார்பிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற மசோதாக்கள் அத்தனையும் புரட்சிகரமான மசோதாக்களாக அமைந்திருக்கின்றன. குறிப்பாக, ஆலயச் சிப்பந்திகளுக்கு ஊதிய உயர்வு கொடுத்தது; அவர்களுடைய உத்தியோகங்களுக்கு உத்தரவாதமும் கொடுத்தது; பஸ்களைத் தேசியமயமாக்கியது—இதுபோன்ற மசோதாக்கள் உண்மையில் புரட்சிகரமான மசோதாக்கள்தான். அவைகளைத் தொடர்ந்து, இந்த நிலத் திட்ட மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இது ஒரு புரட்சிகரமான மசோதாவென்று அரசுத் தரப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இது புரட்சிகரமான மசோதாதான். இதுவரையில் இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் கொண்டுவரப்படாத மசோதா இது. மகாத்மா காந்தி அவர்கள், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று கடந்த காலத்திலே சொன்னதை, இதுவரையில் எழுத்திலும், ஏட்டிலும் மட்டும் கண்டு வந்தோம். அது இன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது. நண்பர்கள் சிலர் கூறிய

படி, இந்த மசோதா வேகமாகக் கொண்டுவரப்பட்டிருந்தாலுங்கூட, அது நாட்டின் மறுமலர்ச்சிக்குத் தேவையென்ற வகையில் நாம் இதைப் பாராட்ட வேண்டும், வரவேற்க வேண்டும். இந்த மசோதாவைப் பற்றி விரிவான முறையிலே, விளக்கமான முறையிலே பேசுவதற்கு நேரமில்லை. முன்பு பேசிய அங்கத்தினர்கள் அனைவரும், அதிலுள்ள சாதக பாதகங்களை விரிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதில், என்னுடைய கட்சியின் சார்பிலே நான் விடுக்கும் வேண்டுகோள் ஒன்று. வேறு பல முறைகள் எப்படியிருந்தாலும், கோவில் நிலங்களைப் பொறுத்தமட்டிலாவது,—பொது நிதிக்காக, பள்ளிக்கூடங்கள், பாடசாலைகள் போன்றவற்றிற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் கோவில் நிலங்களையாவது, அரசாங்கம் மொத்தப்படுத்தி, அதற்கான விலையை அந்தந்த ஆலயங்களுக்குக் கொடுத்து, குத்தகைதாரர்களிடமிருந்து கோவில்களை விடுவிக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை விடுத்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மசோதா புரட்சிகரமான மசோதாவென்றாலுங்கூட, இது வேகமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிலம் இல்லாதவர்களுக்கெல்லாம் நிலம் உண்டு என்ற ஒரு முறை எதிர்காலத்தில் ஏற்படப் போகிறது. என்றாலும், இதை நடைமுறைப்படுத்துகிறபோது, இந்த அளவுக்கு வேகம் காட்டிவிடாமல், நின்று, நிதானித்து, அவகாசம் தந்து, இந்தத் தத்துவத்தை மக்களிடம் விளக்கிய பிறகு கொண்டு வந்தால், நல்ல சாதகம் விளையுமென்று கருதுகிறேன். நம்முடைய நாட்டிலே சுதந்திரத்திற்குப் பிறகு ஜனநாயகத்தைப் பற்றி மக்கள் தெரிந்துகொண்டிருக்கக்கூடிய அளவுக்கு, இந்த சோஷலிசத்தைப் பற்றித் தெரிந்துகொண்டிருக்கிறார்களென்று நான் கருதவில்லை.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்)**: காலம் நீட்டிக்கப்படுகிறது.

பி.ப. 7-00 **திரு. ஆர். சக்திமோகன்**: அந்த அளவுக்கு சோஷலிசம் என்றால் என்ன, அதை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதுபற்றியெல்லாம் மக்களுக்குச் சரியான விளக்கத்தைக் கொடுத்தாக வேண்டும். கொடுத்ததன் பிறகு, இம்மாதிரிப் புரட்சிகரமான சோஷலிசத் திட்டங்களை அமுல்படுத்த வேண்டும். இந்த அளவுக்கு அவசரமாக நடைமுறைப்படுத்துவதைவிட அதைக் கொஞ்சம் சாவதானமாகச் செய்வது நல்லது என்று அரசை நான் கேட்டுக் கொள்கின்றேன். இல்லாதவர்களையெல்லாம் இருப்பவர்களாக மாற்றுவதுதான் சோஷலிசம். அந்த அளவுக்கு இல்லாதவர்களை இருப்பவர்களாக மாற்றுகின்ற வேகத்தில், இருப்பவர்களை இல்லாதவர்களாக மாற்றி, மற்றொரு இல்லாத சமுதாயத்தை உண்டாக்கிவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டு,



இந்த மசோதாவை எங்கள் கட்சியின் சார்பில் ஆதரித்து, அமைகின்றேன். வணக்கம்.

* **திரு. கே. ராஜாராம்**: தலைவரவர்களே, விவாதத்தில் இருக்கும் மசோதா தமிழ்நாட்டின் சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமான ஒரு மசோதா என்றும், இது புரட்சிகரமான மசோதா என்றும் அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையிலே கூறியிருக்கிறார்கள். இது மிக முக்கியமானது மட்டுமல்ல, புரட்சிகரமானது மட்டுமல்ல, இது சிக்கல்கள் நிறைந்த மசோதாவாக இருக்கிறது. இந்தச் சிக்கல்கள் இல்லாமல் ஆர அமர யோசித்து, சிக்கல்களைப் போக்கிவிட வேண்டும். நிலச்சுவான்தாரர்க்கும், நிலத்தை உழுபவனுக்கும் இடையில் மேலும் பல சிக்கல்களை உண்டாக்கி, அதிகமான தகராறுகள் ஏற்படாமலிருக்க ஏதாவது வழி செய்ய முடியுமா என்பதற்காகத்தான் இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று, எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், நாங்கள் எண்ணுகிறோம். நிலத்தை உழுபவனுக்குச் சொந்தமாக்க வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையில் வித்தியாசம் எதுவும் எங்களுக்குக் கிடையாது. ஆனால் அப்படிச் சொந்தமாக ஆக்கப்படும்போது, சிக்கல் வந்துவிடக்கூடாது. சீர்திருத்தங்கள் பண்ணிக் கொண்டே வருகிறோம். நில சம்பந்தமான சீர்திருத்தங்கள் ஒன்று அல்லது இரண்டு அல்ல, பல சீர்திருத்தங்களை இதற்குமுன் இருந்த அரசும் செய்தது. அதற்குப் பின்னால் வந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அமைக்கப்பட்ட இந்த அரசும் செய்திருக்கின்றது. ஒவ்வொரு சீர்திருத்தத்தையும் அமைச்சரவை சற்று சிந்தித்துப் பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்கின்றேன். நாங்கள் ஆதரித்துக்கொண்டே வந்திருக்கிறோம். நிலச்சீர்திருத்தச் சட்டம் எதனையும் எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில், இது வரையிலும் எதிர்த்ததே கிடையாது. நாங்கள் இந்த மசோதா பிரேரிக்கப்பட்டு விவாதத்தில் இருக்கும்போதெல்லாம், எங்களுடைய ஆட்சேபணையைச் சொல்லியது சில வார்த்தைகளை மாற்றுவதற்காக இருக்கலாம் அல்லது சில ஷரத்துக்களுக்காக இருக்கலாம் அல்லது சில திருத்தங்களைக் கொடுத்துப் பேசியிருக்கலாம். ஆனால் அடிப்படைக் கொள்கைக்கு விரோதமாக என்றுமே நாங்கள் இருந்ததில்லை. இன்றும் நாங்கள் அதைச் சொல்கின்றோமே ஒழிய, உழுபவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்குவதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது, கருத்து வேறுபாடும் கிடையாது. ஆனால் அதற்கு மாறாக இப்போது வந்திருக்கும் இந்தச் சட்டம் எந்த ரூபத்தில் இருக்கின்றது? உழுபவனை அதிகமான சிரமத்தில் ஆழ்த்திவிடும் என்று நாம் பயப்படுகின்ற

வகையில் இருக்கின்றது. இன்றுள்ள நிலைமை என்ன? இந்த மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றுவதற்கு முன்னால் இருந்த நிலைமை என்ன? இன்றுள்ள நிலைமையில் நிலத்திலிருந்து அவனை யாரும் அப்புறப்படுத்த முடியாது. ஒரு ஏக்கர் அல்லது 5 ஏக்கர் உழுதாலும் சரி, அவனை யாரும் அப்புறப்படுத்த முடியாது. ஆனால் இனிமேல் இந்தச் சட்டமே அவனை உழுவதிலிருந்து, பாதி நிலத்திலிருந்து அப்புறப்படுத்தும்படி ஏற்பட்டுவிடச் செய்கிறது. இது ஒன்று. இரண்டாவது, நிலச் சொந்தக்காரர்களுக்கும் உழுபவர்களுக்கும் இடையே சிக்கல் இல்லாமல், ஒரு நிலத்தை 'சட்டி சுட்டதடா, கை விட்டதடா' என்று விலக்குவதற்கும் இடம் கொடுக்கவில்லை. நஷ்ட ஈட்டைப் பொறுத்த வரையில், முதல் நிலச் சீர்திருத்தச் சட்டம் 'எஸ்டேட் அபாலிஷன் ஆக்ட்'. நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் அரசாங்கம் கொண்டு வந்த சட்டம் அது. அப்போதிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு நிலச் சீர்திருத்தச் சட்டத்திலும் அரசாங்கமே தான் நஷ்ட ஈடு கொடுத்து வருகிறது. இன்றுள்ள இந்த அரசு இதற்கு முன்னால் கொண்டுவந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்திலேகூட, உச்ச வரம்பைக் குறைத்தபோது, அதனால் ஏற்படக்கூடிய மிச்ச நிலங்களுக்கு நஷ்ட ஈட்டை அரசாங்கமே கொடுத்தது. ஆனால் அந்த நிலத்தை எடுத்துக்கொள்பவர்கள் உழுபவர்கள் அல்லது வேறு யாருக்கோ ஜாரி செய்து வைத்தது. அவைகளுக்கு அரசாங்கம்தான் நஷ்ட ஈட்டைக் கொடுத்தது. ஆனால் இந்த மசோதாவில் மட்டும் நிலத்தை யார் உழுகிறார்களோ அவர்களே அந்த நஷ்ட ஈட்டைக் கொடுக்க வேண்டுமென்று இருக்கின்றது. அரசாங்கம் பொறுப்பையாவது ஏற்றுக்கொள்ள வேண்டும். அல்லது செக்யூரிடியையாவது கொடுக்க வேண்டும். அதுவும் இல்லை. "அவன் கொடுப்பான், நீ வாங்கிக்கொள். உங்கள் நிலத்தை அவர்களுக்குக் கொடுக்கும்படி நாங்கள் சட்டம் செய்துவிடுகின்றோம். அந்தச் சட்டப்படி உங்களுடைய நிலத்தில் பாதியை உழுபவனுக்கு அவன் ரூபாய் கொடுக்காமலேயே சொந்தம் ஆக்கிவிடுங்கள்" என்கிறீர்கள். ஒரே தடவை கட்டினாலே, அவனுக்கு 'அப்சல்யூட் ரைட்' வந்துவிடுகிறது. தவணை முறையில் 12 வருடத்திற்கு அவன் குத்தகைப் பணத்தைக் கட்டிவிடுவதும், வருவாயை 12ஆல் பெருக்குவதும் ஒன்றுதான் 12 வருடக் குத்தகைப் பணத்தைக் கொடுத்துவிட்டால், நிலத்திற்குச் சொந்தக்காரனாக அவன் ஆகிவிடுகிறான். இப்போது 12ல் ஒரு பங்கை அவன் கொடுத்துவிட்டால், அந்த நிலம் அவனுக்குச் சொந்தம். அதை அவன் மறுநாளே என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களுக்குப் பக்கத்திலுள்ள நிலங்கள் பெரும்பாலும் வீடு கட்டும் நிலங்களாகத்தான்





இருக்கின்றன. ஆனால் இன்று நிலங்கள் ஒரு ஏக்கர் 50 ஆயிரம் ரூபாய் ஒரு லட்ச ரூபாய் பெறுமானமுள்ளதாக இருக்கின்றன. இன்றுள்ள சட்டத்தின்படி விவசாய வருமானத்தை 12 பங்காகப் பெருக்கி நஷ்ட ஈட்டை அவன் கொடுக்க வேண்டும். இப்போது 12ல் ஒரு பங்கைக் கொடுத்தால் போதும், அதை வாங்கி அடுத்த வருடமோ அடுத்த மாதமோ அவன் அதை வீடுகளுக்குப் பிளாட்டுகளாகப் போட்டு விற்கலாம். அதை இந்தச் சட்டம் தடுக்கிறதா என்று கேட்கிறேன். வீட்டடி மனைக்காக விற்பதை இந்தச் சட்டம் தடுக்கும் ரூபத்தில் இருக்கிறதா? விவசாயம்தான் செய்யவேண்டும் அவன் என்று அரசு கூறுமா? அந்த நிலத்தை அவன் வேறு ஏதும் செய்யக்கூடாதவாறு வகை செய்திருக்கின்றார்களா? அதுவும் இல்லை. அவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் அந்த நிலத்தை. இம்மாதிரி முக்கியமான பல விஷயங்களைத்தான் பொறுக்குக் குழுவில் ஆலோசனை செய்ய வேண்டும். இதைக்கூட இந்த அமைச்சரவை மறுத்தால், இதை எப்படி ஜனநாயகம் என்று சொல்வது? இதைப்பற்றிக் கூப்பிட்டுப் பேசவேண்டும். நேற்று கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசினார்கள். நான் என் கருத்தைச் சொன்னேன். இதற்கு பதில்கூட வரவில்லை. இன்று விவாதத்தின்போதுகூட வரவில்லை ஒன்று சொல்வேன். நிலத்தில் தோட்டம் வைத்திருக்கின்றான் ஒருவன். அவன் கிணறு வெட்டி. ரூ. 10 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் செலவழித்து கட்டடம் கட்டியிருக்கின்றான். என்ஜின் ரூம் கட்டியிருக்கின்றான். பம்புசெட்டு 10 ஆர்ஸ் பவர் வைத்திருக்கின்றான். 20 வருடங்களாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அவனுக்கு அதில் பாதிதான் கொடுக்கவேண்டுமென்று சொல்வதை நான் ஒப்புக்கொள்கின்றேன். சென்ற வருடம்தான் ஒருவன் லான்ட் மார்ட்கேஜ் பாங்கில், நில வள வங்கியில் ரூ. 20 ஆயிரம் கடன் வாங்கி, போன வருடம் 10 ஆயிரம் ரூபாய்க்குச் செலவு செய்து கிணறுவெட்டி, 8 ஆயிரத்திற்கு கோடவுன், என்ஜின் ரூம் கட்டி, ரூ. 2 ஆயிரத்திற்கு ஒரு பம்ப்செட் வாங்கி வைத்திருக்கின்றான், அது ஓடிக்கொண்டிருக்கின்றது. அதிலும் பாதியைத்தான் கொடுக்க வேண்டுமென்று இன்று சட்டம் சொல்லுகிறது. இதை நாம் விவாதிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடம் நேற்றுக்கூடிய கூட்டத்தில் சொன்னேன். அதை மறந்தே விட்டார்கள் என்று நினைக்கின்றேன். போன வருடம் நில வள வங்கியில் கடன் வாங்கி ரூ. 20 ஆயிரம் கடன் வாங்கி செலவு செய்து, கிணறு வெட்டி, என்ஜின் ரூம் போட்டு, பம்பு செட்டு வாங்கி வைத்தவனுடைய கதி என்ன? அவன் எந்தச் சொத்திலிருந்து 20 வருடத் தவணையில் அதைத் திருப்பிக் கொடுப்பது? இந்த நிலத்தை உழுபவனுக்குச் சொந்தம் ஆக்கிவிட்ட பிற்பாடு எதிலிருந்து அவன் அந்தக் கடனைக் கொடுப்பான்? அந்தக் கடனை

[திரு. கே. ராஜாராம்] [1973 ஏப்ரல் 3

அவன் கொடுக்கவில்லையென்றால், அப்போதும் அரசாங்கத்திற்குத் தானே நஷ்டம். இன்சால்வென்டு கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. இந்த மாதிரிக் கஷ்டங்கள் வருவதிலிருந்து நிவர்த்தி வேண்டும், இவைகளைத் தீர்க்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று சொன்னேனே தவிர, வேறில்லை. இப்படிச் சொல்லிக் கொண்டே இன்னும் காலம் கடத்த அல்ல; நான் முழுக்க முழுக்க ஆதரிக்கிறேன் என்று தான் சொல்கிறேன். இப்போது என்ன அவசரம்? அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாயவரத்தில் தலைவர் காமராஜர் அவர்கள் பேசுகின்றபோது இருந்த நிலைமைகள் வேறு. அப்போது அந்தச் சட்டத்திற்கு உயிர் வருவதற்கு 4 தினங்கள்தான் பாக்கி இருந்தன. அந்த நான்கு தினங்களுக்குள் சட்டத்தைப் புதுப்பிக்கத் தவறினால், 20 ஆயிரம், 30 ஆயிரம் விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுவார்கள். அதற்காகத்தான் அப்படிச் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் ஒரு ஸ்போர்ட்ஸ்மென் மாதிரி என்று அப்போதே நான் பாராட்டினேன். அவர் ஒரு சட்டமே போட்டார், மறுநாள் சட்டசபை கூடியது. இந்தச் சட்டத்தை நாளைக்கே நிறைவேற்று கிறோம் என்று சொன்னார். நான் அவரைப் பாராட்டினேன். இல்லையென்றால் தஞ்சையில் உள்ள 20 ஆயிரம் விவசாயிகள் அகற்றப்பட்டிருப்பார்கள். ஆனால் இதில் அவசரம் ஒன்றுமில்லை. இது தாமதம் ஆவதனால் எந்த ஒரு விவசாயியும் நிலத்தை விட்டு அப்புறப்படுத்தப்படமாட்டான். அப்புறப் படுத்தக்கூடாது என்றும் சட்டம் இருக்கிறது, பாதுகாப்பு இருக்கிறது. அவன் போகமாட்டான். இன்னும் 3, 4 மாதங்கள் எடுத்துக்கொண்டு நன்றாகத் தெளிவாக யோசனை செய்து, இந்த மசோதாவை சட்டமாக்குவதனால் நான் சொல்லக்கூடிய இந்தக் குறைகளையெல்லாம் போக்கிவிடலாம். இதைத் தான் சொல்கிறேனே ஒழிய வேறில்லை. சட்டத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொல்லி வேறுவிதமாகத் திருப்பிவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். முழுக்க முழுக்க ஆதரிக்கிறோம். கொள்கையை ஆதரிக்கிறோம். இந்தச் சிக்கல்பட்டு மீண்டும் இரண்டு பேருக்கு சிண்டு முடித்துவிடும்படி யான நிலைமையை, கடுமையான வார்த்தை தான், இரண்டு பேரும் சண்டை அதிகமாகப் போடும்படியான நிலைமையை உண்டுபண்ணிவிடக்கூடாது.
பி.ப. 7-10 அடிகளார் சொன்ன மாதிரி ஒவ்வொரு தவணைக்கும் கோர்ட்டுக்குப் போக நேரிடும். கோர்ட்டுக்குப் போய் வசூலிக்கவேண்டும். அடுத்த தவணைக்கும் கோர்ட்டுக்குப் போகவேண்டும். இப்படி சட்டம் இடம் கொடுத்துக்கொண்டே போகும். அப்படியில்லாமல் உழுபவர்களுக்கு வைக்கக்கூடிய பேங்க் மூலமாகக் கொடுக்க ஒரு ஷரத்து சேர்த்தால்கூட பாவாயில்லை. ஒரே தவணையில் கொடுக்க



1973 ஏப்ரல் 3] [திரு. கே. ராஜாராம்]

ஏற்பாடு செய்துவிட்டால் நலம். இன்னும்கூட காம்பன்சேஷனைக் குறைத்தாலும் பாவாயில்லை. இரண்டு பேருக்கும் இடையே உழுபவனுக்கும் நிலச் சொந்தக் காரனுக்கும் கசப்பில்லாமல் எந்தவித அக்குபிக்கு இல்லாமல் விலக வேண்டியது தான் நல்லது என்பது எங்களுடைய எண்ணம். கோவில்களைப் பொறுத்த வரையில், ஒரு யோசனை. அரசாங்கம் யோசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கோவில்களைப்பற்றி நான் பேச வேண்டியிருந்ததை அடிகளார் அவர்கள் பேசி விட்டார்கள். மதுரைக் கோவிலைப் பொறுத்த வரையில், நமது மாநிலத்தில் பெரிய கோவில் பழங்காலத்துக் கோவில், தமிழ் தோன்றிய அன்றே தோன்றிய சொக்கநாதர் கோவில். அந்தக் கோவில் இன்று எப்படி நடக்கிறது என்று புரிந்துகொள்ள வேண்டும். திருப்பரங்குன்றத்தின் கோவில் வருமானம் இல்லையென்றால், மதுரைக் கோவிலே கிடையாது கோவிலை இழுத்து மூடுவதைத் தவிர வேறு வழியில்லை. திருப்பரங்குன்றம் கோவிலை வைத்துத் தான் மதுரைக் கோவில் நடக்கிறது. இதில் அந்த நிலங்களை எடுத்துக் கொடுத்து விடுவதைக் காட்டிலும், இன்னொரு யோசனை சொல்லுகிறேன். அம்மாதிரிக் கோவில்களில், மசூதிகளில், சர்ச்சுகளில், அந்த விவசாயிகளை அப்புறப்படுத்தக்கூடாது. உழுபவன் உழட்டும். அவர்களும் இந்த தேவஸ்தானங் களும் சேர்ந்த கூட்டுறவு முறையில் அல்லது ஏதாவது ஒரு அசோசியேஷன் பார்ம் பண்ணி அதன்மூலம் அவர்கள் பிறகும் உழுது வரட்டும். கோவில் களுக்குக் கிடைக்கக்கூடிய அந்த வருமானத்தை அவர்கள் கொடுத்துவிட வேண்டும். இந்தச் சட்டத்திலிருந்து இந்தக் கோவில்கள், மசூதிகள், சர்ச்சுகள் இவைகள் சம்பந்தப்பட்ட சொத்துக்களை விலக்கி அசோசியேஷன் 'பார்ம்' பண்ணி அந்த விவசாயிகளும் ஸ்தாபனங்களும் ஒன்றாக இருந்து கிடைக்கக் கூடிய நியாய வாரத்தை நிர்ணயம் செய்து, அதை அவர்கள் கொடுக்கும்படி ஏற்பாடு பண்ணிவிட்டால், அந்த அசோசியேஷன் இருந்து நடத்திக்கொண் டிருக்கலாம் என்ற யோசனையைத்தான் சொல்லுகிறேன். அரசாங்கம் யோசிக்கலாம். பொறுக்குக் குழுவும் யோசிக்கலாம். தவிர, இப்போதிருக்கிற மசோதாவின்படி அவர்கள் ஒரு தவணை செலுத்திவிட்டால், அந்த நிலத்தை அவர்கள் என்னவும் செய்யலாம் என்று மகாபாதகமான முடிவுக்குக் கொண்டு போய்விட்டுவிடும். பூரா பாக்கியையும் கட்டிய பிறகுதான் அவர்களுக்கு 'அப்சலூட் ரைட்' ஏற்படுமென்று சொல்லி, நிலத்தைப் பந்தப்படுத்தவேண்டு மென்று இருந்தால் அதைப் பற்றி எந்த ஆட்சேபணையும் இல்லை. இதுமாதிரிச் சிக்கல்கள் நிறைய இருக்கின்றன. இப்போது ஏதும் அவசரம் இருப்பதாக என் மனசுக்குப் படவில்லை. அமைச்சர் அவர்கள் இப்போது இதை நிறை வேற்றத் தவறினால், நாளையே வெளியேற்றப்படுவார்கள் என்ற நிலைமை இல்லை.

நேற்றுக் கூட்டத்தில் கூட பேரவை அங்கத்தினர் திரு. மணலி கந்தசாமி அவர்கள் பேசினார்கள், உடனே விவசாயிகளை வெளியேற்றுவதற்கு ஏற்பாடு செய்துவிடுவார்கள் என்று. அது நடக்கக்கூடிய காரியம் அல்ல. எப்போதும் வெளியேற்ற முடியாது. இப்போது 'டெனன்ட்ஸ் புரொடக்ஷன் ஆக்ட்' என்று இயற்றி ஒரு நல்ல பாதுகாப்புக் கொடுத்திருக்கிறோம். அதை நாம் மனப்பூர்வமாக ஆதரித்தோம். அந்த டெனன்ட்ஸ் புரொடக்ஷன் ஆக்ட்-க்கு அமெண்டுமென்டு வரும்பொழுது, மனப்பூர்வமாக ஆதரித்தோம். இன்னும் இந்த மசோதாவை நாம் ஆதரிக்கிறோம், இந்த ரூபத்தில் அல்ல. இன்று இருக்கும் ரூபத்தை மாற்ற வேண்டும். எந்த கிளாஸ் ஆனாலும் சரி, சில வார்த்தைகளானாலும் சரி, அடியோடு மாற்ற வேண்டும். இரண்டு சபை உறுப்பினர்களும் சேர்ந்த பொறுக்குக் குழு அமைக்க இன்னும் காலம் தாழ்ந்துவிடவில்லை. அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு சபைகளும் சேர்ந்த பொறுக்குக் குழு இல்லாவிட்டாலும் கூட, இந்தச் சபையைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பொறுக்குக்குழுவாவது அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இன்றையதினம் இங்கு நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். எனது உரையை நான் துவக்குகிற நேரத்திலே சட்டத்தின் முக்கிய அம்சங்களைப்பற்றி நான் நீண்ட நேரம் பேசியிருக்கிறேன். முக்கிய அம்சங்களை விளக்கிச் சொல்லியிருக்கிறேன். இதற்குமேல் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களையெல்லாம் வைத்து ஒவ்வொரு உறுப்பினர் பேசிய கருத்துக்கும் பதில் சொல்வதென்றால், மணி எட்டு ஆகிவிடும். அதற்கு மேல் Clause-by-Clause விவாதம் செய்ய வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டத்தைப்பற்றி பொதுவாக, அவசரம் அவசரமாக ஏன் கொண்டு வருகிறார்கள் என்று எல்லோராலும் ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. அரசாங்கம் சம்பந்தப்பட்ட வரை காலம் கடந்து வருகிறதே என்றுதான் நாங்கள் கருதுகிறோம். இது அவசரம் அவசரமாகக் கொண்டு வரப்படவில்லை. எப்போதோ வந்திருக்க வேண்டிய சட்டத்தை இப்போது கொண்டுவந்திருக்கிறோம். கொண்டுவந்திருக்கிற சட்டத்தை மேலும் காலதாமதப்படுத்த வேண்டாம் என்பது தான் அரசின் நோக்கமே தவிர, அதில் தனிப்பட்ட நோக்கம் எதுவுமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மதிப்புக்குரிய அங்கத்தினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் ரொம்பத் திறமையோடு வாதிட்டார்கள். அவர் இரண்டு பக்கத்திற்கும்



வாதிட்டுக் காட்டினார்கள். கொஞ்ச நேரம் குத்தகைக்காரர்களுக்காக வாதிட்டார்கள். அவர் ஏழைகளுக்காக வாதிட்டத்தைக் கேட்டு, இங்கு கம்யூனிஸ்டுகள் யாராவது இருந்திருந்தால் கூட அசந்து போயிருக்கக்கூடும். அந்த அளவுக்கு கம்யூனிஸ்டுகளைப் போல் ஏழைகளுக்காக வாதிட்டார்கள். கொஞ்ச நேரம் கழித்து மீண்டும் நிலச்சுவான்தார்களுக்காக எப்படிப் பேசுகிறேன் பார் என்று சொல்லி, நிலச்சுவான்தார்களுக்காகப் பேசிக் காட்டினார்கள். அதைக் கேட்டால் நிலச்சுவான்தார்கள் நல்ல ஒரு அட்வகேட்டைத்தான் நாம் அனுப்பியிருக்கிறோம் என்று அவர்கள் பாராட்டியிருக்கக் கூடும். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுடைய திறமை மிக்க வாதங்களை நான் பாராட்டுகிறேன். ஆனால் அந்த வாதம் முழுவதும் இந்தச் சட்டத்தின் நோக்கத்தை அவர் சந்தேகிக்கிறாரோ என்று நாமெல்லாம் எண்ணக்கூடிய அளவுக்கு பயன்பட்டதே தவிர, வேறு அல்ல. இந்தச் சட்டத்தினால் உழவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று சொல்லுவதை என்னால் ஒத்துக் கொள்ள முடியாது. இதற்கு முன்பெல்லாம் "குத்தகைதாரர்களிடத்தில் நிலச்சுவான்தார்கள் நிலங்களை ஒப்படைத்துவிட்டு அந்தக் குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிக்கவே முடியவில்லை. குத்தகையைக் கொடுக்கமாட்டேன் என்கிறான். இதற்கு எப்படியாவது வழி செய்யுங்கள்" என்று இந்த மன்றத்தில் வாதிக்கப்பட்டது. சற்று நேரத்திற்கு முன்பு திரு. சுவாமிநாதன் அவர்களிடத்தில் வசூலிக்க முடியவில்லையென்று வாதிட்டார். அப்படி இருக்கிற நேரத்தில் ஒரு புதிய சலுகையை நாம் தருகிறோம். பாதி நிலத்தை அவர்கள் திரும்பப் பெறலாம் என்ற சலுகை தந்திருக்கிறோம். பாதியைத் திரும்பப் பெற்று அவர் விற்றுவிடலாம். பாதியை சொந்தச் சாகுபடிக்கு வைத்துக் கொள்ளலாம் என்ற உரிமையைக் கொடுக்கிறோம். அது சாத்தியம் தானா, சொடுப்பார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. நான் எல்லோருக்கும் தெரிவித்துக்கொள்வது சட்டப்பேரவையில் இதை விவாதிக்கும்பொழுது அங்கு அவை உறுப்பினர்கள் சந்தேகத்தைக் கிளப்பவில்லை. ஆனால் ஒன்றைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் தமிழ் நாட்டில் இந்த சட்டத்தைக் கொண்டுவந்த பிறகு பல்வேறு மாநிலங்களில் இப்படிச் சட்டங்கள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து பார்க்கும்பொழுது, கேரளாவில் இது போன்ற சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அங்கும் இப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. உரிமை தரப்பட்டிருக்கிறது. அந்த உரிமை கொடுப்பதில் எந்தத் தவறும் இல்லை.

**திரு. கே. ராஜாராம்:** கேரளாவில் கவர்ண்மெண்டே நஷ்ட ஈடு கொடுக்கும் பொறுப்பை ஏற்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திருக்குறளை எடுத்துக்கொண்டால், அவரவர்களுக்குத் தேவையான பகுதியை அவரவர்கள் எடுத்துக்கொள்வது போல், கேரளா சட்டத்தில் அவர்கள் அவர்களுக்கு வசதியானதை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். தலைவர்கள் கூட்டத்தில் கூட சொன்னேன். கேரளச் சட்டத்தின்படி அரசாங்கத்தினிடம் பொறுப்பு வந்துவிடுகிறது. அரசாங்கம் நஷ்ட ஈட்டை நிலச்சுவான்தார்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் குத்தகைதாரர்கள் உரிமையாளராக ஆனதற்குப் பிறகு அவர்கள் தாங்கள் கொடுக்க வேண்டிய பாக்கியை அரசாங்கத்துக்குக் கொடுக்க வேண்டும். இவர்களும் கொடுப்பதில்லை. பாக்கியைக் கொடுக்கவில்லை. இவர்கள் நிலச் சுவான்தார்களுக்குக் கொடுக்கவில்லை. கேரளாவைப் பொறுத்த வரையில், அப்படியே ஸ்டேல்மேட்டாக அந்தச் சட்டம் நிற்கிறது. சட்டம் அமுலுக்கு வந்து விட்டது. நிலச்சுவான்தார்கள் நிலத்தை இழந்துவிட்டு, உழுபவனிடம் நிலம் இருக்கிறது. உழுது கொண்டிருக்கிறான், ஆனால் அரசாங்கத்துக்குப் பணம் கட்டவில்லை. நிலச்சுவான்தாரர்கள் அரசாங்கத்திடமிருந்து பணத்தை வாங்க முடியவில்லை. இது தான் கேரளாவின் நிலைமை. நான் கேட்டு அறிந்ததிலிருந்து சொல்லுகிறேன். இதைச் சொல்வதினால் ஒரு அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிற ஒரு சட்டத்தைத் தாழ்த்திக் குறை சொல்லுவதாக தயவு செய்து எவரும் கருதிவிடக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நண்பர் திரு. சுவாமிநாதன் தீவிரமாக வாதிட்டார். "இங்கே சென்னையிலுள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்யும்பொழுது, பணம் கொடுக்கிறீர்கள் ஏன் அங்கே பணம் கொடுக்கக்கூடாது? எங்களுக்கு நிலம் தேவையில்லை. எடுத்துக் கொள்ளுங்கள். நிலத்தைக் கேட்கவில்லை. பணத்தைக் கையில் கொடுத்து விடுங்கள்" என்று தீவிரமாக வாதிட்டார்கள். அதற்குத் தான் ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் குத்தகைதாரர்களுக்கு ஒரு நிதி உதவிக் கழகம் ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன் இந்தச் சட்டத்திலேயே சொல்லவில்லையென்று கேட்டார்கள். அது தனியாக பேங்கிங் என்று வருவதால் இந்தச் சட்டத்தில் சொல்லவில்லை. சீக்கிரத்தில் ஆராய்ந்து விரைவில் அது வரும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்: அது எந்த அளவுக்கு நிலச்சுவான்தாரர்களுக்கு உடைமையாளருக்கு அதன் மூலமாகப் பாதுகாப்பு கொடுக்க முடியும், தொகை கொடுக்க முடியும் என்பதை ஆராய்ந்து செய்ய வேண்டிய ஒரு காரியம். எல்லோருக்கும் கொடுத்துவிட முடியுமா என்று கேட்டால், கொஞ்சம் சங்கடமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். ஒருவேளை நிதிநிலை இடம் தருமானால், அப்படிக் கொடுப்பது பற்றி ஆட்சேபனை கிடையாது.





நேற்றையதினம் வெளிப்படையாக பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். அந்தக் கருத்துக்களை இந்த இடத்திலே சொல்லவேண்டிய அவசியமில்லை என்று நான் கருதுகிறேன். அங்கத்தினர்களும் உணருவார்கள். அந்தக் காரணத்திற்காக அரசு இதை தனிப்பட்ட ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கலாம் என்று கருதுகிறபொழுது எல்லா அங்கத்தினர்களும் ஒத்துக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். பொதுவாக இந்தச் சட்டத்தின் கொள்கையை யாரும் எதிர்க்கவில்லை. எல்லோரும் வரவேற்றிருக்கிறார்கள் என்று
கருதுகிறேன். குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று நண்பர் 7–20
திரு. சுவாமிநாதன் அவர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி, வலியுறுத்திச் பி.ப.
சொன்னார்கள். எப்படி வெளியேற்றப்படுவார்களென்று எனக்குப் புரியவில்லை. இதிலே குத்தகைதாரர்கள் நில உரிமை பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதென்று சொல்கிறோம். ஒரு ஐந்து ஏக்கர் பயிர் செய்கின்ற ஒரு குத்தகைதாரன் இரண்டரை ஏக்கராவுக்கு உரிமையாளராக ஆகிறான். குத்தகை உரிமை போய் நில உடைமை உரிமை அவனுக்கு வருகிறது. வெளியேற்றப்படுவார்களென்ற பிரச்சினையே இல்லை. மீதியிருக்கின்ற இரண்டரை ஏக்கராவிலிருந்து வெளியேற்றப்படுகிறான் என்று சொல்கின்றார். ஐந்து ஏக்கராவை ஒருவன் பயிர் செய்கிறான், ஐந்து ஏக்கருக்குக் குத்தகைதாரர் என்பது போய் இரண்டரை ஏக்கராவுக்கு உடைமை, சொந்தக்காரனாக வருகின்ற உரிமையை அவனுக்குக் கொடுத்து விடுகிறோம். இரண்டரை ஏக்கரா பூமிக்குச் சொந்தமாகும் வாய்ப்பைப் பெறுகிறான். நிலமற்றவனாகிறான் என்று சொல்வதற்கே பிரச்சினை இல்லை. அவன் நிலமற்றவனாகப் போகமாட்டான்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, இப்பொழுதிருக்கிற மசோதாவில் 12 வருஷக் குத்தகையைக் கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். ஒரு குத்தகைதாரர் 12 வருஷக் குத்தகையைக் கொடுப்பதாக இருந்தால், அவனை வெளியேற்ற முடியாது. அதே நபர் இரண்டு வருஷம் கொடுத்து விட்டு, மூன்றாவது வருஷம் கொடுக்காமலிருந்தால் கூட வெளியேற்ற முடியாது. வேறு வகையில்தான் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், ஐந்து ஏக்கர் குத்தகை எடுத்திருக்கிற ஒரு குத்தகைதாரர், இரண்டரை ஏக்கருக்கு சொந்தக்காரர் ஆகிறார், மீதி இரண்டரை ஏக்கரைத் திருப்பி எடுத்துக் கொள்ளலாமென்ற நிலைமை ஏற்படுகிறது. இரண்டரை ஏக்கரைப் பொறுத்த வரையில், அவர் வெளியேற்றப்படுகிறார் என்ற நிலைமை நிச்சயமாக ஏற்படுகிறது. இதிலே சந்தேகம் ஒன்றுமில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, அவர்கள் நிலமற்றவர்களாக ஆக்கப்பட மாட்டார்கள். அவன் ஐந்து ஏக்கரா நிலத்தை உழுது கொண்டிருக்கிறான் என்றால், ஐந்து ஏக்கரா நிலத்துக்கும் சொந்தக்காரன் இல்லை. இரண்டரை ஏக்கராவுக்குச் சொந்தக்காரனாக ஆகிறான். அவர்கள் நிலத்தை விட்டுப் போகவேண்டிய அவசியமில்லை. உழுது கொண்டிருந்தபடியே உழுது கொண்டிருப்பான்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இப்பொழுது ஐந்து ஏக்கருக்குச் சொந்தக்காரனாகவிருந்தாலும், குத்தகைக்காரராகவிருந்தாலும், இப்பொழுது பணம் கொடுக்காவிட்டால், குத்தகைதாரனாகவே பன்னிரண்டு வருஷ காலமுமிருப்பான். இப்பொழுது வருகின்ற நிலைமை என்னவென்றால், பாதி நிலத்திலிருந்து அவன் வெளியேற்றப்படுகிறான். இது தெளிவான விஷயம். நான் புரிந்துகொண்டு தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, எல்லோரும் எடுக்க முடியாது. இதிலே போட்டிருக்கிறோம். 'அக்ரிகல்சுரல் இன்கம் டேக்ஸ்' கட்டக்கூடாது, இன்கம்-டேக்ஸ் கட்டக்கூடாது. அவைகள் கட்டாதவர்கள் தான் ' 'resume' ' பண்ண முடியும், அதுவும் ஐந்து ஏக்கருக்கு மேல் 'resume' பண்ண முடியாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எல்லோரும் இதை வரவேற்பார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம், இன்னும் எல்லாச் சட்டங்களும் குத்தகைதாரர் பாதுகாப்புக்காகவே கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன்.

நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் விவாதித்து விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய வாதத்தை இப்பொழுது எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவார்கள், நிலமற்றவர்களாக ஆக்கப்படுவார்கள் என்பதைச் சரியான வாதமாக ஏற்க முடியாது என்றுதான் கருதுகிறேன். இதுதான் எங்களுடைய கொள்கை, நாங்கள் புரிந்து கொண்டிருக்கின்ற இந்தச் சட்டத்தின் நோக்கமும் இதுதான் என்பதை வலியுறுத்திச் சொல்கிறேன்.



திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் அழுத்தம் திருத்தமாகப் பேசினார்கள். நான் சட்டத்தை வரவேற்கிறேன், நான் சட்டத்தை வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டு உடனேயே எதிர்ப்பு சொல்லிக்கொண்டே வந்தார்கள். சட்டத்தை வரவேற்கிறேன என்று சொல்வது, உடனே எதிர்ப்பு தெரிவிப்பது தான். ஆண்டோனி பேச்சு போல் சொல்லிக்கொண்டே வந்தார்கள். ப்ருடஸ சொன்னதை நான் வரவேற்கிறேன் என்று அவர் சொன்னதுபோல் இவர் "நான் சட்டத்தை வரவேற்கிறேன்" என்று சொல்லிவிட்டு எதிர்ப்பு சொல்லிக் கொண்டே வந்தார். இதிலே இருக்கின்ற குறைபாடுகளைத் திருத்திக் கொள்ளுங்கள், இந்தச் சட்டத்தில் இருக்கிற குறைகளைத் திருத்திக்கொண்டு வாருங்கள் என்று சொல்லியிருந்தால் ஏற்றுக்கொண்டிருக்க முடியும். வரவேற்கிறேன் என்று அடிக்கடி அந்த வார்த்தையைச் சொன்னாரே தவிர, பேச்சு முழுவதும் எதிர்த்தே பேசிக்கொண்டு வந்தார்கள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: தலைவரவர்களே, சட்டத்தின் நோக்கத்தை வரவேற்கிறேன். நான் கேட்டுக்கொண்ட திருத்தங்களைச் சட்டத்தில் கொண்டு வரவேண்டுமென்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, சட்டத்தின் நோக்கத்தை வரவேற்கிறேன் என்று சொல்லிவிட்டு, சட்டத்தின் அடிப்படையை எதிர்த்துக் கொண்டிருப்பது சரியல்ல. இதுதான் என்னுடைய கருத்து, எண்ணம் எனபதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் வழக்கம்போல் அழகான ஆங்கிலத்தில் பேசினார்கள். அவர் கோயில் நிலங்களுக்கெல்லாம் மார்க்கெட் ரேட் போட்டுக்கொடுக்க வேண்டுமென்றும், அப்பொழுதுதான் அறநிலையங்கள் ஒழுங்காக நடைபெறுமென்றும் சொன்னார்கள். டெனன்ட்ஸ் பைனான்ஸ் கார்ப்பரேஷனை ஏற்படுத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். அரசு இதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறது, விரைவில் முடிவு எடுக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். அவர் இன்னொன்றையும் சொன்னார்கள். ஏழை நிலச்சுவாந்தார்களிடம் இரக்கமில்லாமல் நடந்துகொள்கிறீர்கள் என்று சொன்னார்கள். ஆங்கிலத்தில் 'மெர்ஸிலஸ்' என்று சொன்னார்கள். அப்படியல்ல. பொதுவாக நிலம் வைத்திருக்கின்றவர்கள் நிலத்தைக் குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். இதே மன்றத்தில் இது மாதிரியான விஷயங்களை விவாதிக்கும்போது பலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுடைய பழைய பேச்சுகளை எடுத்துப் பார்த்தால், இது தெரியுமென்று கருதுகிறேன். அவர் சொல்லியிருக்கிறார், "குத்தகைதாரர்கள் குத்தகை கொடுப்பதில்லை, நிலச் சொந்தக்காரர்கள் நிலங்களை விற்றுவிடக்

கூட தயாராகவிருக்கின்றார்கள். விற்பதற்கு என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று சொன்னார்கள். இப்பொழுது நிலத்தை விற்கும் உரிமையைக் கொடுக்கிறோம். அந்த உரிமையைக் கொடுக்கின்ற நேரத்தில் வரவேற்றிருக்க வேண்டும். இப்பொழுதாவது வந்தது, விற்று விடலாமென்று வரவேற்றிருக்க வேண்டும். அந்த உரிமையை வரவேற்காமல் மொத்தத்திலேயே ஏதோ ஏழைகளைப் பாதிக்கக்கூடிய சட்டமென்று சொல்வது சரியல்ல. நண்பர் திரு. பக்கர் அவர்கள் பேசுகின்றபோது, "தஞ்சை மாவட்டத்தில் ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா நிலம் வைத்திருக்கின்றவர்கள் பலர் வெளிநாடுகள் சென்றிருக்கிறார்கள். அவர்கள் இங்கே வாங்கி வைத்து விட்டு அங்கு சென்றிருக்கிறார்கள், அவர்களுக்கு பாதகம் ஏற்படும்" என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கராதான் வாங்கி வைத்திருப்பார்களென்று நான் நினைக்கவில்லை. பெய்கோன் மற்ற வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கின்றவர்கள் எல்லாம் நிறைய பூமி வாங்கி வைத்திருப்பார்கள் என்று நான் நான் நம்புகிறேன். அதனால் இழந்து விட வேண்டுமென்று நான் சொல்லமாட்டேன். அவர்களுக்கு பாதி நிலத்தை திரும்பப்பெறுகின்ற உரிமை இருக்கிறது. இப்பொழுது குத்தகைதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் வெளிநாடுகளில் உள்ளவர்களுக்கும் இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவர்களைக் கேட்டால் ஒத்துக்கொள்வார்கள். அவர்களை விட்டால் போதுமென்று தான் நினைப்பார்கள். சட்டி சுட்டது கை விட்டது, என்னை விட்டு விடுங்கள் என்று சொல்வதுபோல் நிலச்சுவாந்தார்கள் இன்றையதினம் இருக்கிறார்கள். எனவே விற்க உரிமை இருக்கின்றபோது, வாங்கி விற்று விடலாமே. அதற்கு ஏன் சந்தேகம் ஏற்பட வேண்டுமென்று புரியவில்லை. யாருக்கும் பாதகமேற்படக்கூடாது என்பதற்காகத்தான் நிலச்சுவாந்தார்களுக்கு விற்கின்ற உரிமை கொடுத்து அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு விற்கவும், குத்தகைதாரர்களுக்கு வாங்கிக்கொள்ளவும் உரிமை கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதல் தவணையைக் கொடுத்து விட்டு, ஏதேனும் செய்துவிட்டால், என்ன செய்வதென்று எல்லோரும் வருத்தப்பட்டார்கள். வாங்கி ஒன்றும் செய்துவிட முடியாது. விற்றுவிட முடியுமா என்றால், இதை முதல் சார்ஜாகப் போட்டிருக்கிறோம். இந்த பாக்கி கொடுக்கப்பட வேண்டியது என்று போட்டிருக்கிறோம். இந்தப் பணத்தைத்தான் முதலில்





கொடுக்க வேண்டும். வேறு யாருக்கும் விற்றுவிட முடியாது. இந்தப் பணம் கடனாகத்தானிருக்கும். அதை வாங்குகிறவர்கள் இதற்குக் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும், இந்தக் கடனுக்கு பதில் சொல்லியாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

நண்பர் ஜானி பாய் அவர்கள் நபிகள் நாயகம் பொன் மொழியை எடுத்துச் சொல்லி எனக்கு உதவியான கருத்தை எடுத்து வைத்தார்கள். இவ்வளவு பெரிய பொன் மொழியை நேற்றுச் சொல்லியிருந்தால் நான் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லி, அவருடைய கட்சிக்காரர்கள் வாதிட்டபோது நபிகள் நாயகமே சொல்லியிருக்கிறார்கள், நீங்கள் எதிர்க்க வேண்டாமென்று சொல்லியிருப்பேன். அவர் பேசியதற்குப் பிறகு நண்பர் திரு. பக்கர் அவர்கள் பேசுகின்றபோது அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பினேன். அப்படியில்லை. இதிலே உழவர் பெருமக்கள் நன்மை அடைந்திருக்கிறார்களா, உழுகின்றவனுக்கு நன்மை இருக்கின்றதா என்று முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் கேட்டார்: உழவர்கள் யார், யார் என்று எடுத்துக்கொண்டால், ஒரு ஏக்கரா, இரண்டு ஏக்கரா, மூன்று ஏக்கரா, ஐந்து ஏக்கரா வைத்துக்கொண்டு சொந்தச் சாகுபடி செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும், ஒரு பச்சை உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும். ஒரே ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் ஏர் பூட்டி உழுவது என்று வந்தால் அவனும், அவன் மனைவி, மக்களை வைத்துக் கொண்டு உழுவது என்பது நிச்சயமாக முடியாது. அதிலே களை எடுப்பதும், நாத்து நடுவதும் கூலி ஆட்களை நம்பித்தான் செய்ய வேண்டும். விவசாயத்தைப் பொருத்த வரையில், கூட்டு முயற்சி என்பதை மறந்துவிடக்கூடாது, மறைத்துவிட முடியாது. ஒரே ஒரு ஏக்கர் வைத்துக்கொண்டிருந்தாலும் சரி, ஒரே குடும்பம் நடவு நட்டு, நாத்தெடுத்து எல்லாம் செய்துவிட முடியுமா என்றால், முடியவே முடியாது. கூலிக்கு ஆட்களை வைத்துத்தான் செய்தாக வேண்டும், இல்லாவிட்டால் விவசாயம் செய்ய முடியாது. இது இப்பொழுது கிராமங்களில் இருக்கின்ற உண்மை. ஆகவே அங்கே பாடுபடுகின்றவர்களுக்கெல்லாம் கூலிப் பாதுகாப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் இருக்கின்றதால், இப்பொழுது வேறு எதுவும் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தனக்கே உரித்தான மொழியில் சிலப்பதிகாரத்தில் வருகின்ற கருணை மறவேல் என்பதை எல்லாம் வர்ணித்து விட்டு தனது பேச்சை ஆரம்பித்தார்கள். முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு கருணை உள்ளத்தோடு நடந்திருக்கிறார் என்பது சட்டத்தை முழுமையாகப்

படித்த பிறகு தெரிந்திருக்குமென்று நம்புகிறேன். சிறு கோவில்களுக்கு பாதகம் ஏற்பட்டுவிடுமென்று சொன்னார்கள். அறநிலையங்களுக்குப் பாதகம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் ஏற்கெனவே அவர்கள் சொந்தமாக உழுவதற்காக வைத்திருக்கின்ற இருபது ஸ்டாண்டர்டு ஏக்கரா போக மீதி குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்ற நிலத்தில் பத்து ஏக்கரா சொந்தமாக வைத்துக்கொள்ளலாம் என்று வழி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னது மாதிரி எந்தக் கோவிலிலுமே சொந்தமாக 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வைத்து உழுவது என்பது தமிழ் நாட்டில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எல்லாம் குத்தகைதாரர்களுக்குத்தான் விட்டிருக்கிறார்கள். ஆகையினால் இந்தச் சலுகையை அமுல்படுத்துகின்றபோது, நடைமுறையில் பிரயோஜனம் இல்லாமல்தான் போகும். வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, நாம் ஒன்றும் சட்டத்தில் விதிவிலக்கு வைக்க முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் புதியதாக விதிவிலக்கு ஒன்று வைத்துக்கொண்டு புதிய சிக்கலை வளர்க்க விரும்பவில்லை

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, இதே சட்டத்தில் 20 ஸ்டேண்டர்டு ஏக்கர் வரையில் குத்தகைக்கு விடலாமென்றிருக்கிறது. திரும்பவும் எடுத்துக் கொள்வதற்கான ரைட்டையும் கொடுத்து விடலாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அப்படியல்ல. இப்பொழுது பத்து ஸ்டேண்டர்ட் ஏக்கரா அறநிலையங்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதைத் திரும்பவும் எடுத்துக்கொள்ளும் உரிமை கொடுக்கப்படவில்லை.
பி.ப. 7-30 நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் விவாதித்தபோது உழுகின்றவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று சொன்னார்கள். நான் மீண்டும் சொல்கிறேன், அங்கே உழுகின்ற மக்கள் வெளியேற்றப்படக் கூடாது. இப்பொழுது இருக்கின்ற நிலைமை தொடர்ந்து நீடிக்குமே தவிர, அவர்கள் வெளியேற்றப்படமாட்டார்கள். எனவே பத்து ஸ்டேண்டர்ட் ஏக்கராவை விற்கின்ற உரிமை, வாங்குகின்ற உரிமை உழவர்களுக்கு இருக்கிறது. இவர்கள் திரும்பப் பெறுகின்ற உரிமை இவர்களுக்கு இல்லை. இப்பொழுது இருக்கின்ற நிலைமை தொடர்ந்து நீடிக்கும். பத்து ஸ்டேண்டர்ட் ஏக்கரா என்று சொன்னால், சில இடங்களில் நாற்பது ஏக்கராவாகவிருக்கலாம், சில இடங்களிலே



10, 15, 18 ஏக்கராவாக இருக்கலாம். எனவே, முதலமைச்சர் அவர்கள் எல்லோரையும் கலந்துகொண்ட பிறகுதான் முடிவு எடுத்தார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே எல்லாக் கட்சியினரையும் கலந்துகொண்டுதான் முடிவு எடுக்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள், காலையிலே பேரவையிலே சர்வ கட்சியினரையும் கூப்பிட்டு இப்படி ஒரு திருத்தம் கொடுக்கலாம் என்று இருக்கிறேன், உங்களுடைய அபிப்பிராயம் என்னவென்று கேட்டு, எல்லோரும் சரி என்று ஒப்புக்கொள்வார்கள் என்று சொல்லி, இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்த நேரத்தில் யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஏகமனதாக திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடிகளார் அவர்கள் கூரையைப் பிரித்துக் குளிர் காயக்கூடாதென்று சொன்னார்கள். கூரை கூரையாக இருக்க வேண்டும். குளிருக்கும் இலாயக்கில்லாமல், சூரியனின் ஒளி சஞ்சாரம் செய்கிறது; மழை உள்ளே கொட்டுகிறதென்றால், அது கூரையாக இருப்பதைவிட இல்லாமல் இருப்பதே மேல். வெட்ட வெளியிலே இருந்தால் மழை தான் கொட்டும். ஓட்டைக் குடிசையாக இருந்தால், அழுக்கு முழுவதும் சேர்ந்து விழும், உள்ளே இருக்க முடியாமல் போய்விடும். அப்படி லாயக்கற்றதாகி விட்டதை திருத்தியமைக்க வேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. கிருஷ்ணசாமி நாயுடு, பெரியவர் அவர்கள் பேசும்போது, ஆங்கிலத்தில் சொல்லியிருக்கிறதைப் படித்து, இவர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்களே, மனிதன் சட்டக் காட்டுக்குள்ளே அடைந்து போய்க் கிடக்கிறானே என்று சொன்னார்கள். அது எல்லாம் தத்துவார்த்தங்கள். மனிதன் சட்டக் கோட்டுக்குள்ளேயே, சட்டத்துக்குள்ளேயே இல்லாவிட்டால், சமுதாயமே நடக்காது. சமுதாயத்தில் இரண்டு விதமான சட்டங்கள் இருக்கின்றன. எழுதி வைக்கப்பட்ட சட்டம் ஒன்று, எழுதாத சட்டங்கள் ஒன்று. எழுதாத சட்டங்களுக்குத்தான் மனிதன் எழுதிய சட்டங்களுக்குக் கொடுக்கின்றதைவிட அதிக மரியாதை கொடுப்பான் என்பதை மறந்துவிடக் கூடாது. எழுதிய சட்டங்கள் அடிக்கடி மாறக்கூடியவை. காலப் போக்கில் எல்லாச் சட்டங்களும் நிரந்தரமான சட்டங்கள் அல்ல. மாற்றத்திற்கு உட்பட்டவைகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நில மடந்தைக்குள்ள பொறுமையைப் பற்றிச் சொன்னார்கள். நாம் நில மடந்தைக்குள்ள பொறுமையைச் சோதிக்கவில்லை. ஆனால் நிலமடந்தையை தனிப்பட்ட ஒரு சிலரிடத்தில்

கொண்டுபோய் ஒப்படைக்க முடியாது. அதை திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இந்த நாட்டிலே உழைக்கின்ற மக்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்ற சட்டத்தை, நில மடந்தை, நிலத் தாய் கண்டு கோபித்துக்கொள்வாள் என்று நான் நம்ப வில்லை. அதை வாழ்த்துவாள் என்றே கருதுகிறேன். அந்த வாழ்த்தில் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்கும் பங்கு வேண்டுமென்றால், அவர் களும் எங்களோடு சேர்ந்து இந்தச் சட்டம் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். ஜனநாயகத்தில் சர்வாதிகாரம் நடைபெறுகிறதோ என்று அவர்கள் சொன்னார்கள். ஜனநாயகத்தில் சர்வாதிகாரம் என்பது வாதத்திற்காகச் சொல்லப்படுகின்ற ஒன்று ஆகும். நான் சொல்வது என்னவென்றால், ஜன நாயகத்தில்......

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** கறுப்பாக இருக்கின்ற ஒரு பொருளை, 100-க்கு 80 பேர் வெள்ளை என்று சொன்னால் அது எப்படியோ, அந்த மாதிரி....

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இது அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன பொன்மொழி. அந்த சட்டமன்றத்தில் கேட்டுக்கொண்டு இருந்து விட்டு இவர்கள் திரும்பச் சொல்லுகிறார்கள். அண்ணா அவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கும்போது, சட்டசபையில் சொன்னார்கள். இந்த நாட்டில் ஜனநாயகம் எப்படி நடக்கிறதென்றால்,—சபைத் தலைவர் அவர்களே என்று சொல்லிவிட்டு—காகம் வெள்ளை என்று ஒருவர் சொல்லி, இல்லை காகம் கறுப்பு என்று நான் சொல்லி, சட்டமன்றத்தில் ஓட்டுக்கு விட்டு, அதிகமான மெம்பர்கள்—அப்போது 134 பேர் இருந்தார்கள்—எழுந்து நின்று காகம் வெள்ளை என்று சொன்னால், நாங்கள் 15 பேராக இருக்கிறோம், காகம் கறுப்பு என்று நான் உண்மையைச் சொன்னால்கூட, சட்டத்தில் எழுதும்போது, காகம் வெள்ளை என்றுதான் ஆகும். இது நாட்டிலுள்ள ஜனநாயகம் என்று அண்ணா சொன்னார்கள். அதை இன்னும் நினைவில் வைத்திருக்கிறார்கள். அந்தப் பொன்மொழியை நினைவில் வைத்திருந்ததற்காக அவர்களை நான் பாராட்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நாங்கள் மறக்கவில்லை. ஆனால் இந்த நாட்டில் ஜனநாயக அமைப்பு அப்படித்தான் இருக்கிறது. அதே சமயத்தில் எதிர்க்கட்சிகளை மதிக்காமல் சர்வாதிகாரத் தோடு நடக்கிறோமா என்றால், கிடையாது. சர்வாதிகாரத்தோடு நடப்பதாக இருந்தால், நேற்று காலை எதிர்க்கட்சித் தலைவர்களை உட்கார வைத்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை. இன்று காலையில் கூட முதலமைச்சர் அவர்கள்



எதிர்க்கட்சித் தலைவர்களைக் கூட்டி உட்கார வைத்து, "என்ன சொல்லுகிறீர் கள்? இப்படி ஒரு திருத்தம் கொண்டு வரலாம் என்று இருக்கிறேன், எவ்வளவு ஸ்டாண்டர்டு ஏக்கர் போடலாம்" என்று யோசனை கேட்டு, எல் லோரும் ஒத்துக்கொண்டதைத்தான் போட்டார்கள். ஆகவே இந்த அரசு ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்கு எடுத்துக்கொள்ளும் முயற்சியை எல்லோரும் பாராட்டுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, சட்டத்தை முழுமையாக வரவேற்று விட்டு, சட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும், அதுதான் என் கவலை, வருத்தம் என்று சொன் னார்கள். அதை கூடிய மட்டும் இந்த அரசு பார்த்துக்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த மேலான கருத்தையும் நான் புறக் கணிக்கிறேன் என்று கருதவேண்டாம். இப்படி ஒரு சமுதாயச் சீர்திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் இப்படிப் பல எண்ணங்கள் தோன்றுவது சகஜம். இந்தச் சந்தர்ப்பங்களில் பாதிக்கப்படுகின்றவர்கள் சில பேர் ஆக இருக்கக்கூடும். ஆனால் இதனால் பலன் அடைகின்றவர்கள் எவ்வளவு பேர் என்று பார்க்க வேண்டும். சில பேருக்கு இந்தச் சட்டம் பாதகமாக இருக்கிறது என்று நினைக்காதீர்கள். இதுவரையில் அநீதி இழைக்கப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு நீதி வழங்குவதற்குத்தான் இந்தச் சட்டத்தை இயற்றினோம். அத்தகைய ஒரு சட்டத்தை அங்கத்தினர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று தங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** திரு. சுவாமிநாதன் தான் கொடுத்த திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறாரா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** திருத்தம் மேலவை ஆய்வுக்குழுவுக்கு விட வேண்டும் என்றுதான் கொடுத்தேன். அதிலே முக்கியமான கருத்துக்கு ஒரு விளக்கம் கொடுக்க வேண்டும். ஒரு நிமிஷம் அனுமதிக்க வேண்டும். மசூதிகள், சர்ச்சுகள், மடங்கள், கோயில்களைப் பொறுத்த வரையில் 20 ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் 10 எக்கர் வரை வைத்துக் கொள்ளலாம் என்று நாங்கள் செய்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில், 10 ஏக்கர் வைத்திருக்க முடியாது என்று கருதுகிறேன். காரணம் என்னவென்றால், உச்ச வரம்புச் சட்டப்படி 20 ஏக்கர் நிலம் தான் வைத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை இருக்குமானால், அதுவும் பண்ணையில் 20 ஏக்கர் இருக்கிற சமயத்தில்

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 ஏப்ரல் 3

இன்னும் ஒரு 10 ஏக்கர் குத்தகைதாரர் நிலத்தை எடுத்து வைத்துக் கொண்டால், 30 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்ற நிலைமை ஏற்படும். உச்சவரம்புச் சட்டத்தில் 20 ஏக்கர் என்று இருக்கும்போது, 30 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிற உரிமை அரசுக்கு இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆகவே, இதைப்பற்றி அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். காலையில் திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். விதவைகள், உடல் ஊனமுற்றோர், இள வயதினர் ஆகியோர் எல்லாம் 2 ஏக்கர் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். இவர்கள்தான் குத்தகைக்கு விடவேண்டியவர்கள். ஏனென்றால் மனநோய் உள்ளவர்கள், உடல் ஊனமுற்றோர், மற்றோர் குத்தகைக்கு விடாமல் பண்ணைச் சாகுபடி செய்ய முடியாது. அதற்காக அவர்களுக்குத் தனித் தகுதி கொடுத்தது போலவும் ஆப்ஷன் ஆக இருக்கலாம். இருந்தாலும் ஆப்ஷன் என்ற அளவில் கூட புரியாத நிலைமை இருக்கிறது. ஆப்ஷன் கொடுத்திருக்கிறோம் என்றால், இந்தச் சட்டத்தை ஏன் இவ்வளவு விரைவாகக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கிறீர்கள்? இந்த இரண்டு நிலைமைகளையும் அமைச்சர் அவர்கள் விளக்குவார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அவர்கள் ஒன்று சொன்னார்கள். 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஆகிவிட்டால் என்ன செய்வது என்று. நாம் என்ன செய்வது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். எந்த ஒரு அறநிலையம் என்று பாராமல் வித்தியாசம் இல்லாமல் போட்டிருக்கிறோம். எந்த ஒரு அறநிலையமும் நிலமே இல்லாமல் போய் அந்த அறநிலையம் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. அந்த நிலத்தின் வருமானத்தை வைத்துக் கொண்டுதான், அறநிலையங்கள் நடக்கின்றன. அந்த நிலத்தை யாருக்காவது எடுத்துக் கொடுத்து விடுவதன் மூலம் ஒன்றுமே செய்ய முடியாது. அதில் பாதியை 'ரிசம்ப்ஷன் பவர்ஸ்' மூலம் எடுத்துக்கொண்டாலும் கூட மீண்டும் குத்தகைக்குத்தான் கொடுக்க வேண்டுமே தவிர அவர்களாலே சொந்தப் பயிர் வைக்க முடியாது. இன்று காலையில் சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அப்போது அங்கத்தினர்கள் சொன்ன வாதத்திற்கு ஏற்ப அரசு செய்த இந்த முடிவு தான் இது. என்ன சொல்லியிருக்கின்றார்கள் என்று கேட்டால், இப்போது இருக்கின்ற நிலையைப்போல், 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் வரையில் அவர்கள் வைத்துக்கொள்ளலாம். குத்தகைதாரரை வெளியேற்ற முடியாது. குத்தகைதாரருக்கு நிலத்தை வாங்குகின்ற உரிமை இல்லை. அதே நேரத்தில் நிலத்தைத் திரும்பப் பெறுகின்ற உரிமையும் அவர்களுக்கு இல்லை. பத்து



1973 ஏப்ரல் 3] [திரு. ப. உ. சண்முகம்]

ஸ்டாண்டர்டு ஏக்கர் வரையில் தற்காலம் இருக்கின்றதை அப்படியே தொடர்ந்து அந்த இன்ஸ்டிடியூஷன் வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேல் நிலம் இருந்தால், இந்தச் சட்டம் வரும். 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் ஒரு இன்ஸ்டிடியூஷனுக்கு இருப்பதாக வைத்துக்கொள்ளுங்கள். அதில் 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக்கொள்ளலாம். அதற்குரிய உரிமையை அந்த இன்ஸ்டிடியூஷனுக்குக் கொடுத்திருக்கிறோம். மீதி இருக்கின்ற 10 ஸ்டாண்டர்டு ஏக்கரைப் பொறுத்தமட்டில் 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் குத்தகைதாரருக்குப் போகும், மிச்சம் இருக்கின்ற 5 ஸ்டாண்டர்டு ஏக்கரை விற்கின்ற உரிமையை அந்த இன்ஸ்டிடியூஷன் பெறும். இதுதான் நாம் போட்டிருக்கின்ற சட்டத்தின் கொள்கை, தத்துவம், நோக்கம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** ஒரு ஸ்தாபனத்துக்கு 20 ஏக்கர் பண்ணை இருக்கிறது. இன்னும் 10 ஏக்கர் குத்தகைக்கு வைத்துக்கொள்ளலாம். ஆக மொத்தம் 30 ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை. நான் சொல்வது அது பி.ப.
அல்ல. 20 ஸ்டாண்டர்ட் ஏக்கர். 100 ஏக்கர் என்று கூட வைத்துக் கொள் 7-40
ளுங்கள், டிரஸ்ட் லேண்ட் ஆக கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைப்படி. நான் கொடுக்கிற விதி விலக்கின்படி 100 ஏக்கரா அவர்கள் வைத்துக்கொண்டிருந்தார்கள் என்றால், அவர்கள் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரா இப்போது வைத்துக் கொள்ளலாம். குத்தகைதாரர்களை வெளியேற்ற முடியாது. அந்த 100 ஏக்கராவிற்குள் தான் இந்த 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரா வைத்துக்கொள்ளலாம். மிச்சம் இருக்கிற ஸ்டாண்டர்ட் ஏக்கரா இந்தச் சட்டத்தின்கீழ் வரும். இந்தச் சட்டப்படி பாதியைத் திரும்பப் பெறலாம். பாதியை விற்று விடலாம். திரும்பப் பெறுகின்ற உரிமைப்படி அவர்கள் வாங்கி விற்று விடலாம் அல்லது அவர்களே வைத்துக்கொள்ளலாம், சொந்தப் பயிர் வைத்துக் கொள்ளலாம் என்று நாங்கள் சட்டம் வகுத்திருக்கிறோம். நான் ஏற்கனவே தெளிவுபடுத்தியிருக்கிறேன். மீண்டும் தெளிவுபடுத்தலாம் என்று கருதுகிறேன். எனவே இருக்கின்ற அற ஸ்தாபனங்கள் நிலமேயில்லாமல், வருமானத்தை நம்பியிருக்கிற அவைகள் மூடிவிடக்கூடாது, கெட்டுவிடக்கூடாது என்று பாதுகாப்புக்காக போடப்பட்ட ஒன்றே தவிர வேறு அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** சம பங்காளிகளாக குத்தகைதாரர்களும், அறநிலையங்களும் பண்ணையாக நடத்துவதைப்பற்றி அமைச்சருடைய கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் இதுபோன்ற கூட்டுப் பண்ணை வைத்து நாம் வெற்றி பெறவில்லை என்பதைத் தவிர வேறு ஒரு பதிலும் சொல்வதற்கில்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** ஒருவர் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரா வைத்திருந்தால், குத்தகைதாரருக்கு 5 ஏக்கரா கொடுத்துவிடுகிறார். பாக்கி 5 ஏக்கராவை இவர் வாங்கிக்கொள்கிறார். இதை ஒரு குத்தகைதாரருக்கு விடுகிறார். விட்டதாக வைத்துக்கொள்வோம். பின்னால் அவருக்குப் பாதி கொடுத்து விடுவதா ? இதில் பாதி இரண்டரை ஏக்கராவை இன்னொரு குத்தகைதாரருக்குக் கொடுக்க வேண்டுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதற்காகத்தான் தனி நபர் சொந்தச் சாகுபடி செய்கிற உரிமை இருக்கிறது. சாகுபடி செய்யலாம். "இன்ஸ்டிடியூஷன்"-கள் அற நிலையங்கள் இப்படிச் சொந்த சாகுபடி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதற்காக, எச்சரிக்கையாக அவர்கள் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரா குத்தகைக்கு விட்டிருப்பார்களானால், அவர்கள் அதைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம், இருக்கிற குத்தகைதாரரை வெளியேற்ற முடியாது, குத்தகைதாரர்களுக்கு நிலத்தை வாங்கிக்கொள்கிற உரிமையில்லை, நிலத்தை மீட்கிற உரிமை சொந்தக்காரர்களுக்கு இல்லை என்று சட்டத்திலே போட்டிருக்கிறோம்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** "பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்". 10 ஏக்கரா நிலத்திற்கு மேல் வைத்துக்கொள்ளலாமா, சொந்தப் பண்ணை வைத்துக்கொள்ளலாமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** குத்தகைக்கு விடப்பட்டிருந்தால், அந்தக் குத்தகைதாரரை வெளியேற்றக் கூடாது. இருக்கிற நிலைமை தொடர்ந்து வந்தாக வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு ஒன்றும் வாங்க முடியாது.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** திரு. சுவாமிநாதன் அவருடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?



**திரு. ஜி. சுவாமிநாதன் :** என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"That the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land Owners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973), as passed by the Assembly, be referred to a Select Committee consisting of 15 Members of the Legislative Council" :

திருத்தத்தை எதிர்ப்போரே அதிகம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** திருத்தத்தை ஏற்போரே அதிகம் என்று நான் கருதுகிறேன்.

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**மாற்றுத் தலைவர் :** திருத்தம் கொடுத்துள்ளவர்கள் தங்கள் திருத்தங்களை முன் மொழியலாம்.

**பிரிவு 2.**

THIRU V. ISVARMURTI : Sir, I move the following amendment :—

In clause 2, sub-clause (5), *add* the following proviso :

"Provided that land situated within a radius of 16 kilometre of the City and Municipal Limits and classified as urban land under the Urban Land Tax Act shall not be deemed to be 'land' under this definition."

THIRU G. SWAMINATHAN : Sir, I second it.

THIRU G. SWAMINATHAN : Sir, I may be given an opportunity to say a few words on this.

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 ஏப்ரல் 3

தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் இதைப்பற்றி முக்கியமான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதிலே முக்கியமான கருத்து என்று நாங்கள் கருதுவது சென்னை, அதே சமயத்தில், கோவை, சேலம் போன்ற அர்பன் லேண்ட் டாக்ஸ் அமுலில் இருக்கும் பகுதிகளிலிருந்து 16 கிலோ மீட்டர் அளவில் அது அமுல் செய்யப்படுகிறது. இந்த மூன்று இடங்கள் மட்டுமல்ல, இன்னும் பல முனிசிபல் ஏரியாக்கள், நகரத்தை ஒட்டியுள்ள பகுதிகள் ஆகியவற்றில் நிலங்களை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் வர வர இந்தப் பகுதிகளிலே கட்டடங்கள் கட்டுவதும், வீடுகள் கட்டுவதும் நடக்கின்றது. இந்த முறையிலே காம்பன்சேஷன் கொடுத்து, தாங்கள் வைத்திருக்கின்ற நிலங்களை பிளாட்டுகளாகப் போட்டு விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யலாம். இதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அரசு அதற்காக என்ன செய்வதாக உத்தேசம் என்று அறிய விரும்புகிறேன். அதற்கு ஒரு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, நாங்கள் இதைப் பற்றி யோசித்துப் பார்த்தோம். அதிலே இருக்கிற ஒன்றை நான் தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது இருக்கிற சட்டப்படி குத்தகைதாரர்கள், மேல் நிலச்சுவான்தார்கள் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து நிலத்தை விற்றுவிடலாம் என்று ஒரு முடிவிற்கு வருவார்களானால், நாம் அதைத் தடுக்க முடியாது. குத்தகைதாரனை குத்தகையை விட்டு வெளியேற்றக் கூடாது. ஆனால், குத்தகைதாரன் நான் நிலத்தை விட்டுப் போகிறேன் என்று போனால் நிலச் சொந்தக்காரனோ, அரசாங்கமோ நீ இருக்க வேண்டுமென்று அவன் கையைப் பிடித்து நிறுத்தி வைக்க முடியாது. எனக்கு நிலம் வேண்டாம், நான் போகிறேன் என்று சொன்னால், நிலச் சொந்தக்காரன் இப்போது இருக்கிற சட்டப்படி உழுகிறவனிடமிருந்து நிலத்தை எடுத்துக் கொள்ளலாம். பிளாட் போட்டு விற்கக்கூடியதை எந்தச் சட்டமும் தடுக்க முடியாது. இரண்டு பேரும் ஒன்றாகி விட்டால் என்ன செய்வது? இப்படி இரண்டு பேரும் லாபமடைவார்கள். இப்போது நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். பாதியைத் தான் 'செஸ்யூம்' பண்ணுகிறார்கள். நிலச் சொந்தக்காரனும் விற்பதால் லாபம் அடைகிறான். நிலத்தை வாங்குகிறானே குத்தகைதாரன் அவனுக்கு விற்கிற உரிமை இருக்கிறது. விற்று விட்டால் பஸ்ட் சார்ஜ் அதை நிலச் சொந்தக்காரனுக்குக் கொடுக்கவேண்டும். இப்படி இரண்டு பேரும் லாபமடைகிறார்கள். இந்தத் திருத்தம் தேவையில்லை என்று நினைக்கிறேன்.



1973 ஏப்ரல் 3]

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** திரு. ஈஸ்வரமூர்த்தி தன்னுடைய திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுகிறாரா?

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** நான் வலியுறுத்துகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி :—

In clause 2, sub-clause (5), *add* the following proviso:

"Provided that land situated within a radius of 16 kilo metres of the City and Municipal Limits and classified as urban and under the Urban Land Tax Act shall not be deemed to be 'land' under this definition."

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :—

"In clause 2, after sub-clause (12), *add* the following as new sub-clause (13) :

'13. "Religious institutions" means as defined under the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.'

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** நான் அதை வழிமொழிகிறேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** கிளாஸ் 2, டெபனிஷனிலே, திருக்கோவில்கள், சமய நிறுவனங்களின் நிலங்களுக்கு நியாயவாரத்தைப்பற்றிச் சொன்னார்கள். நான் வார அடிப்படையில் சொல்லவில்லை. குத்தகைதாரர்களையும் இன்றைக்கு ஒரு பங்குதாரராகி, நிரந்தர உரிமைதாரர்களாக, அவர்களையும் ஒரு கூட்டமைப்புக்குள் கொண்டு வந்து எல்லா உரிமைகளையும் வழங்க வேண்டும், அவர்களும் நிறுவனத்தை ஏற்றுக்கொள்ளுமாறு செய்ய வேண்டும். கூட்டுப் பண்ணை நமக்குச் சாதகமான ஒன்று. கூட்டுறவுப் பண்ணை சோஷலிசப் புரட்சிக்கு முதற் களம் என்பது அறிஞர்களுடைய கருத்து. அதிலே ஏதாவது பலஹீனம் இருக்குமானால், இதனை நல்ல முறையில் உருவாக்கி, அந்த முறையில் இந்த அறநிலையங்களை உருவாக்கினால், அதன்

மூலம் நிலங்கள் துண்டாடப்படாமல் திருக் கோவில்களின் வருமானம் பாது காப்பாக இருக்கச் செய்ய முடியும். அந்த உழவர்களுக்கும் ஒரு பெரிய பாதுகாப்பாக இருக்கும். இந்தச் சட்டத்தால் அவர்களுக்கு உரிமை வழங்கப் பட்டு பாதி நிலம் அவர்களுக்கும் இன்னொரு பாதி நிலம் திருக் கோவில்களுக் கும் என்று உரிமையாக்காமல், ஆயிரக்கணக்கான ஏக்கராக்களையும் கூட்டாக வைத்து அவர்களையும் அதில் பங்குதாரர்களாக்குவதை வரவேற்பதனாலே இது ஒரு புரட்சிகரமான சட்டம். அதற்கு இதிலே விதி விலக்குத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இந்தச் சட்டத்திலே அற நிலையங்களுக்கு இருக்கிற எதையும் அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை. இந்த அற நிலையங்கள் 10 ஸ்டாண்டர்ட் ஏக்கரா வைத்துக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம். அதுவே போதும். எனவே இந்தத் திருத்தத்தை வலி யுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மாண்புமிகு உறுப்பினர் தவத் திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்து கிறாரா ?

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** நான் என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி :—

"In clause 2, after sub-clause (12), add the following as new sub-clause (13) :

'13. "Religious institutions" means as defined under the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959.' "

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 2, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



**பிரிவு 3.**

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன் :

"In clause 3 for the words 'Subject to the provisions of section 15, any cultivating tenant shall be entitled to purchase the right, title and interest of the landowner in respect of the land comprised in his holding as cultivating tenant', *substitute* the following :

'Subject to the provisions of section 15, any cultivating tenant who is not liable to pay tax under the Tamil Nadu Agricultural Income Tax Act or under the Income Tax Act shall be entitled to purchase the right, title and interest of the landowner in respect of the land comprised in his holding as cultivating tenant'."

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** நான் அதை வழிமொழிகிறேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தம் மூன்றாவது கிளாசிற்குக் கொண்டு வரப்படுகிறது. உழவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்திலே கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் அந்தக் கொள்கை, நோக்கம் ஆகியவை களை முழு மனதோடு வரவேற்கிறேன். ஆனால் விற்பனை வரி, வருமான வரி போன்ற வரி கட்டுகிறவர்கள், வேறு தொழிலை உடையவர்களாக இருப்பவர்கள் குத்தகைதாரர்களாக இருப்பதால், அவர்கள் சாதகம் அடைவதற்கு இது வகை செய்கிறது. இப்படி வருமான வரி செலுத்துகிற வர்கள், வேறு விதமான தொழில் உடையவர்கள் நிலத்தைப் பெற்றுக்கொள்ள வகை செய்வதினாலே இந்தச் சலுகையைப் பெற முடியாமல், அவர்களுடைய குத்தகை உரிமை ரத்து செய்யப்பட்டு, நிலச்சுவான்தார்களுக்கும், நிறுவனங்களுக்கும் நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருகிறேன். உதாரணமாக நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். திரு. தாமோதரன் அவர்கள் கடலூரில் ஒரு கோவில் நிலம் 500 ரூபாய் வாடகைக்கு விடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். கோவில் நிலம் குறைந்த விலைக்கு, குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் குத்தகைதார்கள் என்று அடிப்படையில் சலுகை கொடுக்க வேண்டியதில்லை என்று இந்தத் திருத்தத்தை நான் முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இது குத்தகைதாரர்களுக்காக ஏற்படுத்தப்படுகிற சட்டம். இது குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம். யார், யார் குத்தகைதாரர்களாக வருவார்களோ, அவர்களுக்கெல்லாம் உரிமை கொடுத்திருக்கிறோம். ஏற்கெனவே குத்தகைதாரர் சட்டத்தின் கீழ் எந்தவிதமான தடுப்புமில்லை, தடுக்கப்படவில்லை. இப்போது அதைப்பற்றி இந்தச் சட்டத்திலே போட வேண்டாம். அதைப்பற்றிப் பின்னால் யோசிக்கலாம் என்று கூறி இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்தக் கருத்திலே நியாயம் இருப்பதாகத் தெரிகிறது. நியாயமான கருத்தை உடனடியாக ஏற்பது நல்லது என்று வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மாண்புமிகு உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தன்னுடைய திருத்தத்தை வற்புறுத்துகின்றாரா ?

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** வலியுறுத்துகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"In clause 3 for the words 'Subject to the provisions of section 15, any cultivating tenant shall be entitled to purchase the right, title and interest of the landowner in respect of the land comprised in his holding as cultivating tenant', *substitute* the following :

'Subject to the provisions of section 15, any cultivating tenant who is not liable to pay tax under the Tamil Nadu Agricultural Income Tax Act or under the Income Tax Act shall be entitled to purchase the right, title and interest of the landowner in respect of the land comprised in his holding as cultivating tenant'."

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 3, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 4, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்...



பிரிவு 5.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்—

"In clause 5, sub-clause (1), for the words "within such period as may be prescribed", *substitute* the words "within six months""

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** நான் இதை வழிமொழிகிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இதிலே அரசாங்கம் குத்தகைதாரர்களாக இருப்பவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்பட வேண்டும் என்று அதற்கென்று இருக்கிற அதிகாரியிடத்திலே சொல்லலாம் என்று போட்டிருக்கிறது. அதிலே ஒரு கால கெடு இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். கால கெடு இல்லாமல் போட்டிருப்பதனாலே அதை எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். Damocle's sword' என்ற நிலைமை இருக்கிறது இந்தச் சட்டத்திலே. ரூல்ஸிலே போடலாம் என்கிறார்கள். சட்டத்திலே இல்லை. சட்டத்திலே கொண்டுவரலாம் என்று நான் அதை வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, 'ரூல்ஸ்' போடுவதாக இருக்கிறோம். இப்போது எத்தனை மாதமென்று கேட்கிறார்கள். விதி 7-50 பி.ப.
களைச் செய்யும்போது, காலவரையறை நிச்சயமாக வைப்போமென்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் இயற்றுகிற நேரத்தில், எத்தனை மாதமென்று சொல்வது நல்லதல்ல. நிச்சயமாக காலவரையறை நிர்ணயம் செய்யப்படும்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** திரு. ஜி. சுவாமிநாதன் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

திருத்தம், மன்றத்தின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

THIRU G. SWAMINATHAN : Sir, I move—

In clause 5, sub-clause (3), for the existing provision, *substitute* the following :—

[Thiru G. Swaminathan] [1973 ஏப்ரல் 3

" (3) Where a cultivating tenant is entitled to purchase the right, title and interest in respect of only a portion of the land held by him, the landowner shall be entitled to indicate the portion, the right, title and interest over which he desires to sell ".

THIRU A. R. DAMODARAN : Sir, I second it.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு நிலத்திலே பாதியை எடுத்துக்கொள்ளலா மென்று போட்டிருக்கிறார்கள். ஒருவருக்கு 10 ஏக்கர் நிலமிருக்கலாம். அந்த 10 ஏக்கர் நிலத்திலே, ஒரு பக்கத்தில் கிணறு, பம்ப்செட், கருவிகளை வைப் பதற்கான ஷெட் எல்லாம் இருக்கலாம். மேலும் நாற்று விதைப்பதற்கான நாற்றங்கால், போர் அடிப்பதற்கான இடம் எல்லாம் அந்தப் பக்கத்தில் இருக் கலாம். இப்படிப்பட்ட இடங்கள் அந்தப் பத்து ஏக்கர் நிலத்தில், ஒரு பகுதி யில் இருக்கலாம். ஒரு பகுதி வழியாகவும் இருக்கக்கூடும். இப்படிப்பட்ட நிலைமைகளில், அந்த நிலத்தை எடுத்துக்கொள்கிறபோது, இந்த வசதிகள் உள்ள நிலத்தை குத்தகைதாரர் வேண்டுமென்று சொல்வதால், அதை அவர் எடுத்துக்கொள்ள அனுமதித்துவிட்டேன் என்றால், இந்தக் கண் போன்ற இடங்களை அவர் எடுத்துக்கொண்டு, மீதி இடங்கள் எனக்கு இருந்து என்ன பயன்? அந்தக் கிணற்றிலிருந்துதான் 10 ஏக்கருக்கும் தண்ணீர் பாய வேண்டிய நிலையிருக்கும். மற்றக் காரியங்களுக்கு அந்த 10 ஏக்கர் வேண்டிய அவசியமிருக்கும். அந்த 5 ஏக்கரைக் கொடுத்துவிட்டு, பாக்கி 5 ஏக்கரில் அவர் சொந்தச் சாகுபடி செய்ய முடியாதென்ற நிலைமை ஏற்படும். இதை நம் முடைய Land Ceiling Act -ல் போட்டிருக்கிறோம். உச்சவரம்பு நிர்ணயிக் கிறபோதுகூட, அந்த உச்சவரம்பிற்கு மேற்கொண்டுள்ள நிலங்களில், எந்த நிலத்தை அரசாங்கத்திற்குக் கொடுப்பது என்பது அந்த நிலச் சொந்தக்கார னுடைய உரிமை என்று உச்சவரம்புச் சட்டத்தில் போட்டிருக்கிறோம். முப்பது ஏக்கருக்கு மேலாக வைத்திருப்பவர்களுக்கு 'ஆப்ஷன்' கொடுத்தோம். அதைப் பதினைந்து ஏக்கராக மாற்றியதற்குப் பிறகுகூட, எந்த நிலத்தைக் கொடுப்பதென்ற வரைமுறையைக் கொடுத்தோம். உச்சவரம்பில் இருக்கக் கூடிய நிலச்சுவாந்தார்களுக்கு எல்லாம் 'ஆப்ஷன்' கொடுத்து விட்டு, இப்போது இருக்கக்கூடிய சிறிய, ஏழை நிலச் சுவாந்தார்களுக்கு அந்த உரிமை கொடுக்காமலிருப்பது அவர்களை மிகவும் பாதிக்குமென்று தெரிவித்துக் கொண்டு, தயவுசெய்து அமைச்சரவர்கள் இதை ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1973 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இந்தத் திருத்தத்தை யும் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன். (குறுக்கீடு) அவர்களுடைய நம்பிக்கையைப் பாழாக்கிவிட்டதாகச் சொல்கிறார்கள். அவரது நம்பிக்கையைப் பாழாக்க மாட்டேன். அவர், எங்கள் மீது நம்பிக்கை வைக்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். என்னிடத்தில் நம்பிக்கை வையுங்கள்; அப்படிப்பட்டதொரு தவறு ஏற்படாமல் இருக்குமென்ற உறுதியையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்ன திருத்தம் இப்போது தேவையில்லையென்று கருதுகிறேன். எங்கேயாவது சிக்கல் ஏற்படுமானால், அதுபற்றி யோசிக்கலாம். இப்போது தேவையில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, திருச்சிக்குச் சென்றிருந்த போது, பல இடங்களில், பருத்தி போடக்கூடிய இடங்களைப் பார்த்தேன். ஒரு கிணற்றிலிருந்துதான் மற்ற இடங்களுக்குத் தண்ணீர் பாய்கிறது. எனவே மற்ற இடங்களில் சாகுபடி செய்ய முடியாத நிலைமை ஏற்படும்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** திரு. சுவாமிநாதன் தம்முடைய திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, வலியுறுத்துகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி.

"In clause 5, sub-clause (3), for the existing provision *substitute* the following :—

'(3) Where a cultivating tenant is entitled to purchase the right, title and interest in respect of only a portion of the land held by him, the landowner shall be entitled to indicate the portion, the right, title and interest over which he desires to sell'."

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 5, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

[1973 ஏப்ரல் 3

பிரிவு 6.

THIRU G. SWAMINATHAN : Sir, I move—

"In clause 6, *substitute* the following for the existing provision :—

'6. *Purchase price* :—The purchase price payable by a cultivating tenant for the purchase of right, title and interest of the landowner in the land, buildings thereon, agricultural pumpsets, etc., installed therein shall be the market value; and such market value shall be determined under the principles laid down in the Land Acquisition Act'."

The amendment was duly seconded.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* இதைப்பற்றி நான் பேசும்போதே விளக்கமாகச் சொன்னேன். நில உச்சவரம்புச் சட்டத்திலே, முதலிலே 30 ஏக்கர்கள் உச்சவரம்பென்றும், பிறகு 15 ஏக்கர்கள் உச்சவரம்பென்றும் சட்டம் கொண்டு வந்தோம். பதினைந்து ஏக்கர் என்று வந்தபிறகு, அந்த உச்ச வரம்பிற்கு மேலாக இருக்கக்கூடிய நிலங்களுக்கு நாம் 'காம்பென்சேஷன்' கொடுத்தோம். இப்போது உச்ச வரம்பிற்குள்ளாக இருக்கிற நிலங்களுக்கு நாம் எவ்வளவு பணம் கொடுப்பதென்று பிரச்சினை இருக்கிறது. ஒவ்வொருவரும் 15 ஏக்கர் வைத்துக்கொள்ளலாமென்ற உரிமை, உச்ச வரம்புச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 15 ஏக்கருக்கு உட்பட்டதாக இருக்கக்கூடிய நிலங்களை எடுக்கிற போது, அதற்கு 'மார்க்கெட் வேல்யூ' என்ற அளவிலே, Acquisition Act பிரகாரம் கொடுக்க வேண்டுமென்று தான் சொல்கிறேன். அதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், இப்போது 15 ஏக்கர் வைத்திருப்பவர்களே பண்ணை நிலமாக அதை வைத்திருப்பார்களானால், அவர்களுடைய நிலத்தை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்ற நிலைமை ஏற்படுமானால், அவர்களுக்கு மார்க்கெட் விலை, சந்தை விலை கொடுக்கத்தான் வேண்டும். அவர்களுக்கு அந்த நிலைமை இருக்கிறபோது, அதே 15 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய இன்னொரு நிலச்சுவான்தார், தன்னுடைய நிலத்தை குத்தகைக்குச் சாகுபடி செய்பவர்களுக்குக் கொடுக்கும்போது, அவருக்கு நீங்கள் கொடுக்கக்கூடிய 'காம்பன்சேஷன்' ஒன்றுக்கொன்று மாறுதலாக இருக்கிறது. இதிலே முக்கியமானது, மிச்ச நிலங்களுக்குள்ள நிலைமை பற்றியல்ல. உச்ச வரம்பிற்கு உட்பட்ட நிலங்களை வைத்துக்கொள்ள எனக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நிலங்களை எடுக்கிறபோது இதுமாதிரி வைக்கக்கூடாது. Land Acquisition Act படி கொடுக்க வேண்டுமென்ற கருத்தை நான் வலியுறுத்துகிறேன்.



1973 ஏப்ரல் 3]

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவரவர்களே, திரு. சுவாமிநாதன் அவர்கள் ரொம்பவும் சாமர்த்தியமாகப் பேசுகிறார்கள். பண்ணையாளர்களுக்கெல்லாம் 'மார்க்கெட் வேல்யூ' கொடுக்கிறீர்கள்; ஆனால் சிறு நிலச்சுவான்தார்களுக்கு ஏன் 'மார்க்கெட் வேல்யூ' கொடுக்கவில்லை என்று கேட்டார்கள். அங்கு கொடுப்பது 'Land Acquisition' சட்டத்தின்படி அரசாங்கத்திற்கு நிலம் தேவையென்று சொன்னால், நிலத்தை அரசாங்கம் கையகப்படுத்தும் போது, அந்தச் சட்டம் வருகிறது. இப்போது கொண்டுவந்திருப்பது Land Acquisition Act அல்ல. இது நிலச் சீர்திருத்தச் சட்டம். நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் 'Land Acquisition Act'-ல் கொடுக்கக்கூடிய Market Value கொடுக்க வேண்டுமென்று சொல்வது பொருந்தாது. அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். 'சீலிங்' 15 ஏக்கர் என்று வைத்துவிட்டு, 'சீலிங்'-குக்குள் இருக்கும் நிலத்தை எடுக்கும்போது, நீங்கள் 'மார்க்கெட் வேல்யூ' கொடுக்காமலிருப்பது சரிதானாவென்று கேட்டார்கள். அதனால்தான் அரசாங்கம் இடையிலே Fair rent வைத்து வாங்கிக் கொடுப்பதற்கு விலையை மட்டும் நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கு அரசியல் சட்டத்திலும் பாதுகாப்பு இருக்கிற காரணத்தால், இதிலே ஒன்றும் தவறில்லை. இது நிலச் சீர்திருத்தச் சட்டம். சட்டப்படி செல்லும். எனவே திருத்தத்தை வலியுறுத்த வேண்டாமென்று, சோஷலிசம் பேசுகின்ற திரு. சுவாமிநாதனைக் கேட்டுக்கொள்கிறேன்.

*மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :* திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவரவர்களே, வலியுறுத்துகிறேன்.

*மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :* மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"In clause 6, *substitute* the following for the existing provision :

'6. *Purchase price* : The purchase price payable by a cultivating tenant for purchase of right, title, and interest of the landowner in the land, buildings thereon, agricultural pumpsets etc., installed therein shall be the market value; and such market value shall be determined under the principles laid down in the Land Acquisition Act'."

[மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்)] [1973 ஏப்ரல் 3

திருத்தம் மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

THIRU V. ISVARMURTI : Sir, I move—

"In clause 6, sub-clause (1) (*b*), item (ii), for the words 'one-half of the value', *substitute* the words 'the market value'."

THIRU G. SWAMINATHAN : Sir, I second it.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அங்கு இருக்கின்ற கட்டிடங்கள், பாக்கி இருக்கின்ற பொருள்களுக்கெல்லாம், சட்டத்திலே சொல்லப்பட்டிருப்பது 'half the value என்றுதான். Market value கொடுக்க வேண்டுமென்று திருத்தத்தைப் போட்டிருக்கிறார்கள். நாம் சட்டங்களை இயற்றுகிற நேரத்தில் இப்படி சில பேர்களுக்கு பாதகம் ஏற்பட்டாலும், Market value என்று போட்டால், சில தவறுகள் ஏற்படுமென்ற காரணத்தால், 'half the value' என்று போட்டிருக்கிறோம். எனவே இந்தத் திருத்தம் தேவையில்லை. 'half the value' தான் நியாயம் என்று தெரிவித்துக்கொண்டு, திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இப்போதாவது அமைச்சரவர்கள் விளக்கம் சொல்வார்களென்று எதிர்பார்க்கிறேன். போன வருஷம் Land Mortgage Bank -ல் 20,000 ரூபாய் கடன் வாங்கி, கட்டிடம் கட்டி, பம்ப் செட் போட்டிருக்கிறார்களே, அதிலேயும் பாதிதான் கொடுக்க வேண்டுமா? அதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அதுதான் சட்டத்தில் இருக்கிறது.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மார்க்கெட் விலையில் 'half the value' வா? அல்லது purchase பண்ணுகிற ரேட்டில் 'half the value' வா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, 'clause 6—sub-clause (1) (*b*)' அதைப் பற்றித்தான் இப்போது விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அதிலே 'half the value' என்று போட்டிருக்கிறோம்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, நில அடமான வங்கியில் கடன் வாங்கி, கிணற்றைக் கட்டி, மோட்டார் எல்லாம் போட்டிருக்கிறார்கள். எனவே நில அடமான வங்கியில் ஏற்பட்டுள்ள அந்தக் கடனைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு எண்ணம் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** உச்ச வரம்புச் சட்டம் இயற்றும் போதும் இதே நிலைமைதான். இப்போதும் இதே நிலைமைதான்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"In clause 6, sub-clause (1) (*b*), item (ii), for the words 'one-half of the value', *substitute* the words 'the market value'."

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

THIRU A. R. DAMODARAN : Sir, I move the following amendment :—

"In clause 6, sub-clause (1) (*b*), *substitute* the following as item (i) :

'twenty times the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates, if the purchase is from a landowner whose holding does not exceed five standard acres,

seventeen times the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates, if the purchase is from a landowner whose holding exceeds five standard acres but does not exceed ten standard acres, and

fourteen times the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates, if the purchase is from a landowner whose holding exceeds ten standard acres but does not exceed fifteen standard acres ; and'"

THIRU G. SWAMINATHAN : I second it.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் முன் மொழிந்த திருத்தத்தைப் போலவே இருப்பதால், என்னுடைய கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன் மொழிகிறேன் :—

"*For* sub-clause (1) of clause 6, *substitute* the following :

(1) The purchase price payable by a cultivating tenant for the purchase of the right, title and interest of the landowner shall be—

(*a*) in case the price can be fixed by agreement, the price paid in accordance with such agreement ;

[Thiru G. Swaminathan] [1973 ஏப்ரல் 3

(*b*) where no such agreement can be reached, the aggregate of—

(i) *Twenty times* the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates, and

(ii) one-half of the value of the structures, wells, and pump-sets belonging to the landowner. "

The amendment was duly seconded.

8-00 பி.ப. **மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** திரு. ஈஸ்வரமூர்த்தியின் 6-வது திருத்தமும் திரு. எ. ஆர். தாமோதரனின் திருத்தம் 8ம் ஒன்றுதான். ஆகவே இதில் எடுத்துக்கொள்ளலாம். 7வது திருத்தம் பின்னர் வருகிறது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஒரு கிளாஸ் எடுத்துக் கொண்டால், அதிலே 7, 8 அமெண்டுமெண்டுகள் இருக்குமானால், எல்லா அமெண்டுமெண்டுகளையும் பற்றி ஒன்றாகப் பேசி விட்டுவிடுவதுதான் முறை. அவைகளைப்பற்றி அவரவர்கள் சொல்லிவிட்டால், கருத்துச் சொல்வதற்கு ஒரு முறையில் முடியும். இதை இப்படி எடுத்துக்கொண்டுபோவது என்று சொன்னால், இரவு 11 மணி ஆனாலும்கூட இந்த 'பில்' முடியாது.

THIRU A. R. DAMODARAN: Sir, this is a very simple amendment that I have moved. If the landowner is holding less than 5 standard acres, he should be paid twenty times the fair rent, and if the holding is less than ten acres but exceeds five acres, he should be paid seventeen times the fair rent, and if the holding is less than fifteen standard acres but above ten acres, he should be paid fourteen times the fair rent. The object is very simple and that is that the small landowner whose land is going to be transferred to the tenant should be compensated in a graduated scale according to the extent of holding with him.

I do not think this will be against the principles of compensating the landowners and that is the object of the amendment. I have deliberately put it as 14 times, because under the Land Ceiling Act the Government gave 12 times the fair rent and if this Act had not come into force, I would have been able to sell the land for open market value. Therefore, I have put it 'fourteen times instead of 12 times the fair rent.'



1973 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அப்படி வெளி மார்க்கெட் சந்தையிலே விற்றிருக்க முடியாது. இப்போதுதான் பாதியை வாங்கி விற்கின்ற உரிமையைக் கொடுத்திருக்கிறோம். டெனன்ட்ஸ்க்கு விற்கின்ற உரிமையைப் பற்றி இப்போது பேசியிருப்பதாக இருந்தால்கூட, சட்டம் தடுக்கவில்லை. எனவே 5 ஏக்கருக்குக் கீழே வைத்திருப்பவர்களுக்கு அதிகமான தொகையைக் கொடுக்க வேண்டுமென்பது நியாயம் அல்ல என்று தெரிவித்துக்கொண்டு, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, கோயில்கள் எப்போதும் பெற்றுக்கொண்டு வருகிற ஆண்டு வருமானத்தை மட்டும்தான் இந்தச் சட்டத்தின் மூலம் பெறும். அதனாலே 12 ஆண்டுகள் கழித்து அதற்கு இந்த வருவாயே இல்லாமல் இருக்கின்ற நிலை ஏற்படும் என்பதனாலே, மாநில மைனர் இனாம் அபாலிஷன் ஆக்ட்'லே கொண்டு வந்ததைப் போல 20 பங்கு என்று ஆக்கி, அதை நாம் முதலீடு செய்து அதிலே வருகிற வருவாயை வைத்துக்கொண்டு, அறநிலையங்கள், கோயில்கள் நடத்துவதற்கிணங்க இந்தத் திருத்தத்தை திருத்தியமைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மைனர் இனாம் சட்டத்திலே இருப்பது போன்று வரவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். மைனர் இனாம் சட்டத்திலேகூட கொடுக்கப்பட்டிருக்கின்ற காம்பென்சேஷன் அதிகம் என்று அரசு கருதிக்கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே இதை வலியுறுத்தவேண்டாமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** உறுப்பினர் திரு. தாமோதரன் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

(வலியுறுத்துவதாக அறிவித்தார்.)

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** மன்றத்தின் முன் உள்ள கேள்வி.

In clause 6, sub-clause (1) (*b*), *substitute* the following as item (i):

" Twenty times the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates, if the purchase is from a landowner whose holding does not exceed five standard acres;

seventeen times the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates, if the purchase is from a landowner whose holding exceeds five standard acres but does not exceed ten standard acres ; and

fourteen times the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates, if the purchase is from a landowner whose holding exceeds ten standard acres but does not exceed fifteen standard acres ; and "

*திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.*

***மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):*** *உறுப்பினர் தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?*

***தவத்திரு குன்றக்குடி அடிகளார்:*** *வலியுறுத்துகிறேன்.*

***மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):*** *மன்றத்தின் முன் உள்ள கேள்வி—*

"*For* sub-clause (1) of clause 6, *substitute* the following :

(1) The purchase price payable by a cultivating tenant for the purchase of the right, title and interest of the landowner shall be—

(*a*) in case the price can be fixed by agreement, the price paid in accordance with such agreement ;

(*b*) Where no such agreement can be reached, the aggregate of—

(i) *Twenty times* the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates; and

(ii) one-half of the value of the structures, wells and pump-sets belonging to the landowner.

*தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.*

*பிரிவு 6, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.*



***பிரிவு 7***

***திரு. ஜி. சுவாமிநாதன்:*** ***தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:***

In clause 7, *add* the following as new sub-clause (4-A) :—

" Where the purchase price or compensation payable to the landowner is less than the amount of security for any encumbrance or charge in favour of any Land Mortgage Bank or any other person, such liability shall stand discharged and the landowner will not be liable for any amount in excess of the compensation payable to him."

THIRU V. ISVARMURTI : I second it, Sir.

***திரு. ஜி. சுவாமிநாதன்:*** *தலைவரவர்களே, ஒரு நிலச்சுவான்தார் சென்ற ஆண்டு கிணறு வெட்டுவது அல்லது பம்புசெட் வைப்பது போன்றவைகளுக்காக கடன் வாங்கியிருக்கலாம். அதுவும் நிலவள வங்கியிலிருந்து கடன் பெற்றிருக்கலாம். அந்த நிலத்தின் மதிப்பைப் பொறுத்துத்தான் அவர் ரூ. 10,000 கடன் வாங்கியிருக்கலாம். இப்படி வாங்கின பணத்தை அவர் அந்த வங்கிக்குக் கட்ட வேண்டிய நிலைமை தற்போது உள்ளது. ஆனால் அந்த நிலத்தைப் பொறுத்தவரையிலே, குத்தகைதாரருக்கு இவ்வளவுதான் கொடுப்பார்கள் என்ற நிலைமை வருகிறது. கொடுக்கக்கூடிய பணம் 5 ஆயிரம் ரூபாய் வரக்கூடும். 5 ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டு, 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கும் துர்பாக்கியமான நிலைமைக்கு அவருடைய வருவாய் இருக்கும். ஆக ரூ. 5 ஆயிரம் செலுத்த வேண்டுமென்று சொன்னால், வேறு ஏதாவது சொத்து இருந்தால் அதிலிருந்துதான் கொடுக்கவேண்டிய நிலைமை வரும். அந்தச் சொத்தும் இல்லாவிட்டால், அவர் கடனாளியாக இருக்க வேண்டிய நிலைமை ஏற்படும். அதற்காக அரசாங்கம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் ஆளாகிவிட நேரும், அந்த நடவடிக்கைகளை அவர் மீது அரசாங்கம் எடுக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. ஆகவே இந்த மாதிரி நிலவள வங்கியிருந்து கடன் வாங்கியவர்களுக்கு வரக்கூடிய காம்பென்சேஷன் இந்த நிலத்தினுடைய கடனுக்கு உள்ளாக இருக்குமானால், அது தவிர்க்கப்படவேண்டுமென்றுதான் நான் இந்தத் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கின்றேன்.*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:* தலைவரவர்களே, இதிலே சில சட்டச் சிக்கல்கள்கூட இருக்கக்கூடும். கடன் வாங்கியிருந்தாலும்கூட இதிலே இந்த பாதிப்பு ஏற்படக்கூடும். நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரும்போது, இந்த நிலைமைதான் இருந்தது. அந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் வரும் போது என்ன பாதகம் ஏற்பட்டதோ அதேதான் இதிலேயும் ஏற்படும். அது தவிர்க்க முடியாத பாதகம். எனவே திருத்தத்தை ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):* உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

*திரு. ஜி. சுவாமிநாதன்:* வலியுறுத்துகிறேன்.

*மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):* மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"In clause 7, *add* the following as new sub-clause (4-A) :—

'Where the purchase price or compensation payable to the landowner is less than the amount of security for any encumbrance or charge in favour of any Land Mortgage Bank or any other person, such liability shall stand discharged and the landowner will not be liable for any amount in excess of the compensation payable to him.'"

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 7, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

### பிரிவு 8

*திரு. ஜி. சுவாமிநாதன்:* தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்:

"*For* existing clause 8, *substitute* the following :

'8. *Purchase price payable*: The purchase price determined under section 7 shall be payable in one lump-sum'."

THIRU V. ISVARMURTI: I second it.



THIRU A. R. DAMODARAN: Sir, I move the following amendment—

*For* existing clause 8, *substitute* the following :

"*Purchase price to be paid by the Government to the landowner*: (1) The purchase price determined under section 7 shall be paid by the Government in the following manner :

(i) Where the purchase price is less than Rs. 10,000 it shall be paid in one lump sum within three months from the date on which the land is taken over by the Government from the landowner :

(ii) Where the purchase price exceeds Rs. 10,000 the sum of Rs. 10,000 shall be paid in one lump-sum within three months from the date on which the land is taken over by the Government from the landowner ; and the remaining amount shall be paid in the form of negotiable bonds redeemable within five years.

(2) The Government shall be deemed to be the owner of the land and the purchase price determined under section 7 shall be recoverable from the cultivating tenant who becomes the owner of the land in twenty annual instalments."

The amendment was duly seconded.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* தலைவரவர்களே, இப்போது கொடுக்கக்கூடிய நஷ்ட ஈடு மிகவும் குறைந்த அளவுக்கு இருக்கிறது என்று என்னுடைய பேச்சிலே குறிப்பிட்டேன். ஒரு ஏக்கருக்குள் ஒருவருக்கு இருக்குமானால், கிட்டத்தட்ட ரூ. 2,400 தான் நஷ்ட ஈடாக வரக்கூடும். 5 ஏக்கர் என்று இருக்குமானால் ரூ. 12,000, 10 ஏக்கர் என்று இருக்குமானால் ரூ. 24,000, 15 ஏக்கர் என்று இருக்குமானால் ரூ. 36,000. இவ்வளவுதான் நஷ்ட ஈடு நாம் அந்த நில உரிமையாளருக்குக் கொடுக்கப்போகிறோம். ஆனால் சட்டத்திலே என்ன போட்டிருக்கின்றார்கள்? ரூ. 500 ஆக இருந்தால் முதலிலே கொடுத்துவிடுவது, அதுவும் ஒரே பங்காகக் கொடுத்துவிடுவது என்ற அளவிலே போட்டிருக்கிறார்கள். பாக்கிப் பணத்தை 12 தடவையாகக் கொடுப்பது என்றும் போட்டிருக்கின்றார்கள். குறைந்த அளவுக்கு அந்த நஷ்ட ஈடு இருப்பதாலும், அதிலே பாதிக்கப்படுபவர்கள் மிகவும் சாதாரணமான நிலைமையிலே இருப்பவர்கள்

என்ற காரணத்தாலும், கொடுக்கக்கூடிய பணம் குறைந்த அளவுக்கு இருக்கின்ற காரணத்தாலும், கொடுக்கவேண்டிய முழுப்பணத்தையும் அந்தக் குத்தகைக்காரர்களுக்கு கொடுத்துவிடுவதற்கான வழிமுறைகளை அரசு செய்ய வேண்டுமென்று தான் இந்தத் திருத்தத்தை நான் கொண்டுவந்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, this is the operative part of all the amendments that we have given. The purchase price should be paid in one lump-sum. If the Government accepted this, we would be able to return slightly less unhappy. Sir, what I have stated is that the Government should be deemed to be the owner and the purchase price determined might be recovered from the tenant who becomes the owner of the land in twenty annual instalments. This will be a relaxation to the tenant also.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நான் இதை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்கின்றேன். டெனன்ட்ஸ் பைனான்ஸ் கார்ப்போரேஷன் வரும்போது இதை எப்படிக் கொடுக்கலாம் என்பதைப்பற்றி யோசிக்கலாம். இப்போது திருத்தத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஒரே நேரத்தில் 10 ஆயிரம் ரூபாய் என்றால் கொடுத்துவிட வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக்கொண்டு, திருத்தங்களை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) : தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஏதும் பேச விரும்புகின்றாரா ?

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : இல்லை.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) : உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

திரு. ஜி. சுவாமிநாதன் : வலியுறுத்துகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) : மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

For clause 8, *substitute* the following :—

" 8. *Purchase price payable* : The purchase price determined under section 7 shall be payable in one lump-sum. "

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டது.



THIRU G. SWAMINATHAN : Sir, I ask for a division.

திருத்தத்திற்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் எழுந்து நின்றனர்.

பின்னர் எதிர்ப்பவர்கள் எழுந்து நின்றனர்.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): திருத்தத்திற்கு ஆதரவாக உறுப்பினர்களும் எதிராக பதினான்கு பேர்களும் உள்ளனர்.

ருத்தம் தோல்வியுற்றது.

ற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): உறுப்பினர் திரு. தாமோதரன் ன் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா ?

(வலியுறுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது.)

ற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) : மன்றத்தின் முன் உள்ள வி—

" *For* existing clause 8, *substitute* the following :—

'*Purchase price to be paid by the Government to the owner* : (1) The purchase price determined under section 7 be paid by the Government in the following manner :—

(i) Where the purchase price is less than Rs. 10,000 all be paid in one lump sum within three months from the on which the land is taken over by the Government from the owner ;

(ii) Where the purchase price exceeds Rs. 10,000 sum of Rs. 10,000 shall be paid in one lump-sum within months from the date on which the land is taken over by Government from the land owner ; and the remaining unt shall be paid in the form of negotiable bonds redeemable in five years.

(2) The Government shall be deemed to be the owner he land and the purchase price determined under section 7 be recoverable from the cultivating tenant who becomes the er of the land in twenty annual instalments '."

ருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

ிவு 8, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8–10
பி.ப.

பிரிவு 9

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): திரு. ஈஸ்வரமூர்த்தி அவையில் இல்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

In clause 9, sub-clause (2) *for* the words "or of the first instalment of such price", *substitute* the words 'or of one-third of such price".

The amendment was duly seconded.

திரு. ஜி. சுவாமிநாதன்: இது முக்கியமான விஷயம். இந்த நிலங்களை எடுத்துக் கொள்கிறபோது அரசாங்கம் நிலத்தைக் குத்தகைதாரர்களிடம் கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னேன். அதை மீண்டும் திருத்தத்தின் மூலமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் திருத்தத்தை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஏற்கெனவே விரிவாக பதில் சொல்லியாகிவிட்டது. திருத்தம் தேவையில்லையென்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): உறுப்பினர் திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

திரு. ஜி. சுவாமிநாதன்: வலியுறுத்துகிறேன்.

மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்): மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"In clause 9, sub-clause (2), *for* the words 'or of the first instalment of such price', *substitute* the words 'or of one-third of such price'."

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 9, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



பிரிவு 10

திரு. ஜி. சுவாமிநாதன்: கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்:

"In clause 10, *for* the figure '5', *substitute* the figures '7½'."

The amendment was duly seconded.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, குத்தகைதாரர் ஒரு ஆண்டுக்கு பணம் கட்டாமலிருந்தால் 5 சதவிகிதம் வட்டி கொடுக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். வங்கிகளில் கூட குறைந்த பட்சம் வட்டி 7½ சதவிகிதம். வெளியில் பணம் கிடைப்பதானால், 15 சதவிகிதம் இருக்கக்கூடிய நிலைமையிருக்கிறது. நம்முடைய மாநில அரசுகூட, மத்திய அரசிடமிருந்து 6½ சதவிகிதத்துக்கு வாங்கி 7½ சதவிகிதத்துக்குக் கொடுப்பதாகக் குறைப்பட்டுக் கொண்டார்கள். அந்த அளவில் சாதாரண ஏழை மக்களுக்கு 7½ சதவிகிதம் வட்டி தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வட்டியை உயர்த்துவதாக இல்லை. விவசாயிகளுக்கு வட்டியை அதிகப்படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனவே திருத்தத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

திருத்தம், மன்றத்தின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 10, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 11, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 12

திரு. ஜி. சுவாமிநாதன்: நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன் மொழிகிறேன்—

"In clause 12, *for* the words 'and the order of the authorised officer may be executed through the Court as if it were a decree passed by it' *substitute* the words 'within three months of such order and if there is any failure to comply with the order by the cultivating tenant-purchaser, the land shall revert to the landowner and the cultivating tenant shall cease to be the cultivating tenant under the landowner'."

The amendment was duly seconded.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இந்தத் திருத்தம்பற்றி நான் தெளிவாகத் திருத்தத்தில் கொடுத்திருக்கிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏற்கெனவே விவரமாகப் பேசியிருக்கிறேன். ஆகவே இந்தத் திருத்தம் அவசியமில்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருத்தம், மன்றத்தின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 12, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 13, 14 மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

### பிரிவு 15

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** உறுப்பினர் திரு. ஈஸ்வரமூர்த்தி இடத்தில் இல்லை.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்—

"In clause 15, for the words 'shall not exceed five standard acres', *substitute* the words, 'shall not exceed fifty standard acres in respect of religious and charitable and educational institutions and five standard acres in other cases'."

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் அதை வழிமொழிகிறேன்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அறநிலையங்கள் ஏற்கெனவே பொது டிரஸ்ட் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் சொந்தப் பண்ணை வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் பெரும்பாலான அறநிலைய நிறுவனங்கள் இந்த அறநிலைய ஆட்சித் துறை ஆணையரிடம் அனுமதி வாங்கித் தான் சாகுபடி செய்ய வேண்டுமென்று விதிமுறைகள் வகுத்ததனால், பல கோவில் நிறுவனங்கள் சாகுபடி வைத்துக்கொள்ளவில்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இருக்கிறபடி 20 ஏக்கர், இதில் 10 ஏக்கர் என்கிறபடி 30 ஏக்கர் ஒரு நிறுவனம் வைத்துக்கொள்ளலாம், இப்போது இல்லாமல் போனாலும் பின் காலத்தில் வைத்துக்கொள்ளலாமென்ற உத்தரவாதம் கொடுப்பார்களேயானால் இந்தத் திருத்தத்தை நான் வலியுறுத்தாமல் வாபஸ் வாங்குகிறேன். திருத்தத்தை முன் மொழிவதற்குக் காரணம், பல கோவில்களில் தினமும் இரண்டு



சாதம் வாங்குகிற சிப்பந்திகள் கூட இருக்கிறார்கள். குறைந்தபட்சம் 30, 40 மூட்டை நெல் இல்லாமல் அந்தக் கோவில்கள் நிர்வாகம் நடைபெற முடியாது. இந்த சிப்பந்திகளுக்கு நலம் செய்ய வேண்டி ஏற்கெனவே இருக்கிற சட்டப்படி 20 ஏக்கர், இந்தச் சட்டப்படி 10 ஏக்கர், மொத்தம் 30 ஏக்கர் சொந்தத்தில் வைத்துக் கொள்ளலாம் என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஏற்கெனவே 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் சொந்தச் சாகுபடி வைத்திருந்தால் பாதுகாப்பு இருக்கும். இல்லையென்றால் பாதுகாப்பு கிடைக்காது. இப்போது இருக்கிற டெனண்டுக்குப் பாதகமாக சட்டம் இயற்றுவதற்கில்லை. அப்படி இருக்கிற கோவில்களுக்கு 10 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லியிருக்கிறோம். இது சில இடங்களில் 40 ஏக்கராகக் கூட வரலாம். ஆகவே இந்தத் திருத்தத்தை வலியுறுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** உறுப்பினர் தமது திருத்தத்தை வலியுறுத்துகிறாரா?

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : வலியுறுத்துகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"In clause 15, *for* the words 'shall not exceed five standard acres", *substitute* the words, 'shall not exceed fifty standard acres in respect of religious and charitable and educational institutions and five standard acres in other cases'."

திருத்தம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

பிரிவு 15, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 16 முதல் 23 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

### பிரிவு 24

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** திரு. ஈஸ்வரமூர்த்தி இடத்தில் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன் :

"In clause 24, *add* the following as new items (iv) and (v):

'(iv) any religious institution or religious trust for a public purpose or of religious, charitable or educational nature.

(v) any College affiliated to any recognised University, or Schools and Educational Institutions recognised by the Government'."

The amendment was duly seconded.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்தத் திருத்தத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அதை அரசு ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, நான் சட்டத்திலே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். திருத்தம் அவசியமில்லையென்று கூறிக் கொள்ளுகிறேன்.

திருத்தம், மன்றத்தின் அனுமதியுடன், திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 24, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவுகள் 25, 26, 27, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 28.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** பிரிவு 28 இப்போது இணைக்கப் பட்டிருக்கிறது.

பிரிவு 28, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

"That the Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Landowners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973), as passed by the Assembly, be passed."

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்) :** மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நில உடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) நிறைவேற்றப்படவேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.



### (2) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி திருத்தச் சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/1973).

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, விற்பனை வரியைப் பொறுத்தவரையில் அரசாங்க நோடிபிகேஷனின் மூலமாக கொண்டுவந்திருப்பதை சட்ட வடிவில் கொண்டு வருவதாக இருக்கிறோம். இப்போது அதன் விளக்கத்தைக் கூறுகிறேன்.

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு @(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

தமிழ்நாடு 1969-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) முதலாம் விவர அட்டவணையில் கட்டுமான இயந்திரம், சுரங்க யந்திரங்கள், நிலத்தைச் சமன்படுத்து-யந்திரங்கள், மண்வாரி டிராக்குகள், ஆகியவை பற்றிக் குறிப்பாக பதிவு எதுவும் தற்போது இல்லை. இதன் விளைவாக மேற்சொன்ன சட்டத்தின் கீழ் இந்த இனங்களுக்கு வரி விதிப்பது குறித்து வரி விதிக்கும் அதிகாரிகள், பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இதைக் கருதி மேற்படி சட்டத்தின் முதலாம் விவர அட்டவணையில் இந்த இனங்களைத் தனிப்பட்ட இனமாக வகைப்படுத்துவதன் மூலம் இம்மாநிலத்தில் இயந்திரங்களின் விற்பனையின் மேல் முதல் விற்பனை 9 சதவீதம் என்றும் ஒரே படித்தான் வீதத்தில் வரி விதிக்கப்பட வேண்டும் என்றும் அரசு முடிவு செய்தது. மேற்படி சட்டத்தில் 59 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு ஒன்று வெளியிடப்பட்டதன் மூலம் இதற்குச் செயல் வடிவம் கொடுக்கப் பட்டது.

சட்டத்திலுள்ள தெளிவற்ற நிலையைத் தவிர்பபதற்காக மேற்படி சட்டத்தில் முதலாம் விவர அட்டவணையில் அந்தந்த இடங்களில் அதாவது 1-வது இனத்திலும் 9-வது இனத்திலும் விளக்கப்பகுதிகளில், தட்டச்சு இயந்திர நாடாக்கள், இசைத்தட்டுகள், இசைத்தட்டு ஊசிகள் ஆகியவை திட்ட வட்டமாகக் குறிப்பிடப்படவேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. மேற்படி சட்டத்தில் 59 (1) பிரிவின் கீழ் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டதன் மூலம் இதற்குச் செயல்வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

---

@ 288–289 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தில் 59 (2) பிரிவைச் சேர்ந்த முதலாம் வரம்பு நிபந்தனையின் கீழ், மேற்குறிப்பிட்ட அறிவிப்புகளுக்குப் பதிலாகச் சட்டவரைவு ஒன்று சட்டமன்றத்தின் தற்போதையக் கூட்டத் தொடரில் கொண்டு வரப்பட வேண்டியுள்ளது.

இம்மாநிலத்தில் தற்பொழுது ரப்பர் 3½ சதவீத பலமுனை வரி விதிப்பிற்கு உட்பட்டது. இம்மாநிலத்தில் ரப்பர் முதற்கண் வாங்கப்படும் முனையால் அதற்கு 5 சதவீத ஒருமுனை வரி விதிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது.

மேற்கண்ட செயற்குறிப்புகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரித் (திருத்தச்) சட்ட வரைவு (சட்டமன்றப் பேரவைச் சட்டவரைவு எண் 12/73) இம்மேலவையின் ஆலோசனைக்காக வைக்கப்படுகிறது.

இத் தீர்மானத்தை மேலவை ஏற்குமாறு நான் வேண்டுகிறேன்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1973) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, இதிலே ஒரே ஒரு விஷயத்தை முக்கியமாகச் சொல்லிக்கொள்கிறேன். விவசாய இயந்திரங்களுக்குக்கூட 9 சதவீதம் போடுவது என்பது ரொம்ப அதிகமாகத் தெரிகிறது. மற்ற இயந்திரங்களுக்குச் சலுகை காட்டாததுபற்றி பாதகமில்லை. விவசாயிகள் உபயோகிக்கும் இயந்திரங்களுக்குப் போட்டிருப்பது மிகவும் அதிகம் என்று மட்டும் கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, 'புல் டோஸர்' போன்ற இயந்திரங்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. டிராக்டர் வாங்குகிறவர்கள் சாதாரண விவசாயியாக இருக்க முடியாது. ஆகையினால் அவைகளுக்கு 9 சதவீதம் போடப்பட்டிருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே 'நோட்டிபிகேஷன்' மூலமாகப் போடப்பட்டிருப்பதற்கு சட்ட வடிவம் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்று தெரிவித்துக்கொள்கிறேன். தலைவரவர்களே, டிராக்டர் என்று தவறுகச் சொல்லிவிட்டேன். நான் ஆங்கிலத்தில் படிக்கிறேன். அப்பொழுது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.



" There is now no specific entry in the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act 1 of 1959) to cover items of machinery like Construction Mining and Earth Moving Equipments and Forklift Trucks "

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/73) பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு பரிந்துரைகள் செய்வதற்காக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

[பரிந்துரைகள் ஏதும் இல்லை.]

THE HON. THIRU P. U. SHANMUGAM: Sir, I move—

" That the Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12 of 1973), as passed by the Assembly, be returned. "

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** மன்றத்தின் முன் உள்ள கேள்வி—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1973 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 12/73) திருப்பியனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

**2. அறிவிப்புகள்**—தொடர்ச்சி.

(3) பொது நிறுவனங்கள் முதற் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்.

**மாற்றுத் தலைவர் (திரு. க. அறிவழகன்):** ஒரு அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பொது நிறுவனங்கள் குறித்த முதற்குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் கீழ்க்காணும் 5 உறுப்பினர்களை சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்கள் நியமனம் செய்துள்ளார் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன் :

1. திரு. ஏ. பி. ஜனார்த்தனம்

2. திரு. எம். சங்கரலிங்கம்
3. திரு. ஜார்ஜ் கோமகன்
4. திரு. ஜி. சுவாமிநாதன்
5. திரு. கே. ராஜாராம்

இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் 5—4—1973 அன்று மாலை 4 மணிக்குக் கூடும்.

பி.ப. -25 பின்னர், சட்ட மன்றம் ஒத்தி வைக்கப்பட்டது.

**5. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.**

*A. Statutory Rules and Orders.*

91. Notifications issued with G.O. Ms. No. 311, Rural Development and Local Administration, dated the 18th February 1972, in regard to certain amendments to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 380 of 1961, dated the 10th May 1961, published at pages 211 to 212 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 24th May 1961, as subsequently amended. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

92. Notification issued with G.O. Ms. No. 242, Housing, dated the 3rd October 1972, making the Tamil Nadu Slum Clearance Board Service Rules, 1972. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

93. Notification issued with G.O. Ms. No. 60, Co-operation, dated the 24th February 1973 in regard to amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

*B. Reports, Notifications and Other Papers.*

@ 132. The Presidency Small Cause Courts (Tamil Nadu Amendment) Bill, 1973 (L.A. Bill No. 4 of 1973), as passed by the Assembly.

@ 133. The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 6 of 1973), as passed by the Assembly.

@ Laid on the table of the House on 2nd April 1973.





## இணைப்பு I

(129ஆம் பக்கத்தில் 311 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(அ) ஆம்.

(இ) அனைத்திந்தியப் பணிகள் போட்டித் தேர்வுகளில் பங்கு பெறும் தமிழ்நாட்டைச் சேர்ந்த போட்டித் தேர்வு எழுதுவோரின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளில் குறைந்து வருவது குறித்து ஆய்வு செய்வதற்காக இந்திய பொது நிர்வாகக் கழகத்தின் தமிழ்நாட்டுப் பிரிவுக்கு அரசு ரூ. 1,000 பொருளுதவி செய்ய ஒப்பளித்துள்ளது.

(1) அரிசனங்கள், பழங்குடி மக்கள் (2) பின்தங்கிய வகுப்பினர் ஆகியோர் அனைத்திந்தியப் பணித் தேர்வுகளில் போட்டியிட்டு வெற்றி பெறுவது இயலும் வகையில் அவர்களின் பயனுக்காக தேர்வுக்கு முன் பயிற்சியளிக்கும் நிலையங்கள் இரண்டு அரசால் நடத்தப்படுகின்றன.

பல்கலைக்கழக நிலையில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை ஆராயும்படி நமது மாநிலப் பல்கலைக் கழகங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## இணைப்பு II

(141ம் பக்கத்தில் 339 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

Consequent on the unprecedented floods any cyclone which hit this State during the period from the 5th to 9th December 1972, 233,971 houses were damaged and a few children were orphaned due to the sudden death of their parents. Plough bullocks and milch-cows were also lost in the floods. The following relief measures in the form of financial assistance to the victims were undertaken by the Government immediately. Following the natural calamity :—

1. The usual cash grant of Rs. 40 towards reconstruction of damaged houses and clothing grant per victim affected by cyclones and floods was increased to Rs. 80. Cash grant at this rate has been disbursed to 170,000 families who lost their houses.

2. Gratuitous relief has been given at the rate of Rs. 2,000 to the families of sole bread-winners who lost their lives ;

3. Cash relief has been given in other cases of deaths ranging from Rs. 500 to Rs. 1,000.

4. If, due to the death of the father and or mother in the floods, any child had become an orphan, the Government took over the financial responsibility or bringing up such a child and also for the education and maintenance of the child.

5. Takkavi loans have been sanctioned to the families who had applied for loans for the replacement of ploug-bullocks or milch-cows that died in the floods.

6. Full remission of land revenue, water cess, local cess and local cess surcharge was ordered in respect of lands totally affected by the floods for the current fasli, i.e., fasli 1982.

7. Takkavi loans at a rate not exceeding Rs. 250 per damaged house was granted to deserving poor families in order to enable them to rebuild the damaged houses.

8. The Government have undertaken to reclaim the lands which have become either sand-cast or eroded due to the floods, so as to make them fit for cultivation. The entire cost of reclamation would be borne by the Government.

9. A financial assistance of Rs. 100 to each affected family of weavers has been granted to help them replace their equipments lost in the floods.

2. In the Nilgiris district, one boy named Siddique was orphaned due to the sudden death of his parents on account of collapse of a hut in Ootacamund town on 7th December 1972. The paternal grandfather of the child Thiru Ali Mohamed of Kerala had taken care of the child. The Collector of the Nilgiris district has taken action to sanction Rs. 3,000 as cash grant to orphaned boy. As regards the three children orphaned due to the sudden death of their parents on account of the floods and cyclone in South Arcot district, action has already been taken by the Collector to accommodate them in the orphanage run by Sri Swamy Nelliappar and Kanthimathi Ambal Devasthanam, Tirunelveli.

**A sum of Rs. 152 lakhs has been sanctioned for purposes of 'Gratuitous Relief' and Rs. 125 lakhs under 'Grant of Takkavi loans'.**



## இணைப்பு III

[147 ஆம் பக்கத்தில் இனம் 4 (1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

## L.A. BILL No. 11 OF 1973.

**(As passed by the Asembly.)**

*A Bill to provide for conferring on the cultivating tenants the right to purchase the landowners' rights in the land cultivated by such cultivating tenants and for conferring the right of resumption of land by landowners in the State of Tamil Nadu.*

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Cultivating Tenants (Right to purchase Land owners' Rights) Act, 1973.

(2) It shall come into force on such date as the Government may, by notification, appoint.

2. *Definitions.*—In this Act, unless the context otherwise requires,—

(1) "authorised officer" means any Gazetted Officer authorized by the Government by notification to exercise the powers conferred on, and discharge the duties imposed upon, the authorized officer under this Act for such area as may be specified in the notification ;

(2) "cultivating tenant"—

(*a*) in relation to any land to which the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), applies, means a cultivating tenant as defined in clause (*aa*) of section 2 of that Act and includes—

(i) a *mattuvaramdar* referred to in clause (*a*) or clause (*b*) of section 7 of the Tiruchirappalli *Kaioeruvaram* and *Mattuvaram* Act, 1958 (Tamil Nadu Act XXXVI of 1958); and

(ii) a possessory mortgagor, who, under a tenancy agreement, express or implied, with the possessory mortgagee, contributes his own physical labour or that of any member of his family in the cultivation of the land subject to possessory mortgagee ; and

(*b*) in relation to any land to which the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961), applies, means a cultivating tenant as defined in clause (5) of section 2 of that Act ;

(3) " Government " means the State Government;

(4) " holding " means a parcel or parcels of land held by a cultivating tenant ;

(5) " land " means a land used for purposes of agriculture or horticulture, or for purposes ancillary thereto, and includes any waste, vacant or forest land appurtenant thereto belonging to the landowner and let to the cultivating tenant under the same tenancy agreement but does not include any building or any house-site let to such cultivating tenant by such landowner ;

(6) " landowner " means the owner of the land let for cultivation by a cultivating tenant and includes the heirs, assignees or legal representatives of such owner or persons deriving rights through him ;

(7) " member of the Armed Forces " means a person in the service of the Air Force, Army or Navy of the Union of India and includes a seaman :

Provided that if a question arises whether any person is a member of the Armed Forces, such question shall be decided by the Government and their decision shall be final ;

(8) " notified date " means the date specified by the Government in the notification, issued by the Government under sub-section (2) of section 1 ;

(9) a person is said to carry on personal cultivation on a land when he contributes his own physical labour or that of the members of his family in the cultivation of that land ;

(10) " possessory mortgagee " means a mortgagee entitled to the possession of the whole or part of the mortgaged property and to receive the rents and profits accruing from such property or any part of such rents and profits and to appropriate the same in lieu of interest or in payment of the mortgage money or partly



in lieu of interest or partly in payment of the mortgage money ; and " possessory mortgage " and " possessory mortgagor " shall be construed accordingly ;

(11) " seaman " means every person including a master, pilot or apprentice employed or engaged as a member of the crew of a ship or sailing vessel to which the Merchant Shipping Act, 1958 (Central Act 44 of 1958), applies ;

(12) " standard acre " shall have the same meaning as in clause (40) of section 3 of the Tamil Nadu Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 (Tamil Nadu Act 58 of 1961).

3. *Cultivating tenant's right to purchase landowner's rights.*—Subject to the provisions of section 15, any cultivating tenant shall be entitled to purchase the right, title and interest of the landowner in respect of the land comprised in his holding as cultivating tenant :

Provided that the total extent of the—

(i) Land owned by such cultivating tenant and personally cultivated by him already,

(ii) land owned by him and resumed from any cultivating tenant under this Act,

(iii) land owned by him which has been let out to any cultivating tenant but has not been purchased by such cultivating tenant under this section,

(iv) land held by him as cultivating tenant which has been purchased by him under this section,

(v) land held by him as cultivating tenant which has not been purchased by him under this section,

(vi) land held by him as cultivating tenant, which has not been resumed under this Act by the land owner concerned,

shall not exceed 5 standard acres.

4. *Extent of land share in the family to be taken into account.*—In calculating the extent of land owned by a person or held by him as cultivating tenant or as both, the share of such person in the land held in such capacity by an undivided Hindu family, a Marumakkattayam tarwad, an Aliyasanthana family or a Nambudiri Illom shall be taken into account.

*Explanation.*—For the purposes of this section, the share of such person as is referred to in this section in the land held by an undivided Hindu Family, a Marumakkattayam tarwad. an Aliyasanthana family or a Nambudiri Illom shall be deemed to be the extent of land which is held on the notified date and would have been allotted to such person had such land been partitioned or divided, as the case may be, on such date.

5. *Application to purchase landowner's rights by cultivating tenant.*—(1) A cultivating tenant entitled to purchase the right, title and interest of the landowner under section 3 may apply to the authorized officer within such period as may be prescribed from the notified date for the purchase of such right, title and interest.

(2) The application for the purchase under sub-section (1) shall be in such form and shall contain such particulars as may be prescribed.

(3) Where a cultivating tenant is entitled to purchase the right, title and interest in respect of only a portion of the land held by him, he may indicate in the application his choice of the portion, the right, title and interest over which he desires to purchase.

6. *Purchase price.*—(1) The purchase price payable by a cultivating tenant for the purchase of the right, title and interest of the landowner shall be—

(*a*) in case the price can be fixed by agreement, the price paid in accordance with such agreement ;

(*b*) where no such agreement can be reached, the aggregate of—

(i) twelve times the fair rent in respect of the holding or part thereof to which the purchase relates ; and

The Bill also seeks to give a right to such persons to make an application to the court within a period of two months of the publication of the proposed Act for claiming the benefits under the Act. Provision has also been made empowering the courts to reopen and review the proceedings relating to such decree or order, as if the proposed Act were in force at the time at which the decree or order was passed.

Sir, I commend the motion for the acceptance of the House.

MR. CHAIRMAN : Does any hon. Member wish to speak?

[Nobody rose].

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்** : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1973 ஆம் ஆண்டு, சென்னை மாநகர் குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 14/1973) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.



**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு சென்னை மாநகர் குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1973) நிறை வேற்றப்படவேண்டும்" என்று முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்** : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட 1973 ஆம் ஆண்டு சென்னை மாநகர் குடியிருப்புதாரர்கள் பாதுகாப்பு (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1973) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

**"தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு, தனியார் மின்விசை நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு சட்ட முன்வடிவு எண் 13/73).**

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"தமிழ் நாடு, 1973 ஆம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1973) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 24 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 16, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் 8) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவையுடன் இம் மன்றம் ஒத்தியங்குகிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு இம் மன்றத்தின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.—

1. திரு. ஜி. சுவாமிநாதன்.
2. திரு. கே. எஸ். கணபதி.
3. திரு. காட்டூர் கோபால்.
4. திரு. டி. வி. நாராயணசாமி.

5. திரு. எம். கே. டி. நடராசன்.
6. திரு. நீலநாராயணன்.
7. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு.
8. திரு. கே. ராஜாராம்."

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/73) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 24 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 16, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் 8) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவையுடன் இம் மன்றம் ஒத்தியங்குகிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு இம் மன்றத்தின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்கள் :—

1. திரு. ஜி. சுவாமிநாதன்.
2. திரு. கே. எஸ். கணபதி.
3. திரு. காட்டூர் கோபால்.
4. திரு. டி. வி. நாராயணசாமி.
5. திரு. எம். கே. டி. நடராசன்
6. திரு. நீலநாராயணன்.
7. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு.
8. திரு. கே. ராஜாராம்."

* THIRU S. NARAYANASWAMY: Sir, I want to say a few words. I am in full agreement with the Bill being referred to a Joint Select Committee. Some of us are having interest in the electrical undertakings, and we will be getting compensation. This was a reason why I wanted to be out of the Select Committee and the Government have also rightly excluded me from the Committee. Because I was interested in one of the electrical undertakings being taken over, I thought it was proper that I



should not be on the Select Committee. All I want to say is that about 85 to 90 per cent of the shareholders are very, very small people. This is the only thing I want to refer to at this stage, because the Select Committee is going to make its recommendation and we will have an opportunity of speaking on the Bill after the report of the Select Committee is presented. I would like to appeal to the Members of the Select Committee and to this House to keep in mind that about 85 to 90 per cent of the shareholders of these private electrical undertakings are people who hold shares of the value of Rs. 5,000 and less and they are mostly middle class and lower middle class people and that their interests should be fully safeguarded in the fixation of compensation. That is all I want to say.

MR. CHAIRMAN: The hon. Member Thiru C. V. Rajagopal should not talk when I am putting the motion to the House.

மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"தமிழ் நாடு, 1973-ஆம் ஆண்டு தனியார் மின்விசை வழங்கும் நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1973) ஆய்வு செய்யும் பொருட்டு, இரு அவைகளையும் சேர்ந்த 24 உறுப்பினர்கள் கொண்ட (சட்டப் பேரவை உறுப்பினர்கள் 16, சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் 8) கூட்டு ஆய்வுக் குழு ஒன்றை அமைப்பதில் சட்டப் பேரவையுடன் இம் மன்றம் ஒத்தியங்குகிறது. மேற்படி குழுவில் பணியாற்றுமாறு இம் மன்றத்தின் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் :—

1. திரு. ஜி. சுவாமிநாதன்.
2. திரு. கே. எஸ். கணபதி.
3. திரு. காட்டூர் கோபால்.
4. திரு. டி. வி. நாராயணசாமி.
5. திரு. எம். கே. டி. நடராசன்.
6. திரு. நீலநாராயணன்.

7. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு.

8. திரு. கே. ராஜாராம்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1973.)

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்".

இந்த மன்றத்திலே இந்த மசோதா கொண்டு வரப்பட்டு கூட்டு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு அவர்களுடைய பரிந்துரைகளோடு சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த மன்றத்திலே இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் அடங்கிய கோரிக்கைகள், நோக்கங்கள் இவைகளெல்லாம் ஏற்கெனவே விளக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை இந்த ஆய்வுக் குழுவிலே போட்டிருந்தாலும் இந்த ஆய்வுக் குழுவிலே அவர்கள் கலந்து கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டது இந்த மன்றத்திற்கு நன்றாகத் தெரியும். இந்தச் சட்டத்தை எதிர்த்தவர்களால் முதலிலே 1952-ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்தால் போடப்பட்ட "கமிஷன் ஆப் என்கொயரி ஆக்ட்" இருக்கும்போது, இந்தச் சட்டம் தேவைதானா என்ற ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. 1952-ஆம் ஆண்டு "கமிஷன் ஆப் என்கொயரி சட்டம்", இவை போன்ற நோக்கங்களுக்காக, லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காகக் கொண்டுவரப்படவில்லை. அன்றைய சூழ்நிலையில் நாட்டிலே நடக்கக் கூடிய பொது முக்கியத்துவம் வாய்ந்த ஏதாவது ஒரு

* 386-403 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப் பட்டுள்ளது.





பிரச்சினை பற்றி விசாரிக்கலாம் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டது. பின்னாலே அது பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த நோக்கம் அந்தச் சட்டத்திலே குறிப்பிடப்படவில்லை என்பது என்னுடைய முதல் பதிலாகும்.

இரண்டாவது பதில்: இப்படிப்பட்ட சட்டத்தை 1952-ஆம் ஆண்டு எந்த மத்திய சர்க்கார் கொண்டு வந்ததோ அதே மத்திய அரசாங்கம் "சந்தானம் குழு" என்ற குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழு கொடுத்த சிபாரிசின் அடிப்படையிலே, நாம் இங்கே நிறைவேற்ற இருக்கிற மசோதாவைப் போல், சட்டங்களை மத்திய அளவிலும், மாநில அளவிலும் கொண்டு வர வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சிபாரிசு செய்தது. சிபாரிசு செய்தது மட்டுமல்ல. அவர்களே ஒரு மசோதாவைத் தயார் செய்து சுற்றுக்கு அனுப்பினார்கள். அங்கே ராஜ்ய சபையில் அறிமுகப் படுத்தினார்கள். ஆகவே 1952-ஆம் ஆண்டு சட்டம் இது போன்ற நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட முடியாது. எனவே தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று மத்திய அரசில் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. அது மட்டுமல்ல. மத்திய அரசாங்கத்தின் 1952-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் ஒரு மாநில அரசைப்பற்றி விசாரிக்க முடியுமா என்ற அரசியல் சட்டப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அதைப் பற்றிப் பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டன. நம்முடைய அரசின் சார்பிலே தரப்பட்ட விளக்கம், 1952-ஆம் ஆண்டுச் சட்டத்திலே இப்படி விசாரணை செய்வதற்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பது ஒரு பக்கம் இருக்க, அந்தச் சட்டமே அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதாகும். மத்திய, மாநில அரசாங்கங்கள் ஒன்றின் மீது ஒன்று ஆதிக்கம் செலுத்துவதற்கு அந்தச் சட்டத்திலே இடம் இல்லை. இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு மாறுபட்ட சட்டம். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, நம்முடைய சட்ட மன்றத்தைப் பொறுத்த அளவிற்கு இங்கே இருக்கிற அமைச்சர்களைத் தட்டிக் கேட்பதற்கோ கண்டிப்பதற்கோ இங்கே இருக்கிற சட்ட மன்றத்திற்குத் தான் உரிமை. மேலே யாருக்கும் அந்த உரிமை கிடையாது என்ற ஒரு

7. திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு.

8. திரு. கே. ராஜாராம்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(4) தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/1973.)

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973 ஆம் ஆண்டு, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்".

இந்த மன்றத்திலே இந்த மசோதா கொண்டு வரப்பட்டு கூட்டு ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு அவர்களுடைய பரிந்துரைகளோடு சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இந்த மன்றத்திலே இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டுமென்று கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் அடங்கிய கோரிக்கைகள், நோக்கங்கள் இவைகளெல்லாம் ஏற்கெனவே விளக்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை இந்த ஆய்வுக் குழுவிலே போட்டிருந்தாலும் இந்த ஆய்வுக் குழுவிலே அவர்கள் கலந்து கொள்ள முடியாத ஒரு நிலை ஏற்பட்டது இந்த மன்றத்திற்கு நன்றாகத் தெரியும். இந்தச் சட்டத்தை எதிர்த்தவர்களால் முதலிலே 1952-ஆம் ஆண்டு மத்திய அரசாங்கத்தால் போடப்பட்ட "கமிஷன் ஆப் என்கொயரி ஆக்ட்" இருக்கும்போது, இந்தச் சட்டம் தேவைதானா என்ற ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டது. 1952-ஆம் ஆண்டு "கமிஷன் ஆப் என்கொயரி சட்டம்", இவை போன்ற நோக்கங்களுக்காக, லஞ்சக் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காகக் கொண்டுவரப்படவில்லை. அன்றைய சூழ்நிலையில் நாட்டிலே நடக்கக் கூடிய பொது முக்கியத்துவம் வாய்ந்த ஏதாவது ஒரு

* 386-403 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப் பட்டுள்ளது.



பிரச்சினை பற்றி விசாரிக்கலாம் என்பதற்காகக் கொண்டு வரப்பட்டது. பின்னாலே அது பல்வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த நோக்கம் அந்தச் சட்டத்திலே குறிப்பிடப்படவில்லை என்பது என்னுடைய முதல் பதிலாகும்.

இரண்டாவது பதில்: இப்படிப்பட்ட சட்டத்தை 1952-ஆம் ஆண்டு எந்த மத்திய சர்க்கார் கொண்டு வந்ததோ அதே மத்திய அரசாங்கம் "சந்தானம் குழு" என்ற குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழு கொடுத்த சிபாரிசின் அடிப்படையிலே, நாம் இங்கே நிறைவேற்ற இருக்கிற மசோதாவைப் போல், சட்டங்களை மத்திய அளவிலும், மாநில அளவிலும் கொண்டு வர வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சிபாரிசு செய்தது. சிபாரிசு செய்தது மட்டுமல்ல. அவர்களே ஒரு மசோதாவைத் தயார் செய்து சுற்றுக்கு அனுப்பினார்கள். அங்கே ராஜ்ய சபையில் அறிமுகப் படுத்தினார்கள். ஆகவே 1952-ஆம் ஆண்டு சட்டம் இது போன்ற நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட முடியாது. எனவே தனியாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று மத்திய அரசில் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பது தெளிவாகப் புலப்படுகிறது. அது மட்டுமல்ல. மத்திய அரசாங்கத்தின் 1952-ஆம் ஆண்டுச் சட்டத்தின்கீழ் ஒரு மாநில அரசைப்பற்றி விசாரிக்க முடியுமா என்ற அரசியல் சட்டப் பிரச்சினை எழுப்பப்பட்டது. அதைப் பற்றிப் பல்வேறு விளக்கங்கள் தரப்பட்டன. நம்முடைய அரசின் சார்பிலே தரப்பட்ட விளக்கம், 1952-ஆம் ஆண்டுச் சட்டத்திலே இப்படி விசாரணை செய்வதற்கு அதிகாரம் இருக்கிறதா இல்லையா என்பது ஒரு பக்கம் இருக்க, அந்தச் சட்டமே அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதாகும். மத்திய, மாநில அரசாங்கங்கள் ஒன்றின் மீது ஒன்று ஆதிக்கம் செலுத்துவதற்கு அந்தச் சட்டத்திலே இடம் இல்லை. இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு மாறுபட்ட சட்டம். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, நம்முடைய சட்ட மன்றத்தைப் பொறுத்த அளவிற்கு இங்கே இருக்கிற அமைச்சர்களைத் தட்டிக் கேட்பதற்கோ கண்டிப்பதற்கோ இங்கே இருக்கிற சட்ட மன்றத்திற்குத் தான் உரிமை. மேலே யாருக்கும் அந்த உரிமை கிடையாது என்ற ஒரு

வாதத்தை நாம் வைத்திருக்கிறோம். இதேபோல மத்திய அமைச்சர்களைப் பாராளுமன்றம்தான் கேட்க வேண்டும். அவர்களுக்கு மேலே ஒருவரும் இருக்க முடியாது என்ற பதிலைச் சொன்னோம். அதுமட்டுமல்ல. இந்த மன்றத்திலுள்ள அமைச்சர்களைப்பற்றி, சட்ட மன்ற உறுப்பினர்களைப்பற்றி விசாரிப்பதற்கு மத்திய அரசாங்கத்திற்கு உரிமையிருப்பதாக ஒப்புக் கொள்வோமானால், மத்திய அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்களைப் பற்றி யார் விசாரிப்பது? குறிப்பாக பிரதம அமைச்சரைப்பற்றி யாராவது விசாரிக்க வேண்டுமென்று சொன்னால்; அவரை விசாரிக்க அதிகாரம் படைத்தவர்கள் யார் என்ற பிரச்சினை எழுகிறது. இதற்கு இதுவரை பதிலில்லை. அரசியலமைப்புச் சட்டத்தின்படி, விசாரிப்பதற்கு இந்தச் சட்டத்தில் இடமில்லை யென்ற வாதத்தை வைத்தோம். அரசியலமைப்புச் சட்ட நிபுணர்களைப் பொறுத்த அளவுக்கு இரண்டு விதமான கருத்துக்களைச் சொன்னார்கள். நம்முடைய வாதத்தை ஏற்போர் களும் உண்டு; இல்லையென்று சொல்பவர்களும் உண்டு. அதைவிட, இந்த 1952-ஆம் ஆண்டுச் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிற தென்று பார்த்தால்,—அது நாம் நினைக்கிற எண்ணத்திற்குப் போதுமாவென்பது அடுத்த பிரச்சினை,—நான் முதலில் எடுத்துக் காட்டியதைப்போல, ஒரு அமைச்சர் மீது லஞ்ச ஊழல் குற்றம் சாட்டப்பட்டால், அதை விசாரிக்க வேண்டுமென்று கூறப்பட வில்லை. சரி, அடுத்த கட்டம், 1952-ஆம் ஆண்டுச் சட்டப்படி விசாரணை செய்யவேண்டுமென்றால்; மத்திய அரசாங்கம் நினைத்தால் செய்யலாம், நினைக்காவிட்டால் விசாரணை செய்யாமல் இருக்கலாம். விசாரணை செய்வதாக இருந்தால், யாரை நீதிபதியாகப் போடுவது? யாரை வேண்டுமானாலும் நீதிபதியாகப் போடலாம். அவர்கள் தீர்ப்புக் கொடுத்தால், அந்தத் தீர்ப்பு என்னவாகும்? அதைப்பற்றி அந்தச் சட்டத்தில் தெளிவில்லை. அவர்கள் ஓர் அறிக்கை கொடுப்பார்கள். அந்த அறிக்கையின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுமென்பதற்கு அந்தச் சட்டத்தில் விளக்கம் இல்லை. இந்த அறிக்கையின் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்கலாம்; எடுக்காமலும் இருக்கலாம். இப்படி அந்தச் சட்டத்தில் இருக்கிறது. நாம் கொண்டுவந்திருக்கிற சட்டம், இப்படிப்பட்ட நிலைமைகளுக்கெல்லாம், வழி காண்கின்ற முறையிலே, பரிகாரம் காண்கின்ற முறையிலே அமைந்திருக்கிறது.



யாருடைய தயவும் இல்லாமல், ஒரு குற்றச்சாட்டை விசாரிக்க வேண்டுமென்று, ஒரு தனி மனிதன் தானாகவே கேட்கின்ற அதிகாரத்தை நாம் கொடுத்திருக்கிறோம். அவன் கையெழுத்துப் போட்டு, விசாரணை செய்ய வேண்டுமென்று சொன்னால், தன்னாலேயே விசாரணை நடக்க வேண்டும், யாருடைய அனுமதியும் தேவையில்லையென்று சட்டம் போட்டிருக்கிறோம். 1952 ஆம் ஆண்டுச் சட்டத்தில் இல்லாத ஒன்றைக் கொடுத்திருக்கிறோம். அதே போன்று, 1952-ஆம் ஆண்டுச் சட்டத்திலே, முதலமைச்சர் அல்லது பிரதம அமைச்சர் நினைத்தால், நீதிபதியைப் போடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் போட்டுள்ள சட்டத் தின்படி, உயர்நீதி மன்றம் யாரைச் சொல்கிறதோ, அவரைத்தான் போட வேண்டும். உயர்நீதி மன்ற நீதிபதியின் அந்தஸ்துள்ள ஒருவரைத்தான் நாம் போட்டாக வேண்டும். நமக்கு அதில் எந்தவிதமான 'டிஸ்கிரிஷன்' உம் கிடையாது. சுதந்திரமாக நீதிபதி வருவார். மூன்று ஆண்டுக்காலம் அவரை யாரும் அசைக்க முடியாது. அவர் சுதந்திரமாகப் பணியாற்ற முடியும். அதுபோல, அவருக்கு சட்டத்திலேயே பணிக்காலம், 'சர்வீஸ் கண்டிஷன்', சம்பளம் எல்லாம் போட்டுவிட்டோம். அதை மாற்ற முடியாது. அரசாங்கத்தினுடைய தயவிலே அவர் இருக்க வேண்டிய அவசியமில்லை. அவரை விலக்குவதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் கிடையாது. அவரை விலக்க வேண்டுமென்று சொன்னால், நாம் அவர் மீது ஒரு specific charge ' சொல்லி, உயர்நீதி மன்றத்திலே நீதிபதிகள் உட்கார்ந்து, அதைப் பரிசீலித்து, இது குற்றம்தான், அவர் விலக்கப்பட வேண்டும்' என்று முடிவு செய்தாலொழிய நாம் சுதந்திரமான நீதிபதியை விலக்க முடியாது. இப்படிப்பட்டதொரு பாதுகாப்பை இந்தச் சட்டத்தில் நாம் கொண்டுவந்திருக்கிறோம். அடுத்தபடியாக, நாம் கொண்டுவந்துள்ள சட்டத்தின்படி, நீதிபதி சுதந்திரமாக விசாரிப்பார். விசாரித்து அறிக்கை சமர்ப்பிப் பதோடு நின்றுவிட மாட்டார். அவர் குற்றவாளியென்று சொல்வாரானால், அந்தக் குற்றவாளி மீது—மந்திரியாக இருந்தாலும், யாராக இருந்தாலும்—கண்டிப்பாக கிரிமினல் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்— shall be prosecuted என்று சட்டத்தில் போட்டிருக்கிறோம். 1952 ஆம் ஆண்டுச் சட்டத்திலே, நடவடிக்கை எடுப்பது மத்திய அரசினுடைய விருப்பம் என்று இருக்கிறது. நாம் கொண்டு வந்துள்ள

சட்டத்திலே கட்டாயம் அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதற்கு தண்டனை என்ன? 1952-ஆம் ஆண்டுச் சட்டத்தில் ஒன்றுமில்லை. நாம் கொண்டு வந்துள்ள சட்டத்தில் ஏழு ஆண்டுக்காலம் தண்டனை கொடுத்திருக்கிறோம். மற்ற மாநிலங்களிலே இதுபோன்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மராட்டியத்திலும், ராஜஸ்தானத்திலும் (ஆளுங் காங்கிரஸ் இருக்கிற மாநிலங்களில்) இந்தச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் பெரும்பாலும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அதைவிட முன்னேற்றமாகச் செய்திருக்கிறோம். மத்திய அரசு கொண்டு வந்த சட்டத்திலும், மராட்டியத்திலும், ராஜஸ்தானத்திலும் நிறைவேற்றப்பட்ட சட்டத்திலும், முதலமைச்சருக்கு விதி விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். நாம் கொண்டுவந்துள்ள சட்டத்திலே முதலமைச்சரையும் விசாரிக்கலாம். அவரையும் ஏழு ஆண்டுக்கால தண்டனைக்கு உட்படுத்தலாம் என்று போட்டிருக்கிறோம். அவர்களெல்லாம் ஏழு ஆண்டுக்காலம் தண்டனையென்று போடவில்லை. விசாரணை நடக்கும், தீர்ப்பு மன்றத்திலே வைக்கப்படும்; கவர்னருக்கு அனுப்பப்படுமென்றுதான் அந்தச் சட்டத்திலேயிருக்கிறது. நம்முடைய சட்டத்திலே, தீர்ப்பின் அடிப்படையிலே வழக்குத் தொடர்ந்து, ஏழு ஆண்டுக்காலம் தண்டனை அளிக்கக்கூடிய penal offence என்று வைத்திருக்கிறோம். அந்த அளவுக்கு, மற்றச் சட்டங்களைவிட, இது நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கிறதென்பதையும் நான் இந்த சமயத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இத்தனை திட்டமிட்டு, சுதந்திரமாக யார் வேண்டுமானாலும் நீதி விசாரணை கேட்டு, நீதி விசாரணை பெறுவதற்கு இவ்வளவு வாய்ப்புகள் கொடுத்துள்ள சட்டத்திலே, ஆட்சேபணைக்கு உரியதென்று இதுவரை எழுப்பப்பட்டுள்ள வாதம், இப்படி ஒரு குற்றச்சாட்டு கொடுத்து, அது false, frivolous and vexatious என்று நிரூபிக்கப்பட்டு விட்டால், அந்தக் குற்றச்சாட்டு கொடுப்பவனுக்கும் தண்டனை உண்டு என்பதுதான். இதுதான் போடப்பட்ட ஒரு விதி. அவர்களுக்கு மூன்று ஆண்டுகள் தண்டனையென்று போட்டிருக்கிறோம். இதைப் பார்த்தவுடன் ஒரு எதிர்ப்பு, சலசலப்பு, கறுப்புச் சட்டம் என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிறது.



அதற்கு நாங்கள் பதில் சொன்னது, எந்த மத்திய அரசு இந்த ஆலோசனையைச் சொன்னதோ, அதே மத்திய அரசு நியமித்த திரு. சந்தானம் அவர்கள் குழுவில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இது போன்றதொரு சட்டம் வேண்டுமென்று சொல்லி விட்டு, இப்படி ஒரு பொய்க் குற்றச்சாட்டு வருமானால், யார் மீது அந்தப் பொய்க் குற்றச்சாட்டு கூறப்பட்டிருக்கிறதோ, அந்த அமைச்சர், பொய்க் குற்றச்சாட்டைக் கிளப்பியவர்மீது வழக்குத் தொடர வேண்டும்; அந்த அமைச்சர் வழக்குத் தொடருவதற்கு அரசாங்கம் பணம் கொடுக்க வேண்டும்; அப்படி அந்த அமைச்சர் வழக்குத் தொடராவிட்டால், அரசாங்கம் தொடர வேண்டும் என்ற இந்தக் கொள்கையை திரு. சந்தானம் குழு ஏற்றுக்கொண்டுள்ளது. அவர்கள் ஏற்றுக்கொண்டதைப்போல, மராட்டியம், ராஜஸ்தான் மாநிலங்கள் போட்ட சட்டத்திலேயும், நாம் போட்டிருக்கிற மூன்று ஆண்டு தண்டனை, பொய்க் குற்றச்சாட்டு, வழக்குப் போடுபவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் போட்டிருக்கிறார்கள். இது அவர்களுடைய சட்டத்திலேயும் இருக்கிறது. நாம் புதுமையாக, எதிர்க் கட்சிகளை மிரட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமென்று சொல்வது பொருத்தமில்லாத வாதம். எல்லா மாநிலங்களிலும், எல்லா அரசியல் கட்சிகளும் ஏற்றுக் கொண்டுள்ளதைத் தான் கொண்டு வந்துள்ளோம். இதைக்கூட, எதிர்ப்பவர்கள் முதலில், இது சட்ட முறைக்கே முரணானது; குற்றச்சாட்டு கொண்டுவருபவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்துவது சரியல்லவென்று நினைத்தார்கள். அதற்குப் பிறகு நாம் சொன்னோம். Civil Procedure Code ல் Section 35-ஏ. இருக்கிறது; Ciminal Procedure Code -ல் 250-வது பிரிவு இருக்கிறது. இந்தப் பிரிவுகளின்கீழ் இப்படிப்பட்ட பொய்க் குற்றச்சாட்டு பொய் வழக்கு கொடுப்பவர்கள் மீது வழக்கு போடலாம்: தண்டனை கொடுக்கலாம் என்ற கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. சந்தானம் குழு சிபாரிசு செய்து, மராட்டியம், ராஜஸ்தான் மாநிலங்களும் நிறைவேற்றி இருக்கின்றன. கொள்கையில்லை என்று சொல்வது தவறு. கொள்கை இருக்கிறது. அந்தக் கொள்கையின் அடிப்படையில் தான் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். இந்தத் தண்டனை அதிகமா, அல்லது குறைவா? அதற்கு ஒரு வாதம் இருக்கலாம். அந்த வாதத்திற்குப் பதில், நாம் மற்ற மாநிலங்களைப் பின்பற்றி

யிருக்கிறோம் என்பதுதான். இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவுக்கு ஒரு comprehensive சட்டம் என்ற முறையிலே நாம் கொண்டு வந்திருக்கிறோம். கொண்டு வந்துள்ள சூழ்நிலை ஒரு பயங்கரமான சூழ்நிலை, ஒரு எதிர்ப்புள்ள சூழ்நிலையென்று சொல்கிறார்கள். நாட்டிலே எதை வேண்டுமானாலும் பேசலாம். அதைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டும். இது ஒரு சூழ்நிலையென்றால், என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மத்திய அரசு நீதி விசாரணைக் கமிஷன் போட வேண்டும்; அதற்கு இடையில் இப்படிக் கொண்டுவருகிறார்களென்று பேசுகிறார்கள். இதை அரசியலுக்குப் பயன்படுத்தலாமே ஒழிய, இந்தச் சட்டத்தினுடைய தாத்பரியத்திற்குப் பொருத்தமாக இருக்காது. நாம் கொண்டுவந்துள்ள சட்டம், இன்றைக்குள்ள ஆட்சியாளர்களையோ, எதிர்க்கட்சிகளையோ அல்லது சட்ட மன்ற உறுப்பினர்களையோ பாதுகாப்பதற்காகக் கொண்டுவந்த சட்டமல்ல. யார் ஆட்சியில் இருந்தாலும், யார் சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தாலும், எல்லோருக்கும் பொதுவான சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல. இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சுதந்திரமாக நீதி விசாரணை கேட்பவர்கள் கேட்கட்டும். இல்லை, எனக்கு மத்திய அரசின் மீதுதான் நம்பிக்கையென்று, அவர்களை வைத்துக் கேட்டாலும் அதில் ஆட்சேபணையில்லை. அதிலும் தவறில்லையென்று நினைக்கிறேன். மக்கள் மன்றத்திலே, ஒரு அமைச்சர் மீது குற்றம் சாட்டிய பின்னாலே, அவரைச் சுதந்திரமாக விசாரிக்க வாய்ப்பு இல்லையென்று தெரிவிக்கப் பட்டது. அந்த வாய்ப்பைத் தருவதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த அளவுக்கு, நாட்டிலே ஒரு நீதி நிலைமை வர வேண்டும்; நாணயமான அரசியல் இந்த நாட்டிலே பரவ வேண்டும்; அதே நேரத்திலே அரசியலில் ஒருவருக்கொருவர் அவதூறு கூறி, இந்த நாட்டில் அரசியல்காரர்கள் அத்தனை பேரும் மோசடிக்காரர்கள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்படாமல் இருக்க வேண்டுமென்று சொன்னால், சுதந்திரமான நீதிமன்றங்கள் உருவாக வேண்டுமென்பதுதான் அதனுடைய கருத்தாகும். அதன் அடிப்படையில்தான் சட்டமன்றத்திலுள்ள அத்தனை உறுப்பினர்களும் சொத்துக் கணக்கை சட்ட மன்றத்தில் வைக்க வேண்டுமென்று சொன்னோம். எதிர்க்கட்சியில் இருந்தபோது



சொன்னோம். ஆளுங்கட்சியில் நிறைவேற்றிக் காண்பித்தோம். அமைச்சர்கள், சட்ட மன்ற உறுப்பினர்களெல்லாம் கணக்கு காண்பித்திருக்கிறார்கள். அது தவறாக இருந்தால், அதற்கு முறையான கருத்தைச் சொல்வதற்கும் வாய்ப்புக் கொடுத்தோம். அதுவும் போதாதென்று, இன்று சுதந்திரமான ஒரு நீதிபதியிடத்தில் அவர்கள் சென்று, புகார் கொடுத்து, விசாரணை தொடங்குவதற்கு வாய்ப்புள்ள மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நல்லவர்கள் இந்த அருமையான மசோதாவை ஆதரிப்பார்களென்று கூறிக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** முன்மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு 1973 ஆம் ஆண்டு பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முனவடிவு எண் 3/73) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, I feel that a legislation of this type is absolutely necessary, because we, who are holding responsible positions in the legislature as members representing different constituencies have a duty to the public. In 4-30 பி.ப the discharge of our duties we shall act without fear or favour without being tempted by any sort of remuneration for work for which we have enjoined ourselves to devote our attention, energy and time by virtue of our standing for election and getting elected. For the honorary work, which we are expected to do, the State pays us a salary and an allowance.

But, Sir, I have my misgivings about this Bill. I feel, Sir, that this Bill does not go to the extent I would like it possibly to go. First of all, on the definition of 'Criminal Misconduct' I would say, Sir, like the legal profession, like the profession of the auditors, like the profession of medical man, we should also have a code of ethics and in that code of ethics we must set out our rights and duties as a Legislator. If it is in the form of a Code we could rely on that, for any invasion of our rights and, we should also make ourselves responsible for carrying out our obligations under

that Code. If this is not done, Sir, what the Hon. Minister has envisaged, viz., frivolous complaints, vexatious complaints, false complaints may come galore for examination against Members of Legislature as well as Hon. Ministers. If, on the other hand, we have a code in the manner of the legal profession, in the manner of the medical profession, in the manner of the auditor 's profession, and we give ourselves that Code and try to live by it, as has even been said in the Thirukkural which so often this Government rely on as containing axiomatic truth in respect of matters which concern the governance of the country, it would do a lot of good. Sir, I am glad that this House has also the portrait of Thiruvalluvar in it. So, it should not be difficult for us to have a code in the light of the injunctions which have been given in the Thirukkural, by which we restrict ourselves to a particular code of conduct which we could enjoin on ourselves and observe in the discharge of our duties.

MR. CHAIRMAN : What does Thirukkural say?

THIRU G. VASANTHA PAI : Sir, I have got English translation of it. In that, how the country should be governed, what a person should do in the governance of the country, how he should administer just rules of conduct, how he should not do unjust things or indulge in improper conduct—and all that, have been given in separate chapters. Unfortunately, I have not brought the book. It was left on my office-table by oversight. I was phoning for it. But, I would have liked to quote in Tamil rather than in English, and I have gone through it this morning, which is a combined English-*cum*-Tamil book. It has been given to me by a friend and I have been reading through it.

Sir, what I was referring to is that this code of righteous conduct has always been there and our Government could codify a set of rules necessary for the guidance of the Ministry as well as the Members. The definition here of 'criminal misconduct' refers only to getting of illegal gratification. It does not refer to the other types of favouritism and nepotism that are extant in every Government all over the country, not only in this State, but in every other State. Sir, it is a matter of knowledge when we stand for elections, a number of people help us and we



try to confer on them some benedictions. After all, Ministers are human beings and persons in charge of Government are human beings and they give their benediction to such people. It has come to our knowledge in the past and the D.M.K. members, on the floor of this House, when the Congress was guilty of it, have come out with diatribes against such conduct. Sir, I perfectly remember that in one of the cases which came before the High Court, I quoted the speeches made by the D.M.K. members wherein they said about the post of Advocate-General "இது நாவரத் பேட்டை ஜமீனிலே கூலி வேலையா? This was the question asked when the person who was not qualified to be appointed as Advocate-General was appointed as Advocate-General A member of the D.M.K. Party, on the floor of this House, asked the question " இது என்ன நாவரத் பேட்டையில் கூலி வேலையா? பண்ணையார் கூலி வேலையா?" This is what they asked. "Why should such a person be appointed as Advocate-General?" In the subsequent year when the appointment of such a person as a Judge of the High Court was challenged, I quoted that speech. I am only referring to it. Sir, to say that a bad decision should not be made a precedent and followed in the future. Sir, there have been instances where posts which are of high recognition in the legal profession, where great learning and erudition are required sometimes have been filled on considerations of nepotism. I do not blame, Sir, those persons who are holding the office because this happens in every part of our country. I know, Sir, several persons who have helped the Ministers in their election petitions have always been rewarded with one of such positions at a later date, and I know, Sir, when that person becomes a Minister here, the persons who helped invariably get appointed either to the post of Government Pleader, or to the post of Public Prosecutor or even to the post of Advocate-General and are later elevated to the Bench. I do not say, Sir, that that man is not qualified, but the circumstances under which he is routed up, have been made the subject of criticism and condemnation when the Congress Ministry was in office. I am only reading for your edification the passage from the judgment of that great Judge—Justice Balakrishna Iyer—reported in A.I.R. 1961 (Madras) 450 at page 465, in which the post of a Government Pleader which was given to a man who was occupying the position

of a Secretary to the Government was assailed in the Courts and the judgment later became a subject of attack on the floor of the other House, and a matter of controversy between the Executive and the Judiciary. The learned judge in that case said :

" In the present case no adjudication is involved. Besides, the rules themselves, being devoid of statutory force, remain merely as declarations—no doubt public and explicit declarations but still only declarations—by Government of their intentions and line of conduct. They say in effect that when they have to make the appointment of a Government Pleader, they would act in the manner specified in the rules. But, there are no legal sanctions behind them and in such situations, the only safeguards must be the sense of responsibility, the respect for propriety, the regard for decorum and the obligation to behave fairly, and beyond all else, to behave honestly which must actuate and bind the holders of every public office of whatever consequence. It follows, that against unhappy adventures like the present, adventures in the dispensation of Government patronage, courts can give no worth-while relief.

The operative must be applied, in the first instance, by those in administrative or operational control, and, ultimately by a resentful and uncompromising public opinion."

We should not be defeatist when our acts are being challenged outside or in the legislature. We should see that we live up to the standards enjoined upon us and if certain acts are being questioned in the legislature, we must see that we take upon ourselves the responsibility either to defend or condemn the appointment and correct ourselves if we are wrong. Sir, in that case—one of the biggest controversies between the Executive and the Judiciary—the whole House stood as one man against the whole Bar and the matter came to a head when finally due to the intervention of the Governor a quietus was given to the whole matter by prorogation of the Legislature.

Sir, I am only referring to this for the reason that we feel that there are many matters which the public are not bound to close their eyes to. The public have a right to expect a fair deal and



a fair Government at our hands. We should see that we do not do anything which might smack of nepotism or indirect corruption. We should see, Sir, that not only "criminal misconduct" is punished, but all such misconduct is punished. That is why, I feel that this Bill does not go to the extent it should have gone. I feel, Sir, that any act of nepotism on the part of a Minister should not be encouraged. In fact, we know to our bitter detriment of one instance which, I am sure, the Chief Minister himself today will regret wherein a Secretary of the Government was taken from eight rungs down the ladder and made the Chief Secretary to the Government and we know what travails the Government have been undergoing today by making him the Chief Secretary. I do not want to further comment on the matter as a petition is pending in the Supreme Court and such appointments will have their repercussions on the public mind, and people begin to feel that there is something radically wrong in the administration if such things happen too often. But, this, Bill, Sir, does not go to that extent to make that a corrective; it only talks of illegal gratification of receiving money for a thing; there may be other forms by which nepotism is practised. This Bill does not go the whole hog.

Sir, I am reading to you the particular portion of the Bill which says " Whoever being a public man accepts, or obtains "—attempts at acceptance have been taken away—" from any person for himself or for any other person, any gratification whatever other than legal remuneration ". It only talks of any gratification and it does not talk of acts of nepotism which are so common and frequent—I do not say in this Government only—in every State Government all over the country and even in the Centre.

* THE HON. THIRU Si. Pa. ADITANAR : May I ask what is nepotism ? From the place where the hon. Member is sitting, when Rajaji was the Chief Minister, I put to him the very same question. I said that the then Government was guilty of nepotism. The answer the learned Rajaji said was : nepotism will mean " appointment of a nephew '. Does it mean the same thing now ?

THIRU G. VASANTHA PAI : Nowadays we do not know who is the nephew, and cannot easily figure him out.

MR. CHAIRMAN : Nepotism will mean giving appointments to the near and dear. That is all right. The hon. Member may proceed.

THIRU G. VASANTHA PAI : They may be near and dear either by way of relationship or by any other form of close association. That is nepotism. It is not 'neo-patism'. The learned Minister is making a mistake in confusing 'nepotism' with 'neo-patism'. 'Neo-patism' may mean giving appointment to nephews, but not nepotism. I was referring to this for this reason. This 'criminal misconduct' mentioned in this Bill does not go far enough to embrace all sorts of cases which the Government could resort to in pushing up their favourites to the top rungs of the ladder. Sir, we have followed the British democracy. Originally Walpole introduced the system of spoils in that country. That was frowned upon. Andrew Jackson took that "Spoils System" away to the United States where it has come to stay. Even the other day we saw in the papers a millionaire who has supported President Nixon having said, "I am looking forward for an appointment abroad as an ambassador in consideration of my having given him support." I would say that this may be considered all right in some other countries but we, having followed the British system and having thought that we should not be actuated in our governance by methods of nepotism that are prevailing elsewhere in the world, should not now beat a retreat, having given ourselves Articles 309 to 311 of the Constitution. Then I come to the next aspect of the Bill.

MR. CHAIRMAN : The time is up. The hon. Member may please be brief.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, I shall try to be brief. The Bill envisages the appointment of a High Court Judge, a person who is, who has been or who was a High Court Judge as the "Commissioner". My respectful comment on this aspect of the Bill is that no High Court Judge who is in office will accept this post, despite the fact that the remuneration is Rs. 4,000. Why? It is because clause 6 of the Bill provides for the removal of the 'Commissioner' or 'Additional Commissioner' on the



ground of misbehaviour. This is against Article 124 (4) and Article 217 (2) of the Constitution of India. According to the Constitutional provisions, a High Court Judge can be removed only by a vote of censure passed in the Parliament. While so, how can this Council or the Assembly or the Government believe that a High Court Judge would accept the appointment as Commissioner when for even an ordinary misbehaviour, his name could be at stake and his appointment be brought to an end? Therefore, a High Court Judge accepting office is entirely ruled out of consideration and they will never agree for appointment to the post of Commissioner under this Bill. The only persons who might accept the post are retired High Court Judges or District Judges or some such persons who hold subordinate posts.

MR. CHAIRMAN : The hon. Member cannot decide about it.

THIRU G. VASANTHA PAI : Sir, I am only pointing out the lacuna in the Bill. The relevant provision which I pointed out gives a chance to make an attack against a High Court Judge who is appointed Commissioner or any other person appointed as Additional Commissioner for 'misbehaviour'. It is not even 'proved' misbehaviour; but 'mere misbehaviour'. A chance is given for making an attack against a High Court Judge. Suppose the Commissioner makes a decision and somebody makes an allegation that he has misbehaved himself, the possibility of making such an allegation would go a long way to discourage any judge from accepting the appointment, because of the fear that somebody in the Legislature or outside may make an allegation against him, if he gives a judgment against a person or a Minister without fear or favour.

(Hon. Chairman sounded the gong)

Sir, I will try to be brief. I have only two or three more points to make. The other matter I want to mention is about the omission of the Members of the Panchayats, Municipal Councils, etc., from the definition of 'Public man'. Sir, these are the persons who are now the spearheads of our democracy. The omission of such persons by the Select Committee is absolutely wrong, because many things which the Chairman or the Vice-Chairman of

a Municipality can do can also be done through the Members. Therefore, I would say that the omission of 'Members of the local bodies' from the definition of 'Public man' and from the scope of this Act presents a loophole by which the Chairman and Vice-Chairman could easily escape by doing the necessary things through the Members who have been excluded from the operation of this Bill. The original definition should have been retained and the modification by the Select Committee is thoroughly uncalled for.

Then, Sir, the definition of "Public man" does not include a High Court Judge. It only means "any person who is or has been the Chief Minister or any other Minister of the State, a person who is or has been a Member of the Legislative Assembly or of the Legislative Council of the State, or a person who is or has been a Mayor or Deputy Mayor", etc., etc. Now, Sir, by clause 6 of the Bill, we are going to proceed against the High Court Judge for misbehaviour. He should have been included in the definition of 'public man'.

MR. CHAIRMAN: We have no control over the High Court Judges.

THIRU G. VASANTHA PAI: Then the other clause must go. If we have no control, the remedy must be by removal through the Parliament. The High Court Judge cannot be removed by the present enactment. It will be ultra vires Article 124 (4) and Article 217 (2) of the Constitution of India. That is why I am saying that this Bill has got latent defects and that it is not also comprehensive. Under these circumstances, I feel that this Bill has not gone to the length to which it should go. It would still encourage nepotism being practised by the ruling party, whether it be the D.M.K. or the Congress or any other party, and those acts of nepotism could never be called in question. But, on the other hand, if there is a code of conduct for the politicians, like the code of conduct for the lawyers, the code of conduct for the medical men or auditors, then their action can always be investigated and this House itself or the Committee of Privileges could sit in judgment over the matter and see that the matters are agitated in this responsible forum. Thank you, Sir.



THE HON. THIRU S. MADHAVAN: It is very difficult to convince the hon. Member. Anyhow I will try to convince him. We are not appointing a High Court Judge as a Commissioner directly. We can select a person from among the High Court Judges. Once he is appointed Commissioner, he will not have anything to do with the High Court. Only if he accepts this post, he will be appointed. Then he will be the Commissioner and not a High Court Judge at all. (Interruption) It is very difficult to convince the hon. Member. That is why I said I would try to convince. If that position is accepted, then there is no question of Constitution coming in as a bar to such man serving as Commissioner. What we have provided is that a charge must be made against him. That is not enough. That charge must be proved and must be gone into by the Judges sitting in the High Court. Once they give a finding that the charge of misbehaviour is proved, they pass an order and on that order only, we can remove him.

THIRU G. VASANTHA PAI: My answer to the Hon. Minister is: There is provision in the Constitution whereby any Judge doing any work other than that of a High Court Judge is considered to continue as a High Court Judge and the President must give sanction for it. He does not cease to be a High Court Judge. This matter came up before the Supreme Court and the Supreme Court held that he continued to be a High Court Judge, notwithstanding the fact that he did any work outside the Court. He does not lose his tenure as a High Coura Judge or his position as High Court Judge but he will be considered to be on other duty. That is all.

திரு. எஸ். ஏ. ராஜமாணிக்கம்: மேலவைத் தலைவர் அவர்களே, பொது வாழ்க்கையில் பணிபுரிவோர் மீது சாட்டப்படுகிற குற்றச் சாட்டுகளை அதிகாரபூர்வமாக நிரூபிக்க வேண்டுமென்ற நிலையில் கொண்டுவந்துள்ள இந்த மசோதாவை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் பொதுவாக சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்தவன் அல்ல வென்றாலும்கூட இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரை, எல்லா அரசியல் கட்சிகளும், பொதுவாக திராவிட முன்னேற்றக்

கழகம் ஆட்சியிலிருந்து இறக்கப்பட வேண்டுமென்று நினைக்கிற எல்லா அரசியல் கட்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள் மீதும, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும், அமைச்சர்கள் மீதும், மற்றும் பொது வாழ்க்கையில் உள்ள பஞ்சாயத்து போர்டு மெம்பரிலிருந்து கார்ப்பரேஷன் மெம்பர் வரையில் அனைவர் பேரிலும் ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகளை நாடு பூராவிலும் கூறிக்கொண்டு வருகிறார்கள். இன்றையதினம் சமதர்ம சமுதாய அமைப்பை நோக்கி தமிழகம் முன்னேறிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமுறைக்குப் பிறகு தமிழகத்தில் ஆட்சி மன்றங்களில், ஜமீன் அரசர்களும், பஸ் முதலாளிகளும், மிகப் பெரிய தனவந்தர்களும் இருந்த இடத்தில் சமுதாயத்தில் மிக மிகச் சாமானியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவுடன், அவர்களைப்பற்றி எதை வேண்டுமென்றாலும் மக்களிடத்தில் சொல்லலாம் என்ற நிலைமையை வைத்துக்கொண்டு ஆர்ப்பாட்டங்களும கலவரங்களும் செய்கிற நிலைமை இன்றைய தினம் உருவாகி யார் பேரில் எந்தப் புகார் சொல்லுவது என்று தெரியாமல் புகார் கூறிக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக சமுதாயத்தில் இன்றையதினம் மிக எளிய நிலையில்
4-50 பி.ப. உள்ளவர்கள் பொது வாழ்க்கைக்கு வருவதே ஆபத்து என்று நினைக்கும்படி இன்று அரசியல் நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. ஓரளவு கௌரவமாக இருக்கிறவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் கூட நாம் ஏன் பொது வாழ்வுக்குப் போக வேண்டும். இருப்பதை வைத்துக்கொண்டு ஒதுங்கி வாழ்க்கை நடத்தலாம் என்று எண்ணும் அளவுக்கு, பொது வாழ்க்கையில் உள்ளவர்கள் யாராக இருந்தாலும் அவர்களைப்பற்றி எப்படி வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று இன்றையதினம் தமிழ் நாட்டில் அரசியல் சூழ்நிலை உருவாகி, அரசியல் கட்சிகள் அப்படிப்பட்ட பிரசாரங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆதாரபூர்வமாகக் குற்றச்சாட்டுகள் சொல்லுங்கள் என்று சொன்னால், அதை யாரும் ஆதார பூர்வமாகச் சொல்வதில்லை. பொது மேடைகளில் அப்படிப் பேசினால், அதைக் கண்டுபிடித்து அவர்கள் மீது வழக்குப் போட்டால், நான் அப்படிப் பேசவில்லை. என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்களே தவிர, வருத்தம் தெரிவித்துவிட்டு, மன்னிப்புக் கேட்டு விட்டுப் போய்விடுகிறார்களே தவிர, அவர்கள்





உண்மையை எந்த விதத்திலும் ஒத்துக்கொள்வதில்லை சமீபத்தில் திருப்பூரில் போடப்பட்ட வழக்கு ஒன்றில் ஒருவரை விசாரித்த போது, நான் பேசியதில் பொதுவாகத்தான் சொன்னேன், என்னென்ன அக்கிரமங்கள் செய்தார்களென்று பேசவில்லை என்று அவர் பேசாதது போலவே அந்தக் கோர்ட்டில் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்.

(மாற்றுத் தலைவர் திரு. க. அறிவழகன் தலைமை)

இப்படிப்பட்ட நிலைமையில் பொதுவாழ்வில் உள்ளவர்கள் பேரில் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகள் விசாரிக்கப்படலாம் என்று சட்டம் கொண்டு வருகின்ற நேரத்தில், எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் மத்திய சர்க்கார் சட்டம் ஒன்று இருக்கின்றபோது, இந்தச் சட்டத்தை ஏன் கொண்டு வருகிறீர்கள், இந்தச் சட்டமே தேவையில்லை, இது ஒரு கறுப்புச் சட்டம் என்று சொல்வதென்றால், அவர்கள் ஏதோ பயந்துகொண்டு அந்தச் சட்டத்தைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றார்கள் என்றுதான் நான் குறிப்பிடுகிறேன். பொதுவாகவே இப்படிப்பட்ட ஒரு சட்டம் பொது வாழ்வில் உள்ளவர்களைச் சோதிப்பதற்காக, அவர்களைப் பரீட்சை செய்வதற்காக மிக, மிகத் தேவை. அதை உணர்ந்து இந்த அரசு கொண்டுவந்திருக்கின்ற நேரத்தில் அதை வரவேற்று யார், யார் பேரில் புகார்கள் சொல்கின்றோமோ, அவற்றை எல்லாம் ஆதாரத்தோடு சொல்லி அவர்களுக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல், அந்தச் சட்டத்தை எதிர்ப்பது, அதைக் கறுப்புச் சட்டம் என்று பிரசாரம் செய்து வருவது என்ற நிலைமையில்தான் இருக்கிறார்கள். மத்திய சர்க்கார் சட்டம் ஒன்று இருக்கின்ற நேரத்தில், மாநில அரசு ஒரு சட்டம் எதற்காகக் கொண்டுவரவேண்டுமென்ற நிலைமையைச் சொல்கிறார்கள். மாநில அரசுகள் மீது விசாரிப்பதற்கு மத்திய அரசு இருக்கின்றது என்று சொல்கின்ற நேரத்தில், மத்திய அரசாங்கத்திலுள்ளவர்கள் தவறு செய்வதை யார் விசாரிப்பது என்று கேட்டால், அதற்குச் சரியான பதில் சொல்வதில்லை. மாநிலத்திலுள்ள நீதிபதிகள் ஆகாது. வெளி மாநிலத்திலிருந்து நீதிபதிகள் வரவேண்டுமென்று சொல்கிறார்கள். இப்படிச் சொல்லுகின்றவர்கள், மத்திய அரசாங்கத்திலுள்ளவர்கள் பேரில் விசாரணை செய்கின்ற நேரத்தில்—மாநிலத்தைப் பொறுத்த வரையில் வெளி

மாநிலங்களிலிருந்து நீதிபதிகள் வரவேண்டுமென்று சொல்வது போல்—வெளிநாடுகளிலிருந்து நீதிபதிகளைக் கொண்டுவந்து விசாரிக்கப் போகிறார்களா என்று தெரியவில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் இந்தச் சட்டத்தை மனதார வரவேற்று, இப்படி ஒரு சட்டம் இருப்பது பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று ஆதரவு தரவேண்டுமே ஒழிய, அதை எதிர்த்துத் தவறான பிரசாரம் செய்கிறார்கள் என்றால், பொது வாழ்வில் தங்களுக்கு ஆபத்து வந்து விடுமோ என்று அஞ்சிப் பிரசாரம் செய்கின்றார்கள் என்று தான் அர்த்தம்.

பொதுவாக இந்தச் சட்டம் இன்றையதினம் ஆட்சியில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல. எந்தக் காலத்திலும், எந்தக் கட்சிக் காரர்கள் ஆட்சிக்கு வந்தாலும், யார் பேரிலும் எப்படிப்பட்ட புகார் வந்தாலும், அதை நிரூபிக்கக்கூடிய அளவில் வசதி இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை வரவேற்று என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. காட்டூர் கோபால்:** மாண்புமிகு தலைவரவர்களே, பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள தலைவர் அவர்கள் அனுமதி தந்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில், 1952-ஆம் ஆண்டு மத்திய அரசு இதே நோக்கத்தோடு கொண்டு வந்த அந்தச் சட்டத்தினுடைய நன்மைகளையும் விளைவுகளையும் விளக்கிச் சொன்னார்கள். இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கின்ற, இந்தச் சட்டத்தின் நன்மைகளையும் விளைவுகளையும் பற்றி அழகாக எடுத்துச் சொன்னார்கள். தனிப்பட்ட எந்தக் குடிமகனும் பொதுப்பணி ஆற்றுவோர் மீது குற்றமிருக்குமானால், குற்றமிருப்பதற்கு ஆதாரமிருக்குமானால், அவைகளைக் கொண்டுவந்து வைத்து அந்தப் பொதுப்பணியாற்றுவோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்தச் சட்டம் அழகான விதி முறைகளை வகுத்துள்ளது என்கின்ற



காரணத்தால், அதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். அதேபோல் ஆதாரமற்ற வகையில், வேண்டுமென்றே புழுதிவாரித் தூற்றுகின்ற வகையில், குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமில்லாவிட்டாலும் நிரூபிப்பதற்கு வழி வகை இல்லாவிட்டாலும், எதையும் பேசலாமென்ற நிலைமை இருக்கின்ற இந்த நேரத்தில் இந்தச் சட்டம் கொண்டு வந்துள்ளது மிக, மிக அவசரமும் அவசியமுமாகும். நல்ல நேரத்தில், சரியான நேரத்தில் வந்திருக்கின்ற நிலைமையில் இதை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

சுதந்திரமான நீதிபதிகள் இந்த மாதிரியான குற்றச் சாட்டுகளை விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்திருப்பது வரவேற்கத் தக்கது. குற்றம் யார் மீதும் சாட்டப்படுகிறது என்பது மட்டுமல்லாமல், குற்றம் சாட்டுகிறவர்கள் சரியான ஆதாரத்தோடு குற்றஞ்சாட்டாமல், அது பொய்க் குற்றம் என்ற நிலைமை எழுமேயானால், அவர்களைத் தண்டிப்பதற்கு வழி வகுத்திருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது. இதே மாதிரியான சட்டம் மஹாராஷ்ட்டிர மாநிலத்தில் வகுக்கப்பட்டபோது, அமைச்சரவையில் உள்ளவர்களுக்கு என்ன நிலைமை என்று பார்க்கின்றபோது, முதலமைச்சர் என்ற அந்தப் பகுதியை பிரித்து விட்டு ஏனைய அமைச்சர்களை மட்டும் சேர்த்து அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கே, முதலமைச்சர் அவர்கள் மீது குற்றமிருந்தால்கூட, தனிப்பட்ட எந்தக் குடிமகனும் குற்றம் சுமத்த முடியுமென்கின்ற தன்மையில், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாமல் முதலமைச்சராகவே உட்கார்ந்து கொண்டு ஒரு சட்டத்தை இயற்றுகின்ற துணிச்சலைப் பெற்றுள்ள நமது டாக்டர் கலைஞர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இந்த நேரத்தில் இந்தச் சட்டம் என்ன காரணத்தால் கொணரப்படுகிறது என்று பார்க்கின்றபோது, நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்ட மன்ற உறுப்பினர்களானாலும், அமைச்சர்களானாலும் சட்டத்தை மதித்து சில கொள்கைகளை நியாயமான வகையில் பின்பற்ற வேண்டுமென்பது எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட நிலைமை. ஆனால் 1926-ஆம் ஆண்டின் தொழிற் சங்கப் பதிவுச் சட்டத்தின்படி ஒரு சங்கத்தின் தலைவரை அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள் தேர்ந்தெடுப்பதுதான் முறை. இந்தியா

முழுவதற்கும் இந்தச் சட்டம் இருக்கிறது. எந்த மாநிலத்திலும் இதில் எந்தவிதமான மாறுதலுமில்லை. இங்கே மட்டும் ஒரு வேடிக்கை. நம்முடைய மாநிலத்தில் கடந்த நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்பு, ஓராண்டு காலமாக எல்லா மாற்றுக் கட்சித் தலைவர்களும் ஒரு மத்திய அமைச்சர் உள்ளிட்டு, அத்தனைபேரும், அந்தச் சட்டத்திற்கு முரணாக இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தொழிற் சங்கத்தில் என்னைத் தலைவராக நியமித்தார் என்ற குற்றச்சாட்டை ஆதாரமில்லாமல், உண்மையில்லாமல், சொன்னார்கள். இவைகளையெல்லாம் பார்க்கின்றபோது, இப்படி ஆதாரமற்ற குற்றச் சாட்டுகள் கொண்டு வந்தால் தண்டிக்கும் வகையில் ஒரு விதி சேர்க்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. பொதுவாழ்வில் ஈடுபடுகிறவர்கள் எதைப் பேசினாலும் அது தங்களுடைய அரசியல் வளர்ச்சிக்கு உதவுமென்று கருத இனி வாய்ப்பு இல்லை. இனி வேண்டாத குற்றச் சாட்டுகளைச் சொல்வதற்கு வழி இல்லை என்பதற்கான வகையில் இந்தச் சட்டத்தின் பிரிவுகள் அமைந்திருக்கின்றன என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பி.ப. 5-00 அதே நேரத்தில் இந்தச் சட்டம் கொண்டுவருகிறபோது இன்னொரு விஷயத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களுடைய நடவடிக்கைகளில், அவர் சட்ட மன்ற உறுப்பினராக இருந்தாலும் மேலவை உறுப்பினராக இருந்தாலும், அமைச்சர்களாக இருந்தாலும் கொஞ்ச காலமாகப் பார்க்கிறோம், ஆட்சியின் கொள்கைகளைப் பற்றி யாரும் குறை சொல்லுவதில்லை. இந்த ஆறு ஆண்டுகளிலே சொன்னதும் இல்லை. ஆட்களைப் பற்றிக் குறை சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் குறை சொல்லுவதன் மூலம் உண்மையை மறைக்க முடியும் என்ற நிலையானது ஜனநாயக ஆரோக்கியத்திற்குக் கேடானது ஆகும். அந்த ஜனநாயக ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவதற்கு இந்தச் சட்டம் முழுக்க முழுக்க உதவிசெய்கிறது. ஊழல் குற்றச் சாட்டுகள் என்று குடியரசுத் தலைவரிடம் கொண்டுபோய் ஒரு கட்சியினர் கொடுத்திருக்கிறார்கள்.

என்னுடைய பெயரைப் பயன்படுத்தி நான் சார்ந்திருக்கின்ற தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தை இந்த ஆட்சி இயந்திரத்தைப் பயன்படுத்தி வளர்ப்பதாக உண்மைக்கு மாறான, களங்கம்



கற்பிக்கின்ற வகையில் குற்றச்சாட்டு கொடுத்திருக்கிறார்கள். மிகத் தைரியமாக மாற்றார்கள் எப்படி வேண்டுமானாலும் குற்றம் சொல்ல முடியும் என்று கருதுகிற காரணத்தால் எங்கள் மீது களங்கம் கற்பிக்கிறார்கள். வன்முறைக்கும் எனக்கும், நான் சார்ந்திருக்கிற கட்சிக்கும் கொஞ்சம் கூட சம்பந்தம் இல்லையென்றாலும் குடியரசுத் தலைவரிடம் முறைகேடான குற்றச்சாட்டுகளைத் தைரியமாகக் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஒரு ஆண்டு காலத்திற்குள்ளாக சிம்சன் தொழிற்சாலையில் 57 பேர் அடித்து நொறுக்கப்பட்டு, மண்டை உடைக்கப் பட்டிருக்கிறார்கள். எங்களுடைய பெருமதிப்பிற்குரிய தோழர் பிரதாபசந்திரன் தொழிற்சாலையிலேயே சாகடிக்கப்பட்டிருக்கிறார். பிணமாகத் தான் அவருடைய உடல் கிடைத்தது. அதற்குப் பின்னாலே திருமங்கலம் அருகில் தோழர்கள் செல்வராஜ், மணி ஆகியோர் 10 நாட்களுக்கு முன்னால் தாக்கப்பட்டிருக்கிறார்கள் அனுப்பினியம் பௌடர் தொழிற்சாலையில். 'விக்' தொழிற்சாலையில் 500 பெண்கள் பணியாற்றுகிறார்கள். அங்கே உள்ளேயே புகுந்து தாக்கியிருக்கிறார்கள். யூனியன் கார்பைடு தொழிற்சாலையிலும் பல தோழர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் இதனைச் சொல்லுவதற்குக் காரணம் பேரவைத் தோழர்கள் தாக்கப்பட்டு வருகிறார்கள் என்பது தான் உண்மை. ஆனால் என்ன நடக்கிறது? தலைவர் அவர்களே, ஒரு நிமிஷம். என்னுடைய 43 ஆண்டு வாழ்க்கையில் எவரையும் அடித்துக் கூடப் பார்க்காத, அந்த சுபாவமே இல்லாத என்னையும், அதே போல்—நான் சார்ந்திருக்கிற கட்சியிருக்கிறதே, அது நாட்டுக்கு எடுத்துக் காட்டாக, உலகத்திற்கு எடுத்துக்காட்டாக, எதையும் தாங்கித் தீரவேண்டும், அதனாலே தான் வளரமுடியும் என்ற முறையில், மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களாலே வளர்க்கப்பட்ட கட்சி, டாக்டர் கலைஞர் அவர்கள் அண்ணா அவர்களுக்குப் பின்னாலே, அண்ணாவை அப்படியே பிரதிபலிப்பது போன்று நல்ல உள்ளத்துடனும், நல்ல பாங்குடனும் எதையும் தாங்குகின்ற வகையில் இருக்கின்ற காரணத்தால்—அக்கட்சியையும் மாற்றார்கள் அவதூறாகக் குற்றம் சொல்லுகிறார்கள். உண்மைக்குப் புறம்பாகக் குற்றம் சாட்டுகிற முறை நடைபெறாமல் தடுப்பதற்கு வழிவகை செய்கின்ற முறையில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். இது முக்கியமான நேரத்தில் வந்திருக்கிறது.

தக்க தருணத்தில் வந்திருக்கிறது. துணிச்சலோடு தைரியம் இருக்கிறவர்கள், குற்றம் சாட்டுகின்றவர்களாக இருந்தாலும், சாட்டப்படுகின்றவர்களாக இருந்தாலும் சரி, மனதிலே பயம் இல்லாமல், இந்தச் சட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மடியில் கனம் இல்லாமல் இருந்தால் வழியில் பயமிருக்கத் தேவையில்லை; எனவே இதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன் வடிவை இந்த அவையில் கொண்டுவருகிறபோது, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், இது எதற்காகக் கொண்டு வரப்படுகிறது என்று சொன்னார்கள். இந்தச் சட்டம் ஒரு தேவையற்ற சட்டம் என்ற முடிவு முன்னாலேயே எங்களால் மேற்கொள்ளப்பட்டது. அது தேவையற்றது மட்டுமல்ல, சட்டமே தவறாக இருக்கிறது என்பது எங்களுடைய கருத்து ஆகும். இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கான காரணங்களைச் சொல்லுகிறபோது, அவர்கள், குறிப்பாக, 1952-ல் இயற்றப்பட்ட 'கமிஷன் ஆப் என்குயரி ஆக்ட்' என்ற மத்திய அரசின் சட்டம் போதாது என்று கருதுகிறோம் என்றார்கள். அந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், அரசாங்கம் கருதினால் அல்லாது யார் மீதும் நடவடிக்கை எடுக்கின்ற வாய்ப்பு இல்லை என்ற நிலையை சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கமாகச் சொன்னார்கள். ஆனால் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தும் கூட அதே நிலை தான். அரசாங்கம் விரும்பினால் அல்லாமல் வேறு வழியில் பொதுப்பணியாற்றுவோர் மீது நடவடிக்கை எடுக்க' இதில் வகை செய்யப்படவில்லை என்பது இந்தச் சட்டத்தைப் பொறுத்து நான் கொண்டுள்ள கருத்தாகும். காரணம் என்னவென்றால் இதிலே உள்ள பிரிவு 18-இன் படி, பொதுவாழ்வில் ஈடுபட்டு, அமைச்சராகவோ, சட்டமன்ற உறுப்பினராகவோ இருக்கின்ற ஒருவர் மீது ஏதாவது ஒரு புகார் தரப்படுமானால், அந்தப் புகாரை இதற்கென்று நியமிக்கப்பட்டுள்ள கமிஷனர் விசாரித்து, அந்தப் புகார் உண்மையானதென்றோ, அல்லது உண்மையற்றது என்றோ முடிவுக்கு வருகிறார். பிறகு என்ன செய்கிறார்கள்? அதை அரசுக்குத் தான் அனுப்பு





கிறார்கள். ஒரு அமைச்சர் மீதோ, முதலமைச்சர் மீதோ, சட்டமன்ற உறுப்பினர் மீதோ தவறு இருக்கிறது, 'பிரைமா பேசி', அடிப்படையில் உண்மையிருக்கிறது என்ற நிலைமை இருந்தால், அதை மறுபடியும் அரசுக்குத்தான் அனுப்புகிற நிலைமை இருக்கிறது. தனிப்பட்டவர் யாராவது கொடுத்த குற்றச்சாட்டு 'பால்ஸ், பிரிவலஸ், வெக்சேசியஸ்' ஆக இருக்குமானால், அவர் நேரடியாகக் கோர்ட் மூலம் விசாரிக்கப்படுகின்ற நிலையை இந்தச் சட்டம் உருவாக்குகிறது. ஆனால், ஒரு அமைச்சர் தவறு செய்துவிட்டால், அந்தத் தவறு அடிப்படையில் நிரூபிக்கப்பட்டாலும் கூட, அந்தத் தவறை நேரடியாக கோர்ட்டுக்கு அனுப்ப முடியாது என்ற நிலைமை இந்தச் சட்டத்தில் இருக்கிறது. 1952-ஆம் வருஷச் சட்டத்தில் அரசாங்கம் நினைத்தாலல்லாமல், ஒருவர் மீது எந்த விதமான குற்றச்சாட்டுக்கும் நடவடிக்கை எடுக்க முடியாது. அதே மாதிரி ஒரு பிரிவை இதிலே வைத்திருக்கிறதைப் பார்க்கும்போது, ஒரு அமைச்சர் மீது தவறு இருக்கிறது, ஒருவர் லஞ்சம் வாங்கினார் என்றால், அந்தப் புகார் கொடுத்த பிறகு, அந்தப் புகாரில் அடிப்படையிருக்கிறது என்ற பிறகும் கூட, அதை அரசுக்கு அனுப்பவேண்டும் என்று 18-வது செக்ஷனில் அவர்கள் போட்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** shall be prosecuted என்று இருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** 18-வது பிரிவு என்ன சொல்லுகிறது என்று விவாதிப்பதற்கு, நான் சட்ட நுணுக்கம் தெரிந்தவன் அல்ல. அதை வாசிக்கிறேன் "Where as a result of any detailed investigation under sub-section (4) of section 10 in respect of a complaint of criminal misconduct against a public man, the Commissioner or an Additional Commissioner is of opinion —that it is expedient in the interest of justice that the public man against whom criminal misconduct has been alleged, should be prosecuted for an offence under section 15". இரண்டுவிதமான கருத்துக்களுக்கு வரமுடியும். ஒன்று, அவர் தவறு செய்தார் என்ற கருத்து. அப்படித் தவறு செய்தவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற ஒரு கருத்தை அவர் சொல்லலாம். "that the allegation has not been substantiated, he shall record a finding to that effect stating his reasons there

for and report the same to the Government ". அவர் தவறு செய்யவில்லை என்ற முடிவுக்கும் வரலாம். அதிக பட்சம் அவர் என்ன செய்ய முடியும்? எப்படியிருந்தாலும் கூட காரண காரியங்களுக்கு ஒரு விரிவான அறிக்கையை அரசாங்கத்திற்கு மறுபடியும் அனுப்ப வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள் அரசாங்கத்திற்கு அனுப்பவேண்டுமென்று போட்ட பிறகு, ஒரு அமைச்சர் மீது ஒரு புகார் வந்து அரசாங்கத்துக்கு அனுப்பினால், அரசுக்கு அந்தப் புகார் வரப்பட்டு, கோர்ட்டுக்கு அனுப்பினால் அல்லாமல் வேறு வழியில்லை என்ற நிலைமை இந்தச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமை இருந்தால், அது எப்படி, பொதுப்பணியாற்றுவோர் மீது யாரேனும் 'கம்பிளையின்ட்' கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கை வரும் என்ற கருத்தை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். 1952-ஆம் வருஷத்திய சட்டத்திற்கும் இதற்கும் மிகுந்த வேறுபாடு இல்லை, மாறுபாடும் இல்லை என்ற அளவில் தான் இந்தச் சட்டம் இருக்கிறது.

அடுத்தபடியாக, நான் குறிப்பிட விரும்புவது, முதலில் இந்தச் சட்டம் வரும்போது என்ன சொன்னார்கள், எதற்காகக் கொண்டு வரப்படுகிறது என்று சொன்னார்கள்? முக்கியமான காரணம், பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் நல்ல நிலைமையில் இருக்க வேண்டும். லஞ்சம் வாங்கக்கூடாது; ஆனால் அப்படிப் பட்டவர்கள் இருந்தால் அவர்களை விசாரிப்பதற்கு தனியாக ஒரு சட்டம் போடவேண்டியிருக்கிறது; அது தான் 'ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ்' என்று முதல் முதலில் சட்டசபைக்கு அனுப்பும் போது சொன்னார்கள். ஆனால் இது சட்டமன்றத்திற்கு வந்த பிறகு, அது ஒரு 'செலக்ட் கமிட்டி'க்குப் போகும்போது, அந்த ஆய்வுக் குழுவில் என்ன சொன்னார்கள்? இன்னொரு காரணத்தைச் சேர்த்தார்கள். அதைச் சட்டமன்றத்தின் முன் வைக்கும்போது என்ன என்ன காரணங்கள் என்பதையெல்லாம் சொல்லியிருந் தால், நல்லது. பொது வாழ்க்கையில் இருப்பவர்கள் நல்ல முறையில் இருக்க வேண்டும், லஞ்சப் புகார்கள் வந்தால் சரியான முறையில் விசாரிக்கப்பட வேண்டும். இப்போது இருக்கின்ற சட்டம் சரியானதாக இல்லை என்பதற்காகத் தான் வேறு ஒரு சட்டம் கொண்டுவருகிறோம் என்று முதலில் சொல்லிவிட்டு,



அதற்குப் பிறகு தவறான புகார்கள் கொடுத்தால், போலியான புகார்கள் கொடுத்தால், அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று இரண்டாவது 'ஆப்ஜெக்ட்டை' செலக்ட் கமிட்டியில் கொண்டு வந்து சேர்த்தார்கள். நாங்கள் இதை முன்பே எதிர்பார்த்தோம். இரண்டாவதாகச் சொன்ன காரணத்திற்காகத் தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்ற அபிப்பிராயம் முதலிலேயே எனக்கு உண்டு. அந்தக் காரணத்தினால் தான் வெளிநடப்புக் கூடச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அரசியலிலே இருப்பவர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது போலியான புகார், தவறான புகார் கொடுப்பார்களானால், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தான். ஆனால் அதே சமயத்தில் யார் மீது புகார் கொடுக்கிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். மிகவும் உன்னதமான, மிகவும் முக்கியமான, அதிகாரத்தில் இருக்கக் கூடியவர்கள், பதவியில் இருப்பவர்கள் மீது ஒரு புகார் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், சாதாரண குடிமகனாக இருப்பவனுக்கு, புகார் கொடுக்கின்றவனுக்கு வேண்டிய பாதுகாப்புக் கொடுக்கப்பட வேண்டும். அது முக்கியம். இல்லாவிட்டால் புகாரே வராத ஒரு நிலைமை கூட ஏற்படும். சட்ட சபையிலே உறுப்பினர்களாக இருப்பவர்கள் இந்தச் சட்ட மன்றத்திலே பேசுகிறபோது, ஆதாரத்தோடு தான் பேச வேண்டுமென்றால் சட்ட மன்றத்திலே யாரும் பேச முடியாத முடியாத நிலைமை ஏற்பட்டு விடக்கூடும். அந்தக் காரணத்தினாலே தான். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதும் ஆதாரமில்லாமல் அவதூறான குற்றச்சாட்டுக்களை பேரவையிலோ, அல்லது இந்த மன்றத்திலோ எங்கும் சொல்ல முடியாது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** சட்ட மன்றத்திலே பேசுகிற பேச்சின் மீது எந்த விதமான நடவடிக்கையோ, எந்த விதமான வழக்கோ கோர்ட்டுகளிலே எடுக்கப்பட முடியாது என்ற பாதுகாப்பு நம்முடைய அரசியல் சட்டத்திலே தெளிவான வகையிலே சட்ட மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் கூடச் சொல்லுவேன் சட்ட மன்ற உறுப்பினர்களுக்காக ரூல்ஸ் கூடப்போடலாம். ஆனால் வெளியிலே வழக்குகள் போட முடியாது. என்ன காரணம்? பேச்சுரிமை காப்பாற்றப்பட

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 ஏப்ரல் 5

வேண்டும். அதிகாரத்தில் இருப்பவர்கள் மீது ஒரு புகார் சொல்லுவது என்றால் அதை நிரூபித்தால் தான் சாத்தியமாகும் என்ற நிலைமை இருக்குமானால், யாரும் புகார் செய்ய அச்சப் படுவார்கள் என்ற காரணத்தினாலே தகுந்த ஒரு பாதுகாப்பு . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேச்சுரிமை காப்பாற்றப் படவேண்டுமென்பதிலே இரு வேறு கருத்திற்கு இடமில்லை. ஆனால் அந்த உரிமை கண்ணியத்தோடு காப்பாற்றப்பட வேண்டுமா, வேண்டாமா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** கண்ணியத்தோடு காப்பாற்றப்பட வேண்டும் என்பதை நான் முழு மனதோடு ஒப்புக்கொள்கிறேன். அதே சமயத்தில் புகார் கொடுப்பவர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் நன்கு அறிவார்கள். ஏனென்றால். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதே போலத் தான் பொறுப்பிலே இருக்கின்றவர்களுக்கும் தகுந்த பாதுகாப்பு இருக்க வேண்டும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இதைப்பற்றி நான் ஆட்சேபிக்க வில்லை. ஏனென்றால் அமைச்சர்களாக இருக்கின்றவர்களுக்கு சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கின்றவர்களுக்கு அது மாதிரியான நிலைமைகள் ஏற்படுகின்றன. அது மாதிரி நிலைமைகள் ஏற்படும்போது, அவர்களுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். புகார்கள், அவதூறான புகார்களாகவோ, தவறான புகார்களாகவோ இருக்குமானால், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் தான். ஆனால் தண்டிக்கப்பட வேண்டுமென்கிற ஒரு நிலைமை வருகிற போது, அதிக தண்டனையாக இருக்குமானால், தண்டிக்கப் படுவோம் என்ற பயத்தினாலேயே அவர்கள் புகார் எதுவும் சொல்லாமல் இருப்பார்களேயானால் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** புகார்கள் கொடுப் பவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமா, வேண்டாமா என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். புகார் பட்டியலைக் கொடுத்தார்கள். டில்லிக்குக் கொண்டுபோய் கொடுத்தார்களே அந்தப் புகார் பட்டியலில் காணப்படுகிறது நாம் "மெட்ராஸ்



1973 ஏப்ரல் 5] [டாக்டர் மு. கருணாநிதி]

டெனண்ட் ப்ரொடக்‌ஷன் ஆக்ட்" என்ற 1921-ம் ஆண்டு ஆக்டிற்கு 1972-ம் ஆண்டு ஒரு திருத்தம் கொண்டுவந்தோம். அந்தத் திருத்தத்தை சில பணக்காரர்களுடைய நன்மைக்காக இந்த அரசாங்கம் கொண்டு வந்தது என்று திரு. எம். ஜி. இராமச் சந்திரனும், வேறு சில கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் சொன்னார்கள். ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் கூட இதே கருத்தைக் கூறினார்கள். ஆனால் புகாரிலே எம். ஜி. இராமச்சந்திரனும், மற்றவர்களும் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்களும் கையெழுத்துப் போட்டிருந்தார்கள். இப்படிப் பணக்காரர்களுக்குச் சாதகமாக இந்தச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு. வேடிக்கை என்னவென்றால் உயர் நீதிமன்றத்தில் அந்தத் திருத்தம் தள்ளுபடி செய்யப்பட்டது. அதிலே சில லூப் ஹோல்ஸ் இருந்தன. ஆதலால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. இது பணக்காரர்களுக்குச் சாதகமாகத் திருத்தம் செய்யப்பட்டது என்று டில்லியிலே ஜனாதிபதியிடத்திலே யார் கொண்டு போய் புகார் கொடுத்தார்களோ, அதே முக்கியஸ்தர்கள், அவர்களுடைய கட்சியினர் திரு. கே. டி. கே. தங்கமணி, திருமதி அனந்தநாயகி அவர்கள், திரு. எம். ஜி. ராமச்சந்திரனுடைய கட்சியைச் சேர்ந்த திரு. வேலப்பன் என்கிற எம்.எல்.ஏ., பழைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. ஆகியவர்கள் கடந்த 10 நாட் களுக்குள்ளாக, கடிதம் எழுதி, அந்தத் திருத்தம் கோர்ட்டிலே அடிபட்டுப் போய்விட்டது, ஆகவே ஏழை மக்களுடைய நன்மைக்காக அந்தத் திருத்தத்தை மறுபடியும் செய்ய வேண்டு மென்று கேட்டார்கள். இன்று காலையிலே அந்தத் திருத்தம் நிறைவேறியிருக்கிறது. ஆகையினாலே புகார் கொடுப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இப்படிப்பட்டவர்களெல்லாம் பொறுப்பிலே இருக்கின்றவர்கள் மீது புகார் கொடுத்து விட்டு, புழுதி வாரித் தூற்றிவிட்டு, எந்த மேடையிலும், "நாங்கள் புகார் கொடுத்திருக்கிறோம், மர்மப் பேழையிலே எல்லாம் அடங்கி இருக்கிறது, விசாரணை வைக்க வேண்டும்" என்று சொல்லிக்கொண்டேயிருந்தால், ஒரு அரசாங் கத்திலே, பொறுப்பிலே இருந்து 4½ கோடி மக்களுடைய பயனுக் காகவும், நன்மைக்காகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் மீது களங்கங்கள், மாசுகள் சுமத்தப்படுமேயானால், அந்த அரசாங்

கத்திலே இருக்கின்றவர்கள், இந்த நாட்டு மக்களை நடத்திச் செல்கிற நேரத்தில் ஒவ்வொரு அங்குலமும் சந்தேகத்திற்குரியதாக ஆகிவிடும். ஆகவே புகார் சுமத்தப்படுகிறவர்கள சந்தேகத்திற்குரியவர்களாக இல்லை, புகாரைக் கொண்டு போய்க் கொடுக்கின்றவர்கள் தான் சந்தேகத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள என்பதற்காக நான் இதனை ஒரு எடுத்துக்காட்டாக வைக்கிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அரசியலிலே இருப்பவர்கள் புகார்களைக் கொண்டு போய்க் கொடுக்கலாம். எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள் சேர்ந்து புகார்களைக் கொண்டு போய்க் கொடுக்கலாம். சில சமயங்களிலே வெளியிலே இருப்பவர்கள், "இன்னசெண்ட்" ஆக ஏதாவது ஒரு நிலைமைக்குத் தகுந்தபடி புகாரைக் கொண்டுபோய்க் கொடுக்கலாம். வேறு எந்த விதமான கட்சி சார்பாகவோ, வேறு காரணங்களுக்காகவோ இல்லாமல் தனிப்பட்ட முறையில் கொடுக்கலாம். இந்தச் சட்டம் நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னது போல இன்றைய ஆட்சிக்காக மட்டும் கொண்டுவரப்படவில்லை. இனிமேல் வரக் கூடிய ஆட்சிக்காகவும், இன்னும் பல ஆண்டுகளுக்கு இருக்கக் கூடிய ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தின்கீழ் சாதாரணமான ஒரு குடிமகன் ஒரு புகாரைக் கொடுப்பதற்குத் தடங்கல் இல்லாமல் இருக்க வேண்டும் என்பதைத் தான் என்னுடைய வாதமாக இந்தச் சட்டத்திலே வைத்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

புகார் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுமானால், அவர்கள் ஒரு பய உணர்ச்சி காரணமாக அந்தப் புகாரைக் கொடுக்காமலிருக்கக் கூடிய நிலைமைகள் ஏற்படுத்தப்படும் என்பது தான் என்னுடைய கருத்தாகும். இப்படி ஒருவர் ஒரு புகார் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டால், அவருக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. பொது வாழ்விலே ஈடுபட்டவர்கள் குற்றம் செய்தவர்கள் என்று கருதப்படுவார்களானால் அவர்களுக்கு ஒரு தண்டனை கொடுத்திருக்கிறோம். என்ன தண்டனை? ஏழு ஆண்டுகள் தண்டிக்கப்படுவார்கள். அதேபோல புகார் கொடுத்தவர்களுக்கும் ஒரு தண்டனை கொடுத்திருக்கிறோம். அவர்களுக்கு



வேறு விதமான தண்டனையை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். பிரிவு 11-ன் படி அவருக்கு பைன் போடலாம் என்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறோம். பைன் எவ்வளவு போடலாம் என்று இந்தியன் பீனல் கோடில் சொல்லியிருக்கிறார்கள். கிரிமினல் புரோஸீஜர் கோடிலே சொல்லியிருக்கிறார்கள், சிவில் புரோஸீஜர் கோடிலே அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பொய்ப் புகார் கொடுத்தவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வரையில் 'பைன்' போடலாம் என்று அதிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறோம்? அப்படி அவருக்கு ஒரு 'பைன்' போட வேண்டுமானால், எவ்வளவு வேண்டுமானாலும் 'பைன்' போடலாம் என்று நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். யாராவது ஒருவர் புகார் கொடுக்கும்பொழுது, அந்தப் புகாரிலே உண்மையாக நடந்ததைக் கூடக் கொடுத்திருக்கலாம். இந்தியன் பீனல் கோடிலும், மற்ற சட்டங்களிலும் இதைப் பற்றி நன்றாகப் போட்டிருக்கிறார்கள். இதிலே விதி விலக்கெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அவர்கள் என்ன சொன்னார்கள் with an intention to cause injury கொடுக்கப்பட்ட அந்தப் புகார் அவர்களுக்கு ஒரு காயத்தை உண்டு பண்ணக் கூடிய அளவிலே with an intention to cause injury and also it should be a false charge without just or reasonable cause. என்று அதிலே போட்டார்கள். இப்படி அதற்கு அவர்கள் அன்றைக்கு ஒரு டெபனிஷனைக் கொடுத்தார்கள். ஆனால் நம்முடைய சட்டத்திலே, அதிலே இருந்ததையெல்லாம் எடுத்துவிட்டு, அவர்களால் கொடுக்கப்பட்ட புகார் அவதூறாகக் கருதப்படுமானால், அவர்களுக்குத் தண்டனை கொடுக்கலாம், அந்தத் தண்டனை 'பைன்' ஆக இருக்கலாம்; அந்த பைன் எவ்வளவு என்று சொன்னால், எவ்வளவு வேண்டுமானாலும் 'பைன்' போடலாம் என்று வைத்திருக்கிறோம். எவ்வளவு வேண்டுமானாலும் என்று சொன்னால் லட்ச ரூபாய் கூடப் போடலாம். இரண்டு ஜட்ஜ்களிடம் போகலாம் என்று வைத்திருக்கிறீர்கள் என்றாலும் கூட நேரிடையாக அவர்களை அழைத்து விசாரிப்பதற்குக் கூட வழி இல்லாது, "நேசுரல் ஜஸ்டிஸ்" கூட இல்லாமல் இந்தக் கிளாசின் படி பைன் போடலாம்.

அதிலே இரண்டு சட்டங்கள் இருக்கின்றன. ஒரு சட்டத்தின் வாயிலாகப் போனால் ஆயிரம் ரூபாய் தான் பைன். இந்தச்

சட்டத்தினுடைய வாயிலாகப் போனல் அதற்கு 10 ஆயிரம், ஒரு லட்சம். ஒரே குற்றத்திற்கு இரு சட்டங்களின்கீழ் இரு விதமான நடவடிக்கை அல்லது பெனல்டி எப்படி வைத்துக்கொள்ள முடியுமென்ற கருத்தும் எனக்குப் புரியாத ஒன்றுகும். எனவே இது அளவிற்கு அதிகமான ஒரு முறை . . .

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The hon. Member may kindly read the provision. It has not provided for unlimited compensation. It says 'damages' by way of compensation. The damages will be limited to the injury caused and the compensation will be reasonable. The Courts will decide that.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, இந்தியன் பீனல் கோடிலே ஆயிரம் ரூபாய் என்று வரையறுத்திருக்கிறது. அது "பைன்" ஆக இருக்கலாம், காம்பன்சேஷனாக இருக்கலாம், நஷ்டஈடாகவும் இருக்கலாம். எதுவாக இருந்தாலும் பணம் கொடுப்பது அவர்கள். கொடுப்பதை வாங்குவது இன்னொருவர். அவர் எவ்வளவு கொடுப்பது என்ற வார்த்தையைப்பற்றிப் பிரச்சினையில்லை; எவ்வளவு கொடுப்பது என்பதற்கு ஒரு முறை இருக்க வேண்டும் என்று . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்போதே இந்தச் சட்டம் இல்லாமலே பார்ப்போம். 10 லட்ச ரூபாய், 5 லட்ச ரூபாய், 20 லட்ச ரூபாய் என்று மான நஷ்ட வழக்குப் போடுகிறோம். ஆனல் கோர்ட்டிலே அப்படியே 10 லட்சமோ, 20 லட்சமோ, அப்படியே கட்டு என்று தீர்ப்பு வழங்குவதில்லை. சில நேரங்களில் 1 ரூபாய் பைன், ஒரு ரூபாய் மான நஷ்டம் என்று கூடப் போடுகிறார்கள்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** அது தனிப்பட்ட முறையிலே செய்வது. யார் அந்தப் புகாரைக் கொடுக்கிறார்களோ அவர்கள் இவ்வளவு நஷ்டஈட்டுக்கு தகுதியானவர்கள் என்ற அளவிலே போடுகிறார்கள். அதைப்பற்றி நான் பேசவில்லை. ஆனல் தனிப்பட்ட முறையிலே இந்தியன் பீனல் கோடிலே 'பைன்' என்று போடவில்லை. நம்முடைய சட்டத்திலே 'பைன்' என்று இருக்கிறதைப் பார்க்கிறபோது, அதை நீர் ஆராய்ந்து எழுதினைல் அது மாதிரி ஒரு பிரிவை வைத்திருக்கிறார்கள்.





திலே வைத்திருப்பதைப் பார்க்கிறபோது, அப்படி எவரும் புகார் கொடுக்காமல் போய்விட வேண்டுமென்ற பய உணர்ச்சியை. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொல்கிற யோசனையை ஏற்றுச் சில திருத்தங்களைச் செய்தால் ஒப்புக்கொள்கிறாரா?

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, நேற்றைய தினம் நான் பல திருத்தங்களைக் கொடுத்தேன். அமைச்சரவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. ஆகவே இன்றையதினம் ஒப்புக்கொள்வார் என்ற நம்பிக்கையில்லை. ஆங்கிலத்திலே சொல்வார்கள் hypothetical questions என்று. இதைப் போன்ற கேள்விக்கு நான் விடை அளிக்க வேண்டுமா என்பதை நீங்களே யோசிக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன். இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். செக்ஷன் 18-லே ஒரு குறை இருப்பதாகக் கூட நான் கருதுகிறேன். அமைச்சரவர்கள் இதைக் கொஞ்சம் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செக்ஷன் 15-லே அவர்கள் என்ன சொன்னர்கள்? பொது வாழ்விலே இருப்பவர்கள் குற்றம் செய்தால் ஏழு ஆண்டுகள் தண்டனை என்று போட்டார்கள். அதற்கு 'கிரிமினல் லா'-ல் 'அமென்ட்மெண்ட்' கொடுத்து மாறுதலைச் செய்துவிட்டார்கள். ஆனல் 16-வது செக்ஷனில், எந்த விதமான தண்டனையைக் கொடுப்பது என்பதற்காக ஒரு திருத்தமும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே தப்பித்துக்கொள்ள அது வாய்ப்பாக இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அதுபற்றி ஆராய வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. சந்தானம் கமிட்டியில் இன்னொன்றையும் சொன்னர்கள். 'பிரைமா பாசி கம்ப்ளெயின்ட்' என்ற அளவிலே ஒன்று வருமானல், பதவியில் உள்ள அமைச்சர்கள், அந்தப் பதவியைத் துறக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னர்கள். ஒரு அமைச்சர் மீது, இதுபோல ஒரு அடிப்படையான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, வழக்குப் போடலாம் என்றும், அவருக்குத் தண்டனை கொடுக்கலாமென்றும் அரசாங்கத்திற்குப்

பரிந்துரை செய்கிறபோது, அவர் இன்னும் அமைச்சராக அந்த அரசாங்கத்தில் இருந்துகொண்டிருந்தால், அவர் மீது நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை ஏற்படுமென்ற கருத்தையும் திரு. சந்தானம் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தைக்கூடச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அடிப்படையாக ஒரு குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டால், அவர் அமைச்சர் பதவியைத் துறக்க வேண்டுமென்ற கருத்து இந்தச் சட்டத்திலே அமைந்திருக்குமானால், அது நல்லதென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். " Limitation Clause " என்று இன்றொன்றை வைத்திருக்கிறார்கள (Section 8). இதில் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ஒரு அமைச்சர் மீதோ அல்லது முன்னாள் அமைச்சர் மீதோ ஒரு புகார் கொடுக்கும் நிலைமையிருந்தால், அது ஒரு ஆண்டுக் காலத்திற்குள் கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு கட்சியினுடைய அரசாங்கம் 10 ஆண்டுகள் இருக்கலாம். இரண்டு Term அவர்கள் அரசாங்கத்திலே இருக்கலாம். 9 வருஷங்கள் அங்கேயிருக்கிற அமைச்சர்கள், உறுப்பினர்கள் எல்லாம் லஞ்சம் வாங்கிக் கொண்டு, கடைசி ஒரு வருடத்தில் நல்ல முறையில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தால், வருகிற அரசாங்கம் அல்லது யாரும் எந்தவிதமான நடவடிக்கையும் அவர்கள்மீது எடுக்க முடியாது. அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டுவிடக்கூடும். எனவே, " Criminal Complaint " என்கின்ற அளவிலே, அதற்கு Time limit இருக்கக் கூடாதென்பது என்னுடைய கருத்தாகும். அதுபோன்று எதிலுமே இல்லை. ஒரே ஒரு செக்ஷனில் அப்படியிருக்கிறது. அதிலே, ' President ' ஆக இருப்பவர்கள், ' Vice-President ' ஆக இருப்பவர்கள், ' Minister ' ஆக இருப்பவர்கள் இன்னொருவர் பேரில் ஒரு புகார் கொடுத்தால், அது 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டுமென்று இருக்கிறதே தவிர, வேறு ஒன்றும் அப்படி இல்லை. எனவே இப்படி ஒரு ஆண்டுக் காலத்திற்குள் இருக்க வேண்டுமென்று போட்டால், நிச்சயமாக அது சரிவராது. அதையும் மாற்ற வேண்டுமென்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



செக்ஷன் 25-லே, " Sue Motu Reference " என்று வைத்திருக்கிறார்கள். யாராவது ஒருவர் எங்கேயோ பேசி, அது பத்திரிகையில் வந்திருக்கிறதென்ற தகவல் தெரிந்தால், அரசாங்கம் அதைக் கமிஷனுக்கு அனுப்பலாம். உடனே கமிஷனர் அதை ஆராய்ந்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கும் வழிமுறைகளை வைத்திருக்கிறார்கள். தனிப்பட்ட குடிமகனுக்கு அதிலே எந்தவிதமான protection உம் கொடுக்கப்படவில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முடிவாக, நான் முதலிலேயே சொன்னதைப்போல, இது சரியான சட்டமல்ல, தவறான சட்டம். அதுமட்டுமல்ல, இந்தச் சட்டமே தேவையில்லாதது என்ற கருத்தை மீண்டும் வலியுறுத்தி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, பொதுப் பணியாற்றுவோர் குற்ற நடத்தை பற்றிய இந்தச் சட்டம் தேவையற்றதென்று கூறி, எதிர்க்கிறேன். தேவையற்றது என்பதோடு, இது இந்தச் சந்தர்ப்பத்தில் நிச்சயமாகத் தேவையற்றதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டத்திலே இருக்கக்கூடிய பிரிவுகள், உட் பிரிவுகள், இவற்றில் இருக்கக்கூடிய நல்லது, கெட்டதுகளையெல்லாம் ஆராய்ந்து பேசினார்கள். நான் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. இந்தச் சட்டமே தேவையற்றதென்று சொல்கிறபோது, அதனுள்ளே எதை எழுதிக்கொண்டு வந்து, 'பாஸ்' செய்தாலும், எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. சட்டமே தேவையற்றதென்று சொன்ன பிறகு, 16-வது பிரிவில் எந்தத் திருத்தம் பண்ணினால் என்ன, 17-வது பிரிவில் எதைச் செய்தால் என்ன? இந்தச் சட்டமே தேவையில்லையென்று நான் கருதுகிறேன்.

லஞ்சத்தையும், ஊழலையும், பொது வாழ்விலிருந்து மட்டுமல்ல, தேசத்திலிருந்தே கெல்லியெறிவதற்காக, திரு. சந்தானம் அவர்களுடைய தலைமையில் ஒரு குழுவை அமைத்தார்கள். அந்தக் குழுவிலே, சாட்சியம் சொல்வதற்காகப் பல்வேறு ஸ்தாபனங்களும் அழைக்கப்பட்டன. அதிலே Indian Chamber of Commerce —இந்திய வணிகர் கழகமும்

அழைக்கப்பட்டது. இந்தக் கழகம், அந்தக் கமிஷன் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வரையில் அந்தப் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை; போய் சாட்சியம் சொல்லவில்லை. இதைப் பற்றி சந்தானம் குழுவின் அறிக்கையில் விவரமாக எழுதி யிருக்கிறார்கள்.

இந்த வணிகர் கழகத்தில் யார் இருக்கிறார்களென்றால், இந்த நாட்டில் ஊரில் இருக்கிற பெரிய முதலாளிகள்— vested interests என்று சொல்லக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த லஞ்சத்தை உருவாக்கிவிடுபவர்கள். பிறகு அவர்கள் எங்கேயிருந்து இதற்கு சாட்சியம் சொல்ல வருவார்கள்? இந்த விஷயமே அவர்கள் உருவாக்கியதுதான். லஞ்சம், ஊழல் இவைகளைப் பெரிதுபடுத்தி, இதற்கு விளம்பரம் கொடுப்பது முதலாளித்துவப் பத்திரிகைகள் தான். அவர்கள் அரசியல் வாதிகளைக் கேவலப்படுத்த வேண்டுமென்று ரொம்பவும் அக்கறை கொண்டிருக்கிறார்கள். எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு அக்கறையில்லை. திருமதி இந்திரா காந்தி என்றாலும் சரி, அல்லது திரு. சுவாமிநாதன் என்றாலும் சரி, எப்படியாவது அவர்களுக்கு இடைஞ்சல் வருகிறபோது, உடனடியாகத் தாக்குவதற்கு இதை உபயோகப்படுத்துகிறார்கள். ஊழல் முறையைப் பயன்படுத்துபவர்களும் இவர்கள்தான். சாதாரண பாமர மகன் லஞ்சம் கொடுப்பது கிடையாது. லஞ்சமும், ஊழலும் பண்ணுவதற்கு அவர்களுக்கு சக்தியும், திறமையும் கிடையாது. அதைக் கொடுப்பதற்கான தொழிலும் அவர்களுக்குக் கிடையாது. எனவே, இதனுடைய அடிப்படை எங்கே இருக்கிறதென்று சொன்னால், முதலாளித்துவ சமுதாயத்தில் இருக்கக்கூடிய மிகப் பெரிய ஓட்டையாகும் அது. அது நம்முடைய முதலாளித்துவ சமுதாயத்தில் இருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய பலகீனம் என்று சொல்வேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know to which Chamber of Commerce Thiru M. Kalyanasundaram, M.P. belongs?

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, Chamber of Commerce-லிருந்து சாட்சியம் சொல்ல வரவில்லையென்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்



பார்த்தால், இந்தக் குற்றத்தையே யாரும் சொல்லக்கூடாதென்று சொல்கிறாரென்று நினைக்கிறேன். நான் அதைச் சொல்லவில்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: திரு. கல்யாண சுந்தரம் அங்கே இருக்கிறாரா?

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, இதில் திரு. கல்யாண சுந்தரத்தை இணைப்பதற்கு என்ன இருக்கிறது? நிச்சயமாக ஒரு கம்யூனிஸ்ட், வர்த்தக சபையில் மெம்பராக இருப்பது சாத்தியமில்லை. இது சாதாரண அரசியல்வாதிக்குக்கூடத் தெரியும்.

THIRU A. R. DAMODARAN: That is the reason why I asked. He said that the entire corruption propaganda in our country can be traced to vested interests who are members of the Chambers of Commerce. Thiru M. Kalyanasundaram, M.P. has given a complaint to the President of India about the Tamil Nadu Ministry. Does Thiru Kalyanasundaram belong to these vested interests or is he a member of the Chamber of Commerce?

திரு. எம். ஆறுமுகசாமி: தலைவரவர்களே, நான் சொல்லுவது, மிகப் பெரிய முதலாளித்துவ சபை, லஞ்ச ஒழிப்பு சம்பந்தமான விசாரணைக்கு சாட்சியம் கூறுமாறு பல முறை அழைக்கப்பட்ட போது, வரவில்லை என்பதுதான். ஏனென்று சொன்னால் அந்த லஞ்ச ஊழலை உற்பத்தி செய்வதில் முதலாளிகளுக்குப் பெரிய பங்கு இருக்கிறது. எனவே அவர்கள் சாட்சியம் கூற வரமாட்டேனென்று சொன்னார்கள். திரு. கல்யாணசுந்தரம் ஒரு புகாரைக் கொடுத்ததாலேயே, அவர் vested interest ஆகிவிடுகிறார் என்றோ அல்லது Vested interests ஆக இருப்பதால்தான் அவர் ஒரு புகாரைக் கொடுக்கிறார் என்றோ பொருள் கொள்வது தவறாகும். நான் சொல்வதெல்லாம், இந்த லஞ்ச ஊழலுக்கு அடிப்படையாக இருப்பது நம்முடைய சமுதாய அமைப்பு. இந்தச் சமுதாய அமைப்பிற்குள், இந்தச் சட்டமல்ல, இன்னும் நூறு சட்டங்கள் போட்டாலும்கூட, ஊழலைத் தடுக்க முடியாது. இந்தச் சட்டங்களுக்குள் புகுந்து கொள்ளும் திறமை பலருக்கு உண்டு. எல்லோருக்கும் வேகம் வருகிறது. பொது வாழ்வில் பணி புரிகிறவர்களாகிய நாம்

அப்பழுக்கற்ற, புனிதமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்காக, ஒரு மேம்பாடான சமுதாய வாழ்வை, பிற மக்களுக்கு அளிப்பதற்காக மேற்கொண்டுள்ள பணிகளுக்காக, நம் மீது புகார் சொல்லப்படுகிறபோது, நம்மைப் புனிதப்படுத்திக்கொள்ள முயற்சிக்கிறோம் என்று சொல்லப்பட்டது. இந்த லஞ்சத்தை உருவாக்குவதில் அரசியல் கட்சிகளுக்கோ அல்லது அரசியல்வாதிகளுக்கோ அல்லது பொது வாழ்வில் இருப்பவர்களுக்கோ பொறுப்பு இல்லை. இதற்கு அடிப்படை, பிறப்பிடம் வேறு ஒரு இடத்தில் இருக்கிறதென்பதற்காக இதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** Chamber of Commerce என்பது ஒரு Institution அதிலே எல்லோரும் இப்படித்தான் என்று சொல்கிறீர்களா? Chamber of

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, chamber of Commerce என்பது ஒரு Institution தான். அதில் இருப்பவர்கள் பெரும்பாலும் இப்படிப்பட்ட முதலாளிகள்தான். அது முதலாளிகள் சபை. இந்தச் சபை சாட்சியம் கூற வரவில்லையென்று, திரு. சந்தானம் கமிட்டியார் தெளிவாக எழுதியிருக்கிறார்கள். திரு. சந்தானம் குழுவினுடைய அறிக்கையிலே "நாங்கள் எங்களுடைய அறிக்கையை finalise பண்ணும் வரை இந்தக் கழகத்தினுடைய சாட்சியத்தை எதிர்பார்த்தோம். அவர்கள் வந்து சாட்சியம் சொல்ல மறுத்துவிட்டார்கள். அவர்கள் அவசியமாகச் சாட்சி சொல்ல வேண்டியவர்கள். பல்வேறு தொழில்களை, பெர்மிட்டுகளை வைத்திருப்பவர்கள். அவர்கள் வந்து சாட்சியம் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்த்தோம். அவர்கள் வரவில்லை" என்று எழுதப்பட்டிருக்கிறது. எனவே, இது என்னுடைய கருத்தல்ல.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** சந்தானம் கமிட்டி சொல்வதையெல்லாம் இந்தக் கழகம் ஒத்துக்கொண்டிருக்கும். அதனால் வராமல் இருந்திருக்கலாம்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, அதற்காக வராமல் இருந்தார்களா என்று எனக்குத் தெரியாது. லஞ்ச ஒழிப்பு சம்பந்தமாக சாட்சியம் சொல்ல இந்தச் சபை வரவில்லை. அதனுடைய கருத்தைத் தெரிவிப்பதற்காக வரவில்லை. அதைத்தான்



நான் சொல்கிறேன். பால் நிறம் கறுப்பு என்று சொல்லலாம். அதையும் சொல்வதற்கு அவர்கள் வரவில்லை. நேரில் வர evade பண்ணினார்கள் என்பதற்காகச் சொல்ல வருகிறேன். அந்தக் குழுவிலே வல்லுனர்கள் இருந்தார்கள். தோழர் திரு. நாத்பாய் அவர்கள் கூட அந்தக் குழுவிலே இருந்தார்கள். அந்தக் குழுவினுடைய அறிக்கையின் முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரையிலும் நான் பலமுறை படித்துப் பார்த்திருக்கின்றேன். அதிலே இதற்கு அடிப்படை எங்கேயிருக்கிறது என்பதை ஏறத்தாழ அவர்கள் நேரடியாகச் சொல்லாவிட்டாலும்கூட, மறை பொருளாகச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே அதற்காகச் சொல்கின்றேன். இப்படிச் சட்டங்களைப் போடுவதற்கு பதிலாக அடிப்படையை—இது வேறு ஒரு இடத்தில் உள்ளது. அதனை—இந்தச் சமுதாய அமைப்பை மாற்றுவதற்கு, அந்தச் சமுதாயம் சிருஷ்டித்திருக்கக் கூடிய ஊழல்களை அழிப்பதற்கு நாம் முயற்சிக்க வேண்டுமென்று சொல்வதற்காக நான் இதைச் சொன்னேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** சந்தானம் குழுவின் அறிக்கையை மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஏற்றுக் கொள்கின்றார்களா?

**திரு. எம். ஆறுமுகசாமி :** நான் முழுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும்கூட, அதிலே முக்கால்வாசியை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படியானால் சந்தானம் குழுவினுடைய பரிந்துரையிலே ஒன்றுதான் 'லோக் ஆயுத்' சட்டம். அதை ஏற்றுக்கொள்கிறீர்களா?

**திரு. எம். ஆறுமுகசாமி :** 'லோக் ஆயுத்' சட்டத்தையும் ஏற்றுக்கொள்கிறேன். 'லோக் பால்' வரவேண்டுமென்பதையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** 'லோக் ஆயுக்' சட்டத்தைவிட கொஞ்சம் முற்போக்கானது, இப்போது நாங்கள் இங்கே நிறைவேற்றுகின்ற சட்டம். அதை ஏன் மறுக்கின்றீர்கள்?

**திரு. எம். ஆறுமுகசாமி :** அதைத் தான் இந்த நேரம் நாம் நிறைவேற்றக்கூடாது என்று சொல்கின்றேன். இந்தச் சட்டத்தை நாம் இப்போது நிறைவேற்றக்கூடாது என்று மீண்டும் சொல்லிக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போது என்ன ராகு காலமா, குளிகை காலமா?

**திரு. எம். ஆறுமுகசாமி :** ராகு காலம், குளிகை காலம் என்று சொல்கின்ற காலங்களில் எல்லாம் எனக்கு நம்பிக்கை கிடையாது. நம்பிக்கை வைத்திருப்பவர்கள் கேட்க வேண்டிய கேள்வி அது. முதல்வர் அவர்களுக்கும்கூட அதிலே நம்பிக்கை கிடையாது. நகைச் சுவைக்காகக் கேட்டிருப்பார்கள் என்று நான் நினைக்கின்றேன். நான் சொல்வதெல்லாம் . . .

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் :** ராகு காலம், குளிகை காலம் மட்டுமல்ல, எம கண்டமாகவும் இருக்கலாம்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** பக்கத்து மாநிலத்தில் உள்ள ஊழல்களை அகற்ற வேண்டுமென்று இங்கே பேசப்படுகிற காலம் இது, ஆம் அவர்கள் சொல்கிறார்கள். ஆளுங்கட்சி— அப்படிச் சொன்னால் தவறாகப் போய்விடும். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி. . . . .

**ஒரு மாண்புமிகு உறுப்பினர் :** 'இந்திரா காங்கிரஸ்' என்று சொல்லுங்கள்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** No, no நான் அதை ஏற்றுக் கொள்ளமாட்டேன். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியார் மீதும் யாரிடத்தும் புகார் மனு கொடுக்கவில்லை, அதிகார பூர்வமாக இன்றைய தினத்தில் அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தார்களானால்கூட அதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆனால் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியை சார்ந்த தலைவர்கள் ஒரு விசாரணைக் கமிஷன் போட வேண்டுமென்று கேட்டவர்களை ஏற்கெனவே ஆதரித்திருக்கிறார்கள். அவர்கள் இதை ஒத்துக்கொள்கிறார்களா? இவர்கள் கொடுத்திருக்கக் கூடிய குற்றச்சாட்டுக்களை அவர்கள்



ஏற்றுக்கொள்கிறார்களா என்பது இல்லை. முதலமைச்சர் அவர்கள் என்ன கருத்தில் சொன்னாரோ? யாரோ ஒருவர் பெயரைச் சொன்னார்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் சொன்னது புகார் கொடுத்திருக்கிறார்களே அந்தப் பட்டியலில், "1921 ஆம் ஆண்டு 'மெட்ராஸ் டெனன்ட்ஸ் ஆக்ட்' என்று இருக்கிறதே அது 1972 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது, அது ஒரு பெரிய தவறு, பணக்காரர்களுக்காகச் செய்யப்பட்ட காரியம் அது" என்று புகார் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு விசாரணை வைக்க வேண்டுமென்று, தமிழ் நாட்டிலுள்ள ஆளும் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. ராமய்யா உட்பட அத்தனை பேர்களும், பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இது பணக்காரர்களுக்காகச் செய்யப்பட்ட சட்டத் திருத்தம் என்று சொல்லி அதை விசாரணை செய்ய வேண்டுமென்று பரிந்துரை எழுதிக்கொடுத்தவர்களில் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள் என்றுதான் குறிப்பிட்டேன்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** நான் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவன். இந்த குற்றச்சாட்டுகள் ஜனாதிபதியிடத்திலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த குற்றச்சாட்டுகளுக்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்று சொன்னால் நாங்கள் யாரும் இந்தக் குற்றச்சாட்டுகளையெல்லாம் சரி என்றோ, தப்பு என்றோ சொல்லவில்லை. ஏதோ அவர்கள் சொல்கின்ற பல குற்றச்சாட்டுகளில் சில உண்மையாக இருக்கலாம். பல குற்றச்சாட்டுக்களைச் சொல்லியிருக்கின்றார்கள். இவைகளைப் பற்றி அவர்களும் விசாரிக்கவில்லை. எனவே நீங்களாவது ஒரு விசாரணைக் கமிஷன் போடுங்கள் என்ற அளவிலேதான் எங்களது கட்சி கேட்டுக்கொண்டிருக்கிறதே தவிர, அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அவைகளிலே 1, 2, 3 என குறிப்பிட்டவைகளில் குற்றம் செய்திருக்கிறார்கள். எனவே விசாரணை செய்யுங்கள் என்று சொன்னதாக எனக்கு அதிகார பூர்வமாகத் தகவல் இல்லை. ஒரு மனு கொடுத்திருக்கின்றார்கள். விசாரணை செய்ய வேண்டுமென்று இரு மனுவிலும்

கூறப்படுகிறது. அதில் நடவடிக்கை எடுக்கவே நாங்கள் கோரினோம். ஏற்கெனவே 1952-லேயே ஒரு சட்டத்தைப் போட்டிருக்கின்றார்கள் இது போன்றவைகளை விசாரிப்பதற்காக என்று. அப்படி அந்த விசாரணைக் கமிஷன் போடுவது சரியா, இல்லையா என்பதை நீங்கள் வாதித்துக்கொள்ளுங்கள். நான் அந்தச் சட்ட பிரச்சினைகளுக்குள்ளே போக விரும்பவில்லை ஆனால் இதற்கிடையிலே பொது மக்களிடையே என்ன உணர்வு ஏற்பட்டிருக்கின்றது? இப்படி ஒரு விசாரணைக் கமிஷனைப் போடுவதற்கு முன்னதாக இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப் படுகிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக புகார்கள் மீது விசாரணை செய்யவேண்டும் அல்லது புகார்கள் பற்றி மனுக்கொடுப்பவர்களை ஒடுக்கவேண்டும், அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கவேண்டும் அல்லது அவர்களுக்கு அச்சமூட்ட வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் வருகிறது என்ற விரிவான உணர்வு தான் மக்களிடையே உண்டாக்கப்பட்டிருக்கின்றது. எனவேதான் நான் சொன்னேன். தற்போதைக்கு குறைந்தபட்சம் 6 மாதம், 3 மாதம் இச்சட்டத்தைத் தள்ளிவைக்கவேண்டும். இப்போது இந்தச் சட்டம் வந்து உடனேயே இதனால் நம்முடைய சமுதாயத்திலே இருக்கக்கூடிய ஊழல்கள், லஞ்சங்கள் எல்லாமே அழிந்துபோய்விடப் போவதில்லை. இது வந்தபின் தான் மற்ற விஷயங்கள் எல்லாம் நடத்தப்பட வேண்டியிருக்கிறது, இல்லாவிட்டால் எல்லா நிர்வாக வேலைகளும் கெட்டுவிடும் என்கின்ற அளவுக்கு ஒன்றுமில்லை. எனவே இந்த மாதிரியான சூழ்நிலையில் இப்படிப்பட்ட சட்டத்தை நிறைவேற்ற வேண்டாம். குறைந்த பட்சம் கொஞ்சகாலம் ஒத்திப் போடுங்கள். பல சட்டங்களை பல நேரங்களில் கொண்டு வந்து, ஒத்திப்போட்டிருக்கிறோம். அது போல் இதையும் சற்று ஒத்திவைக்கவேண்டும், நிறுத்தி வைக்க வேண்டும். இன்னும் கொஞ்ச நாள் கழித்து வேண்டுமானால், மறுபடியும் பரிசீலிக்கலாம். இதற்கிடையில் பொது வாழ்வில் இருக்கக்கூடியவர்கள், அரசியல் கட்சிக்காரர்கள், வெளியிலுள்ள பெரியவர்கள், தலைவர்கள் எல்லோரும் கூடி ஒரு 'கோட் ஆப் கான்டக்ட்' நமக்குள்ளே வகுத்துக் கொள்வோம். சட்டங்கள் போடுவதற்கு பதிலாக, இன்னின்ன முறைகளை, இன்னின்ன நிபந்தனைகளை அனுஷ்டிப்பது என்று. அவர்களாகவே அமைத்துக் கொண்டாலொழிய, அவர்கள் மீது சுமத்திக்கொண்டாலொழிய,



திணித்துக்கொண்டாலொழிய, ஒழுங்கான வாழ்க்கை அமையாது. மக்கள் விழிப்பே பொது வாழ்வில் உள்ளோரைத் திருத்த இயலும் மாண்புமிகு துணைத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள்கூட அதைப்பற்றி அழகாக அன்று ஒரு நாள் அவையிலே குறிப்பிட்டார்கள். நான் சொல்லும் இக்கருத்து என்னுடைய கருத்து. என்னுடைய கட்சியின் அபிப்பிராயம் அல்ல. அவர்கள் என்ன நினைக்கிறார்களோ, எனக்குத் தெரியாது. இதை மக்கள் மன்றத்தின் முடிவுக்கு விடுவதுதான் சாலச் சிறந்தது என்பது என்னுடைய அபிப்பிராயம். என்னுடைய கட்சியினுடைய அபிப்பிராயம் அல்ல. என்னைப் பொறுத்தவரையில் அப்படி விடுவதுதான் சரியானது என்று நான் நினைக்கின்றேன். அதற்காக வேண்டுமானாலும் இந்தச் சட்டத்தை தள்ளி வைக்க வேண்டும். இதை நிறைவேற்றக்கூடாது. தேவையற்ற நிலையில், தேவையற்ற நேரத்தில இச்சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற என்னுடைய ஆட்சேபணையைக் கூறி அமைகிறேன்.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, இந்த மசோதாவின் மீது பொறுக்குக் குழு விரிவாக ஆராய்ந்து சிபாரிசு செய்திருக்கின்றது. பொதுவாக, இந்தச் சட்டம் எதற்காக வருகிறது என்பதை சூசகமாக நான் தெரிந்து கொண்டேனே தவிர, சட்ட நுணுக்கங்களை நான் அறிந்தவன் அல்ல. நான் ஏற்கெனவே சொன்னது போல, பொது மக்களுடைய மனத்தைக் கவர்ந்துள்ள, அவர்களுடைய எண்ணங்களை ஈர்த் திருத்தக்கூடிய இந்தச் சட்டத்தினையாவது தமிழிலே செய்து கொடுத்திருந்தால் நலமாக இருந்திருக்கும். அதை அரசு செய்ய வில்லை. அரசு தொடர்ந்து இம்மாதிரிப் பல தவறுகளைச் செய்து கொண்டிருக்கின்றது என்று சொன்னால்கூட, அதைக் குற்றமாகக் கருதமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். பொது மக்களுக்கு இடையிலே இவ்வளவு பரவலாகப் பேசப்படக்கூடிய இந்தச் சட்டத்தைக்கூட தமிழிலே செய்து கொடுக்கவில்லை, எல்லோரும் புரிந்துகொள்ளும்படியாகச் செய்து கொடுக்கவில்லை என்பது மிகமிக வருந்தத்தக்க விஷயமாகும். இந்தச் சட்டம், நம்முடைய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் சொல்வது போன்று, இப்போதைக்கு ஏற்றுக்கொள்ளமுடியாத சட்டம், அவசியமில்லாத சட்டம். அத்தகைய சூழ்நிலைக்கு மத்தியிலே, இந்தச் சட்டம்

வருகிறது. நமது சக அங்கத்தினர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் சொன்னதுபோல், திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கக் கூடிய அமைச்சர்களை, இன்னும் பொது வாழ்வில் உள்ளவர்களை பிறர் தூற்றுகிறார்கள் என்பதற்காக அவசரப்பட்டுக் கொண்டு வந்த சட்டமோ என்று பொதுமக்கள் கருதக்கூடிய வகையிலே இந்த சந்தர்ப்பம் அமைந்திருக்கின்றது. ஆகவே எல்லா அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களும், இதுபற்றிக் கலந்தாலோசித்த பின்பு ஒரு சட்டம் கொண்டுவந்திருக்கலாம். குற்றச்சாட்டுகள் உண்மையோ இல்லையோ, கடந்த பல மாதங்களாக நம் இந்திய நாட்டில் நமது தமிழ் நாட்டைப்பற்றி விரிவாக ஏசிப் பேசக்கூடிய, தவறாக எண்ணக்கூடிய நிலையிலே இங்கே குற்றச்சாட்டுகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. அந்தக் குற்றச்சாட்டுக்கள் ஜனாதிபதி முதல் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இதற்கு மத்தியிலே அவசரப்பட்டு இதைக் கொண்டுவந்திருக்க வேண்டாம் என்பதுதான் எங்கள் கருத்து. 1952-ம் வருடத்திய மத்திய சட்டம் ஒன்று இருக்கிறது. மத்திய அரசாங்கம் சம்பந்தப் பட்ட மட்டிலே அவர்கள் குற்றம் செய்தால், அதை விசாரிப்ப வர்கள் யார் என்றெல்லாம்கூட இங்கே பேசப்பட்டது. அது போலவே தமிழ் நாடு சம்பந்தப்பட்டமட்டிலே முதலமைச்சர் அவர்கள் உட்பட அவர்கள் மீது சாட்டப்படும் குற்றங்களை யெல்லாம் விசாரிப்பதற்கு வகை செய்யப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். மத்திய சர்க்கார் சட்டம் மூலம் தங்கள் கட்சி யல்லாத மற்ற கட்சிகள் ஆளுகின்ற மாநிலங்கள் மீது வஞ்சம் தீர்த்துக்கொள்ளலாம் அல்லது பொதுமக்கள் மத்தியிலே அவர்களைப்பற்றித் தவறான எண்ணங்களை உண்டாக்க அதைத் தவறாக பிரயோகிக்கலாம் என்று முதலமைச்சர் அவர்கள்கூட இந்த மன்றத்திலே முன்பு ஒரு நாள் விவாதத்தின்போது சொன்னார்கள். இம்மாதிரிக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நம் அசெம்பிளியிலோ, கவுன்சிலிலோ இருந்தால் குற்றம் சாட்டப் பட்டவர்கள்மீது குற்றம் இருக்கிறது என்று ஒரு தீர்மானம் போட்டு, அந்தத் தீர்மானம் அசெம்பிளியிலோ, கவுன்சிலிலோ நிறைவேற்றப்பட்டுவிட்டால், அவர் விசாரணைக்கு உரியவராக ஆகிவிடுவார். அந்த நிலையில் பெரும்பான்மையினராக இருக்கக் கூடிய ஆளும் கட்சியினர் அரசியல் உட்கருத்தைக் கொண்டு



எதிர்க் கட்சியில் உள்ள ஒருவர் மீது இப்படி ஒரு தீர்மானம் கொண்டு வருவதற்கு எவ்வளவு இலகுவாக நமது சட்டமன்றங்கள் அமைந்திருக்கின்றன என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. செலக்ட் கமிட்டிக்குச் சென்ற பிறகு தான் இதெல்லாம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். நல்லெண்ணத்துடன் இதைச சேர்த்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். பொதுவாக குற்றத்தைச் சாட்டுவதற்கு, குற்றத்தைத் தெரிந்துகொள்வதற்கு இப்படிப்பட்ட வழிவகை இருப்பது நல்லது என்ற கருத்துடன் கொண்டுவந்திருக்கலாம். ஆனால் இன்னொரு வகையில் இதற்கு நேர்மாறான சந்தேகங்களைக் கொடுக்கக்கூடிய வகையிலே அமைந்திருக்கிறது. இவ்வாறெல்லாம் இந்தச் சட்டத்தில் குறைபாடுகள் இருந்துகொண்டிருக்கின்றன. இன்னொன்று, இந்த மசோதா குற்றம் சாட்டுவோர் இனிமேல் இத்தகைய குற்றங்களைப்பற்றி ஏதுமே பேசக்கூடாது, குற்றம் சாட்டக்கூடாது என்ற பெரும் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கி விட்டிருக்கிறது. கடந்த சில மாதங்களாக நடைபெற்றுக் கொண்டு வந்த வாதப் பிரதிவாதங்கள் இந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கின்றன. இதனால் இந்தக் குற்றம் செய்தால், ஒரு புகார் செய்தால், நம் மீது என்ன பழியாக வந்துசேருமோ, என்ன கஷ்ட நஷ்டங்களுக்கு உள்ளாவோமோ என்ற எண்ணத்தை மக்களுக்கு உண்டாக்கிவிட்டிருக்கிறது. அப்படிப்பட்ட எண்ணங்கள் பரவலாக பொதுமக்களுடைய மனதில் பதிந்து விட்டன. உண்மையாகவோ, உண்மைக்கு மாறாகவோ, உணர்ந்தோ, உணராமலோ இத்தகைய எண்ணங்களுக்கு அவர்கள் ஆட்பட்டு விட்டார்கள் என்பதை மறுக்க முடியாது. அத்தகைய சூழ்நிலை இப்போது நேர்ந்திருக்கிறது. ஆகையினால் தான் இந்தச் சட்டத்தை இப்போது கொண்டுவர வேண்டாம். ஆளும் கட்சி யினருடைய நன்மையை உத்தேசித்துத் தான் சொல்லுகிறேன். இந்தச் சட்டத்தை நிறைவேற்றாமல் கைவிட்டு விடுங்கள் என்று சொல்லுகிறேன். இந்தச் சட்டத்தை இப்போது கொண்டு வருவதைக் கைவிட்டு, தக்கதொரு சூழ்நிலை வருகிறபொழுது, இந்தச் சட்டம் எவ்வாறு அமையலாம் என்பதைப்பற்றிய கருத்துக்கள், எண்ணங்கள், பலதரப்பட்ட பொதுமக்கள் மனதில் ஊசலாடிக் கொண்டிருக்கக்கூடிய எண்ணங்கள் இவைகளை எல்லாம் அறிந்து கொண்டதற்குப் பின்னால் இந்தச் சட்டத்தை இதே ஆளும் கட்சியினர் கொண்டு வருவார்களேயானால்,

அதற்கு ஒரு மதிப்பு உண்டு. அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் ஏதோ தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கு, தங்கள் மீது இல்லாமல் புகார்கள் சுமத்தப்படாமலிருப்பதற்குத்தான் இந்தச் சட்டம் என்று பலவாறு வர்ணிக்க முடியும். நான் இதற்கும்மேல் வர்ணிக்க விரும்பவில்லை. அதுமாதிரி கருத்துடன் இந்தச் சட்டத்தை ஆளும் கட்சி கொண்டு வந்திருக்கிறது என்று கருதக் கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது. அந்த எண்ணத்தை நாம் மாற்ற முடியாது. அந்த எண்ணம் வெகுவாக பொதுமக்கள் மனதில் பதிந்து விட்டது. எனக்கு முன்னால் பேசியவர்கள் இதிலுள்ள பலவிதமான குறைபாடுகளைப் பற்றி ஆதாரங்களோடு சொன்னார்கள். அதற்கான சட்ட அறிவு, ஞானம் அவர்களுக்கு இருக்கிறது. அதில் நான் நுழைய விரும்பவில்லை. இந்தச் சட்டம் வேண்டியதில்லை என்று நாங்கள் அன்றே சொன்னோம். இந்தச் சட்டம் அவசியமில்லாத சட்டமென்று, கரூரில் கூடிய எங்களுடைய கட்சிக் கூட்டத்திலே கூட தீர்மானம் செய்திருக்கிறோம். "எத்தனை தான் சொன்னாலும் ஏட்டில் இடம் பெற்றாலும், அத்தனையும் ஆள்பவர்க்கே ஆய்தம் என்று— இத்தரையோர் ஏற்காரிதனை ஏற்காவனவே முயன்று ஏற்கார் இதனை பார்ப்பதனைக் கைவிட்டிரும்" என்று சொல்லி நான் அமருகிறேன்.

**புலவர் ஓ. அறிவுடைநம்பி**: இது சொந்தக் கவிதையா?

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்**: இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்பு கம்பன் பாடினான்.

* **திரு. ஆர். சக்திமோகன்**: தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை எனது கட்சியின் சார்பில் வரவேற்றுப் பாராட்டுகிறேன். நல்லவர்களைக் காப்பாற்றவும், நல்லவர்கள் மீது தப்பும் தவறுமான புகார்களைக் கூறுகிறவர்கள் மீது தண்டனை விதிப்பதற்கும் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டம், உண்மையில் பொதுவாழ்வில் இருப்பவர்கள் அனைவரும் வரவேற்றுப் பாராட்டக் கூடியதாகும். சற்றுமுன் பேசியவர்கள், இந்தச் சட்டம் இப்போதைக்குத் தேவையில்லை, இன்னும் கொஞ்சம் பிந்தி கொண்டு வந்திருக்கலாம் என்று கூறினார்கள். நான் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட ஒரு சட்டம் அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியை ஏற்ற 1967-ம் ஆண்டிலேயே கொண்டுவரப்பட்டிருக்க





வேண்டும். இது காலம் கடந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று தான் நான் சொல்லுவேன். ஏனென்றால் அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் அரசியல் ரீதியில் அவர்களுக்கு வேண்டாதவர்கள், அவர்களுடைய எதிரிகள் மீது, கடுமையான உண்மையல்லாத பல குற்றச்சாட்டுகளையெல்லாம் சாட்டி வழக்குகள் போட்டு அதன் பிறகு நீதியின் மூலம் விடுவிக்கப்பட்ட கொடுமையான காட்சிகளை அன்று கண்டோம். இன்றைக்கு யார் மீதும் யாரும் புகார் செய்யலாம், குற்றம்சாட்டலாம் என்ற நிலை, நாட்டு விடுதலைக்குப் பிறகு ஏற்பட்டு விட்டதை நாம் பார்க்கிறோம். அதிலும் குறிப்பாக பொதுமக்களுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணம் படைத்தவர்கள் பொது மக்களுக்குச் சேவை செய்துதான் ஆகவேண்டுமா, செய்யும் பொழுது பலவித குற்றச் சாட்டுகள் ஐயப்பாடுகள் ஏற்பட்டு, புண்படுத்தப்படுகிறதே பொது சேவையை விட்டு விலகிப் போய் விடுவோமா என்று எங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு மாறாக, யாரும் பொதுச் சேவை செய்ய வரலாம், ஆதாரமின்றி எவ்விதமான குற்றச்சாட்டுகளும் புகார்களும் கூறப்பட மாட்டாது என்பதற்கு ஒரு அடையாளமாக பாதுகாப்பு முறையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது என்று நான் எண்ணுகிறேன்.

குறிப்பாக, இப்போது ம.தி எம்.கே. மர்மப் பேழையை டில்லியில் சமர்ப்பித்தது போன்ற நடப்பு, மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கும், யாரும் இம்மாதிரிக் குற்றச்சாட்டுகள் அரசாங்கத்தின் மீது சாட்டாமல் இருக்கவேண்டும் என்பதற்காகவும் அரசாங்கம் தனக்கு ஏற்படுத்திக்கொண்ட பாதுகாப்புதான் இந்தச் சட்டம் என்று எதிர்தரப்பில் புகார்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அவைகள் ஏற்கக்கூடியவையல்ல. பொதுவாழ்வில் இருப்பவர்கள் மீது புகார்களோ அல்லது குற்றச் சாட்டுகளோ தக்க ஆதாரத்தோடு சாட்டலாம், ஆதாரமின்றி சாட்டினால் தண்டனை கிடைக்கும். அரசாங்கப் பதவிகளில் இருப்பவர்கள் மீதும் ஆதார பூர்வமாகக் குற்றங்கள் சாட்டலாம். அதே முறையில் பொதுவாழ்வில் இருப்பவர்கள் மீதும் அரசாங்கமும் குற்றம் சாட்டலாம். இம்மாதிரி இருதரப்புக்கும், குறிப்பாக பொதுவாழ்வில் ஆர்வம் கொண்டவர்களுக்கு பாதுகாப்பான ஏற்பாடாக இருப்பதால், இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

[1973 ஏப்ரல் 5

*திரு. ஏ. பி. ஜனார்த்தனம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் ராஜஸ்தான் மாநிலம், மராட்டிய மாநிலம் இவைகளில் கொண்டு வந்தது போலவே நாங்களும் கொண்டு வந்திருக்கிறோம் என்று சட்ட அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இத்தகைய சட்டம் தேவை என்று அந்த மாநிலத்தார் எப்படிக் கருதினார்களோ அதேமாதிரி நாங்களும் கருதி இதைக் கொண்டுவந்திருக்கிறோம். இது எங்களுக்கு மட்டுமல்ல பாதுகாப்பு. வரும் நாளில் யார் வந்தாலும் அவர்களுக்கும் பாதுகாப்பு. பொது வாழ்விலே பொறுப்பற்றதனம் தொலைய வேண்டும். எதற்கெடுத்தாலும் யாரையும் ஏசிவிடலாம். எதையும் பேசிவிடலாம் என்ற போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க இது உதவும் என்ற எண்ணத்தோடுதான் இதைக்கொண்டு வந்திருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமே கிடையாது. ஊழல் என்று எடுத்துக்கொண்டால், குற்றச்சாட்டு என்று எடுத்துக்கொண்டால், உலக வரலாறே அதற்கு இருக்கிறது. வால்போல் காலத்து ஆங்கில நாட்டை எடுத்துக்கொண்டால், அது ஊழல் மயமாகத் தான் இருந்தது. படிப்படியாக வளர்ந்து இன்றைக்கு ஆங்கிலேய நாடு ஒரு மேன்மையான நிலைக்கு வந்திருக்கிறது. அமெரிக்க நாட்டை எடுத்துக் கொண்டால் கென்னடியைக் கூடப் பார்த்து "நீ சொந்தக்காரர்களுக்கு வேலை தருகிறாய்" என்று பேசினார்கள். ஆற்றல் படைத்த கென்னடி ஒரு நாள் தன்னுடைய (பிரஸ் கான்பரன்ஸ்) பத்திரிகையாளருடைய மகாநாட்டில் சொன்னார். "இன்று காலை ராபர்ட் கென்னடி 4 வயது சிறுவன் என்னிடத்தில் வந்தான், எனக்கு வேலை வேண்டுமென்று கேட்டான். மேற்படி வேலை அடுத்தவருக்குத் தந்தாகிவிட்டது என்று சொன்னேன்." என்று தன்னுடைய மகனைப் பற்றி வேடிக்கையாகச் சொல்லி அவர் அதைச் சமாளித்துவிட்டார். பிரிட்டனில் புரொபியூமா ஸ்காண்டல் என்று ஒரு பெண் பற்றி ஒரு ஊழல் உலகம் பூராவும் அடிபட்டது. அதே நாட்டில் லாயிட் ஜார்ஜ் காலத்தில் மார்க்கோனி ஸ்காண்டல் என்று ஊழல் அடிபட்டது. நான் இதையெல்லாம் ஏன் சொல்லுகிறேன் என்றால் ஊழல் குற்றச்சாட்டுகள், அவதூறுகள் இவை அத்தனையும் உலகத்தில் பழகிவிட்ட சங்கதிகள் எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்கள். "எத்தகைய குற்றச்சாட்டையும் நீ சாட்டு, நான் பார்த்தேன். படித்தேன். ரசித்தேன்" என்று சொல்கிற இதயம் படைத்தவர்கள் இருக்கிற வரையிலே, அவைகள் ஒன்றும் செய்யாது. ஆனால்



1973 ஏப்ரல் 5] [திரு. ஏ. பி. ஜனார்த்தனம்]

சிலருக்கு அது 'டாமேஜ்' செய்துவிடுகிறது. அவ்வளவு வலிமையில்லாதவர்கள் எதையும் நம்புகிற அப்பாவி பொதுமக்கள், அதை எடுத்துக் கொண்டுபோய் ஏதோ ஆகிவிட்டதாமே என்று தமிழகத்தில் எங்கெங்கோ பதறுகிறவர்கள், டில்லியில் ஆடுகிறவர்கள், மலேசியாவில் அச்சப்படுகிறவர்கள், ஆப்பிரிகாவில் நம்பிக்கை வைத்திருக்கிறவர்கள் பதறுகிறார்கள். வரும் நாளிலே பி.ப. 5-50
யார், எந்தக் கட்சி வந்தாலும் அவர்களுக்குப் பாதுகாப்புத்தர, பொதுவாழ்வில் பொறுப்போடு குற்றஞ்சாட்டுங்கள், தலைவணங்கத் தயாராகவிருக்கிறோம் என்பதற்குத் தந்த வடிவம்தான் இந்தச் சட்டமே தவிர, வேறு ஒன்றும் கிடையாது. எவ்வளவு குற்றச்சாட்டுகள் ? இந்தியத் துணைக் கண்ட அரசியலை எடுத்துக் கொண்டால் கிலாபத்து நிதியைச் சாப்பிட்டு விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு சாட்டப்பட்டுத்தான் இருக்கிறது. திலகர் நிதி மோசடி என்ற குற்றச்சாட்டு சாட்டப்பட்டுத்தான் இருக்கிறது. கெய்ரோன், சங்கர், பட்நாயக் இப்படிப்பட்டவர்கள் திமிங்கிலங்கள் என்ற குற்றச்சாட்டு சாட்டப்பட்டுத்தான் இருக்கிறது. தாஸ் கமிஷன் ரிப்போர்ட், சந்தானம் ரிப்போர்ட், அத்தனையையும் பார்த்துத்தான் இருக்கிறோம். எங்களைப் பொறுத்த வரையில், அதிக வெள்ளையானவர்கள். ஏனென்றால் எங்களுடைய வழிகாட்டி வள்ளுவர், எங்களுடைய வழிகாட்டி பேரறிஞர் அண்ணா. ஆகையினால்தான் நாங்கள் கொஞ்சம் பதைக்கின்றோம், கொஞ்சம் துடிக்கின்றோம். நான் கலைஞர் அவர்களுடைய வீட்டை திருவாரூரில் பார்த்திருக்கிறேன். அங்கு சென்றிருக்கிறேன். அந்த ஒன்றுக்கும் உதவாத ஒரு வீட்டுக்கு பல ஆயிரம் ரூபாய் செலவில் ரிப்பேர் செய்திருக்கிறார் என்று சொல்லும்போது சிரிப்புத்தான் வருகிறது (குறுக்கீடு) இதெல்லாம் கொஞ்சம் தவிர்க்கப்பட வேண்டுமென்பதற்காகத்தான் செய்கிறோமே தவிர, குற்றமிருந்தால் தாராளமாகக் குற்றம் சாட்டட்டும். பொதுவாழ்வில் நீதி தழைக்க வேண்டும். பொது வாழ்வில் நேர்மை தழைக்க வேண்டும். பொது வாழ்வில் இருக்கிறவர்கள் அப்பழுக்கற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற அக்கறை டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நிச்சயமாக இருக்கிறது. அவர் அடிக்கடி சொல்லியிருக்கிறார், 'என் மகனேயானாலும் மனுநீதிச் சோழன் போல தேர் காலில் கட்டிப் பார்த்து விடுவேன்' என்று. நாங்கள் ஏழை பரம்பரையில் வந்தவர்கள். எனவே எங்களைப்பற்றி எதையும் பேசிவிடலாம் என்று எண்ண

வேண்டாம். நிச்சயமாகச் சொல்கிறேன், நாங்கள் கடைசி வரையில் எதையும் சந்திப்போம். ரிப்பன் மாளிகை மர்மங்கள் என்று புத்தகம் போட்டார்கள். எங்களுடைய கவுன்சிலர்களைப் பற்றிப் போட்டார்கள். ஆனால் அதன் விளைவு என்ன? இரட்டை மெஜாரிட்டியோடு கார்ப்பரேஷனுக்கு வந்தோம். கத்து, கத்தென்று கத்தியவர்கள் 1971-ல் இடம் தெரியாமல் போய் விட்டார்கள். பொது வாழ்வில் எங்களைத் தாக்குகின்றவர்கள் அந்தக் கணை மீண்டும் அவர்கள் மீது பாய்வதைப் பார்க்கலாம். எரிச்சலுற்றவர்கள், ஏமாந்தவர்கள், பிறவியிலேயே ஆத்திரம் கொண்டவர்கள் 'நாங்களா' இப்படி ஆள்வது, மிகச் சாதாரண குடிமக்கள், நாலாந்தர வம்சத்தார் இந்த நாட்டுக்குச் சொந்தக் காரர்களா என்று ஆத்திரப்படுபவர்கள் இவைகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் வருங்கால சர்க்காருக்கும் சேர்த்து, பொது வாழ்வில் நாணயம் தேவை என்பதற்கும் சேர்த்து, குற்றச்சாட்டுகள் பொறுப்பில்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காக இதைக் கொண்டுவந்திருக்கிறோம். நாணயம் படைத்தவர்கள், நல்லிதயம் படைத்தவர்கள், நாட்டுத் தலைவர்கள் இதைக் காத்துத் தரவேண்டும்.

அடுத்து, நான் சொல்கிறேன். எத்தனை சட்டங்கள் போட்டாலும், நாம் தான் மிக விழிப்பாக இருக்க வேண்டும். இந்தச் சட்டத்திலேயே புகுந்து வரக்கூடிய பெரியவர்கள்கூட இந்த உலகத்தில் உண்டு. எனவே மனம் காவலா, மதில் காவலா என்று பெண்கள் பேசிக் கொள்வார்கள். நமக்கு நாமே இங்கே ஸ்டேட்ஸ்மென்களை உருவெடுக்கிறோம். சாதாரண அரசியல் அல்ல மேலவையில் உள்ளவர்கள். நம்முடைய நெஞ்சைத் தொட்டுப் பார்த்து நேர்மைக்கு உழைப்போம், நாணயத்திற்குத் துணையாக இருப்போம், நல்ல தொண்டர்களை ஊக்குவிப்போம். ஊழல், ஊழல் என்று எங்கேயிருந்தாலும், அதை வேட்டையாடியே தீருவோம், எந்தக் கட்சியிலிருந்தாலும், எங்களுடைய கட்சியிலிருந்தாலும் எடுத்துக் காட்டுங்கள்.

நாங்கள் தூய்மையிலேயே இருக்கின்றோம். தூய்மைப் படுத்துகின்ற பணியில் யாருக்கும் பின் வாங்கவில்லை. இந்த ஆண்டு முரசொலி பொங்கல் மலரில்கூட நான் எழுதியிருக்கிறேன். அடிக்கடி என்னுடைய தோழர்களுக்குச் சொல்கிறேன். 'நாம்



ஏழை பரம்பரை. கொஞ்சம் பளபளப்பைக் காட்டி விடாதீர்கள். அதைக்கண்டு வயிற்றெரிச்சல் பட்ட கூட்டத்தார், பொறாமைப் படும் கூட்டத்தார் இருக்கிறார்கள், நம்மைச் சந்தியிலே இழுத்து விடுகிறார்கள். அடக்கமாக இருங்கள். அடக்கத்தின் உருவம் அறிஞர் அண்ணா வழியில் வந்தவர்கள்" என்று நம்முடைய கலைஞர் அவர்கள் ஊழியர்கள் கூட்டம், உழைப்பாளர்கள் கூட்டம் போட்டு எங்களுக்கு அறிவுறுத்துகிறார். இது 'பிளஸ்ஸிங் இன் டிஸ்கைஸ்'. எங்களுடைய உள்ளங்கள் தூய்மையானவை என்று நிரூபிக்கப் படும். 1976-க்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். இனி வருகின்ற வர்கள் முத்திரை குத்தப்பட்ட தூய்மையானவர்களாக வருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன்.

**திரு. எம். எம். பக்கர் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மசோதாவின் மீது, இரண்டொரு வார்த்தைகளைச் சொல்வதற்கு நான் விரும்புகிறேன். நம்முடைய பொது வாழ்வு வேகமாகச் சீரழிந்து கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே அதைத் தூய்மைப் படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற முதலாவது மசோதா இது என்று நான் கருதுவதாலே, இதை முழு மனதோடு ஆதரிக்கிறேன். இங்கே எதிர்க் கட்சியைச் சேர்ந்த நம்முடைய மதிப்பிற்குரிய பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் அருமை நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்களும் அழகாக வாதித்தார்கள். ஆனால் அந்த வாதத்தில் ஒன்றை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. குற்றஞ்சாட்டுகிறவர்கள், சாட்டிய குற்றத்தினுடைய பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டாமா என்பதுபற்றி யாரும் சொல்லவில்லை. யார் வேண்டு மானாலும் குற்றம் சாட்டட்டும். அப்படிச் சாட்டிய குற்றத்திற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டாமா? அதற்கென்ன வழி என்று திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களோ, திரு. ஆறுமுக சாமி அவர்களோ சொல்லவில்லை.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** இப்பொழுது இருக்கின்ற சட்டத்திலேயே இருக்கிறது.

**திரு. எம். எம். பக்கர் :** தலைவரவர்களே, அரசியல்வாதிகள் குற்றஞ்சாட்டப்படுகின்றவர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். நானும் ஒரு அரசியல் வாதி. யாராவது என் மீது குற்றஞ்சாட்டினால்

[திரு. எம். எம். பக்கர்] [1973 ஏப்ரல் 5

நான் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. நாம் அலட்சியம் செய்து விட்டுத்தான் போக வேண்டும். நான் அரசியல்வாதி என்பதற்காக என்னுடைய பெண்டாட்டி, பிள்ளைகளைச் சந்திக்கு இழுப்பதா? என்னுடைய குழந்தைகள், குட்டிகள் சந்திக்கு இழுக்கப் படுவதென்றால், வேதனைப்படவேண்டாமா? இதைத் தடுக்க வழி செய்ய வேண்டாமா? எத்தனை காலம் பொறுத்துக்கொள்ள முடியும்? நான் அரசியல்வாதியாக இருப்பதால், என்னுடைய பெண்டாட்டி, பிள்ளைகளைப்பற்றிப் பேசுவதா? நான் அரசியல் வாதியாக இருப்பதால் நான் பொறுத்துக்கொள்ள வேண்டும், அது என் தலையெழுத்து. என்னுடைய குஞ்சு, குழந்தைகள் எதற்காகத் தரங்கெட்ட முறையில் தாக்கப்பட வேண்டும்? இதற்கெல்லாம் வழிதான் என்ன? இதையெல்லாம் சிந்தித்துத்தான் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அரசியலில் ஓரளவு நியாயமானவர்கள் இனிமேல் வரலாமா, வரக்கூடாதாவென்று தீர்மானிக்கின்ற அளவுக்கு, இப்பொழுது அரசியலில் இருந்துகொண்டு நாணயமாக நடக்க வேண்டுமென்று நினைக்கிறவர்கள் இதிலிருந்து விலகிக்கொள்ளலாமா என்று ஆலோசிக்கின்ற நிலைமையில் இன்று கொண்டுவரப்பட்டுள்ள சட்டம் அவசியமில்லை என்று யாராவது சொல்ல முடியுமா? இது ஒரு கட்சிக்கு மட்டுமல்ல. நானே கேட்டேன். புதியதாக ஆரம்பித்த ஒரு கட்சிக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்களைப் பற்றிக் கன்னா பின்னா என்று பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் சொன்ன விஷயத்தை இந்த அவையில் சொல்ல இயலாது. அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு பொருளுதவி செய்தவர்கள் நம்முடைய மதிப்பிற்குரிய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுடைய கட்சிக்காரர். அவர் யார் என்று சொல்ல என்னால் முடியும். முதலமைச்சர் அவர்களைத் தாக்கிக் கொண்டே வந்த பையன் திடீரென்று காமராஜரைத் திட்ட ஆரம்பித்து விட்டான். காமராஜரைப் பற்றி இது வரையில் யாரும் சொல்லாத வார்த்தையைச் சொன்னான். இங்கே அதை நான் சொல்ல மாட்டேன். உடனே மேடையை விட்டு இறக்கி விட்டார்கள். அந்த அளவுக்கு யார் வேண்டுமானாலும் பேசலாம், யார் வீட்டு பெண்டாட்டி பிள்ளைகளையும் பற்றிப் பேசலாம் என்ற ஒரு நிலைமைக்கு இந்த நாட்டு அரசியல் கொண்டுபோகப்படுமானால்,



1973 ஏப்ரல் 5] [திரு. எம். எம். பக்கர்]

அதைத் தடுத்து நிறுத்த வேண்டியது இந்தச் சர்க்காருடைய கடமை மட்டுமல்ல, எதிர்க்கட்சிகளுடைய கடமையும் இல்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். நல்லவர்கள் அரசியலில் இருக்கக் கூடாதா? அரசியல் என்பது நல்லவர்கள் மட்டும்தான் இருக்கிற இடம் அல்ல, ஒரு மேதை சொல்வதுபோல் அரசியல் என்பது ஒரு மாதிரியான இடம் தான். அதற்காக நல்லவர்கள் ஒதுங்க முடியுமா? நல்லவர்கள் ஒதுங்க ஆரம்பித்தால் நாம் முட்டாள்களால்தான் ஆளப்படுவோம். ஆகையினால் அரசியலில் இருந்து தீர வேண்டிய கட்டத்தில் தான் நாம் இருக்கிறோம். அந்த அளவுக்கு மானம், மரியாதை காப்பாற்றப்பட்டு நேர்மையான அரசியலை வளர்ப்பதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

THIRU C. V. RAJAGOPAL: Hon. Chairman.

MR. CHAIRMAN: Is the hon. Member going to speak in English?

THIRU C. V. RAJAGOPAL: I welcome this Bill. It is a very good Bill. The people nowadays are indulging in loose talks and this Bill has been brought forth only to protect our democracy. The loose talks must be annihilated. That is why the present Bill has been brought forth at the present time.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பி.ப.
ஏற்கெனவே நம்முடைய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 6–00
பேசும்போது இந்த 'பில்' தமிழில் இல்லை என்று வருத்தப்பட்டார்கள். அது பற்றிய முக்கியமான பேச்சு ஆங்கிலத்தில் இருந்தால் கஷ்டப்படுவார்கள். ஆகவே அங்கத்தினர் தமிழில் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள், தமிழில் பேசவேண்டுமென்று சொன்ன காரணத்தால், நான் ஏதோ ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசவேண்டுமென்ற ஆசையில், இந்த மசோதாவை வரவேற்கின்ற முறையில் கொஞ்சம் ஆங்கிலத்தில் பேசிவிட்ட பிறகு, இப்போது தமிழில் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பொது வாழ்க்கையில் இன்று பலர் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பொதுவாழ்க்கையில் தவறு

இருந்தால், அதைக் கண்டிப்பதற்கு பல முறைகள் இருக்கின்றன. சில முறைகள் தேவைப்படுகின்றன. யார் வேண்டுமென்றாலும் எதை வேண்டுமென்றாலும் பொறுப்பற்ற முறையில் பேசிக் கொண்டு போவது ஜனநாயகத்தில் ஆபத்து ஆகும் impertinence cannot be allowed in the name of democracy ஜனநாயகத்தை வளர்க்கின்ற முறையில் தான் இந்த 'பில்' கொண்டு வரப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசிய நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். இந்த 'பில்' தேவையே இல்லை என்று அவர்கள் சொல்லியிருந்தால் கூட, அவர்களை நான் பாராட்டியிருப்பேன். அதிலே சில அமென்ட்மென்ட்கள் வேண்டுமென்றார்கள். அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்கள்.

மொத்தத்தில் அந்த 'In to to he is accepting the Bill' 'பில்' பரவாயில்லை என்று தான் அதற்குப் பொருள். இந்தப் பில்லில் இந்தக் குறைகள் இருக்கின்றன என்று சொல்லவில்லை. நண்பர் திரு. ஆறுமுகசாமி பேசும்போது லஞ்சம்பற்றிச் சொன்னார்கள். சட்டம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. அவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும், அது பற்றிக் கவலையில்லை. யாரேனும் சில பேர் இதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என்று சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டிற்குக் கெட்ட பெயர் வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பாராளுமன்றத்தில் இருககிற இந்திரா காந்தி அம்மையாரைப்பற்றிக் கூட அவதூறாகப் பேசுகிறார்கள். தன்னுடைய மகனுக்கு ஏதோ சலுகை செய்துவிட்டார் என்று பேசுகிறார்கள்; அது அவர்கள் பார்த்துக்கொள்ளட்டும். ஆனால் இங்கே தமிழ் நாட்டின் மானம், மரியாதை காப்பாற்றப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நான் சட்ட மன்ற மேலவையில் இருக்கிறேன். நான் கூட இந்தப் பதவியைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது.

"I should not abuse my position. If I abuse my position it amounts to misconduct."

ஆகவே, என்னுடைய நாணயத்தையும் நேர்மையையும் நான் பாதுகாத்துக்கொள்ளவேண்டுமென்றால், இப்படிப்பட்ட சட்டங்கள் தான் உதவி செய்யும். யார் வேண்டுமானாலும், தாறுமாறாக, "சட்டமன்ற மேலவையிலே இருக்கிற ராஜகோபாலைத்



தெரியுமா? அவன் அதைச் செய்கிறான். யானை வாங்கிவிட்டான், பூனையை வாங்கிவிட்டான்" (சிரிப்பு) என்று ஒரு பழியைத் தூக்கிப்போடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு புகார் சொன்னால், அவர் நிரபராதியா அல்லவா என்று தீர்மானிக்கத்தான் இந்தச் சட்டம். உதாரணமாக, நண்பர் திரு. ஆறுமுகசாமியிடம் ஒரு பேனா இருக்கிறது. அதை நான் கொஞ்சம் கொடுங்கள் என்று இங்கே வாங்கினால், அதுபற்றித் தவறு இல்லை, குறை சொல்ல முடியாது. அதையே வெளியே போய் வாங்கினால், அதற்கு ஒரு காரணம் கற்பித்து குற்றமாகக்கூடச் சொல்லலாம். அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் வரக்கூடாது என்பதற்காகத் தான் இந்தச் சட்டம். அத்தகைய ஒரு சட்டத்தை மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பாராட்டி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, பொதுவாழ்விலே ஈடுபட்டிருப்பவர்களைப்பற்றியும், அவர்கள் மீது சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டுகளை விசாரித்து நடவடிக்கை எடுப்பது குறித்தும், சாட்டப்படுகின்ற குற்றச்சாட்டுகள் வேண்டுமென்றே, அவதூறாக சாட்டப்பட்டிருக்குமேயானால், அப்படிச் சாட்டியவர்கள் எந்த நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் வரையப்பட்டுள்ள இந்தச் சட்டம் குறித்து மேலவையில் சட்டத்துறை அமைச்சர் அவர்கள் தன் முன்னுரையில் பல்வேறு குறிப்புகளைத் தந்திருக்கிறார்கள்.

தொடர்ந்து பேசிய, விவாதத்தில் கலந்துகொண்ட மேலவை உறுப்பினர்களும், மாண்புமிகு மாற்றுக் கட்சியினுடைய உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக பொது வாழ்க்கையில் ஈடுபடுவது என்பது, எனக்கு முன்னால் பேசிய சில நண்பர்கள் சுட்டிக்காட்டியதைப்போல், அச்சம் தரக்கூடிய ஒரு காரியமாக இன்றைக்கு அமைந்திருக்கிறது. அதைச் சமுதாய அளவில் அனைவரும் சிந்தித்துப் பார்த்து, ஏற்ற ஒரு முடிவினை எடுக்கவேண்டும் என்று நம்முடைய நண்பர் திரு. ஆறுமுகசாமி சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்; என்றாலும் அப்படிப்பட்ட ஒரு கட்டத்தை அனைவரும் சேர்ந்து அடைவதற்கு முன்பாக, இப்படிப்பட்ட சில மார்க்கங்களை நாம் வகுத்துக் கொள்ளவேண்டிய தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குத் தள்ளப்

பட்டிருக்கிறோம். அந்தக் காரணத்தாலே நான் இன்றைக்கு, இந்தச் சட்ட வரைவினை இங்கே வைத்து விவாதித்து அதை நிறைவேற்ற வேண்டிய நிலைமைக்கும் இன்று நாம் முன் வந்திருக்கிறோம். பொதுவாக நம்முடைய நாட்டில், குறிப்பாக நம்முடைய மாநிலத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல், கடந்த சில மாதங்களாக, திராவிட முன்னேற்றக் கழக அரசு குறித்து புகார்கள் சொல்லப்படுகின்றன. விசாரணைக்குழு அமைக்க வேண்டுமென்றெல்லாம் பேசப்படுகிறது என்பது உண்மையானாலும், இன்று நேற்று அல்ல, இந்த ஊழல் குற்றச்சாட்டு என்பது ஆண்டாண்டுகாலமாக நம்முடைய நாட்டில் ஒருவர் மீது இன்னொருவர் சாட்டுகின்ற வகையிலே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. இந்த மாநிலத்தினுடைய முதல்வராக வீற்றிருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களை வைத்துக் கொண்டே, அவர்களுடைய முன்னிலையிலேயே பேரவையில் திரு. கோசல்ராம் போன்றவர்கள் அவர்களுடைய ஆட்சி குறித்தும் நிர்வாகம் குறித்தும் எவ்வளவு கடுமையான சொற்களையெல்லாம் வாரி இறைத்தார் என்பது சட்டப் பேரவை நடவடிக்கைப் புத்தகத்தைப் படித்துப் பார்த்தால், நன்றாகத் தெரியும். மறைந்த ஒரு மூதறிஞரைப் பற்றிச் சொல்லப்பட்ட வார்த்தைகள் என்ற காரணத்தாலே, நான் அவைகளையெல்லாம் திரும்பச் சொல்லக்கூட விரும்பவில்லை. அதற்குப் பிறகு, திரு. காமராஜ் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, பிறகு திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, இந்த ஊழல் புகார்கள் சொல்லப்பட்டன. ஆனால், எப்போதோ ஒரு முறை, நிர்வாகத்தில் இருக்கின்ற குறைபாடுகள் காரணமாக, அல்லது அமைச்சர்களுடைய போக்கிலே ஏற்பட்ட அதிருப்தியின் காரணமாக இந்தக் குற்றச் சாட்டுகள் சொல்லப்படுவதும், பிறகு அவைகள் மறைந்துவிடுவதும்
பி.ப. 6-10 கடந்த காலத்தில் நாம் பார்த்த சம்பவங்கள் ஆகும். ஆனால் இன்றைக்கு வரிந்து கட்டிக் கொண்டு இதையே ஒரு பெரிய கடமை உணர்ச்சியாகக் கருதிக்கொண்டு இந்தக் குற்றச் சாட்டுக்கள் என்கின்ற கருவியை வைத்தே, இந்தப் பிரசாரக் கருவியைப் பயன்படுத்தியே, இன்றைக்கு இருக்கிற அரசை வீழ்த்தி விட வேண்டும், கவிழ்த்துவிட வேண்டுமென்ற ஒரு எண்ணம் தமிழ்நாட்டிலே இருக்கின்ற சில அரசியல் கட்சிகளினுடைய தலைவர்களுக்கும், சில அரசியல் கட்சிகளுக்கும்





ஏற்பட்டிருப்பது, உள்ளபடியே வளர வேண்டிய, இன்னும் வளர வேண்டிய ஜனநாயகத்திற்கு ஊறு தேடக்கூடிய அம்சம் என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

எது எப்படியிருப்பினும், பொது வாழ்வில் இருப்பவர்கள் அத்தனை பேரும் தூய்மையானவர்கள் என்று வாதிடுவதற்காக இந்தச் சட்டத்திலே நாம் எந்தப் பிரிவுகளையும் இணைக்கவில்லை. பொது வாழ்விலே ஈடுபட்டிருப்பவர்கள் தவறு செய்யக் கூடும், அப்படித் தவறு செய்வார்களானால் அவர்கள் தண்டனையிலிருந்து தப்பக் கூடாது என்பதற்கான பிரிவுகள் இதிலே இணைக்கப் பட்டிருக்கின்றன. அதைப்போலவே பொது வாழ்விலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு களங்கம் சுமத்தி மாசு கற்பித்து அதன் காரணமாக தனிப்பட்ட ஒருவனை அல்லது பொறுப்பேற்று இருக்கின்றவர்களிலே சிலர் மீது மாசு கற்பிப்பதன் மூலம் அவர்கள் நடத்துகிற ஆட்சியை, அந்த ஆட்சி அமைப்பதற்குக் காரணமாக இருந்த கட்சியைச் சீர் குலைத்து, அதனுடைய வளர்ச்சியைத் தடுத்து விடலாம் என்கின்ற எண்ணத்தோடும் தனிப்பட்டவர்களுக்கு ஒரு ஊனம் உண்டாக்க வேண்டுமென்கின்ற வகையிலும் வேண்டுமென்றே இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நாட்டிலே நிறைய சுமத்தப்படுகின்றன. நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்த திரு. பக்கர் அவர்கள் பேசும்போது, சில கூட்டங்களில் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை என்று எல்லாம் சொன்னார்கள். அவர்கள் கூட போகிற போக்கில் இப்படிப்பட்ட கூட்டங்களில் பேசியவைகளைக் கேட்டிருக்கக் கூடும். என்னுடைய வீட்டைச் சுற்றியே கூட கூட்டங்கள் போட்டு அப்படியெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வீட்டிலே இருக்கிற பெண்டு பிள்ளைகள், மறைந்து விட்ட என் தாயார், மறைந்து என்றைக்கோ மண்ணாகிவிட்ட அவர்களைப்பற்றியெல்லாம் கூட இன்றைக்குப் பேசுகிற ஒரு நல்ல அரசியல் நாகரிகம் நம்முடைய தமிழ் நாட்டிலே வளர்ந்திருப்பதை நாம் காணுகிறோம். ஆனால் நான் அவைகளுக்காக எல்லாம் கவலைப்படவில்லை. இப்படிப்பட்ட ஏச்சுக்களையும், பேச்சுக்களையும் தாங்கித் தாங்கிப் பழக்கப்பட்டு, அதற்காக வருத்தப்படாமல் ஒரு பேரியக்கத்தை இந்த நாட்டிலே உருவாக்கி வளர்த்தவர் தான் எங்களையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள். ஆகவே அவர்கள் எப்படி இவைகளையெல்லாம்

சகித்துக்கொண்டார்களோ, தாங்கிக் கொண்டார்களோ, சமாளித்துக்கொண்டார்களோ, அந்த வழியிலே தான் நாங்கள் இவைகளைச் சமாளித்துக் கொண்டிருக்கிறோம் என்றாலும் எங்களைப் பொறுத்தவரையில் சரி; ஆனால் நாங்கள் ஏற்றிருக்கும் நிர்வாகப் பொறுப்புக்கு ஒரு களங்கத்தை, மாசு மறுவினை கற்பிக்கின்ற நேரத்தில், இன்றைக்கு இந்தப் பொறுப்பிலிருந்து செய்யப்படுகிற எந்தக் காரியமானாலும் அவர்கள் இந்தக் காரியங்களின் தன்மையை உணராமல் அந்தக் காரியங்களுக்குக் களங்கம் கற்பிப்பதன் மூலம் அந்தக் காரியத்தினால் ஏற்படக்கூடிய நல்ல விளைவுகளுக்கெல்லாம் நாம் முட்டுக் கட்டை போட்டுவிடுகிறோம், வருத்தப்படுகிறோம்.

கூவம் சாக்கடையாக இருந்த நேரத்தில், அதை மாற்றியமைக்க மாட்டார்களா என்கின்ற ஆதங்க உணர்ச்சி ஏற்பட்டு, அதை மாற்றியமைப்பதற்கான திட்டங்களைத் தீட்டி மாற்றியமைத்து அதனுடைய வடிவத்தினை மாற்றிக் காட்டுகிற நேரத்தில், அதைப் பாராட்டுவதற்குப் பதிலாக இதிலே என்னென்ன ஊழல் நடைபெற்றது தெரியுமா என்று எழுதவும், பேசவும் முற்படுகிறோம். அந்தத் தொடர்ச்சியிலே தான் இந்த ஆட்சியை ஏதோ தனிப்பட்ட கோபதாபங்கள் காரணமாக கவிழ்த்து விடவேண்டுமென்று எண்ணி, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் சுட்டிக் காட்டியதைப்போல், புகார் பட்டியலையெல்லாம் டில்லிப் பட்டணம் வரையில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். அதற்கான பதிலை இந்த அரசின் சார்பிலே நாம் இந்த மாமன்றத்திலும் வைத்தோம், டெல்லிக்கும் அனுப்பினோம். அது வேறு விவகாரம். ஆனால் இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில், அவைகளோடு இணைத்துப் பார்ப்பதே தேவையில்லை என்று நான் கருதுகிறேன். அவர்கள் விசாரணைக் குழு அமைக்கின்றார்களோ இல்லையோ அந்த விசாரணைக் குழு அமைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டா என்கின்ற மாநில அரசுடைய கேள்விக்கு என்ன பதில் சொல்லுவார்களோ? நாம் அவைகளைப் பற்றியெல்லாம் கவலைப் படுவதில்லை. மாநில அரசின் முதலமைச்சரையோ மற்ற அமைச்சர்களையோ விசாரிக்கின்ற அதிகாரம் மத்திய அரசு பெற்றிருக்கவில்லை என்பதைத்தான் நாம் கோடிட்டுக் காண்பித்திருக்கிறோம். அரசியல் சட்டத்திலே அதற்கு வழியில்லை என்பதைத்



தான் சொல்லியிருக்கிறோம். இப்படிச் சொல்லுகிற காரணத்தினாலே, எங்களை நீங்கள் விசாரிக்கக்கூடாது, ஏனென்றால் எங்களிடத்திலே குற்றங்கள் மலிந்திருக்கின்றன, ஆகவே நாங்கள் பயப்படுகிறோம் என்று உங்களுக்கு அதிகாரம் இல்லை என்ற அந்தத் திரையைப் போட்டு எங்களுடைய குற்றச்சாட்டுகளை, எங்கள் மீது சாட்டப்பட்ட பழிச்சொற்களை நாங்கள் மறைத்துக் கொள்ள நிச்சயமாக விரும்பவில்லை. ஏனென்றால் நாங்கள் மிகத் தெளிவாக இருக்கிறோம். எங்கள் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பதை இந்தச் சபையிலே புத்தகமாக அச்சடித்து வைத்திருக்கிறோம். ஆகவே எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால் வேண்டுமென்றே நாலுபேர் கூடி ஒரு அரசாங்கத்திலே இருக்கின்ற அமைச்சர்கள் மீது நான்கு குற்றச்சாட்டுகளைச் சொல்லி டெல்லிக்குப் போவதற்குப் பண வசதியிருக்கிறது என்ற காரணத்தினாலே சென்று அங்கே குடியரசுத் தலைவரிடத்தில் குற்றச்சாட்டுகளைக் கொடுத்துவிட்டு, குற்றச்சாட்டுகளைக் கொடுத்த நாளிலேயிருந்து பிரசாரத்தைத் தொடங்கி விசாரணைக் குழு அமை, விசாரணை குழுவை என்று கோரி, அதன் மூலமாக ஒரு அரசிற்குக் களங்கத்தை ஏற்படுத்துவது என்றால், நிச்சயமாக அரசில் இருக்கிற நானோ, பேராசிரியர் அன்பழகனோ, அமைச்சர் நாவலரோ அதிலே வருத்தப்படுகிறோம் என்பது கூட அல்ல, யாரும் இந்தப் பொறுப்பிற்கு வருவதற்கு நிச்சயமாக அஞ்சுவார்கள். அந்த நிலைமையை நீடிக்கவிடலாமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே தான் பொறுப்பற்ற முறையிலே குற்றச்சாட்டுக்களைச் சாட்டுகிற நேரத்திலே அவர்களும் தண்டனைக்கு ஆளாக்கப்பட வேண்டும் என்று நாம் இந்தச் சட்டத்திலே குறிப்பிட்டிருக்கிறோம். இது புதுமையானதல்ல.

திரு. ஆறுமுகசாமி அவர்கள் பேசும்போது, 'சந்தானம் குழுவினுடைய அறிக்கையை நான் ஏற்றுக்கொள்கிறேன்' என்று சொன்னார்கள். அதிலே முக்கால் பகுதியை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொன்னார்கள். லோக் ஆயுத் சட்டத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னார்கள். மாராட்டியத்திலும், ராஜஸ்தானத்திலும் லோக் ஆயுத் சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. இரண்டு மூன்று மாதங்களுக்குள்ளாகத்தான்,

அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின் சில பிரிவுகளைக் கூட நான் இந்த அவையிலே படித்துக் காட்டியிருக்கிறேன். வேண்டுமென்றே குற்றஞ்சாட்டியவர்களுக்கு 3 வருஷம் என்று அந்தச் சட்டத்திலே இருக்கிறது. ஆனால் ஒரு அமைச்சர் மீதோ அல்லது பொறுப்பில் இருக்கின்ற ஒருவர் மீதோ குற்றஞ்சாட்டப்பட்டு அது நிரூபிக்கப்படுமானால், ராஜஸ்தானத்தின் சட்டத்தில், மராட்டிய மாநிலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் என்ன இருக்கிறது என்றால், நாம் இங்கே போட்டிருக்கிறோம், 7 வருஷம், அது கிடையாது. என்ன இருக்கிறது ? ரிப்போர்ட் சர்க்கார் மூலமாக கவர்னருக்கு அனுப்பப்படும். கவர்னர் அதை சட்டசபைக்கு அனுப்புவார். அதோடு முடிந்து விடுகிறது. ராஜஸ்தானத்திலும், மராட்டியத்தினுடைய சட்டத்திலும், குற்றஞ்சாட்டியவன் வேண்டுமென்றே பொய்க் குற்றம் சாட்டியிருந்தால், அப்படிக் குற்றம் சாட்டியவனை 3 ஆண்டுகள் தண்டிக்கலாம் என்று போடப்பட்டிருக்கிறது. ராஜஸ்தானத்தினுடைய சட்டத்திலும், மராட்டியத்தினுடைய சட்டத்திலும் குற்றம் நிரூபிக்கப் படுமேயானால், அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொண்டவர்களுக்கு என்ன தண்டனை என்று கிடையாது. அவர்களைப் பற்றி ரிப்போர்ட் கவர்னர் மூலம் சட்டசபைக்கு அனுப்பி வைக்கப்படும். இன்னும் கூட "மினிஸ்டர்ஸ்", 'மந்திரிகள்', என்று சொல்வதற்குத் தருகிற விளக்கம், முதலமைச்சரைத் தவிர மற்ற அமைச்சர்கள் என்று இருக்கிறது. இங்கே நாம் மந்திரிகள் என்பதற்கு விளக்கம் முதலமைச்சர் உள்ளிட்ட எல்லா மந்திரிகளும் என்று வைத்திருக்கிறோம். இந்த அளவிற்கு ஆளுங்காங்கிரசினுடைய மாநிலமான ராஜஸ்தானத்திலும், மராட்டியத்திலும் இருக்கிற சட்டத்தை விட வேகமாக, குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் முதலமைச்சராக இருந்தாலும் 7 ஆண்டுக் காலம் தண்டிக்கப்பட்டாக வேண்டுமென்கிற அளவிற்கு ஒரு சட்டத்தை நாம் இங்கே கொண்டு வந்திருக்கிறோம். காரணம் பொது வாழ்வில் இருப்பவர்கள், நானாக இருந்தாலும், வேறு யாராக இருந்தாலும் தவறு செய்தால். தண்டிக்கப்படவேண்டும். அதே நேரத்தில் களங்கமில்லாமல் காரியமாற்றிக்கொண்டு போகின்றவர்கள் மீது இவர்கள் நடந்து செல்கிற பாதையில், அவர்கள் ஏதோ சாதாரணக் குடும்பத்திலே பிறந்து விட்டார்கள்



என்ற காரணத்திற்காக, அவர்கள் உயர் பிரிவிலே பிறக்கவில்லை என்ற காரணத்திற்காக, அவர்கள் பெரிய மிட்டா, மிராசுகள் வரிசையில் இருக்கவில்லை என்ற காரணத்திற்காக அவர்கள் இந்த இடத்திலே வந்து அமருவதா, அவர்கள் எங்கே இருக்க வேண்டியவர்கள், தெருவிலே நிற்க வேண்டியவர்கள், அல்லது அவர்கள் சந்து முனையிலே இருக்க வேண்டியவர்கள் அல்லவா, அவர்கள் எங்கோ குக்கிராமத்தில் இருக்க வேண்டியவர்கள் அல்லவா, அவர்களெல்லாம் இந்த ஆட்சிப் பொறுப்பிலே வந்து அமருவதா என்ற எரிச்சலின் காரணமாக வேண்டுமென்றே சில அவதூறுகள் கூறப்படுகிற நேரத்தில் அந்த அவதூறுகள் தனிப்பட்ட கருணாநிதியைப் பற்றியோ அன்பழகனைப் பற்றியோ, தர்மலிங்கத்தை, மன்னை நாராயணசாமியைப் பற்றியோ, மற்ற அமைச்சர்களைப் பற்றியோ அல்ல, இந்த நாட்டிலே ஒடுக்கப் பட்டிருக்கிற சமுதாயத்தின் மீது கூறப்படுகிற அவதூறுகள். இவர்களெல்லாம் நாட்டை ஆளத் தகுதியற்றவர்கள் என்கின்ற அளவிற்குக் கூறப்படுகிற அவதூறுகள். ஆகவேதான் அப்படி வேண்டுமென்றே கூறப்படுகிற அவதூறுகளுக்கு, அப்படிப்பட்ட அவதூறுகளைக் கூறுகின்றவர்கள் தண்டனை பெற்றாக வேண்டும் என்பதையும் இதிலே இணைத்து இருக்கிறோமே யல்லாமல் வேறில்லை. இந்தச் சட்டத்தைப் பற்றி இங்கே பேசுகிற நேரத்தில் பல உறுப்பினர்கள் பேசும்போது குறுக்கிட்டு பல விளக்கங்களை நான் அளித்திருக்கிறேன். நம்முடைய சட்ட அமைச்சரவர்களும் அவருடைய முன்னுரையிலே இதைப்பற்றி நிறையப் பேசியிருக்கிறார்கள்.

காலையிலே பேரவையிலே நான் பேச எழும்போதே, தாங்கள் இந்தச் சட்டத்தை ஆதரிக்கவில்லை என்று என்னுடைய பேச்சைக் கூடக் கேட்காமல் பலரும் வெளியேறிவிட்டார்கள். மாற்றுக் கட்சி, எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெளியேறிவிட்டார்கள். நம்முடைய கௌரவம் அவ்வளவு தான் என்று நான் எண்ணிக் கொண்டேன். ஏனென்றால் என்னுடைய இடத்திலே வேறு யாராவது பழைய அமைச்சர்கள் இருந்திருப்பார்களானால், பரவாயில்லை முதலமைச்சர் பேசி முடித்த பிறகாவது போவோம், அந்தக் கௌரவத்தையாவது அவருக்குக் கொடுப்போம் என்று எண்ணியிருப்பார்கள். நான் அவ்வளவு பெரிய பிரிவில் பிறக்காத

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஏப்ரல் 5]

காரணத்தினாலோ என்னவோ, நான் அவ்வளவு பெரிய இடத்திலே இல்லாத காரணத்தினாலோ என்னவோ அவர்கள் மிகச் சாதாரண முறையிலே முதலமைச்சர் பேசுவதற்குக் கூட கௌரவம் கொடுக்கக் கூடாத சூழ்நிலை இருந்தது.

ஆனால், மேலவையைப் பொறுத்தவரையில், நீங்கள் வெளியேறுவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் என்னுடைய பேச்சு முடிகிற வரை இருந்து வெளியேற வேண்டுமென்று நீங்கள் காட்டிய அந்தக் கருணைக்காக நான் உள்ளபடியே என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்வேன். இப்போது கூட உங்களுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ளலாம். இந்த மேலவையில் 1961-ம் ஆண்டு என்று கருதுகிறேன், கடைசியாக ஒரு முறை ஒரு உறுப்பினர் மாத்திரம் வெளியேறி, 'வாக் அவுட்' செய்ததாக அறிகிறேன். இந்த மேலவையினுடைய மரபுகளை நாம் காப்பாற்றியாக வேண்டும். மேலவை, கீழவை என்பது கப் அண்ட் சாசரில் அது கப்பாகவும், மேலவை சாசராகவும் இருக்கிறது. சூடான காப்பியை சாசர் எப்படி கொஞ்சம் ஆற வைக்கிறதோ அதேபோல மேலவை ஆற வைக்கும் என்று வாஷிங்டன் சொன்னதாக நான் ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் படித்ததாக எனக்கு ஞாபகம். ஆகவே, இரண்டு கப்புகள் வேண்டாம். அது கப்பாகவும், இது சாசராகவும் இருக்கட்டும். இரண்டு கப்புகள் என்று நாம் தீர்மானித்து விடுவோமானால் ஒரே கப் இருந்தால் போதுமே என்ற தீர்மானத்திற்கு நாம் வந்து விட நேரிடும். ஆகவே அதற்கெல்லாம், அப்படிப்பட்ட மனச் சங்கடத்திற்கெல்லாம் இடம் தராமல் அனைவரும் ஒத்துழைத்து இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க கைவிடாமல், நிறைவேற்றுவதற்கு முயல்வதாலே, அதிலே கலந்து கொள்வதற்கில்லையென்று வெளிநடப்புச் செய்கிறோம்.

பி.ப. 6–20 [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு, திரு. ஜி. சுவாமிநாதன், திரு. எம். ஆறுமுகசாமி ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்]



1973 ஏப்ரல் 5]

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 29 வரை அட்டவணைகள் 1, 2 மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

காரணத்தினாலோ என்னவோ, நான் அவ்வளவு பெரிய இடத்திலே இல்லாத காரணத்தினாலோ என்னவோ அவர்கள் மிகச் சாதாரண முறையிலே முதலமைச்சர் பேசுவதற்குக் கூட கௌரவம் கொடுக்கக் கூடாத சூழ்நிலை இருந்தது.

ஆனால், மேலவையைப் பொறுத்தவரையில், நீங்கள் வெளியேறுவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் என்னுடைய பேச்சு முடிகிற வரை இருந்து வெளியேற வேண்டுமென்று நீங்கள் காட்டிய அந்தக் கருணைக்காக நான் உள்ளபடியே என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்வேன். இப்போது' கூட உங்களுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்ளலாம். இந்த மேலவையில் 1961-ம் ஆண்டு என்று கருதுகிறேன், கடைசியாக ஒரு முறை ஒரு உறுப்பினர் மாத்திரம் வெளியேறி, 'வாக் அவுட்' செய்ததாக அறிகிறேன். இந்த மேலவையினுடைய மாபுகளை நாம் காப்பாற்றியாக வேண்டும். மேலவை, கீழவை என்பது கப் அண்ட் சாசரில் அது கப்பாகவும், மேலவை சாசராகவும் இருக்கிறது. சூடான காப்பியை சாசர் எப்படி கொஞ்சம் ஆற வைக்கிறதோ அதேபோல மேலவை ஆற வைக்கும் என்று வாஷிங்டன் சொன்னதாக நான் ஒரு அமெரிக்கப் பத்திரிகையில் படித்ததாக எனக்கு ஞாபகம். ஆகவே, இரண்டு கப்புகள் வேண்டாம். அது கப்பாகவும், இது சாசராகவும் இருக்கட்டும். இரண்டு கப்புகள் என்று நாம் தீர்மானித்து விடுவோமானால் ஒரே கப் இருந்தால் போதுமே என்ற தீர்மானத்திற்கு நாம் வந்து விட நேரிடும். ஆகவே அதற்கெல்லாம், அப்படிப்பட்ட மனச் சங்கடத்திற்கெல்லாம் இடம் தராமல் அனைவரும் ஒத்துழைத்து இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

).ப.
-10

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு:** தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க கைவிடாமல், நிறைவேற்றுவதற்கு முயல்வதாலே, அதிலே கலந்து கொள்வதற்கில்லையென்று வெளிநடப்புச் செய்கிறோம்.

பி.ப.
6-20 [திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு, திரு. ஜி. சுவாமிநாதன், திரு. எம். ஆறுமுகசாமி ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்]



**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது. சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 29 வரை அட்டவணைகள் 1, 2 மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, "சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்:** மன்றத்தின் முன் உள்ள கேள்வி:

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1973-ஆம் ஆண்டு, பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/73) நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம், மன்றத்தின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

2. அறிவிப்பு—தொடர்ச்சி

(3) கூட்டத் தொடரில் ஆற்றப்பட்ட அலுவல் குறித்து.

MR. CHAIRMAN : I have to announce to the House the following particulars relating to the work transacted during the current session of the Council from the 3rd February 1973 :

| | |
|---|---|
| 1. Number of days of meeting (including 5th April 1973) ... ... ... ... ... ... | 32 days |
| 2 Duration of meeting (up to 3rd April 1973 ... | 84 hours 39 minutes |
| 3. Number of speeches made (up to 3rd April 1973). | 391 |
| 4. Number of Policy Notes relating to various Departments discussed ... ... ... | 6 |
| 5. Number of speeches made during the discussion on the Policy Notes ... ... ... | 69 |
| 6. Number of Government Bills passed ... | 14 |
| 7. Number of Government Bills referred to Joint Select Committee ... ... ... ... | 3 |
| 8. Number of Adjournment Motions brought before the House ... ... ... ... ... | 6 |
| 9. Number of Call Attention Notices taken up | 19 |
| 10. Number of Questions answered :— | |
| Starred Questions ... ... ... ... | 339 |
| Unstarred Questions ... ... ... ... | 54 |
| Short Notice Questions ... ... ... | 2 |
| 11. Number of supplementary questions put ... | 731 |
| 12. Number of Statements under Rule 82 ... | 7 |

பி.ப.
6-25 MR. CHAIRMAN : The House will now adjourn *sine die*.

The House then adjourned *sine die*.



4. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders*

94. Notifications issued with Memorandum No. 43354/Hg. F(1)/72-2, dated the 22nd November 1972 in regard to certain amendments to Rules under sections 35 and 36 of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971, published at pages 980 to 982 of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th November 1971. [Laid on the table of the House under section 72 (2) of the Tamil Nadu Slum Areas (Improvement and Clearance) Act, 1971 (Tamil Nadu Act 11 of 1971).]

95. Annual Accounts of the Tamil Nadu Housing Board for the year 1965–66. [Laid on the table of the House under section 125 (2) (*a*) of the Tamil Nadu Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

96. Audit Report on the Accounts of the Tamil Nadu Housing Board for the year 1965–66. [Laid on the table of the House under section 125 (2) (*a*) of the Tamil Nadu Housing Board Act, 1961 (Tamil Nadu Act 17 of 1961).]

B. *Reports, Notifications and Other Papers.*

134. Notification issued with G.O. Ms. No. 4, Labour and Employment, dated the 3rd January 1973, in regard to certain amendments to the Madras Payment of Wages Rules, 1937.

135. Answers to Unstarred Questions No. 51 to 54.

136. Report of the Committee on Estimates on the Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

£ 137. The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Land Owners' Rights) Bill, 1973 (L.A. Bill No. 11 of 1973), as passed by the Legislative Assembly.

---

£ Laid on the table of the House on 3rd April 1973.

[1973 ஏப்ரல் 5

£ 138. The Tamil Nadu General Sales Tax (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 12 of 1973), as passed by the Legislative Assembly.

139. The Madras City Tenants' Protection (Amendment) Bill, 1973 (L.A. Bill No. 14 of 1973), as passed by the Legislative Assembly.

140. The Tamil Nadu Private Electricity Supply Undertakings (Acquisition) Bill, 1973 (L.A. Bill No. 15 of 1973), as passed by the Legislative Assembly.

141. The Tamil Nadu Public Men (Criminal Misconduct) Bill, 1973 (L.A. Bill No. 3 of 1973), as passed by the Legislative Assembly.

£ Laid on the table of the House on 3rd April 1973.



1973 ஏப்ரல் 5]

## இணைப்பு I

293-ஆம் பக்கத்தில் 347-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

திருச்சிராப்பள்ளி மாவட்டம், குடுமியாமலை கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளில் 1971–73-ல் 23–2–1973 வரை அடைந்த சாதனைகள் விவரமாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### வேளாண்மை பொருளாதாரம்.

இவ்வாண்டில் பல்வேறு பயிர் ரகப் பரிசோதனைகளில் (நெல்-4, கேழ்வரகு-1, பாசன வேர்க்கடலை-1, பாசிப் பயறு-1, தட்டைப் பயறு-1) 8 திட்டங்களும், களைக் கொல்லியின் மூலம் களை களைதலில் 3 திட்டங்களும் நெற்பயிர், வெண்டைச் செடி ஆகியவற்றிற்கு இலை மூலம் தழைச் சத்தளித்தல் 2 திட்டங்களுமாக 148 இடங்களில் 13 திட்டங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டன. இவற்றுள் அண்ணா பண்ணையில் 6 பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

பல்வேறு நெல் ரகப் பரிசோதனைகள் நெற் பயிரில் களைக் கொல்லிப் பரிசோதனை நெற்பயிருக்கு இலை மூலம் தழைச்சத்து அளித்தல் ஆகிய மூன்று திட்டங்கள் முடிவு பெற்றுள்ளன. பரிசோதனை நடத்திய வெவ்வேறு இடங்களிலிருந்து கண்டுமுதல் விவரங்கள் கிடைத்து வருகின்றன. கேழ்வரகு, பாசன வேர்க்கடலை, பாசிப் பயறு, தட்டைப் பயறு, ரகப் பரிசோதனை, பருத்தி, வேர்க்கடலையில் களைக் கொல்லிப் பரிசோதனை, வெண்டைச் செடிக்கு இலை மூலம் தழைச் சத்து அளிக்கும் பரிசோதனை ஆகியவை யாவும் நடந்தேறி வருகின்றன.

புதுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஏரி ஆயக்கட்டு நிலங்களுக்காக நெல் ரகங்களாகிய ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, பொன்னி வகைகள், ஏ.டி.டி. 8, கோ. 29, ஆகிய வகைகளுடன் சோதித்துப் பார்க்கப்பட்டன. ஐ.ஆர். 8 மூன்று வகைகளிடையேயும், சிறந்ததாகயிருப்பினும் அரிசியின் தரம் மிகக் குறைவாக இருப்பதால் உள்ளூரில் விளையும் நெல்வகை வழக்கமாகப் பயிரிடப்படும் நெல்வகை ஆகியவற்றிற்குப் பதிலாக இந்த

வகையை முழுவதும் பயிரிடஇயலாத நிலையிலுள்ளது. ஐ.ஆர். 20, பொன்னி ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் பொன்னி, ஐ.ஆர். 20-ஐ விட பல இடங்களில் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது.

"ஐ.ஆர். 20, "பொன்னி" ரகங்கள் சமவிளைச்சல் அளித்தன. அவை முதல் ரக நெற்பயிர்களெனத் தரம் பிரிக்கப்பட்டன. ஐ.ஆர். 8, இரண்டாம் ரகமாகவும், தற்போது பயிரிடப்படும் பி.சி.பி. 1, மூன்றும் ரகமாகவும் தரம் பிரிக்கப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் கால்வாய் ஆயக்கட்டுப் பகுதியில் நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து இந்த முடிவுகள் கிடைத்தன.

பத்து நிலையங்களில் நெற்பயிர் மீது பரவலாக பூச்சி மருந்து தெளித்து சோதனைகள் நடத்தப்பட்டன. ஆறு சதவித நைட்ரஜனைத் தெளித்ததில் ஏழு நிலையங்களில் ஆதாயம் தரத்தக்க விளைச்சலையும், நைட்ரஜனை மண்ணோடு சேர்த்துப் பயன்படுத்தியதன் மூலம் 2 நிலையங்களிலும், 3 சதவீதம் நைட்ரஜனைப் பயன்படுத்தியதில் 1 நிலையத்திலும் ஆதாயந்தரத் தக்க அளவில் விளைச்சல் கிடைத்தது.

திருச்சி மாவட்டத்திலுள்ள அண்ணு பண்ணையில் 11 நிலையங் களில் களைக் கொல்லி சோதனைகள் நடத்தப்பட்டன. இந்த சோதனைகளின் மூலம் மாச்சாட்டைப் (Machate) பயன் படுத்தியதன் மூலம் 7 நிலையங்களிலும் ஸ்டாம், எப் 34 (Stam F 34 ஐப் பயன்படுத்தியதன் மூலம் 3 நிலையங்களிலும் ரோக்கைப் பயன்படுத்தியதன் மூலம் 2 நிலையங்களிலும் ஆதாயம் கிடைத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

பலரக சோதனையின்கீழ் 20 ரகங்களையும், கலப்பின் சோதனை களின்கீழ் 14 ரகங்களையும் ஒப்பிட்டு, பாசன மானவாரி சோளப் பயிர் அணைத்திந்திய ஒருங்கிணைப்பு சோதனை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. சி.எஸ்.எச். 1 பாசனத்தின்கீழ் உயரளவு மகசூலை கொடுத்துள்ளது.

மானவாரியின்கீழ் கே. 3 அதிக மகசூலை கொடுத்துள்ளது. மானவாரி பாசனத்தின்கீழ் சூரியகாந்தி செடி பலரக சோதனை மேற்கொள்ளப்பட்டு மானவாரி நிலைகளில் கே. 1 பாசன நிலைகளில் 68413 பேரளவு மகசூலை கொடுத்துள்ளன.





ஐந்து ரகங்களை ஒப்பிட்டு மிளகாய் குறித்த பல ரக சோதனையும் 4 ரகங்களையும் ஒப்பிட்டு வேர்க்கடலை பல ரக சோதனையும் நடைபெற்று வருகின்றன.

ஐ.ஆர். 20 நெல்லுக்கு உரமிடும் நிலைகள் சோதிக்கப்பட்டன. இதற்கு நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாஷ் 70-35-35 அளவில் உரமிட்டதில் உயரளவு மகசூல் கொடுத்துள்ளது.

இந்தப் பிரிவில் மானவாரி வேர்க்கடலைப் பயிருக்கும் சூரிய காந்தி பயிருக்கும் உரமிடும் சோதனையும் சூரியகாந்தி பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்து இடும் சோதனையும் சூரியகாந்தியை இடைவெளியிட்டு பயிரிடும் சோதனையும் நடைபெற்று வருகின்றன.

### வேளாண் பொருளாதாரம்

(நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தல்).

இவ்வாண்டில் "அண்ணு பண்ணையில்" பாசனத்துக்காக நீர்த் தெளிப்பானைப் பயன்படுத்தல், வேர்க்கடலை பயிருக்குப் பாசன இடைவெளி, கிணறுகளில் தண்ணீர்மட்ட வேறுபாடுகள் அறிதல் ஆகிய மூன்று திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இத்தகைய எல்லாத் திட்டங்களும் அண்ணு பண்ணையிலேயே செயல்படுத்தப் பட்டன.

வேர்க்கடலையில் நீர் தெளிப்புப் பாசன முறைப் பரிசோதனை முடிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் நீர் தெளிப்புப் பாசன முறையில் வழக்கமாக நீர்ப் பாய்ச்சும் முறையைவிட 43.2 சதவீதம் குறைந்த நீரைக் கொண்டு 29.3 சதவீதம் அதிக மகசூல் கொடுத்துள்ளது. வெண்டையில் நீர் தெளிப்புப் பாசன முறை நடைபெற்று வருகிறது.

வேர்க்கடலை ஆய்வு வேலையும் அடிக்கடி மேற்கொள்ளப்பட்டது. 5 நாளைக்கு ஒரு முறை பாசனமளித்தாலே உயரளவு மகசூலை கொடுப்பதாக அறியப்பட்டது. வேர்க்கடலைக்கு தெளிப்பு பாசனமும் மேற்பரப்புப் பாசனமும் மேற்கொள்ளப்பட்டு, பலன்கள் ஒப்பிடப்பட்டன. தெளிப்புப் பாசனத்தின் மூலம்—

(i) மகசூல் 23.9 சதவீதமாக அதிகரித்தது.

(ii) 43.2 சதவீதம் தண்ணீர் மிச்சப்பட்டது.

(iii) 55.4 சதவீதம் செலவு மிச்சமானது.

[1973 ஏப்ரல் 5

வெண்டைக்காய்க்கு தெளிப்புப் பாசனமும் மேற்பரப்பு பாசனமும் மேற்கொள்ளப்பட்டு, பலன்கள் ஒப்பிடப்பட்டன. தெளிப்புப் பாசனத்தின் மூலம்—

(i) மகசூல் 2.9 சதவீதமாக அதிகரித்தது.

(ii) 18.3 சதவீதம் தண்ணீர் மிச்சப்பட்டது.

(iii) 34.4 சதவீதம் செலவு மிச்சமானது.

நெற்பயிருக்கான பாசனமும், முனைப்பாகவும் பரவலாகவும் சோதனையிலிருந்து நடைபெற்று வருகிறது.

பல்வேறு பயிர்களுக்கு தேவையான தண்ணீர் பற்றிய சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

நீர்ச்சாலி நிலத்திற்கு மண்ணில் எந்த அளவுக்கு ஈரம் ஏறுகிறது என்பதை அனுசரித்து பாசன சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

பயிர்மாற்றும் முறையை அனுசரித்து பாசனத்தேவை சோதனையும் நடைபெற்று வருகிறது.

### வேளாண்மை இரசாயன மண்வள இயல்.

நெற்பயிருக்குச் சாம்பல் சத்து பிரித்து அளிக்கும் முறை அதனைத் தொடர்ந்து மண்வளப் பரிசோதனைகள் வேர்கடலைக்கு வெங்காரம் போடுதல் குறித்த ஆய்வுகள் வேர்க்கடலைக்கு ஜிப்சம் போடும் முறை குறித்த ஆய்வு ஆகிய நான்கு திட்டங்கள் (மொத்தம் 28 இடங்களில்) செயல்படுத்தப்பட்டன.

அண்ணா பண்ணையில் இரு வேறுபட்ட பருவங்களில் (குறுகிய காலமுடைய) கருணை நெற்பயிரிலும் (நடுத்தரக் காலமுடைய) ஐ.ஆர். 20 நெற்பயிரிலும் சாம்பல் சத்து அளவு நைட்ரஜன் சத்து அளவு நிகராக இருப்பதற்காக துறை பரிவுரை செய்த அளவில் சாம்பல் சத்து பிரித்து (பாதி அடி உரமாகும், பாதி மேலுரமாகும்) மேலுரமாக அளிக்கப்பட்ட முறையில் எதிர்பார்த்த அளவு மகசூல் கிடைக்கவில்லை என்பதை அண்ணா பண்ணையில் நடைபெற்ற ஆராய்ச்சி புலப்படுத்தியுள்ளது. செய்த அளவில் முழுமையாக துறை பரிவுரை அடி உரம் போட்ட முறை அதிக மகசூல் கொடுத்துள்ளது.



1973 ஏப்ரல் 5]

1 நெற்பயிருக்கு பொட்டாஷ் உரத்தை பல நிலைகளில் பயன் படுத்துவது குறித்த ஆய்வு.

ஏக்கர் ஒன்றுக்கு முதலிலேயே 25 கிலோ பொட்டாஷ் உரம் பயன்படுத்தப்படவேண்டும் என்று பரிவுரை செய்யப்பட்டுள்ளது. இதனைப் பல நிலைகளில் பயன் படுத்துவதை விட முதற்கண் பயன்படுத்துவது சாலச் சிறந்தது என்று சோதனைகளின் மூலம் தெரிந்தது.

(2) பாசனம் பெறும் நிலக்கடலைப் பயிருக்கு "போரக்ஸ்" உரம் பயன்படுத்துதல்.

ஏக்கர் ஒன்றுக்கு 3 கிலோ போரக்ஸ் பயன்படுத்தியதன் பலனாக அதிக அளவில் நிலக்கடலை விளைச்சல் கிடைத்தது.

(3) பாசனம் பெறும் நிலக்கடலைப் பயிருக்கு களிக்கல் Gypsum பயன்படுத்துதல்.

ஏக்கர் ஒன்றுக்கு 150 கிலோ களிக்கல் பயன்படுத்துவதனால் அதிக அளவில் நிலக்கடலை விளைச்சல் கிடைத்தது.

(4) மண்வளச் சோதனைக்காக தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட சோதனைகள்.

பல்வேறு உயர்விளைச்சல் ரகப்பயிர்களில் நடத்தப்பட்ட 17 மண்வளச் சோதனைகளில் அதிக விளைச்சல் 8 சோதனைகளில் கிட்டியுள்ளது. மீதி 9 சோதனைகளில் துறையின் பொதுப் பிரிவுரைகளின்படி மேற்கொள்ளப்பட்ட முறை அதிக விளைச்சல் தந்துள்ளது.

இரண்டாம் நிலைச் சத்தும் மைக்ரோ சத்தும் கொண்ட மண் வளத்தை நிலைநிறுத்தும் மருந்தாகிய 'ஸ்பார்ட்டின்' (spartin) எவ்வாறு வேலை செய்கின்றது என்பதை ஆயும் வேலை நடைபெற்று வருகின்றது. உணவு தானியப் பயிர்களில் போரான், இரும்பு, மாங்கனீஸ், துத்தநாகம், செம்பு, மோலிபிடினம் ஆகிய மைக்ரோ சத்துக்கள் உரிய அளவுகளில் கலந்துள்ள கூட்டுப் பொருளாகிய 'மிக்னல்ப்' (Micnelf) பயன்படுத்தப்பட்டது.

மிகு பயன் தரும் நெற்பயிர் விதைகளைத் துத்தநாகச் சத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் வகுத்த கோட்பாடுகளின் அடிப்படையில் அண்ணா பண்ணையில் பாசனத்துக்கான நீரின் தன்மையை மதிப்பிடும் ஆய்வும் நடைபெற்று வருகிறது.

பயிர்ப்பாதுகாப்பு.

*(1) பூச்சி, தாவர நோய்களைப்பற்றி அண்ணா பண்ணையில் விரிவான ஆய்வு.*—பல்வேறு பயிரிடத்தக்க பயிர்களைக் குறித்து விரிவான ஆய்வுகள் குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை அண்ணா பண்ணையில் மேற்கொள்ளப்பட்டது. அப்போது பல்வேறு பயிர்களின் மீது பூச்சி நோய்கள் தாக்குவதால் ஏற்படும் விளைவுகள் பதிவு செய்யப்பட்டன.

**(2) நெற்பயிரில் தோன்றும் பூச்சிகளும் அவற்றைத் தடுக்கும் முறையும்.**—அண்ணா பண்ணையில் சோதனையும், திருச்சிமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நான்கு சோதனைகளும், மொத்தத்தில் 5 சோதனைகள் நடத்தப்பட்டன. விளைச்சலைப் பொறுத்தமட்டில் சுமிதியான் (Swmithion) போஸ்வால் (Phosval) ஆகியன தெளித்த நிலங்களைக் காட்டிலும் லபாசிட் (Lebancid) டைமெகரான் (Dimecron) ஆகியன தெளித்த நிலங்கள் விளைச்சலைத் தந்தன.

(3) நெற்பயிரின் நோய்களும், அவற்றை காளான் மருந்தைக் கொண்டு தடுக்கும் முறையும்.

6 களச்சோதனைகள் நடத்தப்பட்டன. விளைச்சலைப் பொறுத்த மட்டில் ஹினோசான் (Hinosan) காசுமின் (Kasumin) தெளிக்கப்பட்ட பயிர்களின் விளைச்சலைக் காட்டிலும் டைதேன் Z7 (Dithane Z78) டைதான் 45 (Dithane M 45) ஆகியவை தெளிக்கப்பட்ட பயிர்கள் அதிக விளைச்சலைக்கொடுத்தன.

(4) அபிட் (Aphid) என்ற செடிப்பேன் சுருள் பூச்சி, சிவப்பு நிற கம்பளிப்புழு ஆகியவற்றைத் தடுக்கும் முறை.

மானவாரி நிலக்கடலைப் பயிரின் மீது 3 சோதனைகளும், பாசனம் பெறும் நிலக்கடலைமீது 2 சோதனைகளும் நடத்தப்பட்டன. மானவாரி நிலக்கடலைப் பயிர் பாத்திகள் மீது B.H.C. 10 சதவிகிதம் D.D.T. 5 சதவிகிதம் தெளிக்கப்பட்டதால் கணிசமான அளவுக்கு விளைச்சல் கிடைத்தது.



**(5) பருத்திப்பயிரில் பூச்சி தடுப்பு முறை (அண்ணா பண்ணை 2 சோதனைகள்.)**

(1) குருணை பூச்சி மருந்தும், தெளிப்பு பூச்சி மருந்தும் கலந்து பரிசோதனை, உறிஞ்சும் பூச்சிகளையும் காய் புழுக்களையும் கட்டுப்படுத்துவதற்காக நடத்தப்பட்டது.

பரிசோதனை முடிவுற்றது. டைஸிஸ்டான் குருணைகளைத் தொடர்ந்து தொடு பாஷான மருந்துகள் பயன்படுத்தியதால் உறிஞ்சு பூச்சிகளும் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டதென அப்பரிசோதனையிலிருந்து தெரிய வந்தது.

கபாஸ் பருத்திக்கு தியோட்டான் Thiodon மருந்து பயன்படுத்துவதால் அதிக அளவு பூச்சிக்கட்டுப்பாடு ஏற்பட்டு 9.? சதவீதம் அதிக விளைச்சல் கிடைத்ததாக ஒரு சோதனையின் மூலம் தெரிந்தது. எவ்வித மருந்தும் அடிக்கப்படாத கபாஸ் பருத்தியில் டைசிஸ்டான் (Disyston) மருந்தையும், அதனைத் தொடர்ந்து தியோடான் மருந்தும் பயன்படுத்தியதால் 130.9 சதவீதம் அதிக விளைச்சலும், டைசிஸ்டான் மருந்தையும் அதனைத் தொடர்ந்து ஹெலிடாக்ஸ் (Helidox) மருந்தையும் பயன்படுத்தியதால் 100.5 சதவீதம் அதிக விளைச்சலும் கிடைத்ததாக மற்றொரு சோதனையிலிருந்து தெரிந்தது.

(ரோகர் மெட்டாசிஸ்டாக்ஸ் ஆகிய) இரண்டு ஊடுருவிப்பாயும் பூச்சி மருந்துகள் உறிஞ்சுப் பூச்சிகளை நன்கு கட்டுப்படுத்தின. தொடு பாஷனமாகிய ஹிலியோடாக்ஸ்; மெட்டஸிட் கோம்பி நுவாக்கரான் தியோடான் செவின் என்ட்ரின் ஆகிய மருந்துகள் இட்ட பாத்திகள் அவ்வாறு மருந்திடப்படாத பாத்திகளைவிட காய் புழுக்களை நன்கு கட்டுப்படுத்தின. செவினும், தியோடானும் பயன்படுத்தியதில் மற்ற மருந்துகளைவிட (கபாஸ்) பருத்தியைப் பொறுத்தவரையில் அதிக மகசூல் கிடைத்தது.

**(6) வேர்க்கடலையில் இலைப் புள்ளி நோய்த் தடுப்பு முறை.**

இரண்டு சோதனைகள் நடத்தப்பட்டன. ஒரு சோதனையில் டைதேன் M 45 (Dithane M 45) தெளித்ததன் மூலம் அதிக விளைச்சல் ஏற்பட்டது. இரண்டாவது சோதனையில் நோய் ஏற்படாததால் சோதனைகளின் முடிவு எதுவும் தெரியவில்லை.

(7) ஷீட் பிளை (Sheath blight) எனும் கதிர்ப்பூச்சி, துண்டு துளைப்பான், பெருந்தலை கொசுவினப் பூச்சி ஆகியவற்றால் மக்காச் சோளத்திற்கு ஏற்படும் நோய்களைத் தடுத்தல்.

இதில் முடிவான பலன்கள் எவையும் கிடைக்கவில்லை.

பல்வேறு பயிர்களில் பீடிக்கும் ஒட்டுண்ணி/உயிர்க்கொல்லிகள் பற்றிய ஆய்வுகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

சோயா மொச்சைகளில் 62 ரகங்களுக்கும், துவரையில் 83 ரகங்களுக்கும் பயிர்ப்பூச்சி நோய் ஏற்படுவதுபற்றி ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

ஸெவின், லிபாசிட், வெலாக்சான், பாராதியான், பர்வேன் டிசிஸ்டான் ஆகியபூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்தி, கத்திரிப் பயிரைப் பீடிக்கும் துண்டு துளைப்பான் பூச்சிப்பயிர் முறையாக கட்டுப்படுத்தும் சோதனை நடத்தப்பட்டது. பல்வேறு சோதனைகளிலிருந்து பாராதியான் பயன்படுத்தியதிலிருந்து குறைந்த அளவு துண்டு துளைப்பான் நோய்பீடிப்பும், பர்வோன் பயன்படுத்தியதால் அதிக அளவு மகசூலும் பதிவாகியுள்ளன.

வாழையில் இறக்கைப் பூச்சி நோய்க் கட்டுப்பாட்டுக்காக திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வாழை பயிரிடும் பகுதிகளில் மூன்று களச் சோதனைகள் நடத்தப்பட்டன. மெடாசிஸ்டாக்ஸ், ரோகார், டிமெக்ரான் ஆகிய பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தியதால் பயிர்ப் பூச்சிகள் பெருவாரியாக ஒழிந்தன.

அண்மையிற் கண்டுபிடிக்கப்பட்டுள்ள காளான் கொல்லி மருந்துகளைக்கொண்டு நெல்விதையைப் பீடிக்கும் ஒட்டுண்ணி நோயின் விளைவைக் கண்டறிவதற்குச் சோதனை நடத்தப்பட்டது. சோதனை நடத்தப்பட்ட பல்வேறு களைக் கொல்லிகளிலிருந்து 'தைரயிடு வைடாவேக்ஸ்' மருந்தினைக் கொண்டு பக்குவப்படுத்தப்பட்ட நெல்விதையைக் கொண்டு பயிரிடப்பட்ட பயிர், அதிக சதவீதம் முளைத்தது, அதாவது, 174 சதவீதம் தடுப்பாற்றலைக் கொண்டது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வாழை பயிராகும் இரண்டு பகுதிகளில், 'சிகடோக்கா இலைப்பூச்சி நோய்க் கட்டுப்பாட்டிற்காக இரண்டு களச் சோதனைகள் நடத்தப்பட்டன.





சோதனை நடத்திய பல்வேறு காளான் கொல்லிகளிலிருந்து 'ஹிமுஞசான்' நோயைச் சிறந்த முறையிற் கட்டுப்படுத்தியது.

கம்பு, கேழ்வரகு, வேர்க்கடலை, மிளகாய், தக்காளி, சூரிய காந்தி ஆகியவற்றில ஏற்படும் நோய்களுக்கான கட்டுப்பாட்டிற்குக் களச் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

